Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 4-9-2018 Issued: 4-9-2018

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, மார்ச் 21, 2018—தொகுதி 38—எண் 1

**Wednesday the 21st March 2018—Volume 38—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

**21-3-2018**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | vii-xii |
| Governor and Council of Ministers | xiii-xvii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xix-xxii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxiii-xxxv |
| **1. வினாக்கள்-விடைகள்**— | 1-129 |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-47 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் *5*) | 48-129 |
| **2. தகவல் கோரல்**— | |
| தந்தை பெரியார் சிலை உடைக்கப்பட்டது குறித்து | 130-133 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 130-131 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 131-133 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு**— | |
| (அ) திருச்சி, போக்குவரத்துக் காவல் ஆய்வாளர் தாக்கியதால் திருமதி உஷா என்கிற பெண்மணி உயிரிழந்தது குறித்து | 134-139 |
| திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி | 134-136 |
| திரு. கரி. இராமசாமி | 136-137 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 137-139 |

பக்கங்கள்

3. **சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

(ஆ) சென்னை, மூலக்கொத்தளம் (காட்பாடா) பகுதியில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டுவதற்காக மொழிப்போர் தியாகிகள் நினைவு மண்டபம் இடிக்கப்போவதாக வெளியான செய்தி குறித்து 139-148

*திரு. எஸ். சுதர்சனம் 139-140

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 141-147

திரு. துரைமுருகன் 145

திரு. மு.க. ஸ்டாலின் 146

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 147-148

(இ) துறைமுகம் மற்றும் எழும்பூர் தொகுதிகளில் புதியதாக குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டித் தருதல் குறித்து 148-157

*திரு. பி.கே. சேகர்பாபு 149-150

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் 150-152

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 153-156

4. **அறிக்கைகள் அளித்தல்**—

(அ) பொது நிறுவனங்கள் குழு 157-158

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு 158

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 159

5. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**—

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, *2018* 160

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ 160





பக்கங்கள்

6. **வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதம்**—தொடர்ச்சி 160-280

*திரு. கு. பிச்சாண்டி 161-172. 174-175, 181,183, 190-191, 193-196

திரு. மு.க. ஸ்டாலின் 161, 176-177, 187, 189, 197-199

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 167-170, 198-199, 256, 260-261, 268-269

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 171, 174, 199, 217-218, 263

திரு. துரைமுருகன் 171-173, 180, 186-200

திரு. அர. சக்கரபாணி 172

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 173, 187-188

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு 175-176, 178, 226, 264-265

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ 177-178, 180

பக்கங்கள்

6. **வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 179-180, 184-187, 189, 247-248 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் | 182, 271-273 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 188, 196-197, 200-201, 219-222, 230-232, 258, 276 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 191-193, 207-208 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 194-195 |
| திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் | 201-207, 209-216 |
| திரு. கரி. இராமசாமி | 216-219, 221-223, 226-233 |
| மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 223-225, 265-266, 268 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 228,266 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 233-234, 274 |
| *மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு | 235-236 |



பக்கங்கள்

6. **வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *திரு. ஐ.எஸ். இன்பதுரை | 236-247 |
| திரு. ரா. தமிழ்ச்செல்வன் | 248-255 |
| *திரு. உ. மதிவாணன் | 255-265, 267-271, 273-279 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 261-262 |
| *மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் | 277-278 |

7. **அரசினர் தீர்மானம்**—

| | |
|---|---|
| பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல் | 279 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 279 |

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 280-284

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — திரு. பன்வாரிலால் புரோகித்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | **முதலமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் |
| 2. | **துணை முதலமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| 3. | **வனத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** வனம் |
| 4. | **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பள்ளிக் கல்வி |

5. **கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:**
*கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்*

6. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**
*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்*

7. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**
*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்*

8. **மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)*

9. **சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்*

10. **உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**
*தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*



11. **சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள்*

13. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**
*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*

14. **உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**
*உணவு,நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*

15. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**
*கைத்தறி மற்றும் துணிநூல்*

16. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**
*கால்நடை பராமரிப்பு*

17. **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**
*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்*

| | | |
|---|---|---|
| 18. | **வேளாண்மைத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு |
| 19. | **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் |
| 20. | **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு மற்றும் பேரிடர் மேலாண்மை |
| 21. | **சுற்றுலாத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் |
| 22. | **வணிக வரித் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம் |



| | | |
|---|---|---|
| 23. | **பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி |
| 24. | **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் |
| 25. | **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம் |
| 26. | **போக்குவரத்துத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம் |
| 27. | **தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** தகவல் தொழில்நுட்பம் |
| 28. | **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன் |

29. **தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:**
*தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்பொருளியல்*

30. **கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:**
*கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்*

31. **இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:**
*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*

32. **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:**
*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்*

33. **இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:**
*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை*



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU BANWARILAL PUROHIT

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**
Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports

2. **Deputy Chief Minister** .. **The Hon. Thiru O. Panneerselvam:**
Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

3. **Minister for Forests** .. **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:**
Forests

4. **Minister for School Education** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**
School Education

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**
Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

| | | | |
|---|---|---|---|
| 6. | **Minister for Electricity, Prohibition & Excise** | .. | **The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act |
| 7. | **Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme** | .. | **The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme |
| 8. | **Minister for Fisheries and Personnel & Administrative Reforms** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training) |
| 9. | **Minister for Law, Courts & Prisons** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons, Mines & Minerals |
| 10. | **Minister for Higher Education** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology |



| | | | |
|---|---|---|---|
| 11. | **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme** | .. | **The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme |
| 12. | **Minister for Industries** | .. | **The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control and Special Initiatives |
| 13. | **Minister for Environment** | .. | **The Hon. Thiru K.C. Karuppannan**: Environment and Pollution Control |
| 14. | **Minister for Food & Civil Supplies** | .. | **The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 15. | **Minister for Handlooms & Textiles** | .. | **The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles |
| 16. | **Minister for Animal Husbandry** | | **The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Animal Husbandry |
| 17. | **Minister for Health & Family Welfare** | | **The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare |
| 18. | **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |

| | | | |
|---|---|---|---|
| 19. | **Minister for Information & Publicity** | .. | **The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press |
| 20. | **Minister for Revenue and Disaster Management** | .. | **The Hon. Thiru R.B. Udhayakumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies and Disaster Management |
| 21. | **Minister for Tourism** | .. | **The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation |
| 22. | **Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act |
| 23. | **Minister for Milk & Dairy Development** | .. | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development |
| 24. | **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries |
| 25. | **Minister for Labour** | .. | **The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board |



| | | | |
|---|---|---|---|
| 26. | **Minister for Transport** | .. | **The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 27. | **Minister for Information Technology** | .. | **The Hon. Dr. M. Manikandan:** Information Technology |
| 28. | **Minister for Adi Dravidar & Tribal Welfare** | .. | **The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. | **Minister for Tamil Official Language & Tamil Culture** | .. | **The Hon. Thiru K. Pandiarajan:** Tamil Official Language & Tamil Culture and Archaeology |
| 30. | **Minister for Khadi & Village Industries Board** | .. | **The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan |
| 31. | **Minister for Hindu Religious & Charitable Endowments** | .. | **The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments |
| 32. | **Minister for Backward Classes & Minorities Welfare** | .. | **The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare |
| 33. | **Minister for Youth Welfare and Sports Development** | .. | **The Hon. Thiru P. Balakrishna Reddy:** Youth Welfare and Sports Development Department |

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

### மாற்றுத் தலைவர்கள்#

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. எஸ்.பி. சண்முகநாதன்

திரு. சு. ரவி

திரு. இரா. குமரகுரு

திரு. சு. குணசேகரன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

### செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

# *9–1–2018 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. .. கூடுதல் செயலாளர்

திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.ஜி.எல்., .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்

திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. துணைச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)



திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். .. குழு அலுவலர்

திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட். .. தலைமை நிருபர்

திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ. .. சார்புச் செயலாளர்

திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அம்பேத்குமார், திரு. எஸ். .. வந்தவாசி (செ.வ.)
2. அம்மன் கே. அர்ச்சுணன், திரு. .. கோயம்புத்தூர் தெற்கு
3. அரசு, டாக்டர் ஆர்.டி. .. செய்யூர் (செ.வ.)
4. அரவிந்த் ரமேஷ், திரு. எஸ். .. சோழிங்கநல்லூர்
5. அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி. .. கோயம்புத்தூர் வடக்கு
6. அலெக்சாண்டர், திரு. வீ. .. அம்பத்தூர்
7. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
8. அன்பரசன், திரு. தா.மோ. .. ஆலந்தூர்
9. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
10. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
11. அன்பழகன், திரு. ஜெ. .. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
12. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. .. திருவெறும்பூர்
13. ஆடலரசன், திரு. ப. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14. ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ. .. நத்தம்

15. ஆறுக்குட்டி, திரு. வி.சி. .. கவுண்டம்பாளையம்
16. ஆறுமுகம், திரு. பா. .. கந்தர்வகோட்டை (செ.வ.)
17. ஆஸ்டின், திரு. எஸ். .. கன்னியாகுமரி
18. இரத்தினசபாபதி, திரு. ஏ. .. அறந்தாங்கி
19. இரவிச்சந்திரன், திரு. கே.எஸ். .. எழும்பூர் (செ.வ.)
20. இராதாமணி, திரு. கு. .. விக்கிரவாண்டி
21. இராமசாமி, திரு. கரி. .. காரைக்குடி
22. இராமச்சந்திரன், திரு. ஆர்.டி. .. குன்னம்
23. இராமச்சந்திரன், திரு. எம். .. ஒரத்தநாடு
24. இராமச்சந்திரன், திரு.கே.கே.எஸ்.எஸ். ஆர். .. அருப்புக்கோட்டை
25. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
26. இராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. மதுரை வடக்கு
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. இரா. .. சேலம் வடக்கு
29. இராஜேந்திரன், திரு. சி.வி. .. பர்கூர்
30. இன்பசேகரன், திரு. பி.என்.பி. .. பெண்ணாகரம்



31. இன்பதுரை, திரு. ஐ.எஸ். .. ராதாபுரம்
32. ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல். .. ஆற்காடு
33. ஈஸ்வரன், திரு. எஸ். .. பவானிசாகர் (செ.வ.)
34. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. .. உடுமலைப்பேட்டை
35. உதயகுமார், திரு. ஆர்.பி. .. திருமங்கலம்
36. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
37. எடப்பாடி கே. பழனிசாமி திரு. .. எடப்பாடி
38. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. .. காஞ்சிபுரம்
39. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
40. கணேசன், திரு. வெ. .. திட்டக்குடி (செ.வ.)
41. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்
42. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
43. கருணாநிதி, கலைஞர் மு. .. திருவாரூர்
44. கருணாஸ், திரு. சே. .. திருவாடனை
45. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
46. கலைச்செல்வன், திரு. V.T. .. விருத்தாசலம்
47. கனகராஜ், திரு. ஆர். .. சூலூர்
48. கஸ்தூரி வாசு, திருமதி வி. .. வால்பாறை (செ.வ.)
49. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை

50. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்

51. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்

52. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்

53. கார்த்திக், திரு. நா. .. சிங்காநல்லூர்

54. காளிமுத்து, திரு. வி.எஸ். .. தாராபுரம் (செ.வ.)

55. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (செ.வ.)

56. கீதா, திருமதி ம. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

57. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

58. குணசேகரன், திரு. சு. .. திருப்பூர் தெற்கு

59. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை

60. கோவிந்தராசு, திரு. மா. .. பேராவூரணி

61. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

62. சக்திவேல், திரு. எ.பி. .. சேலம் தெற்கு

63. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (செ.வ.)

64. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

65. சண்முகம், திரு. அ. .. கிணத்துக்கடவு

66. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்

67. சத்திய நாராயணன், திரு. ப. .. தியாகராய நகர்

68. சத்யா, திருமதி ப. .. பண்ருட்டி

69. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

70. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு



71. சந்திரசேகர், திரு. இரா. .. மணப்பாறை

72. சந்திரபிரபா, திருமதி மு. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

73. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்

74. சரவணன், திரு. எஸ்.எஸ். .. மதுரை தெற்கு

75. சரஸ்வதி, திருமதி பொன். .. திருச்செங்கோடு

76. சரோஜா, டாக்டர் வி. .. ராசிபுரம் (செ.வ.)

77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்

78. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வா.)

79. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (செ.வ.)

80. சிவசுப்பிரமணி, திரு. வே.பொ. .. மொடக்குறிச்சி

81. சின்னதம்பி, திரு. ஆர்.எம். .. ஆத்தூர் (செ.வ.)

82. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

83. சீத்தாபதி, திருமதி பெ. .. திண்டிவனம் (செ.வ.)

84. சீனிவாசன், திரு. ஏ.ஆர். ஆர். .. விருதுநகர்

85. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்

86. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்

87. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை

88. சுப்ரமணி, திரு. பெ. .. தருமபுரி

89. சுரேஷ் ராஜன், திரு. என். .. நாகர்கோவில்

90. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி

91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிச்செட்டிபாளையம்

92. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி

93. செம்மலை, திரு. S. .. மேட்டூர்

94. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு

95. செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு.எஸ். .. தென்காசி

96. செல்வம், திரு. கு.க. .. ஆயிரம் விளக்கு

97. செல்வராசு, திரு. எம். .. முசிறி

98. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)

99. சேகரன், திரு. கே.வி. .. போளூர்

100. சேகர், திரு. C.V. .. பட்டுக்கோட்டை

101. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்

102. சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. .. ஆரணி

103. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

104. தங்கப்பாண்டியன், திரு. சௌ. .. ராஜபாளையம்

105. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்

106. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி



107. தமிமுன் அன்சாரி, திரு. எம். .. நாகப்பட்டினம்

108. தமிழ்ச்செல்வன், திரு. ரா. .. பெரம்பலூர் (செ.வ.)

109. தனபால், திரு. ப. .. அவினாசி (செ.வ.)

110. தனியரசு, திரு. உ. .. காங்கேயம்

111. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்

112. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

113. தினகரன், திரு. டிடிவி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

114. துரை. கி. சரவணன், திரு. .. புவனகிரி

115. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

116. துரைமுருகன், திரு. .. காட்பாடி

117. தூசி கே. மோகன், திரு. .. செய்யாறு

118. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு கிழக்கு

119. நடராஜன், திரு. அ. .. பல்லடம்

120. நடராஜ், திரு. ஆர். .. மயிலாப்பூர்

121. நந்தகுமார், திரு. ஏ.பி. .. அணைக்கட்டு

122. நரசிம்மன், திரு. பி.எம். .. திருத்தணி

123. நல்லதம்பி, திரு. அ. .. திருப்பத்தூர்

124. நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) .. வாணியம்பாடி

125. நீதிபதி, திரு. பா. .. உசிலம்பட்டி

126. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி மேற்கு

127. பரமசிவம், டாக்டர் V.P.B. .. வேடசந்தூர்

128. பரமேஸ்வரி, திருமதி மு. .. மணச்சநல்லூர்

129. பலராமன், திரு. ப. .. பொன்னேரி (செ.வ.)

130. பவுன்ராஜ், திரு. எஸ். .. பூம்புகார்

131. பழனி, திரு. கே. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

132. பழனிவேல் தியாக ராஜன், திரு. .. மதுரை மத்தி

133. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

134. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

135. பன்னீர்செல்வம், திரு. வி. .. கலசப்பாக்கம்

136. பாண்டி, திரு. ச. .. முதுகுளத்தூர்

137. பாண்டியராஜன், திரு. க. .. ஆவடி

138. பாண்டியன், திரு. கே.ஏ. .. சிதம்பரம்

139. பாரதி, திரு. பி.வி. .. சீர்காழி (செ.வ.)

140. பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா. .. ஓசூர்

141. பாஸ்கரன், திரு. க. .. சிவகங்கை

142. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

143. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்

144. பிரகாஷ், திரு. ஒய். .. தளி

145. பிரபு, திரு. அ. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)



146. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

147. புகழேந்தி, திரு. சு. .. மதுராந்தகம் (செ.வ.)

148. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்

149. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

150. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

151. பெரியண்ணன் அரசு, திரு. .. புதுக்கோட்டை

152. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்

153. பென்ஜமின், திரு. பா. .. மதுரவாயல்

154. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி

155. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்

156. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்

157. மணிகண்டன், டாக்டர் எம். .. இராமநாதபுரம்

158. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்

159. மதிவாணன், திரு. உ. .. கீழ்வேளூர் (செ.வ.)

160. மருதமுத்து, திரு. அ. .. கெங்கவல்லி (செ.வ.)

161. மனோகரன், திரு. அ. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

162. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்

163. மனோரஞ்சிதம், திருமதி நா. .. ஊத்தங்கரை (செ.வ.)

164. மனோன்மணி, திருமதி ப. .. வீரபாண்டி

165. மஸ்தான், திரு. கே.எஸ். .. செஞ்சி

166. மாசிலாமணி, டாக்டர் இரா. .. மயிலம்

167. மாணிக்கம், திரு. கி. .. சோழவந்தான் (செ.வ.)

168. முருகன், திரு. பி. .. வேப்பனஹள்ளி

169. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

170. முருகையா பாண்டியன், திரு. ஆர். .. அம்பாசமுத்திரம்

171. முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம். .. கடையநல்லூர்

172. மூர்த்தி, திரு. கே.எஸ். .. பரமத்தி-வேலூர்

173. மூர்த்தி, திரு. பி. .. மதுரை கிழக்கு

174. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி

175. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

176. மோகன், திரு. எம்.கே. .. அண்ணா நகர்

177. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்

178. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்

179. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

180. ராசேந்திரன், திரு. சபா. .. நெய்வேலி

181. ராதாகிருஷ்ணன், திரு. வி. .. மயிலாடுதுறை

182. ராமர், திரு. எ. .. குளித்தலை

183. ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என். .. ஜெயங்கொண்டம்



184. ராமு, திரு. அ. .. குன்னூர்

185. ராஜலெட்சுமி, திருமதி வி.எம். .. சங்கரன்கோவில் (செ.வ.)

186. ராஜா, திரு. சி. .. சங்கரி

187. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

188. ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்,திரு. ஈ.எம்.ஆர். .. அந்தியூர்

189. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

190. ராஜேந்திரன், திரு. சு. .. அரியலூர்

191. ராஜேந்திரன், திரு. வி.ஜி. .. திருவள்ளூர்

192. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்

193. லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ். .. திருநெல்வேலி

194. லோகநாதன், திரு. கோ. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)

195. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி

196. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு

197. வளர்மதி, திருமதி சீ. .. ஸ்ரீரங்கம்

198. வாகை சந்திரசேகர், திரு. .. வேளச்சேரி

199. விருகை V.N. ரவி, திரு. .. விருகம்பாக்கம்

200. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் வடக்கு

201. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

202. விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர். .. கரூர்

203. விஜய பாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

204. விஜியகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி

205. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

206. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

207. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

208. வெல்லமண்டி ந. நடராஜன், திரு. .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

209. வெற்றிவேல், திரு. ச. .. ஓமலூர்

210. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

211. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

212. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. .. கம்பம்

213. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

214. ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. .. மடத்துக்குளம்

215. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

216. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (செ.வ.)

217. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்,டாக்டர் (திருமதி) .. நியமனம்

218. வெற்றிடம்* .. ஆண்டிப்பட்டி

219. வெற்றிடம்* .. அரூர் (செ.வ.)

220. வெற்றிடம்* .. மானாமதுரை (செ.வ.)

221. வெற்றிடம்* .. பெரியகுளம் (செ.வ.)



222. வெற்றிடம்* .. குடியாத்தம் (செ.வ.)

223. வெற்றிடம்* .. பாப்பிரெட்டிப்பட்டி

224. வெற்றிடம்* .. அரவக்குறிச்சி

225. வெற்றிடம்* .. பரமக்குடி (செ.வ.)

226. வெற்றிடம்* .. பெரம்பூர்

227. வெற்றிடம்* .. சோளிங்கர்

228. வெற்றிடம்* .. திருப்போரூர்

229. வெற்றிடம்* .. பூந்தமல்லி (செ.வ.)

230. வெற்றிடம்* .. தஞ்சாவூர்

231. வெற்றிடம்* .. நிலக்கோட்டை (செ.வ.)

232. வெற்றிடம்* .. ஆம்பூர்

233. வெற்றிடம்* .. சாத்தூர்

234. வெற்றிடம்* .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

235. வெற்றிடம்* .. விளாத்திகுளம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. விஜய் நாராயன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

---

* கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் 18–9–2017 அன்று பதவியிழந்தனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, பங்குனி 7, திருவள்ளுவர் ஆண்டு 2049

## 2018 மார்ச் 21, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே

செல்லும்வா யெல்லாம் செயல்."

*செய்யக்கூடிய அளவு, செய்யக்கூடிய முறையில், செல்லும் வழியிடங்களில் எல்லாம் இடைவிடாது அறத்தைப் போற்றிச் செய்யவேண்டும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**61—**

### உயர்நிலைப் பள்ளி

***2048—திரு. பா. நீதிபதி:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் மாணவிகளுக்கென புதிய உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[*2018 மார்ச் 21*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் மாணவிகளுக்காகப் புதிய உயர்நிலைப் பள்ளி துவங்கப்படுமா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதாவது, அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, தனியாக அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து தனியாக உயர்நிலைப் பள்ளி அமைக்க அந்தப்பள்ளி தற்போது அரசு விதிகளை நிறைவு செய்யவில்லை. அரசு விதிகளுக்குட்பட்டு இருக்குமேயானால், அதை இந்த ஆண்டு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

**திரு. பா. நீதிபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலங்களிலே மனித தெய்வமாக வாழ்ந்து, இன்றைக்கும் அனைவருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மனித புனிதர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எழுச்சிமிகு தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். உசிலம்பட்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்ற ஆண்டு, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலே, துள்ளுக்குட்டிநாயகனூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தமைக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு, 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்படும் என்ற ஒரு இனிப்பான



*2018 மார்ச் 21*]

செய்தி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே, என்னுடைய தொகுதியில், டி. கிருஷ்ணாபுரத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் இந்த ஆண்டு உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறைக்கு நிதிகளை வழங்கியிருக்கிறார்கள். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், டி. கிருஷ்ணாபுரத்தில் உள்ள பள்ளியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள். "கேட்டதைக் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று சொல்வார்கள். அதற்கேற்ப, இந்த ஆண்டு அந்தப் பள்ளி தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

**திரு. பா. நீதிபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான விக்கிரவாண்டியில், விக்கிரவாண்டி பேரூராட்சியில் ஒரு நூலகக் கட்டடம் இருக்கிறது. அது மிகவும் பழமைவாய்ந்த நூலகம். கேள்விக்குறியாக இருந்த அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கி,

[*2018 மார்ச் 21*

புத்தொளி பாய்ச்சிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த விக்கிரவாண்டி நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். அதேபோல, அந்த நூலகத்தைச் சுற்றி இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நான்கு தனியார் பொறியியல் கல்லூரிகளும், இரண்டு நர்சிங் கல்லூரிகளும், இரண்டு Polytechnic கல்லூரிகளும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. ஆகவே, அந்த மாணவர்களெல்லாம் வசதியாகப் படிப்பதற்கும், தரமான உயர் கல்வி பெறுவதற்கும் வாய்ப்பாக நிறைய புத்தகங்களை வழங்குவதோடு, அங்கு புதிய கட்டடங்களையும் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விக்கிரவாண்டி என்றால் கூடுவிட்டு கூடு பாய்கிற நிலை. அதைப்போல, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் மற்றும் நூலகத் துறையின் மூலமாக 25 இலட்சம் ரூபாய் வழங்கி, இந்த ஆண்டே அதைப் புதிய கட்டடமாக மாற்றி அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

**திரு. எ. ராமர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், பாதிரிப்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



*2018 மார்ச் 21*]

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை அரசினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்குமேயானால், இந்த ஆண்டு அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

## புதைவட மின் கம்பி

***12818—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, 192-வது வட்டம், நீலாங்கரை, சிங்காரவேலர் நகர் பகுதியில் மேலே செல்லும் மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதி மட்டுமல்லாமல், சென்னை பகுதி முழுவதற்குமே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது, மேலே செல்லும் மின் கம்பிகள் அனைத்தையும் புதைவடங்களாக மாற்ற வேண்டும் என்று எங்களுக்கு ஆணையிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் மத்திய அரசோடு பேசி, இதற்காக 2,567 கோடி ரூபாய் நிதியுதவியும் பெற்றிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சிங்காரவேலர் நகர் பகுதியில் மின் கம்பிகளை படிப்படியாக புதைவடங்களாக மாற்றித் தர மாண்புமிகு அம்மா அவர்களின்

[2018 மார்ச் 21

அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களையும், வருங்காலம், எதிர்காலம், தமிழகத்தின் எதிர்காலம் எங்கள் அன்புத் தளபதி அவர்களையும் வணங்குகின்றேன். சோழிங்கநல்லூர் தொகுதி பெருநகர சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியினுடைய 20 வட்டங்களையும், 7 ஊராட்சிகளையும் உள்ளடக்கிய அதிக மக்கள்தொகை கொண்ட ஒரு மிகப் பெரிய தொகுதியாக உள்ளது. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டு 7 ஆண்டுகாலம் ஆகியும், இன்னும் மேலே செல்லும் மின் கம்பிகள் புதைவடங்களாக மாற்றப்படாமல் உள்ளன. குறிப்பாக, மண்டலம் 15-ல், 198-வது வட்டத்தில் சிங்காரவேலர் நகர் பகுதியில் மேலே செல்லும் மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் மின் விபத்துகளால் உயிர் பலிகள் நடைபெறாமல் தடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். மண்டலம் 14, 191-வது வட்டம், ஜல்லடியான்பேட்டை, பத்மாவதி நகரில் வசிக்கும் திரு. சௌந்தரராஜன் அவர்களுடைய மனைவி திருமதி சுபா, ஏழு மாத கர்ப்பிணியாவார்; இவர் 26-6-2016 அன்று வீட்டிற்கு மேலே சென்ற மின் கம்பி தாழ்வாக இருந்ததால், மின்சாரம் தாக்கி மரணமடைந்தார். ஆகவே இதுபோன்ற சம்பவங்கள் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறாமல் இருக்க, மனித உயிர்ச் சேதங்களைத் தவிர்க்க, தொகுதி முழுவதுமே மின் கம்பிகளுக்குப் பதிலாக புதைவடங்களாக மாற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதிகள்



2018 மார்ச் 21]

மட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, சென்னை மாநகரம் முழுவதும் புதைவடங்களாக மாற்ற வேண்டும் என்பதுதான் அரசினுடைய குறிக்கோள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலே செல்கின்ற மின் கம்பியால் விபத்து ஏற்பட்டு, உயிரிழப்பு ஏற்பட்டதாகச் சொன்னார்கள். பொதுவாகவே வீடு கட்டுபவர்கள் உயர் மின்னழுத்தக் கம்பிகள் சென்றுகொண்டிருக்கும் பகுதிகளில் அதற்குக் கீழே வீட்டைக் கட்டிவிடுகின்றார்கள். வீட்டின் மாடிக்குச் சென்று துணியைக் காய வைக்கும்போதுதான் இந்தச் சம்பவம் நடைபெற்றது. வீடு கட்டுகின்றபோதே அங்கு மின்னழுத்தக் கம்பி செல்கின்றது என்பதை அறிந்து அதற்கேற்ற வகையில் வீட்டினைக் கட்டியிருக்க வேண்டும். இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்போது இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், மாநகராட்சிப் பகுதிகளில் புதைவடத்தைப் பதிப்பதற்கு ஒரு மீட்டருக்கு ரூ.5,000/- கேட்கின்றார்கள்; அதுவே National Highways ஆக இருந்தால் ஒரு மீட்டருக்கு 11,000/- ரூபாயும், State Highways ஆக இருந்தால் ஒரு மீட்டருக்கு 8,000/- ரூபாயும் கேட்கின்றார்கள். மாநகராட்சிப் பகுதியாக இருந்தாலும், மாநில நெடுஞ்சாலையாக இருந்தாலும், தேசிய நெடுஞ்சாலைகளாக இருந்தாலும், கேபிள் போடுவதற்கு ஆகும் செலவைவிட, அதைப் பதிப்பதற்குத்தான் செலவு அதிகமாகின்றது. அதில் பல இன்னல்கள் ஏற்படுகின்ற காரணத்தினால்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி trenchless என்று சொல்லக்கூடிய, அதாவது துளையிட்டு அந்த மின் கம்பிகளைப் புதைப்பதற்கு உண்டான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். வருங்காலத்தில் சென்னை மாநகரம் முழுவதும் இதுபோன்ற முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட மண்டலம் 14-ல் அடங்கிய உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் ஆகிய

[2018 மார்ச் 21

பகுதிகளில் மின்னழுத்தம் மிகவும் குறைவாக உள்ளதால் அந்தப் பகுதி மக்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். இதுகுறித்து நகர் நலச் சங்கத்தினரும், அங்கிருக்கின்ற பொது மக்களும் தமிழக அரசிற்கு பல முறை தங்களுடைய கோரிக்கைகளை மனுக்கள் மூலமாக அளித்துள்ளார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் மின்னழுத்தத்தைப் போக்குவதற்கு, உடனடியாக ஒரு துணை மின் நிலையத்தினை உருவாக்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-10*

மேலும், சோழிங்கநல்லூர் தொகுதியில் OMR சாலை, ECR சாலை மற்றும் வேளச்சேரி சாலைகளெல்லாம் இணைந்து, அந்தப் பகுதி மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறைந்த வணிகப் பகுதியாக வளர்ந்துகொண்டு வருகின்றது; தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புகள் அடங்கிய பகுதியாக உள்ளது. எனவே, அப்பகுதியிலுள்ள மின்னழுத்தக் குறைபாடுகளைப் போக்கிட, சோழிங்கநல்லூரிலுள்ள 100 கிலோவாட் துணை மின் நிலையத்தினை 230 கிலோவாட் துணை மின் நிலையமாகவும், துரைப்பாக்கம் எழில் நகர் பகுதியில் உள்ள 33 கிலோவாட் துணை மின் நிலையத்தை 100 கிலோவாட் துணை மின் நிலையமாகவும், கூடுதல் கிலோவாட்களை ஏற்படுத்தி, தரமுயர்த்தித் தர வேண்டும். அந்தப் பகுதிகளில் நிலவும் மின்னழுத்தக் குறைபாடுகளைக் களைந்து, பொது மக்கள் பயன்பெறுகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உள்ளகரம், புழுதிவாக்கம் பகுதிகளிலிருந்து 3 கி.மீ. தூரத்திலுள்ள மடிப்பாக்கத்தில் இருக்கும் மின் வாரிய அலுவலகத்திற்குச் சென்று மின் கட்டணம் செலுத்தவேண்டிய நிலை உள்ளது. ஆகவே, அந்தப் பகுதி மக்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பொது மக்கள் அதிக அளவில் வாழ்கின்ற அந்தப் பகுதியில், பேருந்து நிலையம் அருகில் வணிக வளாகம் ஒன்று இருக்கின்றது. எனவே, உடனடியாக அந்த இடத்தில் பொது மக்கள் மின் கட்டணம் கட்டுவதற்கான ஓர் ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும்.

அதேபோன்று, என் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்றைக்கு ஏழை எளிய மக்கள் அதிக அளவில் வாழ்ந்து



2018 மார்ச் 21]

வருகின்றார்கள். மேலும், ஏற்கெனவே சென்னையில் வாழ்ந்துவந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அப்பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அங்கு அவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மின்சாரக் கட்டணம் என்பது மிகப் பெரிய சுமையாக இருக்கிறது. அந்தச் சுமையினைப் போக்கிட, அரசு முன் காலங்களிலெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு எப்படி இலவச மின்சாரம் வழங்கி வந்ததோ, அதேபோன்று, பெரும்பாக்கம், எழில் நகர், கண்ணகி நகர் போன்ற பகுதிகளில் மறுகுடியமர்த்தம் செய்யப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் கருதி, ஏழை எளிய மக்கள் என்கின்ற அடிப்படையில், அவர்களுக்கும், இந்த அரசு இலவசமாக மின்சாரம் வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக என்னுடைய தொகுதி அதிக மக்கள் வாழ்கின்ற பெரிய தொகுதியாக இருப்பதால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ், கேள்வியை சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி சென்னையை ஒட்டிய பெரிய தொகுதியாக இருப்பதால், உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றைச் செய்து தருவார் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வியிலேயே பல கேள்விகளைக் கேட்டிருக்கின்றார். அவை ஒவ்வொன்றிற்கும் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொகுதியில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அதற்கு மின் மாற்றிகளோ அல்லது துணை மின் நிலையங்களோ வேண்டும் என்று கேட்கின்றார்கள். பொதுவாக நான் சட்டமன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கின்றேன். சென்னை மாநகரில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதுமே துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு

[2018 மார்ச் 21

மின்சார வாரியம் தயாராக இருக்கின்றது. அதற்காகத்தான், கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட விதி 110-ன்கீழ் 132 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அறிவித்து, அதற்குண்டான ஆணைகளைப் பிறப்பித்திருக்கின்றார்கள். இடம் தேர்வு செய்வதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. பொதுவாகவே, அங்கிருக்கின்ற IT Park ஆக இருந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற குடிசை மாற்று வாரிய வீடுகளாக இருந்தாலும் சரி, அல்லது புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளாக இருந்தாலும் சரி, அவ்வளவு செலவு செய்து கட்டடங்களைக் கட்டுகின்றார்கள்; நல்ல விலைக்கும் விற்கின்றார்கள். ஆனால், மின்சார வாரியம் அங்கே transformer போடுவதற்கு இடம் கேட்டால், அனைவரும் தர மறுக்கின்றனர். ஆனால், கட்டடங்களைக் கட்டி முடித்ததற்கு பின்னால், "எங்களுக்கு மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது, அதனால் எங்களுக்குத் துணை மின் நிலையம் வேண்டும்" என்று கேட்கின்றார்கள். அவர்கள் மின் இணைப்புக்கான அனுமதி கோரி வரும்போதுகூட, நாங்களும் பலமுறை அவர்களிடம், "அந்தப் பகுதியில் எங்களுக்கு transformer வைப்பதற்கு இடம் கொடுங்கள்" என்று கேட்டால், முக்கால்வாசி பேர் மறுத்துவிடுகின்றனர். அதனால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன.

தற்போதுகூட, தரமணியில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் துணை மின் நிலையத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக தற்போது அங்கு மின்னழுத்தம் குறைந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொன்ன அந்தப் பகுதிகளிலெல்லாம், துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நாங்கள் அரசியலுக்காக இதைச் சொல்லவில்லை. நீங்கள் அப்பகுதியில் எங்கே இடம் இருந்தாலும், அதைக் கண்டறிந்து சொன்னீர்களானால், உடனடியாக மின்சார வாரியம் அந்த இடத்தைக் கையகப்படுத்தி, துணை மின் நிலையம் அமைப்பதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கெல்லாம் இலவச மினசாரம் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டாரா என்பது தெரியவில்லை; மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு



2018 மார்ச் 21]

தேர்தல் அறிக்கையில், 'அனைத்துக் குடும்பங்களுக்கும் 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் கொடுப்பேன்' என்று அறிவித்து, ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்திட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், அனைத்துக் குடும்பங்களுக்கும் 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே original ஆக குடிசைகளில் இருக்கின்ற 11 இலட்சம் குடும்பங்களுக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆக, அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. ஏனென்றால், குடிசைமாற்று வாரியக் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு 100 யூனிட் மின்சாரத்திற்கு மேல் மின் தேவை இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளில் முக்கியமான கோரிக்கை துணை மின் நிலையம்தான். அதேபோல், மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற மற்றொரு கோரிக்கையையும் வைத்திருந்தார். இந்த இரண்டு கோரிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கவனத்தோடு பரிசீலித்து, விரைந்து நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 10-15

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5-8-2016 மற்றும் 13-3-2017 ஆகிய 2 நாட்களில் இதே சட்டப் பேரவையில், LT and HT என்று அழைக்கப்படக்கூடிய குறைந்த மின்னழுத்த மற்றும் உயர் மின்னழுத்த மின் கம்பிகளை புதைவட மின் கம்பிகளாக மாற்றித் தருமாறு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் 23-3-2017 அன்று இதே அவையிலே ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள். 2,567 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒட்டுமொத்த சென்னை மாநகர் முழுவதற்கும், புதைவட மின் கம்பி வசதிகள் செய்து தரப்படும் என்ற ஓர் உறுதியை அளித்திருந்தார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[2018 மார்ச் 21

கூறியபடி, என்னுடைய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை 10 சதவிகிதப் பணிகள்கூட நிறைவடையவில்லை என்று நான் அன்றைக்கே தெரிவித்தேன். அந்தப் பணிகள் உடனடியாக கவனிக்கப்படும் என்ற உறுதியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருந்தார்கள். இதுவரை மின் விபத்திலே என்னுடைய தொகுதியான கொளத்தூரில் மட்டுமே, 3 பேர் இறந்திருக்கிறார்கள். எனவே, விலை மதிப்பற்ற மனித உயிர்களை உடனடியாக காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி வந்தவுடனேயே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்த கேள்வியைக் கேட்பார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், அவருடைய தொகுதிக்காகப் பலமுறை கேட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, சாலைகளில் புதைவட மின் கம்பிகளைப் பதிப்பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. நிதியும் அதிகமாக செலவாகிறது. மேலும், துளையிட்டு, கேபிள்களைப் பதிப்பதற்குண்டான பணிகளை மேற்கொள்ள இப்போது புதிதாக அனுமதி பெற்றிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியில் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு இதே போன்ற நிலைமைதான் இருக்கின்றது. அதில் 10 கிலோ மீட்டர் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. முன்னுரிமை அடிப்படையில்தான் அங்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடிய விரைவில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியான கொளத்தூரில்தான், Trenchless முறையில் துளையிட்டு கேபிள்களை பதிக்கும் பணிகளை, முன்னுரிமை அடிப்படையில் பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ள இருக்கிறோம். அதைப்போல, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் Trenchless முறையில் பணிகளை மேற்கொள்ளவிருக்கிறோம். விரைந்து பணிகளை முடிப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***16910—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, 19-வது வட்டம், மாத்தூர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாதவரம் சட்டமன்றத் தொகுதி, மாத்தூர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பகுதிக்கு மிக அருகில், ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள CPCL Layout பகுதியில் 100 படுக்கை வசதிகளுடன் கூடிய நகர சமுதாய நல மையம் கட்டுவதற்கு, 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதியில் 19-வது வட்டமானது, 2011

*[2018 மார்ச் 21*

*ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஏறக்குறைய 39,400 பேர் வசிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய வட்டமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. தற்போது எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஏறக்குறைய 50,000 மக்கள் வாழ்கின்ற வட்டமாக அது இருக்கின்றது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சுகாதாரத் துறையின் மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்ட இடம், அண்மையிலே தனியாருக்கு விற்கப்பட்டதாகத் தெரிவித்து, மக்கள் அங்கே தங்களது எதிர்ப்பைப் தெரிவித்து இருக்கின்றார்கள். இவ்வளவு பெரிய அளவிலான மக்கள் தொகை கொண்ட இடத்திலே, Primary Health Centre கட்டாயமாகத் தேவைப்படுகிறது என்று தெரிவித்து, ஒருசில மாதங்களுக்குமுன்பு, 2-வது மண்டல அலுவலக அதிகாரிகள் மாநகராட்சிக்கு அதற்கான கருத்துருவினைத் தயார் செய்து, பரிந்துரையும் செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற அந்த மருத்துவமனை கட்டி முடிப்பதற்குக் காலதாமதமாகும். எனவே, அந்தப் பகுதி மக்களுக்கு உதவிடும் வகையில் உடனடியாக ஒரு Primary Health Centre அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட போது, ஏற்கெனவே 10 மண்டலங்களாகச் செயல்பட்டு வந்த பகுதிகளை 7 மண்டலங்களாகக் குறைத்தும், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளை 8 மண்டலங்களாகப் புதியதாக சேர்த்தும், 15 மண்டலங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தேசிய நகர்ப்புற சுகாதார கழகத்தின் வழிகாட்டுதலின்படி, 50,000 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், 2.5 இலட்சம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர சமுதாய நல மையம் என்ற அடிப்படையிலும், மாற்றியமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் மண்டலத்திற்கு ஒரு 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனை என்ற அடிப்படையில், ஒரு 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.*



*2018 மார்ச் 21]*

*முற்பகல் 10-20*

*மாதவரம் சட்டமன்றத் தொகுதி, மாத்தூர் பகுதிக்கு மிக அருகில், 1½ கி.மீ. தொலைவில், மணலியில் உள்ள நெடுஞ்செழியன் சாலையில் 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனை மற்றும் நகர ஆரம்ப சுகாதார மையம் இயங்கி வருகிறது. மேலும், மாத்தூர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பகுதிக்கு மிக அருகில், 1 கி.மீ. தொலைவில் உள்ள CPCL Layout பகுதியில், 100 படுக்கைகள்கொண்ட வசதிகளுடன்கூடிய நகர சமுதாய நல மையம் கட்டுவதற்கு 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. சமுதாய நல மையம் அமைக்கப்படும் பகுதியில் ஆரம்ப சுகாதார மையம் அமைப்பதற்கு வழிவகை இல்லை என்பதால், இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஒரு இடத்தை mention செய்து, அது தனியாருக்கு விற்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், ஏதாவது அப்படி தவறு நடந்திருந்தால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

**திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு தேர்தலின்போது, கர்ப்பிணிப் பெண்களுக்கு 18 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று மறைந்த அம்மையார் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை 12,000/- ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. 4,000/- ரூபாய் 5 மாதத்திற்குள்ளாகவும், குழந்தை பிறந்ததற்குப் பிறகு 4,000/- ரூபாயும், குழந்தைக்கு தடுப்பூசி போட்டு 105 நாட்கள் கழித்து 4,000/- ரூபாயும் என மொத்தம் 12,000/- ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. நீங்கள் அறிவித்த அறிவிப்பின்படி, ஏழையெளிய மக்கள் எல்லாம் 18 ஆயிரம் ரூபாய் எப்போது கொடுக்கப்படும் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதை இந்த அரசு நிறைவேற்றித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று, திருமணமான பிறகு தாய் வீட்டை விட்டுச் செல்கின்ற பெண்களுக்கு, அவர் வந்து வாழ்கிற இடத்திலே உள்ள Primary Health Centre-லே இந்தப் பணம் வாங்குவதற்காக card போட்டுத் தரக்*

கேட்டால், எங்கே பிரசவம் ஆனதோ, அங்கேதான் card-ஐ வாங்க வேண்டுமென்று ஒரு பிரச்சினை இருக்கின்றது. அவர்களெல்லாம் இழுத்தடிக்கப்படுகிறார்கள். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவதொரு விதிமுறையைப் புதியதாக புகுத்தி, அவர்களெல்லாம் ஆதாயம் பெறுகின்ற வகையிலே விதிகளைத் தளர்த்தித் தருவாரா என்பதைத் தங்களின் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது அதற்கு பதில் அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** வாழ வைத்த தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, தொகுதியினுடைய அவசியம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இதைக் கேட்கிறேன். பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிப்பாளையம் பேரூராட்சிகளானது சிறப்பு நிலை அந்தஸ்திலே இருக்கக்கூடிய இரண்டு பேரூராட்சிகள். இந்த இரண்டு பேரூராட்சிகளையும் இணைத்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உடனடியாக நகராட்சியாகத் தரம் உயர்த்த ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியும் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்விதான். இதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் கேட்ட கேள்வி வேறு. துறை சம்பந்தப்பட்ட கேள்வி; அதனால் அத்துறையின் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது பதில் சொல்வார் என்று தெரிவித்தேன். ஆனால், இந்தக் கேள்வி எனது துறை சம்பந்தப்பட்ட கேள்விதான். உறுப்பினர் அவர்கள் தொகுதி மக்களின்மேல் வைத்துள்ள அக்கறையின் காரணமாக இதைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருந்தாலும், அம்மா அவர்கள் 110 விதியின்கீழ் ஏற்கெனவே அறிவித்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக்கூட சமீபத்திலே நிதியை ஒதுக்கி, உடனடியாக அதை நிறைவேற்ற உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல, இப்போது உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்துள்ளார்கள். அதுகுறித்து, அங்கே துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்படும். அவற்றை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பெருந்துறை பேரூராட்சியை, நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு வழிவகை இருப்பின், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.18,000/- எப்போது உயர்த்தி வழங்கப்படும் என்று கேட்டிருந்தார்கள். அத்துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது உறுப்பினரின் கேள்விக்கு விளக்கமாகப் பதில் சொல்வார்கள். 2018-2019 முதல் அது வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது விளக்கமாகத் தெரிவிப்பார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. என். நேரு அவர்கள்.

*[2018 மார்ச் 21*

*முற்பகல் 10-25*

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு கேள்வி. இதுவும் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத ஒரு கேள்விதான். திருச்சிராப்பள்ளி மாநகரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் வந்து தொடங்கி வைத்துவிட்டு வந்திருக்கின்றார்கள். குறிப்பாக, சிறைத் துறைக்குப் பின்னால், இந்தப் புதிய பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு அரசாங்கத்தின் சார்பாகத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருவழிச் சாலைதான் உள்ளது. பேருந்து நிலையம் அமைக்கும்போது, நேரடியாகப் பேருந்து நிலையம் செல்வதற்கு, அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்குரிய வழிவகைகளும் இல்லை. ஏனென்றால், ஒரு பக்கம் இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலம்; மறு பக்கம் சிறைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் வரவிருக்கின்றது. இரயில்வே துறையிடமிருந்து நிலத்தைப் பெற்று, சாலையை அகலப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஏற்கெனவே, இராணுவத்திற்குச் சொந்தமான இடம் கிடைக்காமல், அங்கு மேம்பாலப் பணிகள் முடிவடையாமல் இருக்கின்றன. ஏற்கெனவே நிபுணர் குழு ஆராய்ந்துதான், திருச்சிராப்பள்ளியில் 5, 6 தேசிய நெடுஞ்சாலைகள் இணைகின்ற இடத்திலே அந்தப் பேருந்து நிலையத்தை அமைக்கும் பணியினைத் தொடங்கலாம் என்று ஓர் ஆய்வு அறிக்கை அரசாங்கத்திடம் தரப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அங்குள்ள சாலைகளை எட்டு வழிச் சாலைகளாக மாற்றினால்தான் போக்குவரத்து சரியாக இருக்கும். இப்போதே போக்குவரத்து நெரிசலின் காரணமாக அங்கே அரை மணி நேரம், ஒரு மணி நேரம் நிற்க வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, இதை கவனத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தெரிந்துகொள்ள விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



*2018 மார்ச் 21]*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், அவர் அந்த மாவட்டத்திற்குத் தேவையான முக்கியமான, அவசியமான ஒரு கேள்வியைத்தான் கேட்டிருக்கின்றார்.

2016 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக தனியாக ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில்கூட, சிறைத் துறைக்கு சொந்தமான இடத்திலிருந்து அதிகமான இடத்தைத் தரவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அப்போது சிறைத் துறை D.I.G. அவர்கள் அவ்வளவு இடம் எல்லாம் கொடுத்துவிட்டால், பாதுகாப்பு இருக்காது என்று சொல்லி, அவர்கள் ஒரு suggestion-ஐ சொல்லியிருந்தார்கள். அதன் அடிப்படையிலும், படிப்படியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அந்தப் பேருந்து நிலையத்தை வேகமாக அமைத்து தர வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அங்கு இருவழிச் சாலையாக, குறுகலாக அந்தச் சாலை இருப்பதால், traffic அதிகமாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் தெரிவித்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், அதுமட்டுமல்ல; தமிழகத்தில் இருக்கக்கூடிய மற்ற மாவட்டங்களான கோயம்புத்தூர், மதுரை, சேலம் உட்பட, கிட்டத்தட்ட 14 பேருந்து நிலையங்களை உடனடியாக அமைக்க, வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசியமான பிரச்சினையைச் சொன்ன காரணத்தினால், அதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 மார்ச் 21

**64—**

## ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

***9406—திரு. ப. பலராமன்:**

*மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பஞ்செட்டி கிராமத்தில் பொன்னேரி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொன்னேரி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக பொன்னேரி வட்டம், பஞ்செட்டி கிராமம், கால்நடைத் துறைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு, அது இடமாற்றத்திற்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இடமாற்றம் செய்யப்பட்ட பின், மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

**திரு. ப. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமலும், எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எங்களின் இதய தெய்வம், எங்களின் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தை சிறந்த முறையில் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும், எனக்குப் பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களையும் வணங்குகிறேன்.



2018 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதியில் அடங்கிய பஞ்செட்டி கிராமம், சர்வே நெ. 142, 5.3 ஏக்கர் மேய்க்கால் நிலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தை கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து நீதித் துறைக்கு மாற்றம் செய்யும் பணிகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். பொன்னேரியிலிருந்து திருவள்ளூருக்கு 50 கிலோ மீட்டர் தூரம் பயணித்து மக்கள் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அங்குள்ள நீதிமன்றங்கள் அனைத்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதாலும், பொது மக்கள் நலன் கருதி இந்தப் பணியை விரைந்து முடித்துத் தருமாறு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பொன்னேரி வட்டம், பஞ்செட்டி கிராமத்தில் இருக்கின்ற கால்நடைப் பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான இடத்தை நீதித் துறைக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், 20-3-2018 அன்று அது நீதித் துறைக்கு மாற்றப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவிலே உயர் நீதிமன்றத்திலிருந்து அதற்கான மதிப்பீடு பெறப்பட்டு, விரைந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

**திரு. ப. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலே அதைச் செய்து தருமாறு பணிவுடன் கேட்டு, அமருகிறேன்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை பெறப்பட்டவுடனே உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குநேரி தொகுதியில் அரசு சார்பில் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். ஆனால், அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருக்கு அழைப்பு இல்லாமல் அவர்களாகவே வந்து, அவர்களாகவே அதற்குரிய ஆரம்ப விழாவை நடத்திவிட்டுச் சென்று விட்டார்கள். நாங்கள் மக்கள் பிரதிநிதியாக இருந்து கொண்டு, மக்களுக்குச் சேவை செய்கின்ற நேரத்தில், "நீங்கள் சட்டமன்ற உறுப்பினரா? அரசாங்கம் ஏன் உங்களை அழைக்கவில்லை?" என்று மக்கள் கேட்கிறார்கள். எனவே, நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இனிமேலாவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, இதுசம்பந்தமாக தாக்கீதை எல்லோருக்கும் அனுப்பி இருக்கிறோம்.

**திரு. எச். வசந்தகுமார்:** எங்களுக்கு அழைப்பிதழ் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்றால், நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. எச். வசந்தகுமார்:** தலைவர் அவர்களே, எங்களுக்கு அழைப்பிதழ் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கலாம்.



2018 மார்ச் 21]

**திரு. எச். வசந்தகுமார்:** கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எங்களுக்கு அங்கு மரியாதை குறைவாக இருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; அவ்வளவுதான். தயவு செய்து எங்களுக்குள்ள மரியாதையைக் கொடுங்கள் என்று உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு உரிய மரியாதை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடங்கள் திறப்பது போன்ற நீதிமன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது அரசாங்கம் அல்ல. உயர் நீதிமன்றத்தினுடைய மேற்பார்வையிலே, அந்தந்த மாவட்ட நீதிபதிகள்தான் அந்த நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள். இந்தக் குறை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல; ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இருக்கின்றது. அந்த மாவட்டத்தினுடைய, உயர் நீதிமன்றத்தினுடைய பொறுப்பு நீதிபதி அல்லது அங்கு வருகின்ற நீதிபதிகள் மற்ற மாவட்ட நீதிபதிகள் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர்களைத் தவிர்த்து, அந்தத் துறையினுடைய அமைச்சர்களைத் தவிர்த்து, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வேறு யாரையும் அவர்கள் அழைப்பதில்லை. இதைத்தான் நடைமுறையாக அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதும் சொல்லியிருக்கின்றோம்; நீங்களும் சொல்லியிருக்கின்றீர்கள். உயர் நீதிமன்றத்திற்கு இந்தக் கருத்தை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின், மக்கள் பிரதிநிதிகளின் பெயர்களை அந்த அழைப்பிதழிலே போட வேண்டும்; அவர்களை அந்த மேடையிலே அமர வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நாங்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். உங்களுடைய கோரிக்கையை கண்டிப்பாக மீண்டும் உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதை வலியுறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**65—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***19786—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகையார், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் இவர்களின் சிந்தனை, சொல், செயல் ஒருசேரப் பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) செயல் தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதி 2011-ல் உருவாக்கப்பட்ட தொகுதி. செய்யூர் தொகுதியில் 105 ஊராட்சிகளும், 21 வார்டுகளும், 1 பேரூராட்சியும் உள்ளது. சற்றேறக்குறைய 2,500, 2,600 மாணவ, மாணவியர், 26 அரசு மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளைத் தன்னகத்தே கொண்ட தொகுதி. இந்தத் தொகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகூட இல்லாமல் இருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. கல்லூரி அமைப்பதற்குப் போதிய இடமும் உள்ளது. தொகுதியின் மையப் பகுதியிலிருந்து சென்னைக்கு 100 கிலோ மீட்டருக்குமேல் பயணிக்கவேண்டிய நிலையில், செங்கல்பட்டு, திண்டிவனம், மயிலம், நெமிலி போன்ற பகுதிகளில் உள்ள கல்லூரிகளும் சற்றேறக்குறைய 60 கிலோ மீட்டர் தொலைவிற்குமேல் அமைந்துள்ளதால், நீண்ட, நெடிய பயணம் செய்ய வேண்டிய நிலையில் மாணவ, மாணவியர் உள்ளனர். இதனால் அவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை உள்ளது. எனவே, செய்யூர் தொகுதியில் ஒரேயொரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.



2018 மார்ச் 21]

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், “காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்கள். செய்யூர் தொகுதி அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 அரசுக் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 8 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 28 சுய நிதி கலைக் கல்லூரிகளும் என மொத்தம் 40 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில், 2011-2012 ஆம் கல்வியாண்டில், மாண்புமிகு அம்மா அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், நெம்மேலியில் 5 பாடப் பிரிவுகளுடன் புதிதாக சென்னை பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி துவங்கப்பட்டது. அக்கல்லூரி 24-2-2016 முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கு 2017-2018 ஆம் கல்வியாண்டில் இளங்கலையில் 1 பாடப் பிரிவும் மற்றும் முதுகலையில் 2 பாடப் பிரிவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, 2013-2014 ஆம் கல்வியாண்டில், மாண்புமிகு அம்மா அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூரில் 5 பாடப் பிரிவுகளுடன் புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டது. அக்கல்லூரிக்கும் புதிய கட்டடம்

[2018 மார்ச் 21

கட்டப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் 2015 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. மேலும், 2016-2017 ஆம் கல்வியாண்டில், மாண்புமிகு அம்மா அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கத்தில் 5 பாடப் பிரிவுகளுடன் மேலும் புதிதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி தொடங்கப்பட்டது. 5-2-2018 அன்று அக்கல்லூரிக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது தரைதளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் ஏற்கெனவே இராஜேஸ்வரி வேதாசலம் அரசுக் கல்லூரியானது தொடங்கப்பட்டு, இயங்கி வருகின்றது. அதிலே, 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 4 இளங்கலைப் பாடப் பிரிவுகளும், 4 முதுகலைப் பாடப் பிரிவுகளும், 2017-2018 ஆம் கல்வியாண்டில் 2 இளங்கலைப் பாடப் பிரிவுகளும், 2 முதுகலைப் பாடப் பிரிவுகளும், M.Phil., கணினிப் பாடப் பிரிவும், Ph.D., கணினி மற்றும் வேதியியல் பாடப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களுடைய சேர்க்கையை எடுத்துக் கொண்டால், காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 3 அரசுக் கலைக் கல்லூரிகள் மற்றும் 1 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 179 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோன்று, சுய நிதி கலைக் கல்லூரிகளில் 907 இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல் கல்லூரிகள் அமைக்கப்பட்டு, புதிய பாடப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, மாணவர்களுடைய சேர்க்கை எண்ணிக்கைக்கு ஏற்ப, அங்கு கல்லூரிகள் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்மிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதியில், பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படாததால் கடல் நீர் உட்புகுந்து விவசாயம் கைகொடுப்பதில்லை; எந்தவொரு தொழிற்சாலையும் இல்லை; சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி; பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி; ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மீனவக் குடும்பங்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி; குக்கிராமங்கள் அதிகம் இருக்கின்ற தொகுதி என்பதால், போக்குவரத்து வசதியும் போதுமானதாக இல்லை. ஆகவே, செய்யூரில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்பட்டால், அரசுக் கலைக் கல்லூரி படிப்பைத் தேர்ந்தெடுக்கக்கூடிய சற்றேறக்குறைய 500 மாணவ, மாணவிகள் கல்லூரிப் படிப்பைத் தொடர ஏதுவாக அமையும். ஆகவே, அனைத்து நிலைகளிலும் பின்தங்கிய, முக்கியமாக கூவத்தூரை உள்ளடக்கிய செய்யூர் தொகுதிக்கு, ஒரு குறுந்தொகையை ஒதுக்கீடு செய்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வலியுறுத்தி அமைகின்றேன், நன்றி.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதிதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட வேண்டுமெனில், கல்லூரிக்குத் தேவையான புதிய கட்டடம் கட்டுவதற்கு 7 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், தொடரும் செலவினமாக 2 கோடியே 43 இலட்சத்து 72 ஆயிரத்து 720 ரூபாய் என மொத்தம் 10 கோடியே 41 இலட்சத்து 22 ஆயிரத்து 720 ரூபாய் தேவைப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதியில் ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்து, தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து செயல்படும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

*முற்பகல் 10-40*

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி சட்டப் பேரவை தொகுதி, திருச்சுழியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினுடைய சார்பில் ஓர் உறுப்புக் கல்லூரி, கலைக் கல்லூரியைத் துவங்குவதற்கு 2011 ஆம் ஆண்டிலே

[*2018 மார்ச் 21*

*அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான முயற்சிகள் அன்றைக்கு மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக, அந்தக் கல்லூரி அங்கே அமையப்பெறக்கூடிய வாய்ப்பு எழவில்லை. அந்தப் பகுதி மிகுந்த கிராமப்புற பகுதி. குறிப்பாக, பெண் கல்விக்கு முக்கியத்துவம் தேவையாக இருக்கக்கூடிய பகுதி. பல உயர் நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இப்போது நிறைய அங்கே வந்துவிட்ட சூழ்நிலையில், அங்கேயிருக்கக்கூடிய மாணவர்கள் அருப்புக்கோட்டை அல்லது விருதுநகர் அல்லது சாத்தூர் பகுதிகளுக்குச் செல்லவேண்டிய நிலை இருக்கக்கூடிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த முறை திருச்சுழியிலே ஓர் அரசு கலைக் கல்லூரியை உருவாக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

*"ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு" என்பதுபோல செய்யூர் தொகுதிக்கு ஒரேயொரு கல்லூரி வேண்டுமென்று கேட்டார். அதேபோல, திருச்சுழி தொகுதிக்காக, இந்த முறை ஓர் அரசு கலைக் கல்லூரியை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

*அதேபோல, பல்கலைக்கழகங்களிலே இருக்கக்கூடிய உறுப்புக் கல்லூரிகளிலே,—*Constituent Colleges*—அங்கே பணிபுரியக்கூடிய பேராசிரியர்களுக்கான சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அந்த ஊதியத்தையும் உயர்த்தித் தருவதற்கான முயற்சிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று நான் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்ற திருச்சுழி பகுதியிலே புதியதாக ஒரு கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். *ஏற்கெனவே, 2011 ஆம் ஆண்டிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பாக, பல்வேறு கல்லூரிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அறிவிக்கப்பட்டன.* அனைத்துக் கல்லூரிகளுக்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்த இடங்களில் கட்டுமானப் பணிகளும் தொடங்கப்பட்டு, அந்தக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டு, இன்றைக்கு அனைத்து இடங்களிலும் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருச்சுழி பகுதியிலே அந்தக் காலக்கட்டத்தில் இடமானது போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், அது ஒன்று மட்டும் விடுபட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, எதிர்காலங்களில் தேவைக்கேற்ப அது ஆய்வு செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.



*2018 மார்ச் 21*]

அடுத்து, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர் பெருமக்களுக்கு சம்பளம் குறைவு என்று சொல்கின்றார்கள். நம்முடைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே இன்றைக்கு Guest Lecturers ஆக பணியாற்றக்கூடியவர்களுக்கு ஆறாயிரம் ரூபாய் சம்பளம் என்றிருந்ததை, ரூபாய் பத்தாயிரமாக உயர்த்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல, பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இந்தச் சூழ்நிலையிலே, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளில் வரும் காலங்களில் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, அவர்களுடைய உழைப்புக்கேற்றாற்போல் சம்பளம் வழங்குவதற்கு அரசானது பரிசீலனை செய்யும் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் *66*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**66—**

## நியாய விலைக் கடையைப் பிரித்தல்

***12379—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 மார்ச் 21

(அ) கடையநல்லூர் தொகுதி, முத்துகிருஷ்ணாபுரம் வார்டு 6 மற்றும் 7-ல் இயங்கி வரும் அமுதம் நியாய விலைக் கடை எண் 4-ஐ இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்துகிருஷ்ணாபுரம், வார்டு 6 மற்றும் 7-ல் இயங்கிவரும் அமுதம் நியாய விலைக் கடை எண் 4-ஐ இரண்டாகப் பிரிக்கக் கோரியது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அது பரிசீலனையில் உள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**67—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***9238—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சனமங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2018 மார்ச் 21]

மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சனமங்கலம் ஊராட்சி, விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினால், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

**திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, தமிழ்நாட்டிற்காக, தமிழ்மொழிக்காக, தமிழ் இனத்திற்காக, ஏன்? உலகத் தமிழினம் வாழ, வளம்பெற, ஆம்; வருங்கால சந்ததியர் வளம் பெற, அனுதினமும் சிந்தித்து, சிந்தித்து, விலையில்லாத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை, விதி 110-ன்கீழ் திட்டங்களை வாரி வழங்கி, கருவில் இருக்கும் சிசு முதல், கல்லறை செல்லும் முதியோர் வரை திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திக் காட்டி, அனைவருக்கும் திட்டங்கள், அடுக்கடுக்காய்த் திட்டங்கள், மக்கள் வளம்பெற திட்டங்கள், நாடு நலம்பெற திட்டங்கள் என, சொன்னதையும் செய்வோம்; சொல்லாததையும் செய்து காட்டுவோம் என்று சட்டங்களையும், திட்டங்களையும் இயற்றி, இந்தியாவில் எந்த மாநிலத்திலும், எந்தவொரு முதலமைச்சரும் செய்திடாத சாதனைத் திட்டங்களை, கிள்ளித்தர மனமில்லாத சுயநல அரசியல் தலைவர்கள் மத்தியில், அள்ளி அள்ளித் திட்டங்களை வாரி வழங்கிய ஒன்பதாம் வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) நாம் வணங்கும் தெய்வம் நம்மை வாழவைத்த இதய தெய்வம், தமிழினம் காத்த தமிழர் குலச்சாமி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

*முற்பகல் 10-45*

காலம் தந்த கொடையாய், கருணைக் கடலாய், பாசத்தை வாரி வழங்கும் நம் அம்மா அவர்களின் நிழலாய், சோதனைகளை எல்லாம் சாதனைகளாய் மாற்றிக் காட்டிய சாதனைத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தளபதியாய் வளர்ந்து, நம் அம்மா அவர்களின் ஆட்சியை நாடுபோற்றும்விதமாய் நல்லாட்சி வழங்கி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாகக் கொண்டு

[2018 மார்ச் 21

செல்லும் எங்கள் அண்ணன் இந்த நாட்டின் மன்னன், கொங்கு மண்டலம் தந்த தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு நாடு கண்டெடுத்த சிங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன்.

மண்ணச்சநல்லூர் வட்டம், சனமங்கலம் ஊராட்சியில் சனமங்கலம் கிராமம் உள்ளது. இக்கிராமம் திருச்சி மாவட்டத்தின் கடைப் பகுதியில் உள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் தங்களின் சுகாதாரத் தேவைகளுக்காக பிரகம்பி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ அல்லது மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கோ சென்று சிகிச்சை பெறுகின்றனர். இப்பகுதியில் போக்குவரத்து வசதியும் மிகவும் குறைவாக உள்ள காரணத்தினால், இவர்கள் மருத்துவமனைக்குச் சென்று வர மிகவும் சிரமப்படுகின்றனர். ஆதலால், இப்பகுதி மக்களின் சிரமத்தைக் கருத்தில்கொண்டு, இப்பகுதியில் புதிதாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஏற்கெனவே 1,760 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட நேற்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற நல்ல செய்தியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. வருங்காலத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

**திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. இதைச் செயல்படுத்தும் விதமாக மக்கள் நலன் காக்க மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 108 ஆம்புலன்ஸ் திட்டம், அம்மா சஞ்சீவி, அம்மா மருந்தகம், அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம், தாய்ப்பால் ஊட்ட தாய்மார்களுக்குத் தனி அறை திட்டம், பிறக்கும் குழந்தைகளுக்கும் 16 வகையான பரிசுப் பொருட்கள் அடங்கிய முதலமைச்சர் பரிசு பெட்டகம் தந்து தாய்மாமன் சீதனமும் வழங்கிய அம்மா அவர்கள், மனிதகுலம் சிறக்க, நீண்ட ஆயுளுடன், நோயில்லாமலும், ஆரோக்கியமாய் வாழ, வருமுன் காப்போம் திட்டத்தையும் செயல்படுத்தி நாட்டு மக்களைப் பாதுகாத்திட்ட அம்மா அவர்களின் அரசு அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கிவரும் அரசு, அம்மா அவர்களின் கனவுகளை, எண்ணங்களை நிறைவேற்றும் விதமாக நம் அம்மா அவர்கள் வழங்கிய அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதைப் பெருமிதத்தோடு இச்சட்டப் பேரவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மேலும், மண்ணச்சநல்லூர் வட்டம் இரண்டு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டதாகும். இப்பகுதியிலுள்ள மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புறநோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்பகுதியில் பொது மருத்துவம், பொது அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மருத்துவர் இல்லாததால், இவர்கள் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டி உள்ளது. ஆகவே, இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் பொது மருத்துவர் மற்றும் பொது அறுவைச் சிகிச்சை மருத்துவரைப் பணியமர்த்தி, இப்பகுதி மக்கள் பயன்பெற ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கக் கூடிய மருத்துவர்கள் விரைவிலே நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. அதற்குப் போதுமான கட்டட வசதி கடந்த காலத்தில் இல்லாமல் இருந்தது. 2006-2011 வரையிலான தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதற்காக சுமார் 2 கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டு, கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டு, அறுவைச் சிகிச்சை அரங்கம் கட்டப்பட்டு, எங்களது கழகத்தின் செயல் தலைவர் அன்றைக்குத் துணை முதலமைச்சராக இருந்த நேரத்தில், அவர் வந்து, தனது திருக்கரங்களால் திறந்து வைத்தார். இன்றைக்கு அந்த மருத்துவமனையில் தினந்தோறும் சுமார் 650-க்கும் மேற்பட்ட புறநோயாளிகளும், அதேபோல, மாதந்தோறும் 350 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அறுவைச் சிகிச்சை அரங்கம் இருந்தும், அங்கே அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மருத்துவர் இல்லை; M.S. (Surgery) doctor இல்லை. அதனால், அங்குள்ள மிகவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்றால் சுமார் 40 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பழனிக்கோ அல்லது திண்டுக்கல்லுக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. அறுவை சிகிச்சை அரங்கம் இருந்தும், அதற்குப் போதுமான மருத்துவர் இல்லாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவரை இந்த ஆண்டு நியமித்து, அங்கே அந்த நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பில் M.R.B. எனப்படும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 10,680 மருத்துவர்களை இந்த ஐந்தாண்டுகளில் நியமனம் செய்திருக்கிறோம். இது ஒரு வரலாற்று நிகழ்வு. அதேபோல், 9,533 செவிலியர்களை நியமனம் செய்திருக்கிறோம். Speciality Doctors தாங்கள் குறிப்பிடுகின்ற M.S., M.D., மருத்துவர்களுக்கு விதிமுறைகளையெல்லாம் தளர்த்தி, walk-in-selection என்ற முறையில், M.D., M.S., படித்த 550 Speciality Doctors-சிறப்பு மருத்துவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கும், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கும் இடைப்பட்ட காலத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மீண்டும் சிறப்பு மருத்துவர்களை நியமனம் செய்வதற்கு, அரசின் சார்பில் இந்த வாரம் notification வெளியிடப்படவிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மிகச் சிறப்பாக அமல்படுத்தப்பட்டுள்ள 7-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளால் மருத்துவர்கள் அதிகப் பயன்களை அடையக்கூடிய நிலை இருக்கிறது. அதன் காரணமாக இனி வரும் காலக்கட்டங்களில் சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதில் எந்தவிதமான தடையும் நமக்கு இல்லை. இப்போது நிறைய சிறப்பு மருத்துவர்கள்-Ortho, Paediatrician, OGcian அனைவருமே அரசு மருத்துவமனைகளில் வந்து பணிபுரிவதற்கு ஆர்வமாக இருக்கிறார்கள். இனி வருங்காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடங்களிலும் சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் உள்ளாட்சித் துறை குறித்த கேள்வியை

எழுப்பியபோது, சுகாதாரத் துறை சம்பந்தமாக ஒரு கேள்வியை எழுப்பினார். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.12,000/- மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, அத்தொகையை ரூ.18,000/- ஆக உயர்த்தி அரசாணை வெளியிட்டார்கள். அத்தொகை எப்போது வழங்கப்படும் என்று உறுப்பினர் கேட்டார். இரண்டு நாட்களாக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், எல்லாக் கட்சி உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்கூட பாராட்டக்கூடியவகையில், ரூ.12,000/- வழங்கப்பட்டு வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு 5-வது மாதத்தில் 4,000/- ரூபாயும், அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்த பிறகு 4,000/- ரூபாயும், தடுப்பூசிகளை உரிய காலக்கட்டங்களில் போடும்போது 4,000/- ரூபாயும் என மொத்தம் 12,000/- ரூபாய் வழங்கப்படுகிறது. இது தொடர்பாக நாங்கள் பல்வேறு ஆய்வுகளை நடத்தியிருக்கிறோம்; அதனடிப்படையில் பல்வேறு நிபுணர்கள் வழிகாட்டுதல்களை வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே targeted intervention என்ற முறையில், NITI Aayog திட்டத்தின்கீழ் இந்தியாவிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருப்பதென்பது ஒரு சிறப்பு. அந்தச் சிறப்பைக் காட்டிலும் முதலிடத்தில் வருவதற்கு சில நெறிமுறைகளை நிபுணர்கள் நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அதாவது, Low birth weight, Anaemia போன்ற சில காரணங்களை, சிறு சிறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதையும் நாம் சரி செய்கின்றபொழுது, இந்தியாவிலேயே தமிழ்நாடு 100% முதன்மை மாநிலமாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சுட்டிக்காட்டியதன் அடிப்படையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், targeted intervention என்ற முறையில் தற்போது வழங்கப்படும் 12,000/- ரூபாய், கூடுதலாக வழங்கக்கூடிய 6,000/- ரூபாய், மொத்தம் 18,000/- ரூபாயில், கர்ப்பிணிப் பெண்ணிற்கு மூன்றாவது மாதத்தில் 2,000/- ரூபாயை பணமாகவும், பணமாக மட்டுமல்லாமல், அவர்களுக்கு ஏற்படும் இரத்த சோகையைத் தவிர்ப்பதற்காகவும், பிறக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளும் ஆரோக்கியமாகப் பிறக்க வேண்டும், மகப்பேறு மரணம் இருக்கக் கூடாது; சிசு மரணம் இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலும், ஒரு கிலோ Mother Health Mix, ஒரு கிலோ உயர் ரக பேரீச்சம்பழம், அரை கிலோ Protein Biscuits,





அரை கிலோ ஆவின் நெய்; அதுமட்டுமல்லாமல், 200 மி.லி. Iron Syrup 3 Bottles, deworming-க்காக Albendazole என எல்லாம் சேர்த்து 'அம்மா தாய்-சேய் நலப் பெட்டகம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஓர் அற்புதமான வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தை தற்போது அறிவித்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெகுவிரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பார்கள். இந்தத் திட்டம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிச்சயமாக ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்து, வரும் காலத்திலே இந்தியாவிலே ஒரு முதன்மைத் திட்டமாக விளங்கும். ஏற்கெனவே சுகாதாரத் துறையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை, முனைப்பான திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துகின்ற மாநிலம் தமிழகம் என்று உலக சுகாதார நிறுவனத்தால் பாராட்டப்படுகின்ற அந்த வரிசையிலே, இந்தத் திட்டமும் அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

## வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***5252—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்ட அரசாணை (நிலை) எண்

125, வருவாய்த் துறை, நாள் 21-4-2017-ன்மூலம் ரூபாய் 2 கோடியே 61 இலட்சத்து 79 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வருவாய்த் துறைக்குச் சொந்தமான தாளவாடி கிராமம், புல எண் 436/2-ல், 0.20.0 ஹெக்டேர் இடம் தேர்வு செய்து, 19-1-2018 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்பொழுது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

**திரு எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் எங்கள் இல்லங்களிலும் உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் குடும்ப குல தெய்வம், என்னை வாழ வைத்த மனித தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி சிரம் தாழ்த்தி பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன். எங்களை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. K.A.S. அவர்களையும், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. K.C.K. அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் கடந்த 19-1-2018 அன்று பூமி பூஜை போடப்பட்டு பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. கேள்வி கேட்கும் முன்னே மின்னல் வேகத்தில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு நீர்நிலைப் புறம்போக்கு மற்றும் இதர பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற 3 இலட்சம் மக்களுக்கு நிரந்தரமாக வீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கேற்ப, தனியார் நிலங்களைக்





கையகப்படுத்தி, ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க புதிய திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி வட்டம் மலைப் பகுதி திங்களூர் 'A' கிராமம், திங்களூர் 'B' கிராமப் பொது மக்கள் தங்கள் அத்தியாவசியப் பணிகளைச் செய்ய 88 கிலோ மீட்டர் தூரமுள்ள தாளவாடி வனப் பகுதி வழியாக தாளவாடிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. 30 கிலோ மீட்டர் தூரமுள்ள சத்தியமங்கலம் வட்டத்துடன் மேற்படி இரண்டு கிராமங்களையும் இணைத்து வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்க் கிராமங்களைப் பிரிப்பதைப் பொறுத்த அளவிலே உயர்மட்டக் குழு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வருவாய்க் கிராமங்கள் பிரிப்பதற்காக உள்ள அந்த உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்காகப் பரிந்துரை செய்து, தகுதியின் அடிப்படையிலே அது பிரித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

**திரு. எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தாளவாடி வட்டம் என்ற புதிய வட்டத்தையும், சத்தியமங்கலம் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட நம்பியூர் வட்டத்திலுள்ள 4 கிராமங்களையும், ஏற்கெனவே உள்ள சத்தியமங்கலம் வட்டத்தையும், அதாவது மூன்று வட்டங்களையும் ஒருங்கிணைத்து, சத்தியமங்கலத்தில் புதிய வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டுகிறேன். பொது மக்கள் எளிய முறையில்

[2018 மார்ச் 21

பொது சேவையைப் பெறும் வாய்ப்பை மேம்படுத்த, இந்தக் கோட்டாட்சியர் அலுவலகத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய்க் கிராமங்கள், வட்டங்கள் அதனுடைய அடிப்படையிலே புதிய கோட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தகுதியின் அடிப்படையில் புதிய கோட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**69—**

## தொழிற்பேட்டை

***2103—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் சுமார் 2 இலட்சம் மக்கள் வசிக்கின்ற ஒரு மிகப் பெரிய ஒன்றியம். இந்த ஒன்றியத்திலே, குறிப்பாக விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வசித்து வருகின்றார்கள். ஏற்கெனவே, நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, தலைவர் கலைஞர் அவர்கள் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அந்த ஒன்றியத்தை அறிவித்தார்கள். அங்கே விவசாயிகள் இரண்டு போகம் சாகுபடி செய்த நிலைமை மாறி, மழை இல்லாத சூழ்நிலையில், தற்பொழுது ஒரு போகம் செய்யக்கூடிய நிலைகூட இல்லாத நிலைமையிலே விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். எனவே, அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை அமைத்தால் அங்கு வேலையில்லாமல் வாடுகின்றவர்கள். . .

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. சுந்தர்:** பல்லாயிரக்கணக்கான பேர் கல்வி அறிவு பெற்றும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆதலால் இன்றைக்கு சுய தொழில் தொடங்கலாம் என்று பல இளைஞர்கள் அந்த வட்டாரத்திலே இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் தொழிற்பேட்டையை அமைக்கின்ற வகையில் முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் பகுதியைப் பொறுத்தவரையில், உத்திரமேரூர் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இதில் 15 முதல் 50 ஏக்கர் வரையிலான அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏதும் அங்கு இல்லை எனவும், அங்கு விவசாய நிலங்கள் மட்டுமே

உள்ளன எனவும் காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உகந்த நிலம் கிடைக்கப்பெறாததால், அங்கு சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் அன்னாத்தூர், சிறுபினாயூர் ஊராட்சிகளில் 50-லிருந்து 60 ஏக்கர் வரை அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக இருக்கின்றார்கள். பல நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறார்கள் என்பதால், அவருக்கு உத்திரமேரூர் பகுதிகளைப் பற்றி நன்கு தெரியும். சிறுபினாயூர் மற்றும் அன்னாத்தூர் ஊராட்சிகளில் 60 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அளவிற்கு நிலங்கள் இருப்பதால், அந்த இடங்களில் சிட்கோ உதவியுடன் தொழிற்பேட்டை அமைக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். எனது தொகுதி சென்னைக்குப் பக்கத்தில் இருக்கின்ற ஒரு தொகுதி. அந்தத் தொகுதி மக்கள் மிகவும் ஆவலோடு இருக்கிறார்கள். எனவே, அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அந்த கிராமப் பகுதிகளில் புதிய தொழிற்பேட்டை அமைக்க உகந்த நிலங்கள் கண்டறியப்பட்டு, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வம் உள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், அவர்களின் தேவையின் அடிப்படையில், மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, சிட்கோ தொழிற்பேட்டை





அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அதேபோல, தொழில் முனைவோர்கள் சங்கம் குறைந்தபட்சம் 50 ஏக்கர் தனியார் நிலங்களுடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வந்தால், அதுகுறித்து மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

## அடிப்படை வசதிகள்

***4043—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், கரிசல்குளம்பட்டி மற்றும் கிருஷ்ணன்கோவிலிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவோடும், துணிவோடும், கருணையோடும், திறமையோடும், ஈரமோடும், வீரமோடும் தன்னையே மெய்வருத்தி தரணியை உயர்த்தி, அடுப்பங்கரையில் இருந்த பெண்களை அதிரடிப் படைக்குக் கொண்டுவந்தவர்; தொட்டிலை ஆட்டிய பெண்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்த தனிப் பெருந்தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புனித அவையில் முழு உருவப் படத்தினைத் திறந்து வைத்து,

பெருமைக்குப் பெருமை சேர்த்த மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும் ஒட்டுமொத்த பெண் குலத்தின் சார்பாக எனது பணிவான நன்றியைப் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கரிசல்குளம்பட்டி ஆதி திராவிட மாணவர்கள் விடுதிக்கான சுற்றுச் சுவர் கட்டப்பட்டு, மின்சார இணைப்பு வழங்கப்பட்டு, முறையான வசதிகள் ரூ.3 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, மாணவியர் விடுதிக்கான தண்ணீர் தொட்டி பழுதுபார்க்கப்பட்டு, ரூ.3.5 இலட்சம் செலவில் பிற வசதிகளோடு சுகாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கிருஷ்ணன்கோவிலில் உள்ள மாணவர் விடுதியில் தண்ணீர் வசதி மற்றும் பிற மேம்பாட்டுப் பணிகள் ரூ.8 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலமாக, கரிசல்குளம்பட்டி மாணவர் விடுதியில் 100 மாணவர்களும், மாணவியர் விடுதியில் 50 மாணவியர்களும், கிருஷ்ணன்கோவில் விடுதியில் 60 மாணவர்களும் பயன்பெறும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை இவ்வரசு கனிவோடு பரிசீலித்து, விடுதிகளை மேம்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

*முற்பகல் 11-05*

**திருமதி மு. சந்திரபிரபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்' என்ற பாடல் வரிகளுக்கேற்ப வாழ்ந்து, மறைந்த தலைவர்கள் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் பாரத ரத்னா, சத்துணவு தந்த சரித்திர நாயகன், நூற்றாண்டு விழா



நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, அல்லும் பகலும் அயராது உழைத்து, தமிழக மக்களுக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை வகுத்து, அதனைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதை விட்டு நீங்காமல் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தையும் முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற மக்கள் நலப் பணிகளை தமிழக மக்களுக்காகச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு எத்தனை தடைக்கற்கள் வந்தாலும், அந்தத் தடைக்கற்கள் ஒவ்வொன்றையும் தூள்தூளாக்கி, தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி சிறப்பாக ஆட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அவரோடு இணைந்து சிறப்பாக ஆட்சி புரிந்து சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில் கழகத்திற்கு எத்தனை சோதனைகள் வந்தாலும், அதையெல்லாம் தகர்த்தெறிந்து சிறப்பாக விருதுநகர் மாவட்டக் கழக நிருவாகிகளையும், தொண்டர்களையும் அரவணைத்து கழகத்தைச் சிறப்பாக வழிநடத்திவரும், என்னைப் போன்ற எளிய தொண்டனையும், மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று, நான் சட்டமன்ற உறுப்பினராவதற்கு உறுதுணையாக இருந்த விருதுநகர் மாவட்டத்தின் தொண்டர்களின் பாதுகாவலரும், எங்கள் மாவட்ட கழகச் செயலாளரும், பால் வளத் துறை அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், கரிசல்குளம்பட்டியில் ஆதி திராவிடர் நல விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தண்ணீர் வசதி குறைவாக உள்ளது. அதற்கு கூடுதல் போர்வெல் அமைத்துத் தருவதோடு மட்டுமல்லாமல், அங்குள்ள கழிப்பிடத்தைப் பராமரிப்பு செய்து தர வேண்டும். மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம்,

[2018 மார்ச் 21

கிருஷ்ணன்கோயிலில் உள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு தண்ணீர் வசதியும், கழிப்பிட வசதியும் ஏற்படுத்தித் தருவதோடு, அதனைப் பராமரித்து, புதுப்பித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டிலேயே மறுபரிசீலனை செய்து நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

**திருமதி மு. சந்திரபிரபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள சுந்தரபாண்டியம், ரைட்டம்பட்டி, வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் உள்ள ஆதி திராவிட நல விடுதிகளில் சுகாதார வசதியும், குடிநீர் வசதியும் செய்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து விடுதிகளும் சென்ற வருடம் பராமரிக்கப்பட்டுள்ளன. அப்படி ஏதேனும் குறைகள் இருந்தால், அந்தக் குறைகளும் இந்த நிதியாண்டிலேயே நிவர்த்தி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியிலே இருளர் என்று சொல்லக்கூடிய S.T. people அதிகமாக வசிக்கிறார்கள். குறிப்பாக, மதுராந்தகம் தொகுதியில், அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக அரசாங்கத்தின் சார்பில் கட்டித் தரப்பட்டிருந்த தொகுப்பு வீடுகள் மிகவும் சீர் குலைந்திருந்தன. அரசின் கவனத்திற்குப் பலமுறை எடுத்துச் சென்றும் சரி செய்யப்படவில்லை. ஒரு வயதான மூதாட்டி, சுவர் இடிந்து விழுந்து இறந்துவிட்டார். இன்னும் அந்த மக்கள் அச்சிறுபாக்கம் சமுதாய நலக் கூடத்தில்தான் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் இதுவரை கட்டித் தரப்படவில்லை. தொகுதியில் இந்த ஊர், அந்த ஊர் என்று அல்ல; பெரும்பாலான ஊர்களில் தொகுப்பு வீடுகள் அனைத்துமே எப்பொழுது விழும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையில்தான் இருக்கின்றன. இவை எல்லாம் நம்முடைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் சரி செய்து தரப்படுமா என்று உங்களைப் பணிவோடு, தாழ்மையோடு கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்தப் பகுதிகளை எல்லாம் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தீர்கள் என்றால், அமைச்சர் அவர்கள் பார்த்துவிடுவார்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த கோரிக்கையை அவருடைய சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே செய்துமுடிக்கலாம். இருப்பினும், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களிடம் அதை எடுத்துச் சென்று, அதற்கான வழிமுறைகள் இருந்தால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 21

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்)-5@

**1—**

### புறவழிச் சாலையை நீட்டித்தல்

**வினா எண் 3498—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் மாவட்டம், தாமரைபாடி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து நத்தம் தொகுதிக்குட்பட்ட தோட்டனூத் ஊராட்சி வழியாக நத்தம்-காரைக்குடி சாலை, காந்தி கிராமம் வரை புறவழிச் சாலையை நீட்டித்து திண்டுக்கல்-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இணைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகருக்கு, புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க (DPR) நெடுஞ்சாலை சுழற்சி நிதியிலிருந்து ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புறவழிச்சாலையானது தேசிய நெடுஞ்சாலை 45 கி.மீ. 414/6-ல் அதாவது முள்ளிப்பாடி கிராமத்திலிருந்து பிரிந்து, தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ 378/6-ல் அதாவது பஞ்சம்பட்டி கிராமத்தில் இணையும் விதத்தில் அமைய உள்ளது. மேலும் இச்சாலையானது முள்ளிப்பாடி, கோவிலூர், பெரியகோட்டை, ராஜாக்காபட்டி, தோட்டனூத்து, அடியனூத்து, எ.வெள்ளோடு ஆகிய ஏழு கிராமங்களை கடந்து செல்கிறது. இப்புறவழிச்சாலையானது மாவட்ட முக்கிய சாலையான திண்டுக்கல்-மணக்காட்டூர் சாலை, மாநில நெடுஞ்சாலையான திண்டுக்கல்-நத்தம்-சிங்கம்புணரி-திருப்பத்தூர்-தேவகோட்டை ரஸ்தா சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலையான திண்டுக்கல்-சிறுமலை மலைச்சாலை ஆகிய மூன்று சாலைகளை கடந்து செல்கிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புப் பணிகள் தற்போது முடிவடையும் நிலையில் உள்ளன. நிலம் கையகப்படுத்துவதற்கான திருத்திய நிலத்திட்ட அட்டவணை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2018 மார்ச் 21]

**2—**

### உபரி நீரைத் தேக்கி வைத்தல்

**வினா எண் 3500—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி தொகுதி, மானூர் பெரியகுளத்தில் உபரி நீரைத் தேக்கி வைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி, மானூர் கிராமத்திலுள்ள மானூர் பெரியகுளம் பகுதியில் நல்லமுறையில் மழை பெய்யும் காலங்களில் மட்டும் முழு கொள்ளளவை எட்டுகிறது. மேலும், இக்குளத்திலிருந்து உபரி நீர் செல்வதற்கு வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளதால், இக்குளத்தில் உபரிநீரைத் தேக்கி வைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**3—**

### புதிய காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 3542—திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட சிட்கோ நகர் மற்றும் அதை ஒட்டியுள்ள பல குடியிருப்புகளை உள்ளடக்கி புதிய காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்**:

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட சிட்கோ நகர் பகுதி வில்லிவாக்கம் கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது. ஏற்கெனவே, இக்காவல் நிலையம் மெட்ரோ-1 வகை காவல் நிலையமாக அரசால் மறுவகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் காவல் நிலையத்திற்கும் சிட்கோ நகருக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. மட்டுமே ஆகும். எனவே, மேற்கண்ட பகுதியில் புதியதாக காவல் நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

**4—**

## கிருஷ்ணா நதி நீர் பகிர்வு குறித்த விவரம்

**வினா எண் 4257—திரு. S. செம்மலை:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணா நதி நீர் பகிர்வு ஒப்பந்தப்படி 2015-2016 ஆம் ஆண்டிற்கான தண்ணீரை ஆந்திரா அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்**:

இரு மாநிலங்களுக்கிடையே, 18-4-1983 நாளிட்ட ஒப்பந்தப்படி, தமிழ்நாடு எல்லையில் கிருஷ்ணா நீர் திறந்து விடும்படி, இம்மாநில அரசால், ஆந்திரப் பிரதேச அரசிடம் கோரப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டில் போதிய அளவு கிருஷ்ணா நீர் பெறப்படாததினால், சென்னை குடிநீர் தேவைக்கான தண்ணீர் திறந்துவிட முடியவில்லை என ஆந்திரப் பிரதேச அரசால் தெரிவிக்கப்பட்டது. எனினும், 2016-2017 ஆம் ஆண்டிற்கான கிருஷ்ணா நதி நீரினை பெறும் பொருட்டு, அரசால் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையினால், கண்டலேறு நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைவாக இருந்தபோதும், அந்நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, 2.278 டி.எம்.சி. அடி (மார்ச் 2017 வரை) கிருஷ்ணா நீர் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்டுள்ளது.





**5—**

## ஏரியினைத் தூர்வாருதல்

**வினா எண் 6588—திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், புலிவலம் கிராமத்தில் பொதுப் பணித் துறையின் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்**: மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், புலிவலம் கிராமத்தில் பொதுப் பணித் துறையின் புலிவலம் ஏரி, 13-வது நிதிக் குழுவின் நிதியுதவியின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. மேலும், ஏரிக்கரையை வலுப்படுத்த தேவையான மண் ஏரியினுள் தூர்வாரப்பட்டு, கரை பலப்படுத்தப்பட்டுள்ளது.

**6—**

## ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 6589—திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், திருத்தலையூர் கிராமத்தில் பொதுப் பணித் துறையின் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்**:

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், திருத்தலையூர் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரி 13-வது நிதிக் குழுவின் நிதியுதவியிலிருந்து 2011-2012 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. மேலும், ஏரிகளின் கரைகளை வலுப்படுத்த தேவையான மண் ஏரியினுள் தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

[2018 மார்ச் 21

**7—**

### ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 6590—திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், பேரூர் கிராமத்தில் பொதுப் பணித் துறையின் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:** மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், பேரூர் கிராமத்தில் பொதுப் பணித் துறையின் பேரூர் ஏரி, நபார்டு RIDF-XX திட்டத்தின்கீழ், 2014-2015 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. மேலும், ஏரிக்கரையை வலுப்படுத்த தேவையான மண் ஏரியினுள் தூர்வாரப்பட்டு, ஏரிக்கரை பலப்படுத்தப்பட்டுள்ளது.

**8—**

### ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 6592—திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், பெரமங்கலம் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், பெரமங்கலம் கிராமத்தில், நபார்டு RIDF-XX திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டு பெரமங்கலம் ஏரி புனரமைக்கப்பட்டு ஏரியினுள் தேவையான மண் தூர்வாரப்பட்டு, ஏரிக்கரை பலப்படுத்தப்பட்டுள்ளது.



2018 மார்ச் 21]

**9—**

### ஏரியைத் தூர்வாரி சீரமைத்தல்

**வினா எண் 6597—திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, நெய்வேலி ஊராட்சி, நெய்வேலி ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:** மண்ணச்சநல்லூர் தொகுதி, முசிறி ஒன்றியம், நெய்வேலி ஏரி நபார்டு RIDF-XX திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. மேலும், ஏரிக்கரையை வலுப்படுத்த தேவையான மண் ஏரியினுள் தூர்வாரப்பட்டு, கரை பலப்படுத்தப்பட்டுள்ளது.

**10—**

### வனப் பகுதியிலிருந்து விலக்களித்தல்

**வினா எண் 982—திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தொகுதிக்குட்பட்ட பந்தலூர், கூடலூர் வட்டங்களில் வனச் சட்டத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் வனப் பகுதியிலிருந்து விலக்களிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூடலூர் தொகுதிக்குட்பட்ட கூடலூர் சரகம் சங்கிலி கேட் காப்புக் காட்டில் அமைந்துள்ள

[2018 மார்ச் 21

செம்பக்கொல்லி என்னும் பழங்குடியினர் கிராமத்தில் வசிக்கும் 110 குடும்பங்களுக்கு விவசாயத் தேவைகளுக்காக 67,815 எக்டர் நிலம் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உட்கோட்ட அளவிலான குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு, வட்டாட்சியர், கூடலூருக்கு நில அளவை செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது. இது தவிர, மலைவாழ் மக்களின் கிராமங்களுக்கு கீழ்க்கண்டவாறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள வன உரிமைச் சட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| (அ) புளியம்வயல் பழங்குடியினர் கிராமம் | - | கான்கிரீட் சாலை |
| (ஆ) தேனம்பாடி பழங்குடியினர் கிராமம் | - | கான்கிரீட் சாலை |
| (இ) செம்பக்கொல்லி பழங்குடியினர் கிராமம் | - | சோலார் விளக்குகள் |
| (ஈ) செம்பக்கொல்லி பழங்குடியினர் கிராமம் | - | குடிநீர் குழாய்கள் அமைத்தல் |
| (உ) செம்பக்கொல்லி பழங்குடியினர் கிராமம் | - | மின் விளக்குகள் அமைத்தல் |

மேற்கண்டவாறு கூடலூர் தொகுதிக்குட்பட்ட கூடலூர், பந்தலூர் வட்டங்களில் வனச் சட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் மற்றும் வனத்தில் வசிப்பவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து தர வன உரிமைச் சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**11—**

## யானையை அப்புறப்படுத்துதல்

**வினா எண் 986—திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 21]

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் உள்ள மக்னா யானையை அப்புறப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் காணப்படும் மக்னா யானையால் பொதுமக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லாததாலும், தற்போது அரிதாக மட்டுமே தென்படுவதாலும், அதனை அவசரகால நடவடிக்கையாக பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும், மக்னா யானையால் எந்தவொரு அசம்பாவிதமும் ஏற்படாமல் பாதுகாக்கும் வகையில், அதன் நடமாட்டத்தைக் கண்காணிக்க களப் பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கூடலூர் பகுதியில் வன உயிரினங்களால் ஏற்படும் பாதிப்பினை உடனடியாக கட்டுப்படுத்த அதிவிரைவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. எனவே, நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் உள்ள மக்னா யானையை அப்புறப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**12—**

## செடிகளை அழித்தல்

**வினா எண் 987—திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூடலூர் தொகுதிக்குட்பட்ட முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள யானைகளுக்கான தாவரத்தினை வளர்க்கவும், அப்பகுதியில் உள்ள பார்த்தீனியம் மற்றும் உன்னி செடிகளை அழிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

வனப் பகுதியில் தீவன மரங்களை வளர்த்தல் மற்றும் வன விலங்கு உறைவிடங்களை மேம்படுத்துதல் (Creation of Fodder Tree Plantations in Forest Areas and to improve Wildlife habitats)

[2018 மார்ச் 21

*திட்டத்தின்கீழ் 2012-2013-ம் ஆண்டிலிருந்து 2014-2015-ம் ஆண்டு வரை முதுமலை புலிகள் காப்பகத்தின் உள் பகுதியில் 200 எக்டேர் பரப்பளவில் 40,000 எண்ணிக்கையிலான நாற்றுகள் (மூங்கில் மற்றும் இதர நாற்றுகள்) நடப்பட்டு காட்டு யானைகளுக்கு தேவையான அளவு தீவன உற்பத்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும், பார்த்தீனியம் மற்றும் உன்னி செடிகளை நிரந்தரமாக அழிப்பதற்கு புலிகள் பாதுகாப்புத் திட்ட* (Tiger Conservation Plan) *அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், வன உயிரினங்களுக்கு இடையூறு ஏற்படாதிருத்தல், வேலை ஆட்களின் குறைபாடு மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஒரே நேரத்தில் ஒட்டுமொத்தமாக அழிக்காமல், கட்டம் கட்டமாக* (Phased manner) *ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து அச்செடிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.*

**13—**

## பணப் பயன்களை வழங்குதல்

**வினா எண் 998—திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகம் சேரம்பாடி, சேரங்கோடு, கொளப்பள்ளி, நெல்லியாளம், பாண்டியாறு, நடுவட்டம் ஆகிய கோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு நிலுவையிலுள்ள பணிக்கொடை மற்றும் இதர பணப் பயன்களை விரைவாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்கும் பொருட்டு டேன்டீ பணிக்கொடை குழுமம்* (Tantea Gratuity Trust) *1-5-2013 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு குறுகிய கால கடனாக ரூ.30 கோடியை கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டில் இக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. இத்தொகையில் கழக தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.9.52 கோடி ஒதுக்கப்பட்டு, அதில் ரூ.8.02 கோடி தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணிக்கொடை ஓய்வூதிய பலன்கள், தொழிலாளர் மேம்பாட்டுச் செலவுகள், கூலி மற்றும் பணியாளர் சம்பளம் ஆகியவற்றிற்காக வழங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டுள்ளது.*



2018 மார்ச் 21]

*தற்போது, இக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ள பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை தொகையாக ரூ.505 இலட்சம் ஜனவரி 2013 முதல் டிசம்பர் 2014 வரை செலவிடப்பட்டுள்ளது. இக்கழகத்தின் நிதி நிலைமைக்கேற்ப பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இதர பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் படிப்படியாக பணிக்கொடை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**14—**

## தற்காலிக பணியாளர்களுக்கு பணி வழங்குதல்

**வினா எண் 999—திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிந்து வருகின்ற தற்காலிக தொழிலாளர்களுக்கு தொடர்ந்து பணி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் அதிகப்படியான தொழிலாளர்கள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். மேற்படி ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு நபர்களுக்கு இக்கழகத்தில் நிரந்தர பணி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குடும்பத்தினர் அதிக வருவாய் பெறும் நோக்கில் அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு* (Dependents) *தற்காலிக பணி அவ்வப்போது வழங்கப்படுகிறது. மேலும்*

[2018 மார்ச் 21

நிரந்தரத் தொழிலாளர்கள் இயற்கையான காரணங்களினால், அதாவது பணி மூப்பின் காரணமாக ஓய்வு பெறுதல், மரணம், உடல்நிலை பாதிப்பு ஆகிய காரணங்களுக்காக பணியிலிருந்து விடுபடுகையில், அவரது பணியிடம் அவரது குடும்பத்தை சார்ந்த, தகுதியுள்ள வேறு நபருக்கு மாற்றப்படுகிறது. அதன்மூலம் அவரது குடும்பத்தில் தொடர்ந்து இரண்டு நபர்கள் நிரந்தர பணியில் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றுப் பணி வழங்கப்படும்பட்சத்தில் அவரது குடும்பத்தைச் சார்ந்தோர், ஏற்கெனவே தோட்டத்திலோ, தொழிற்சாலையிலோ தற்காலிகமாக பணிபுரிந்திருப்பின், அவர்களுக்கு பதிவுமாற்றம் (Change of Employment Assistant) வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. தொழிற்சங்கங்களுடன் 2000—ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்தின்படி, தொடர்ச்சியாக தற்காலிக பணி வழங்கப்பட்டு 1981 தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணி வழங்குதல்) சட்டப்படி தொடர்ச்சியான 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் பணிபுரிந்திருப்பின் அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்படுகிறது. இக்கழகத்திலுள்ள ஏனைய 2 கோட்டங்களில் நிரந்தரமாக்குதல் சட்டப்படி, தற்காலிகத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுகின்றனர். எனவே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி இக்கழகத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பத்தில் இருவருக்கு தொடர்ந்து நிரந்தரப் பணி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த 4 வருடங்களில் 509 நபர்கள் மேற்படி 1981- ம் ஆண்டு நிரந்தரப்படுத்துதல் சட்டம் மற்றும் பணி மாறுதல் திட்டங்களின்படி நிரந்தரப் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**15—**

## தனியார் பட்டா நிலங்களை விடுவித்தல்

**வினா எண் 1807—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மலையோரங்களில் அமலில் இருக்கும் தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து தனியார் பட்டா நிலங்களை விடுவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 மார்ச் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகளை வரைமுறைபடுத்துவதற்கு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 நடைமுறையில் உள்ளது. தனியார் காடுகளில் பெருமளவில் முறையின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவும், சூழியல் சமன்பாட்டினைப் பாதுகாக்கவும் 1949-ம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட பல தனியார் காடுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. வனத்தைப் போல் தோற்றமளிக்கும் இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட 2 எக்டர் பரப்பளவுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இடங்கள் இந்தச் சட்டத்தின்மூலம் தனியார் காடுகளாக அறிவிக்கை செய்யப்பட்டன. இந்த வகையான இடங்களைக் கண்டறிந்து அறிவிக்கை செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு குழுவும் உருவாக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949-ன்படி, 11,044.49 எக்டர் நிலப்பரப்பு 1979, 1980, 1982 மற்றும் 2002 ஆம் வருடங்களில் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி தனியார் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணை எண் 202/1995-ல், வழங்கியுள்ள 12-12-1996-ம் நாளிட்ட ஆணையில், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ல் குறிப்பிடப்பட்டுள்ள வன நிலங்கள் என்பது, அகராதியில் குறிப்பிட்டுள்ளபடி உள்ள வனமாகவோ அல்லது எந்தவொரு சட்டம் அல்லது அரசு ஆவணத்தில் வன நிலங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலோ அந்த நிலங்கள் யாருக்கு சொந்தமாயிருப்பினும் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-க்கு உட்பட்ட நிலங்கள் என தீர்ப்பளித்துள்ளது. மேலும், உச்ச நீதிமன்றத்தின் இந்த ஆணைக்கு புறம்பாக மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது உயர் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் எந்தவொரு ஆணை பிறப்பித்திருந்தாலும் அல்லது இனி பிறப்பித்தாலும், 12-12-1996-ம் நாளிட்ட ஆணை பின்பற்றப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் குறிப்பாக ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, தனியார் காடுகளுக்கும் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 பொருந்தும்.

மேலும், இச்சட்டத்தினை எதிர்த்து தொடரப்பட்ட அனைத்து மேல்முறையீட்டு மனுக்களையும் சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அரசாணை எண் 322, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 3-9-2012-ன்படி உயர்மட்டக் குழு ஒன்று இச்சட்டம் தொடர்பாக அமைக்கப்பட்டது. இக்குழு ஐந்து பரிந்துரைகளை சமர்ப்பித்தது. ஐந்து பரிந்துரைகளில் ஒரு பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி மாவட்ட குழுவினால் பெறப்படும் விண்ணப்பங்கள் 60 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படவேண்டும். எனவே, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949-ன்படி அறிவிக்கை செய்யப்பட்ட தனியார் பட்டா நிலங்களை அச்சட்டத்திலிருந்து விடுவிக்க இயலாது.

**16—**

## புதிய ரக ரப்பர் பயிர் செய்தல்

**வினா எண் 2194—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் தோட்டத்தில் புதிய ரக ரப்பர் பயிர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ரப்பர் தோட்டம், அரசாணை எண் 221, வனம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 25-2-1983 மற்றும் அரசாணை எண் 197, வனம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 25-2-1984-ன்படி 1-10-1984 முதல் அரசு ரப்பர் கழகமாக, தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் மாநில அரசின் பொதுத் துறை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. அரசு ரப்பர் கழகம்மூலம் 1993-1994 முதல் 2015-2016 முடிய 1113.185 ஹெக்டேர் பரப்பில் புதிய ரக ரப்பர் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து ரப்பர் கன்றுகள் நடவு செய்வதற்குத் தேவையான நிதி அரசு ரப்பர் கழகத்தால்





ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் 15 ஆண்டு காலத்திற்கு மறுநடவு திட்டம் வரையறுக்கப்பட்டு படிப்படியாக மறுநடவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**17—**

## புதிய சாலை அமைத்தல்

**வினா எண் 3809—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, நெல்லித் துறை முதல் பில்லூர் அணை வரை புதிதாக சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி, நெல்லித்துறை ஊராட்சிக்குட்பட்ட நெல்லித்துறை (விளாமரத்தூர்) முதல் பில்லூர் அணை வரை உள்ள கூப்பு சாலை நெல்லித்துறை காப்புக்காட்டினுள் செல்கிறது. மேலும், நெல்லித்துறை காப்புக் காட்டிற்கு வனச் சட்டம், 1882 பிரிவு 16-ன்கீழ் அறிவிக்கையின்படி இவ்வழித்தடம் அனுமதிக்கப்படவில்லை. வனநோக்கமற்ற பிற பணிகளுக்கு வனநிலத்தினை வழங்க நடப்பிலுள்ள 1980 வனப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 2-ன்படி மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். எனவே மத்திய அரசின் அனுமதி பெற்ற பின்பே சாலை அமைக்க இயலும்.

**18—**

## சாலை வசதி

**வினா எண் 4480—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, அழகர்மலை வனச்சரகம் பட்டணம்பட்டியிலிருந்து பெரிய அருவி வழியாக தீர்த்தத்தொட்டி பழமுதிர்சோலை வரை சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டணம்பட்டி கிராமத்திலிருந்து அழகர்மலை காப்புக்காடு பெரிய அருவி வழியாக தீர்த்தத்தொட்டி மற்றும் பழமுதிர்சோலைக்கு அனுமதிக்கப்பட்ட சாலை ஏதும் அழகர் மலை காப்புக் காடு அறிவிக்கை எண் 187, நாள் 11-8-1883-ல் வழங்கப்படவில்லை. பட்டணம்பட்டி கிராமத்திலிருந்து அழகர் மலையிலுள்ள தீர்த்தத் தொட்டி மற்றும் பழமுதிர்சோலைக்கு செல்ல நத்தம் வழியாக அழகர்மலைவரை பேருந்து வசதியுடன் கூடிய சாலை வசதி ஏற்கெனவே உள்ளது. இக்காப்புக்காடு அடர்ந்த வனப்பகுதியாகவும், அரிய வகை மூலிகை தாவரங்களும், இயற்கையாக வளர்ந்த அரிய வகை மரங்களும் நிறைந்த செழிப்பான வனப்பகுதியாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் சாலை அமைத்தால் மேற்படி அரிய வனச் செல்வங்கள் அழிந்துவிடும் அபாயம் உள்ளது. மேலும், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி வனம் சாரா காரியங்களுக்கு மைய அரசின் ஒப்புதலின்றி வனநிலம் வழங்க இயலாது.

**19—**

## தடுப்பணை அமைத்தல்

**வினா எண் 5577—திரு. சி. சந்திரசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை அடிவாரம் காரவள்ளி அந்தி ஊற்று மற்றும் அல்லா கோயில் அருகே தடுப்பணை அமைத்து வன விலங்குகளுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை அடிவாரம், காரவள்ளி காப்புக்காடு அந்தி ஊத்து ஓடையில் வனத் துறைமூலம் தடுப்பணை ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது. இத்தடுப்பணையில் தேங்குகின்ற மழைநீரால் அப்பகுதியில் உள்ள நரி, முயல், காட்டுப்பன்றி போன்ற வன உயிரினங்களும் மற்றும் பறவையினங்களும் பயனடைந்து வருகின்றன. இப்பகுதியில் மான், காட்டெருமை போன்ற பெரிய வன உயிரினங்கள் ஏதுமில்லாததால், இத்தடுப்பணையில் தேங்குகின்ற மழை நீரே இப்பகுதியில் உள்ள சிறு வன உயிரினங்களுக்குப் போதுமானதாக உள்ளது.

2. அந்த ஊற்று ஓடையில் இருந்து சுமார் 2½ கி.மீ. தொலைவில் உள்ள அல்லா கோயில் அருகே ஓடைப்பகுதி செங்குத்தாக உள்ளதால், மழைநீரை தேக்கி வைக்க இயலாது. இவ்விடத்தில் தடுப்பணைக் கட்டினால் மழை காலங்களில் அடித்து வரப்படும் பெரிய கற்களால் தடுப்பணை சேதமடைய வாய்ப்புள்ளது. அப்பகுதியில் தடுப்பணை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**20—**

## பண்டக சாலையை செயல்படுத்துதல்

**வினா எண் 1958—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையை சிறப்பாக செயல்பட வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவையாறு, பூதலூர், தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை மற்றும்

[2018 மார்ச் 21

பேராவூரணி வட்டங்களிலுள்ள 128 இணைப்புச் சங்கங்களோடு இணைக்கப்பட்டுள்ள 470 நியாய விலைக் கடைகளுக்கு முதன்மைச் சங்கமாகவும், நகரப் பகுதியில் 70 நியாய விலைக் கடைகள் மற்றும் மண்ணெண்ணெய் விநியோக மையங்களுடன் தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை செயல்பட்டு வருகிறது. இத்துடன் சுயசேவைப்பிரிவு, கூட்டுறவு மருந்தகம் மற்றும் பண்ணைப் பசுமை கடைகளுடன் தற்போது பண்டகசாலை வியாபாரத்தில் வளர்ச்சி அடைந்து நல்ல முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டுள்ளதுடன் சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

**21—**

## கடன் தள்ளுபடி குறித்த விவரம்

**வினா எண் 3262—திரு. க. சுந்தர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு, குறு விவசாயிகளுக்கான கடன் தொகை தள்ளுபடியில் எத்தனை விவசாயிகள் பயனடைந்தவர்கள் என்பது பற்றிய விவரங்களைத் தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

31-3-2016 அன்று நிலுவையிலிருந்த சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன், மத்தியகால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணைசார்ந்த நீண்டகால கடன்களை தள்ளுபடி செய்து அரசாணை (நிலை) எண் 50, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 23-5-2016-ல் ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தில் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 12,02,075 தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை (அபராத வட்டி, இதர செலவினங்கள் உட்பட) ரூ. 5,318.73 கோடி ஆகும்.

**22—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 3470—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 21]

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பழையனூர் ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியம், ஸ்ரீ கணபதி குண்டலேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பழையனூர் ஊராட்சியில், பழையனூர் முழுநேர நியாய விலைக் கடை 243 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், மேலும், ஒரு புதிய நியாய விலைக் கடை பழையனூர் ஊராட்சியில் அமைக்க அவசியம் எழவில்லை.

**23—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 3471—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், திமிரி நகர் 2-வது வார்டு இராமபாளையம் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி கூட்டுறவு பண்டகசாலை கட்டுப்பாட்டில் கடை எண் 1 முழுநேர நியாய விலைக் கடை 1,160 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய நியாய விலைக் கடை கோரும் 2-வது வார்டு இராமபாளையம் பகுதியைச் சேர்ந்த 286 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டுதல் நெறிகளின்படி புதிய நியாய விலைக் கடை நகர்ப்புறங்களில் அமைக்கும்பட்சத்தில் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். எனவே, மேற்கண்ட அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் 2-வது வார்டு இராமபாளையம் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

[2018 மார்ச் 21

**24—**

## நியாய விலைக் கடையை பிரதான சாலையில் அமைத்தல்

**வினா எண் 3882—திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாதவரம் தொகுதி, MMDA, 4-வது பிரதான சாலையில் ஒரே இடத்தில் உள்ள இரண்டு நியாய விலைக் கடைகளில் ஒன்றை, 2-வது பிரதான சாலையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் மாத்தூர்-2 மற்றும் மாத்தூர்-3 ஆகிய நியாய விலைக் கடைகள் முறையே 1786 மற்றும் 1637 அட்டைகளுடன் மாதவரம் தொகுதி, MMDA, 4-வது பிரதான சாலையில் ஒரே மாநகராட்சி கட்டடத்தில் வாடகை இல்லாமல் இலவசமாக செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டுதல் நெறிகளின்படி இரண்டு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். மேற்படி நியாய விலைக் கடைகள் இயங்கும் 4-வது பிரதான சாலைக்கும், 2-வது பிரதான சாலைக்கும் ½ (0.5 கி.மீ.) இடைவெளிதான் உள்ளது. எனவே, 2-வது பிரதான சாலையில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**25—**

## பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 4412—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேலூர் தொகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*



2018 மார்ச் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*கூட்டுறவுத் துறையில் 31-5-2017 அன்றுள்ளபடி 23,691 முழு நேர நியாய விலைக் கடைகளும், 9,039 பகுதிநேர நியாய விலைக் கடைகளும், ஆகமொத்தம் 32,730 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது 20,387 விற்பனையாளர்கள் மற்றும் 3,622 கட்டுனர்கள், ஆகமொத்தம், 24,009 பணியாளர்கள் நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகிறார்கள். பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை உடனுக்குடன் தடையின்றி விநியோகம் செய்யும் பொருட்டு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலமாக காலிப் பணியிடம் நிரப்பப்பட்டு வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் அதாவது 2011-2012 முதல் தற்போது வரை 6,684 விற்பனையாளர்களும் மற்றும் 1,802 கட்டுனர்களும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.*

**26—**

## ஈப்பு வாகனம் வழங்குதல்

**வினா எண் 7884—திரு. சி. சந்திரசேகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை வாழவந்தி நாடு LAMP கூட்டுறவுச் சங்கத்திற்கு ஈப்பு வாகனம் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொல்லிமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடர் நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டு அரசின் கடன் தள்ளுபடி திட்டத்தின்படி உறுப்பினர்களின் கடன் நிலுவை குறைந்துள்ளது. இந்நிலையில் ஈப்பு கொள்முதல் செய்வதால் ஏற்படும் செலவினம், ஓட்டுநர் சம்பளம், டீசல் செலவினம் மற்றும் பராமரிப்பு*

[2018 மார்ச் 21

செலவினத்தை அச்சங்கத்தினால் மேற்கொள்ள இயலாது. எனவே, மேற்படி சங்கத்திற்கு ஈப்பு வாகனம் வாங்குவதற்கு தற்பொழுது வழிவகையில்லை.

**27—**

## நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 8633—திரு. சி. ராஜா:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கிரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, காட்டாகவுண்டனூரில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கிரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, காட்டாகவுண்டனூரில் 07GP008P1 காட்டாகவுண்டனூர் பகுதிநேர நியாய விலைக் கடை எஸ். 518 ஏ.குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், 186 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி காட்டாகவுண்டனூர் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட ஏ.குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதியின்மையால் காட்டாகவுண்டனூர் பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**28—**

## பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 9224—திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 21]

லால்குடி தொகுதி, கொள்ளைக்குடி நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, அன்பில் படுகை அல்லது கோவிந்தபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி, ஜங்கமராஜபுரம் பகுதியில் 696 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் அன்பில் படுகை அல்லது கோவிந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 70 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைப்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்த அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், அன்பில் படுகை அல்லது கோவிந்தபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**29—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 9225—திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி ஊராட்சி ஒன்றியம், அப்பாதுறை ஊராட்சி, மேல்வாளாடியில் உள்ள நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, அகிலாண்டபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி, அப்பாதுறை ஊராட்சி, மேல்வாளாடியில் உள்ள தெற்குச் சத்திரம் முழுநேர நியாய விலைக் கடை 365 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் அகிலாண்டபுரம் பகுதியைச் சேர்ந்த 30 குடும்ப அட்டைகளும்

[2018 மார்ச் 21

அடங்கும். இவற்றைப் பிரித்தால் தாய் நியாய விலைக் கடையில் 335 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். அரசின் நிபந்தனைப்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர், தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், அகிலாண்டபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**30—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 9233—திரு. சி. ராஜா:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சி, ரங்கசாமி கவுண்டர் வளவு மற்றும் நத்தக்காட்டானூர் உள்ளடக்கிய பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சி நெ. 173 சின்னப்பம்பட்டி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 07FP085PY எலவம்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 580 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ரங்கசாமி கவுண்டர் வளவு பகுதியைச் சேர்ந்த 95 குடும்ப அட்டைகள் எலவம்பட்டி முழுநேர நியாய விலைக் கடையில் அடங்கும்.

அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் நத்தக்காட்டானூர் பகுதியில் 95 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், நத்தக்காட்டானூர் பகுதியான ரங்கசாமி கவுண்டர் வளவில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2018 மார்ச் 21]

**31—**

## நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 9361—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, ஆயக்குடி பேரூராட்சி, பழைய ஆயக்குடி கூட்டுறவுச் சங்கம் DD625-ல் கடை எண்கள் 1,2,3 ஆகிய நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதிக்குட்பட்ட DD600 பழைய ஆயக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், பழைய ஆயக்குடி-1 முழுநேர நியாய விலைக் கடை 1027 குடும்ப அட்டைகளுடனும், பழைய ஆயக்குடி-2 முழுநேர நியாய விலைக் கடை 1210 குடும்ப அட்டைகளுடனும் மற்றும் பழைய ஆயக்குடி-3, முழுநேர நியாய விலைக் கடை 911 குடும்ப அட்டைகளுடனும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள 3 நியாய விலைக் கடைகளில் பழைய ஆயக்குடி கடை எண் 2 முழு நேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சங்கத்திற்கு சொந்தமான புல எண் 910-ல் காலியிடம் உள்ளது. நிதி வசதி இல்லை. ஏனைய, பழைய ஆயக்குடி-1 மற்றும் 3 ஆகிய முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, பழைய ஆயக்குடி 1, 2 மற்றும் 3 ஆகிய முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு இடம் மற்றும் நிதி வசதியின்மையால் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2018 மார்ச் 21

**32—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 9359—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், வடகவுஞ்சி ஊராட்சிக்குட்பட்ட சவுரிக்காடு, கோம்பைக்காடு, கடமன்ரேவு ஆகிய கிராமங்களுக்கு மையப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், வடகவுஞ்சி ஊராட்சி, மேல்பள்ளம் முழுநேர நியாய விலைக் கடை 291 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் சவுரிக்காடு, கோம்பைக்காடு, கடமன்ரேவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 92 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால் தாய் நியாய விலைக் கடையில் 199 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், சவுரிக்காடு, கோம்பைக்காடு, கடமன்ரேவு ஆகிய கிராமங்களுக்கு மையப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**33—**

## நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 9363—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 21]

(அ) பழனி தொகுதி, நெய்க்காரன்பட்டி பேரூராட்சி, சாஸ்தாநகர் நெய்க்காரன்பட்டி மற்றும் பெரியகலையம்புத்தூர் 5,6,7,8 மற்றும் 13 வார்டுகளுக்குட்பட்ட நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, நெய்க்காரன்பட்டி பேரூராட்சியில் சாஸ்தாநகர் முழுநேர நியாய விலைக் கடை 793 குடும்ப அட்டைகளுடனும், நெய்க்காரன்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 1060 குடும்ப அட்டைகளுடனும், 5,6,7,8 மற்றும் 13 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பெரியகலையம்புத்தூர்-1 முழுநேர நியாய விலைக் கடை 1054 குடும்ப அட்டைகளுடனும், பெரியகலையம்புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. தற்போது சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால், சாஸ்தாநகர், நெய்க்காரன்பட்டி மற்றும் பெரியகலையம்புத்தூர்-1 முழுநேர நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**34—**

## நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 9367—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, ஆயக்குடி பேரூராட்சி, புது ஆயக்குடி DD 600 இல் கடை எண்கள் 1,2,3,4 மற்றும் 5 ஆகிய நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, ஆயக்குடி பேரூராட்சியிலுள்ள DD 525 புது ஆயக்குடி தொடக்க

வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், புதுஆயக்குடி 1,2,3,4 மற்றும் 5 ஆகிய முழுநேர நியாய விலைக் கடைகளில், புதுஆயக்குடி 3 சொந்தக் கட்டடத்திலும், 1,2,4 மற்றும் 5 முழுநேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. தற்போது, சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால், புதுஆயக்குடி 1,2,4 மற்றும் 5 முழுநேர நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.

**35—**

## டாஸ்மாக் கிடங்கை மாற்றி அமைத்தல்

**வினா எண் 12262—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன் புதூரில் டாஸ்மாக் (TASMAC Godown) கிடங்குகளை வேறு இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் டாஸ்மாக் கிடங்கு கோணம் என்ற இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதனைத் தொடர்ந்து, புதியதாக டாஸ்மாக் கட்டடம் கட்டுவதற்கு 2013-2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் புல எண் 167/2-1-ல் புதியதாக டாஸ்மாக் கிடங்கு கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இக்கிடங்கிற்குச் செல்லும் பாதை சமநிலப்பரப்பு இல்லா நிலையில் இருந்து வருவதால், தற்காலிகமாக மண் நிரப்பி பாதை வசதி ஏற்படுத்த இயலாத நிலையில், அப்பாதையினை மாவட்ட ஆட்சியரின் தன்னிறைவு திட்டத்தின்கீழ் சரிசெய்து தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி அளித்ததின் பேரில், மேற்படி





சாலை சரி செய்தபின் புதிய கட்டடத்திற்கு டாஸ்மாக் மதுபானக் கிடங்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படும். புதிய கட்டடம் கட்டப்பட்டுவிட்ட நிலையில், வேறு இடத்திற்கு டாஸ்மாக் கிடங்கினை மாற்றம் செய்யத் தேவை ஏதும் எழவில்லை.

**36—**

## பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா எண் 11147—திரு. பெரியண்ணன் அரசு:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்சமயம் உள்ள திட்டப் பணிகளுக்கு ஏற்றவாறு பணியாளர்கள் உள்ளனர்.

**37—**

## ஹெலிகாப்டர் தளம் அமைத்தல்

**வினா எண் 4143—திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்க ஹெலிகாப்டருடன்கூடிய ஹெலிகாப்டர் தளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 21

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் அருகில் தூத்துக்குடியில் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைப்பது குறித்த நடவடிக்கை கடலோரக் காவல் படையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்கள் கடலில் காணாமல் போகும் சமயங்களில் மற்றும் ஆபத்துக் காலங்களில் சென்னை மாவட்டத்திலுள்ள கடலோரக் காவல் படையின் தளங்களிலிருந்து ஹெலிகாப்டர்மூலம் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே, காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்க ஹெலிகாப்டருடன்கூடிய ஹெலிகாப்டர் தளம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**38—**

## மீனவர்கள் தங்க அரங்கம் அமைத்தல்

**வினா எண் 6790—திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சித்தார்க் கோட்டை ஊராட்சி, பழனிவலசை கிராமத்தில் வலை உலர்த்தகம் மற்றும் மீனவர்கள் தங்குவதற்கு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தார்க் கோட்டை ஊராட்சி, பழனிவலசை மீனவக் கிராமத்தில் மொத்தம் 1119 மீனவ மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் சுமார் 200-க்கும் மேற்பட்ட மீனவர்கள் நேரடி மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்கள் மீன்பிடிப்பிற்கு



2018 மார்ச் 21]

வெளிப் பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்ட 37 நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 1500 கிலோ கிராம் மீன்களைப் பிடித்து வருகின்றனர். பழனிவலசை கிராமம் சார்ந்த மீனவர்கள் வலைகளைப் பின்னுவது, செப்பனிடுவது மற்றும் வலைகளை உலர்த்துவதற்கு கடற்கரைப் பகுதியை பயன்படுத்தி வருகின்றனர். மேலும், மீனவர்கள் தங்குவதற்கு அரங்கம் ஏதும் அமைக்கப்படவில்லை.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தார்க் கோட்டை ஊராட்சி, பழனிவலசை கிராம மீனவர்கள் வலை உலர்த்தகம் மற்றும் மீனவர்கள் தங்குவதற்கு அரங்கம் அமைத்திட கோரிக்கை முன்வைக்கும் நேர்வில், தேவை மற்றும் சாத்தியக்கூறுகள் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

## வாக்குச் சாவடி அமைத்தல்

**வினா எண் 10694—திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள பொது மக்கள் வாக்களிக்க மங்கலம் ஊராட்சியிலேயே வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெ. 72, திண்டிவனம் (தனி) தொகுதிக்குட்பட்ட மங்கலம் கிராமத்தில் 737 வாக்காளர்களும் (பாகம் எண் 29) கீழ் ஆதனூர் கிராமத்தில் (பாகம் எண் 30) 898 வாக்காளர்களும் கீழ்ஆதனூர் நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச் சாவடியில் கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல், 2014 மற்றும் சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2016 நடைபெற்றபோது வாக்களித்தனர். மங்கலம் கிராமத்தை சேர்ந்த 737 வாக்காளர்கள் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கீழ்ஆதனூர் வாக்குச்

சாவடியில் வாக்களித்துள்ளனர். நடைபெறவிருக்கும் உள்ளாட்சி தேர்தலின்போது மங்கலம் கிராமம் தொடக்கப்பள்ளியில் வாக்குச் சாவடி அமைக்கப்படவுள்ளது. மங்கலம் கிராமத்தில் பதட்டமான சூழ்நிலை ஏதுமில்லை என்பதால், பாராளுமன்ற/சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்காக தனி வாக்குச் சாவடி அமைக்கத் தேவையில்லை.

**40—**

### கட்டுமானப் பணியைத் துவக்குதல்

**வினா எண் 1970—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டுமானப் பணியைத் துவங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிக்காக ரூ. 35.39 கோடி வழங்கி அரசாணை (நிலை) எண் 35, உள் (நீம-3) துறை, நாள் 6-1-2017-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

**41—**

### நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 3152—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒரு பகுதியில் இயங்கும் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.1098.02 இலட்சம் வழங்கி அரசாணை (நிலை) எண் 87, உள் (நீதிமன்றங்கள்-3), துறை, நாள் 25-1-2017-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

**42—**

### ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்தல்

**வினா எண் 3772—திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பகுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தாலுகாவில் உரிமையியல் அதிகாரத்துடன்கூடிய ஒரு சிறப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசாணை நிலை எண் 319, உள் (நீதிமன்றங்கள் -2), நாள் 6-4-2017-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்நீதிமன்றம் அமைக்க உயர்நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றம் அமைப்பது மற்றும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவது தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து அரசால் பெறப்படவில்லை.

[2018 மார்ச் 21

**43—**

## சார்பு நீதிமன்றத்தை நிரந்தரமாகச் செயல்படுத்துதல்

**வினா எண் 4439—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரில் சார்பு நீதிமன்றத்தை நிரந்தரமாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

மேலூர் தொகுதி, மேலூரில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு ரூ. 94.56 இலட்சம் வழங்கி அரசாணை (நிலை) எண் 331, உள் துறை, நாள் 6-4-2017-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**44—**

## அரசின் பங்களிப்பு

**வினா எண் 3919—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் பங்களிப்பு, முதல் பட்டதாரி மாணவர்களுக்கு எத்தனை சதவிகிதம் என தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 85, உயர் கல்வி (ஜே2) துறை, நாள் 16-4-2010 இல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, 2010-2011 ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின்மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகை பெறுவதற்கு பெற்றோர்களின் ஆண்டு வருமானம்



2018 மார்ச் 21]

கணக்கில் கொள்ளப்படுவதில்லை. சாதி பார்க்கப்படுவதில்லை. துணை வட்டாட்சியரின் சான்று பெற்று ஒற்றைச் சாளர கலந்தாய்வின்போது விண்ணப்பிக்க வேண்டும். இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி மக்களின் பிள்ளைகளும் இத்திட்டத்தில் பயனடைகிறார்கள். இத்திட்டத்தில் தமிழக அரசின் பங்களிப்பு, முதல் பட்டதாரி மாணவர்களுக்கு 100 சதவிகிதம் ஆகும்.

**45—**

## பெண் குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 1580—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாட்டில் பெண் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பெண் குழந்தைகளுக்கான அரசினர் குழந்தைகள் காப்பகம் மேம்பாலம், தஞ்சாவூர் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வில்லத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 250-ல் தற்போது 76 சிறுமிகள் மற்றும் 3 சிறுவர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர். இவ்வரசு குழந்தைகள் காப்பகத்தில் கூடுதலாக குழந்தைகளை அனுமதிக்க போதிய கட்டமைப்பு வசதிகளும் உள்ளதால், தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாட்டில் பெண் குழந்தைகள் காப்பகம் அமைக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**46—**

## ஓய்வூதியம்

**வினா எண் 1860—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 மார்ச் 21

(அ) சத்துணவு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 23, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-2-2016-ன்படி சத்துணவு ஊழியர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் ரூ.1,500/- ஆக வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**47—**

## சத்துணவுடன் பால் வழங்குதல்

**வினா எண் 2084—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவுடன் காலையில் பால் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த 30 வருடங்களாக ஒரே வகையான சாதம் சத்துணவாக வழங்கப்பட்டு வருவதால் மாணவர்கள் சலிப்படையக் கூடும் எனவும், அதனால் மாணவர்கள் சரியாக உணவருந்தாமல் உடல் வலிமை குன்றக்கூடும் என்ற எண்ணத்தோடு மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கும்பொருட்டு புதிய வகை கலவை சாதம் மற்றும் மசாலா முட்டை வழங்கிட அரசாணை எண் 267, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 2-11-2012-ன்படி பலவகையிலான கலவை சாதங்கள் மற்றும்



2018 மார்ச் 21]

4 வகையான மசாலா முட்டை தயாரித்து வழங்கிட உத்தரவிடப்பட்டு, 20-3-2013 முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு முன்னோடி வட்டாரத்திலும், பின்னர் 15-8-2014 முதல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பள்ளிக் குழந்தைகளின் புரதச் சத்தினை மேம்படுத்த வாரத்தில் ஒரு முறை கருப்பு கொண்டைக்கடலையும், பாசிப்பயறும், உருளைக்கிழங்கும், தினமும் 45 கிராம் முதல் 52 கிராம் எடையுள்ள முட்டையும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சத்துணவில் கூடுதலாக பால் வழங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

## உண்டி உறைவிட பள்ளி துவக்குதல்

**வினா எண் 5569—திரு. பெரியண்ணன் அரசு:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டையில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உண்டி, உறைவிட பள்ளி துவக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில், அரசு பார்வையற்றோருக்கான ஆரம்பப் பள்ளி ஒன்று காட்டுபுதுக்குளம், சத்தியமூர்த்தி ஹவுசிங் யூனிட் பின்புறம் புதிய பேருந்து நிலையம் அருகில் சொந்த கட்டடத்தில் விடுதி வசதியுடன் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 26 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள். 2014-2015 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு ஆரம்பப் பள்ளி, புதுக்கோட்டைக்கு ரூ. 90.00 இலட்சத்தில், சொந்தமாக விடுதியுடன் கூடிய கட்டடம் கட்டும் பணிகள் முடிவடைந்து, தற்போது முழுமையான பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மேலும், அரசு காது கேளாத மாற்றுத் திறனாளிகளுக்கான

[2018 மார்ச் 21

நடுநிலைப் பள்ளி ஒன்றும், புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையில் இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இப்பள்ளிக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14-9-2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி புதிய கட்டடம் கட்ட ரூ.1.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணி தொடங்கி தற்போது நடைபெற்று வருகிறது. விரைவில் விடுதி வசதியுடன் கூடிய இக்கட்டடம் பள்ளியின் முழு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இப்பள்ளியில் 37 மாணவர்கள் தங்கி, கல்வி பயின்று வருகிறார்கள். எனவே, புதுக்கோட்டை தொகுதியில் தேவையான அளவில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய பள்ளிகள் உள்ளதால், புதியதாக உண்டி உறைவிடப் பள்ளி அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

**49—**

## கடனுதவி வழங்குதல்

**வினா எண் 5000—திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக 10% வட்டியில் குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

கடந்த காலங்களில் இக்கழகம் வழங்கும் அனைத்து கடனுதவிகளுக்கும் தேவையான நிதி உதவியை, மறு நிதியுதவியாக இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) வழங்கி வந்தது. அவ்வங்கியின் கொள்கை மாற்றத்தினால், காலப்போக்கில் மறு நிதியுதவி அளவு குறைக்கப்பட்டது. இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி இக்கழகத்திற்கு 2009-2010-ல் வழங்கிய மறு நிதியுதவி ரூ.225 கோடி என்ற அளவிலிருந்து, 2016-2017 ஆண்டுக்கு மறு நிதியுதவி ரூ.10 கோடி என்ற அளவிற்கு குறைந்துள்ளது. இந்த சிறு தொழில்



2018 மார்ச் 21]

வளர்ச்சி வங்கி 2017-2018 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் இயங்கி வரும் அனைத்து மாநில நிதி நிறுவனங்களுக்குமான மறு நிதியுதவியை முற்றிலுமாக விலக்கிக் கொள்ளவுள்ளது.

இதனால் இக்கழகம் நிதியைத் திரட்டுவதற்கு, பிற வங்கிகளிடமிருந்து கடன் பெறுதல், மற்ற அரசு சார் நிறுவனங்களிடமிருந்து வைப்பு நிதி பெறுதல், கடன் பத்திரங்கள் பெறுதல் என்ற வழிகளை நாட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவ்வழிகளில் நிதி திரட்டுவதால், நிதி ஆதாரச் செலவு அதிகரிக்கின்றது. இதனால் இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு வழங்கும் கடன்களின் வட்டி வீதத்தையும் அதிகரிக்க வேண்டிய நிலைக்குள்ளானது. தற்போது, இக்கழகத்தால் வழங்கப்படும் கடனுக்குரிய வட்டி வீதம் 13.50% முதல் 15% என்று உள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் 3-9-2012-லிருந்து கடன் பெறும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி சலுகை வழங்கும் அரசு திட்டத்தின்மூலம் TIIC வழங்கும் கடனுக்கான வட்டி 15%-லிருந்து 10.50%-12% ஆகக் குறைந்துள்ளது. எனவே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கும் கடன் உதவிக்கும் வட்டி வீதத்தை இதற்குக்கீழ் குறைக்க தற்போதைய நிலையில் வாய்ப்பில்லை.

**50—**

## நிவாரணம் வழங்குதல்

**வினா எண் 13853—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற்பேட்டைக்கு வல்லம் கிராமத்தில் கையகப்படுத்தப்பட்ட R.S.No. 60 முதல் 74 வரையிலுள்ள நில உரிமையாளர்களுக்கு 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் உரிய நிவாரணம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் கிராமம், வருவாய் புல எண்கள் (Revenue Survey Nos.) 60 முதல் 74 வரையில் உள்ள நிலங்கள் சிப்காட் நில எடுப்புத் திட்டத்தில் இன்றைய தேதியில் கவரப்படவில்லையாதலால் அப்புல எண் நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லை. எனவே, நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற வினா எழவில்லை.

**51—**

**நில உரிமையாளர்களுக்கு சந்தை விலையை வழங்குதல்**

**வினா எண் 13854—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற்பேட்டைக்கு வடகால், பூதனூர் பாலநல்லூர் ஆகிய வருவாய் கிராமங்களில் கையகப்படுத்தப்பட்ட R.S. No. 60 முதல் 70 வரையிலுள்ள நிலங்களுக்கு தற்போது உள்ள நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் சந்தை விலையை நில உரிமையாளர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிப்காட் திருப்பெரும்புதூர் தொழிற்பூங்கா விரிவாக்கத்திற்காக காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம், வடகால் (பாலநல்லூர்) மற்றும் பூதனூர் ஆகிய வருவாய் கிராமங்களில் 642.04.0 ஹெக்டேர் (1585.84 ஏக்கர்), புஞ்சை பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 (த.நா. சட்டம் 10/1999)-ன்கீழ் கையகப்படுத்தவும் மற்றும் 78.67.5 ஹெக்டேர் அரசு புறம்போக்கு





நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் அரசாணை (நிலை) எண் 3, தொழில் (சிப்காட்-நி.எ.) துறை, நாள் 6-1-2009-ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நில எடுப்பு நடவடிக்கைகள் நில எடுப்பு அலுவலரால் மேற்கொள்ளப்பட்டது. வடகால் (பாலநல்லூர்) கிராமத்தில் புல எண் 60, 61, 62, 63, 64 (பகுதி), 66, 67, 68, 69 மற்றும் 70-ல் அமைந்துள்ள பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்கள் மற்றும் பூதனூர் கிராமத்தில் புல எண் 60 முதல் 70-ல் அமைந்துள்ள பட்டா நிலங்கள் இத்திட்டத்திற்கான நில எடுப்பில் கவரப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதை பொறுத்தவரையில், முதற்கட்டமாக, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 197 பிரிவு 7(2)-ன்கீழ் அரசு நிர்ணயித்த தொகையின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்த நில உரிமையாளர்களுக்கு அதன் பிரிவு 7(2)-ன்கீழ் தீர்ப்பாணை பகரப்பட்டு நில எடுப்பு அலுவலரால் நில எடுப்புக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. சம்மதக் கடிதம் பெறப்படாத இனங்களில் இச்சட்டத்தின் பிரிவு 7(3)-ன்கீழ் நில இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்க நில எடுப்பு அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக, அரசாணை எண் 45, தொழில் (சிப்காட்-நி.எ) துறை, நாள் 14-5-2014-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி, தற்போதைக்கு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997-ன்கீழ் செயல்பாட்டில் உள்ள நடைமுறையின்படி இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு இடைக்கால இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும். பின்னர், மத்திய அரசின் புதிய நில எடுப்புச் சட்டம் The Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013)-ல் அடங்கிய அட்டவணை ஒன்றின்படி (First Schedule) நில இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு எஞ்சிய இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும். தற்போது அவ்வாறான நில மதிப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

[2018 மார்ச் 21

**52—**

## தொழில்நுட்பப் பூங்காவில் அடிப்படை வசதிகள்

**வினா எண் 18223—திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்காவில் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுத்துறை நிறுவனமாக ஏ.எம்.ஆர்.எல், ஹைடெக் சிட்டி லிமிடெட், நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படை கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இக்கூட்டுத்துறை நிறுவனம் ஏற்கெனவே நாள் ஒன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் தண்ணீரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் டிசம்பர் 2013 முதல் வழங்கி வருகிறது. மேலும், இக்கூட்டுத்துறை நிறுவனம் ஒரு பிரத்தியேக துணை மின் நிலையத்தை (11 KVA) தமிழ்நாடு மின் வாரியம்மூலம அமைத்து, ஜூலை 2013 முதல் செயல்படுத்தி வருகிறது. மேலும், இக்கூட்டுத்துறை நிறுவனம் சாலை, தெரு மின் விளக்குகள், மழைநீர் கால்வாய்கள் போன்றவற்றை இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஏற்படுத்தியுள்ளது. இதுவரை 28 நிறுவனங்களுடன் இடம் வழங்குதலுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. 20 நிறுவனங்களுக்கு அலகு ஒப்புகைக் குழு (MEPZ, Chennai) ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 10 நிறுவனங்கள் தங்களது உற்பத்தியை துவங்கி ஏற்றுமதி செய்து வருகின்றனர். மார்ச் 2017 வரை, இம்மண்டலத்தின் மொத்த ஏற்றுமதி மதிப்பு ரூ.575.15 கோடியாகும்.



2018 மார்ச் 21]

**53—**

## நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களைப் பொட்டலங்களில் வழங்குதல்

**வினா எண் 18252—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படும் சர்க்கரை, மைதா, பருப்பு வகைகளின் எடையையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் வகையில், பொட்டலங்களில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணு எடைத் தராசு வழங்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் மின்னணு எடைத் தராசின்மூலம் சரியாக எடையிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளில் தயார் செய்யப்படும் தரமான சர்க்கரை வெளிச்சந்தை விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலை அங்காடிகள்மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் யாவும் தரமாகவும், சரியான எடையிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுவது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பொட்டலங்களில் வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**54—**

## புற ஊதா ஒளிப்பொறிகள் அமைத்தல்

**வினா எண் 22159—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகங்களில் சேமிக்கப்படும் உணவு தானியங்களில் ஏற்படும் பூச்சித் தாக்கத்தினைத் தடுக்க புற ஊதா ஒளிப்பொறிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் உணவு தானியங்களில் பூச்சித் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த 500 எண்ணம் புற ஊதாக்கதிர் விளக்கு பொறிகள் கொள்முதல் செய்து முடிக்கப்பட்டு, கொள்முதல் செய்யப்பட்ட புற ஊதாக்கதிர் விளக்கு பொறிகள் அனைத்து மண்டலங்களுக்கும் வழங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. மேலும் மண்டலங்களில் புற ஊதாக்கதிர் விளக்கு பொறிகள் தேவைப்பட்டால் முன்மொழிவுகள் பெற்று கொள்முதல் செய்து தரப்படும்.

**55—**

## கூலியை உயர்த்தி வழங்குதல்

**வினா எண் 7978—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, வாழைத்தோட்டம் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் வேட்டிக்கு வழங்கப்படும் கூலியை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, வாழைத்தோட்டம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் விலையில்லா வேட்டி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விலையில்லா வேட்டிகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கூலியில் 1-9-2016 முதல் அரசு உத்தரவுபடி 10% அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டு கீழ்க்காணும் விவரப்படி நெசவுக்கூலி வழங்கப்பட்டு வருகிறது:-

*1-9-2016-க்கு பின்னர் வேட்டி ஒன்றிற்கு கூலி விவரம்*

| வ. எண் | இரகம் | நெசவுக் கூலி<br>ரூபாய் | அகவிலைப் படி<br>ரூபாய் | சிறப்புக் கூலி<br>ரூபாய் | மொத்தம்<br>ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1. | வெளிமார்க்கெட் வேட்டி | 47.20 | 59.00 | - | 106.20 |
| 2. | பெடல் தறி வேட்டி | 55.45 | - | 10.30 | 65.75 |
| 3. | கைத்தறி வேட்டி | 41.40 | 51.75 | 10.30 | 103.45 |
| 4. | கோ—ஆப்டெக்ஸ் நார்மல் வேட்டி | 47.20 | 59.00 | - | 106.20 |

வெளிச்சந்தை மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நார்மல் இரக வேட்டிகளை பொறுத்தவரை நாள் ஒன்றுக்கு 1 வேட்டி உற்பத்தி செய்யப்பட்டு நெசவாளர்களுக்கு நெசவுக் கூலியாக ரூ.103.45/- வழங்கப்பட்டு வருகிறது. பெடல் தறிகளில் நாள் ஒன்றுக்கு 4 வேட்டிகள் வரை உற்பத்தி செய்யப்படுவதால், நெசவாளர்களுக்கு நெசவுக் கூலியாக ரூ.263/- வரை கிடைக்கிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.160/-வரை கிடைக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2018 மார்ச் 21

**56—**

## கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல்

**வினா எண் 22094—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் நிதிநிலைமையைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் கோ- ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

**57—**

## விற்பனையை ஊக்கப்படுத்துதல்

**வினா எண் 22095—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் விற்பனையை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியமும், ஒவ்வொரு ஆண்டும்



2018 மார்ச் 21]

செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் ஜனவரி 31 ஆம் நாள் வரை 30 விழுக்காடு தள்ளுபடி மானியமும் வழங்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறிய அளவிலான கண்காட்சிகள் தொடர்ந்து அதிகளவில் நடத்தப்பட்டு கைத்தறி இரகங்களின் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பட்டு இரகங்களுக்கு 31-12-2015 முதல் 31-3-2017 முடிய உச்சவரம்பின்றி 15 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது. மேற்காண் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டதன்மூலம் 2016-2017 ஆம் ஆண்டில் 882.62 கோடி அளவில் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைத்தறி இரகங்களின் விற்பனையை அதிகரிக்க கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் கண்காட்சிகள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி கண்காட்சிகள்மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் விற்பனையை ஊக்கப்படுத்த அரசால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**58—**

## நெசவு இயந்திரம் சரிசெய்யும் வளாகம் அமைத்தல்

**வினா எண் 22133—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, நிலையூர் கைத்தறி நகரில் நெசவுத் தொழில் அதிகமாக நடைபெறுவதால் விலையில்லாமல் நெசவு இயந்திரம் சரிசெய்யும் வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

மதுரை சரகத்தில் 29 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 8,856 உறுப்பினர்களும் மற்றும் 7,865 தறிகளும் உள்ளன. திருப்பரங்குன்றம் தொகுதியின் நிலையூர் பகுதியில், எம்.எச் 98 ஸ்ரீ பாலாஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், எம்.எச். 255 ஸ்ரீ தேவி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்., எம்.எச். 265 வெற்றி அனுமான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், எம்.எச். 266

[2018 மார்ச் 21

மதுரை ஹேண்ட்லூரம் ஹைடெக் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், எம்.எச். 256 தட்சிணாமூர்த்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், எம்.எச். 257 லட்சுமி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய 6 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் மொத்தமாக கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த நெசவாளர்கள் மற்றும் தனியார் நெசவாளர்கள் 1,443 நபர்களும் 1,330 தறிகளும் உள்ளன. அவற்றில் 235 தறிகள் இயங்கி வருகின்றன. மேற்படி பகுதியிலுள்ள 6 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் 2011-2012 ஆம் ஆண்டிற்கு விருதுநகர் பெருங்குழும திட்டத்தின்கீழ் 3 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, எம்.எச். 98 ஸ்ரீ பாலாஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 பெடல் தறிகளும், எம்.எச். 265 வெற்றி அனுமான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 7 பெடல் தறிகளும், எம்.எச். 255 ஸ்ரீ தேவி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 3 பெடல் தறிகள் வீதம் 15 விலையில்லா பெடல் தறிகளும் மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளுக்கு இப்பகுதியிலுள்ள 4 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, எம்.எச். 256 தட்சிணாமூர்த்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 20 பெடல் தறிகளும், வெற்றி அனுமான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 20 பெடல் தறிகளும், எம்.எச். 255 ஸ்ரீ தேவி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 பெடல் தறிகளும், எம்.எச். 257 லட்சுமி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 பெடல் தறிகள் வீதம், 50 விலையில்லா பெடல் தறிகளும், ஆக மொத்தம் 65 பெடல் தறிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பெடல் தறிகளில் இப்பகுதியைச் சார்ந்த உறுப்பினர்கள் காட்டன் சேலைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். பெடல் தறிகளை மராமத்து செய்யும் பணியை அந்தந்த நெசவாளர்களே தங்களது பொறுப்பில் மேற்கொள்கின்றனர். இங்கு பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான பெடல் தறிகளின் மராமத்துப் பணிக்காக தனியாக பணிமனை அமைத்தால் அதன் செயல்பாடு வெற்றிகரமாக அமைவதற்கு வாய்ப்பு இல்லாத நிலை உள்ளதால், மேற்படி பகுதியில் விலையில்லா நெசவு இயந்திரம் சரி செய்யும் வளாகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

**59—**

## கைத்தறிக் கூடத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 22283—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 21]

(அ) கும்பகோணம் தொகுதியில் சோழன் மாளிகை, தாராசுரம், கொற்கை, அம்மாசத்திரம், திருநாகேஸ்வரம், திப்பிராஜபுரம் மற்றும் குடந்தை பகுதிகளில் வசிக்கும் சௌராஷ்டிரா நெசவாளர்களுக்கு கைத்தறிக் கூடத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை விதி 110 இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்புத் திட்டம் என்பதால், சூரிய மின்சக்தி வசதியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றிற்கு ரூ.2.60 இலட்சம் செலவில் (கட்டுமான பணிக்கு ரூ.2.30 இலட்சம் மற்றும் ரூ.0.30 இலட்சம் சூரிய சக்தி மின்விளக்கு அமைப்பதற்கு) பசுமை வீடுகள் கும்பகோணம் தொகுதியில் சோழன் மாளிகை, தாராசுரம், கொற்கை, அம்மாசத்திரம், திருநாகேஸ்வரம், திப்பிராஜபுரம் மற்றும் குடந்தை பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் நெசவு செய்யும் இரண்டு சௌராஷ்டிரா நெசவாளர்கள் உட்பட, தகுதி வாய்ந்த கைத்தறி நெசவாளர்களுக்கு 340 பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**60—**

## கிரயப் பத்திரம் வழங்குதல்

**வினா எண் 794—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், கடப்பேரி மவுலானா நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் வசிப்பவர்களில், பணம் செலுத்தியவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 21

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமத்தில் மவுலானா நகர் என்னும் திட்டப் பகுதி, புல எண் 120, 121, 122 மற்றும் 124-ல் 1.77.0 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (TNUDP) 1995 ஆம் வருடம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப் பகுதி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் N2/131957/95, நாள் 21-1-1995-ன்படி முன் நுழைவு அனுமதி பெற்று, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் (CMDA) 115 மனைப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டு அங்கு குடியிருந்த ஆக்ரமனதாரர்களுக்கு அவரவர் அனுபவத்தின்படி மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதி நிலம் 'மேய்க்கால்' மற்றும் 'மயானம்' என்ற வகைப்பாடு கொண்ட அரசு நிலமாகும். எனவே, மேற்படி நிலத்தை வாரியத்தின் பெயரில் நிலமாற்றம் செய்ய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலமாற்றம் செய்யப்பட்டபின், தகுதியுள்ள ஒதுக்கீடுதாரர்கள் அனைவருக்கும் கிரயப்பத்திரம் வழங்கப்படும்.

**61—**

## நியாய விலைக் கடைகளில் பணியமர்வு

**வினா எண் 1811—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நலிந்த நிலையில் இருக்கும் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாற்றுப் பணியாக நியாய விலைக் கடைகளில் பணியமர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 மார்ச் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நலிவடைந்த நிலையில் இருக்கும் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாற்றுப் பணியாக நியாய விலைக் கடை மற்றும் பிற கூட்டுறவு நிறுவனங்களில் பணியமர்த்தம் செய்வதற்கு அரசுத் துறை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**62—**

## ஊதியம் வழங்குதல்

**வினா எண் 1867—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் 4 வருடங்களாக பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சங்கங்கள் தனது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது அச்சங்கத்தின் பொறுப்பாகும். சில சங்கங்களில் நிதி தட்டுப்பாடு காரணங்களாலும், கடன் வசூல் ஆகாத நிலையிலும், ஊதியம் வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. இதுபோன்ற சூழ்நிலையில் அச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களை மறுபரவலாக்கம்மூலம் பிற சங்கங்களில் பணியமர்த்தி, ஊதியம் பெற வழிவகை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொது சேவை மையம் மற்றும் நகைக்கடன் வழங்கி வருமானம் ஈட்டிட, சிறப்புக் காசுக்கடன் தகுதியுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறாக படிப்படியாக இத்தகைய சங்கங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க அரசால் இயலாது.

[*2018 மார்ச் 21*

**63—**

### சங்கத்தை மீண்டும் துவக்குதல்

**வினா எண் 2049—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூண்டியில் பொதுப் பணித் துறை கூட்டுறவு வீட்டு வசதி பணியாளர்கள் சங்கத்தை (சி.ஜி.டி./எச்.எஸ்.ஜி.49) மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் பொதுப் பணித் துறை கூட்டுறவு வீட்டு வசதி பணியாளர்கள் சங்கம் மீண்டும் துவங்குவதற்கு அத்துறைப் பணியாளர்களிடம் கோரிக்கை வரப்பெற்ற பின் மீண்டும் துவக்க பரிசீலிக்கப்படும்.*

**64—**

### மருத்துவமனையில் குளிர்சாதன வசதி

**வினா எண் 1054—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் குளிர்சாதன வசதி செய்ய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் அதன் செயல்பாடு மற்றும் தேவையின் அடிப்படையில் போதுமான மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களும் தேவையான மருத்துவ உபகரணங்கள், குடிநீர் வசதி மற்றும் அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.*



*2018 மார்ச் 21*]

*மேலும், குளிர்சாதன வசதி, தேவையான அறுவை அரங்கம், தீவிர சிகிச்சைப் பிரிவு போன்ற அத்தியாவசியமான இடங்களுக்கு குளிர்சாதன வசதி செய்து தரப்பட்டுள்ளது. பிணவறைகளுக்கு குளிர்சாதன வசதியோ அல்லது குளிர்பதனப் பெட்டி வசதியோ செய்து தரப்பட்டுள்ளது. மருத்துவமனைகளின் அனைத்து இடங்களுக்கும் குளிர்சாதன வசதி செய்ய வேண்டியதன் அவசியம் எழவில்லை.*

**65—**

### கூடுதல் படுக்கை வசதி

**வினா எண் 1326—திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருமயம் தொகுதி, அரிமழத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதி செய்யவும், இரவிலும் நோயாளிகள் சிகிச்சை பெறவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், அரிமழம் ஊராட்சி ஒன்றியத்தில் அரிமழம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அரசு ஆணை (நிலை) எண் 50, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி-2)துறை, நாள் 31-3-2005-ன்படி ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், அரசாணை (நிலை) எண் 33, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அ௨தி-II(I) துறை, நாள் 24-2-2006-ன்படி அரிமழம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அரிமழம் ஊராட்சி ஒன்றியத்தில் அரிமழம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேலும் கூடுதல் படுக்கை வசதிகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

[2018 மார்ச் 21

**66—**

## ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 1327—திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தவும், இரவிலும் நோயாளிகள் சிகிச்சை வசதி பெறவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் நச்சாந்துப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி-II) துறை, நாள் 21-2-2014-ன்படி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இராங்கியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இராங்கியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரசாணை (நிலை) எண் 251, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 31-7-2008-ன்படி பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இராங்கியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் சுழற்சி முறையில் இரவில் பணிபுரிந்து வருகின்றனர்.

**67—**

## மருத்துவமனைக் கட்டடங்களைச் சீரமைத்தல்

**வினா எண் 1774—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 21]

ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட ஆலங்குடி அரசு மருத்துவமனைக் கட்டடங்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 28 உள் நோயாளிகள் மற்றும் 408 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு 7,290 ஆய்வக பரிசோதனை, 36 எக்ஸ்ரே, 32 இ.சி.ஜி. மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 3 பிரசவங்களும், 143 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு போன்ற பிரிவுகள், போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், இரத்த சேமிப்பு மையம், எக்ஸ்ரே, இ.சி.ஜி., மின்னாக்கி, 108 அவசர ஊர்தி போன்ற வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் போதுமான கட்டட வசதிகள் உள்ளன. அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, ஒவ்வொரு நிதி ஆண்டிலும் கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த வருடம் 2015-2016 ஆம் ஆண்டிற்கான ரூ.3.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கட்டட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.164.15 இலட்சம் செலவில் வெளிநோயாளிகள் பிரிவு, இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் மருத்துவக் கழிவு சேமிப்பு அறை ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனை வளாகத்திற்குள் சிமென்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசு மருத்துவமனையில் கட்டடங்கள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**68—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 1775—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*[2018 மார்ச் 21*

ஆலங்குடி தொகுதி, குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சி, லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சி, அரசர்குளம் தென்பாதி ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சி:

*புதுக்கோட்டை மாவட்டம், குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,77,662. இவ்வூராட்சி ஒன்றியத்தில் திருவரங்குளம், கீரமங்கலம், நெடுவாசல், கொத்தமங்கலம், வல்லத்திராகோட்டை, வடகாடு, அரையப்பட்டி, வெண்ணவால்குடி ஆகிய எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சியின் மக்கள் தொகை 765. இக்கிராமம், கோவிலூர் துணை சுகாதார நிலையத்தினையும், திருவரங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. மேலும், குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் ஆலங்குடி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது.*

லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சி:

*புதுக்கோட்டை மாவட்டம், லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,77,662. இவ்வூராட்சி ஒன்றியத்தில் திருவரங்குளம், கீரமங்கலம், நெடுவாசல், கொத்தமங்கலம், வல்லத்திராகோட்டை, வடகாடு, அரையப்பட்டி,*



*2018 மார்ச் 21]*

*வெண்ணவால்குடி ஆகிய எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சியின் மக்கள் தொகை 4,936. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இத்துணை சுகாதார நிலையம் நெடுவாசல் ஆரம்ப சுகாதார நிலையத்தினை சார்ந்தது. மேலும், லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வடகாடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் கீரமங்கலம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.*

அரசர்குளம் தென்பாதி ஊராட்சி:

*புதுக்கோட்டை மாவட்டம், அரசர்குளம் தென்பாதி ஊராட்சி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,49,177. இவ்வூராட்சி ஒன்றியத்தில் நாகுடி, அத்தாணி, மறமடக்கி, மேற்பனைக்காடு, சிலட்டூர், பூவைமாநகர் ஆகிய ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசர்குளம் தென்பாதி ஊராட்சியின் மக்கள் தொகை 4,018. இக்கிராமம், அரசர்குளம் துணை சுகாதார நிலையத்தினையும், நாகுடி ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. மேலும் அரசர்குளம் தென்பாதி ஊராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனையும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் நாகுடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.*

*எனவே, புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் ஆலங்குடி அரசு மருத்துவமனையும், லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வடகாடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் கீரமங்கலம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் அரசர்குளம் தென்பாதி ஊராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனையும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் நாகுடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவரங்குளம் ஊராட்சி*

[2018 மார்ச் 21

ஒன்றியம், குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சி, லெட்சுமி நரசிம்மபுரம் ஊராட்சி மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் தென்பாதி ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**69—**

## துணை சுகாதார நிலையத்தை இரண்டாகப் பிரித்தல்

**வினா எண் 1882—திரு. பா. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, ஆதனக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட ஆதனக்கோட்டை துணை சுகாதார நிலையத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆதனக்கோட்டை ஊராட்சியின் மக்கள் தொகை 10,118. இத்துணை சுகாதார நிலையம், ஆதனக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஆதனக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் வாராப்பூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. ஆதனக்கோட்டை துணை சுகாதார நிலையத்தின் கிராம செவிலியர்மூலம் பொது மக்களுக்கு தாய்-சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் கிடைக்கப்பெற்று வருவதாலும், ஆதனக்கோட்டை துணை சுகாதார நிலையத்தின் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் சுகாதார நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருவதாலும், ஆதனக்கோட்டை துணை சுகாதார நிலையத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2018 மார்ச் 21]

**70—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 1938—திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, கூடுவாஞ்சேரியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையில் போதுமான அளவு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு புறநகர் மருத்துவமனைகள், அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் கூடுவாஞ்சேரி அருகில் தாம்பரம் அரசு வட்ட மருத்துவமனை ஆகியவை சிறப்பான வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும் சென்னையைச் சுற்றிலும் 108 அவசர ஊர்தி தேவையான அளவு இருப்பதால், உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் கூடுவாஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து, மேற்படி அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, கூடுவாஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீன வசதிகளுடன்கூடிய அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

**71—**

## மருத்துவமனையைப் பராமரித்தல்

**வினா எண் 2276—திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாநகரிலுள்ள அரசு மருத்துவமனையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

[2018 மார்ச் 21

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அம்மருத்துவமனை மருத்துவக் கல்வி இயக்குநரகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அடுக்கம்பாறையில் புதியதாக கட்டடங்கள் கட்டி மாற்றப்பட்ட பிறகு பழைய மருத்துவமனை வளாகத்தில் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இவ்வியக்குநரகக் கட்டுப்பாட்டின்கீழ், அரசாணை எண் 319, மந(ம) குந துறை, நாள் 13-12-2011-ன் படி மீண்டும் 1-1-2012 முதல் தாலுகா மருத்துவமனை அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு, அறுவை சிகிச்சை பின் கவனிப்பு, எலும்பு முறிவு சிகிச்சை, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றுடன் 110 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கம், இரத்த சேமிப்பு மையம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், உட்புறம் சிமெண்ட் சாலை ஆகிய வசதிகள் உள்ளன. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 82 உள் நோயாளிகள் மற்றும் 1,606 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 29 பிரசவங்களும், 13 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 25 பெரிய மற்றும் 1,012 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனை கருத்தில்கொண்டு ஒவ்வொரு நிதி ஆண்டிலும் கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள்மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, 2012-2013 ஆம் நிதி ஆண்டில் ரூ.26.00 இலட்சம், 2013-2014 ஆம் நிதி ஆண்டில் ரூ.38.00 இலட்சம் (சட்டமன்ற உறுப்பினர் நிதியின்மூலம் 2014-2015 ஆம் நிதி ஆண்டில் ரூ.7.00 இலட்சம்) 2015-2016 ஆம் நிதி ஆண்டில் ரூ.4.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான கட்டடப் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.



2018 மார்ச் 21]

**72—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 2755—திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா வட்டம், அருங்குன்றத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை கூடுதல் படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் அருங்குன்றம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பின்வருமாறு:

(1) புதுப்பாடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்

(2) லாடவரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

(3) மேல்விஷாரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

(4) அருங்குன்றம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

(5) அரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

அருங்குன்றம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைபெற்ற பயனாளிகளின் விவரம்:

| | | |
|---|---|---|
| சராசரியாக நாளொன்றிற்கு பயனடைந்த வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை | : | 102 |
| சராசரியாக மாதமொன்றிற்கு பயனடைந்த உள்புற நோயாளிகளின் எண்ணிக்கை | : | 42 |
| மாதம் ஒன்றுக்கு சராசரியாக நடைபெறும் பிரவசங்களின் எண்ணிக்கை | : | 10 |

[2018 மார்ச் 21

அருங்குன்றம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் நிதியாண்டில் 6 படுக்கை வசதி கொண்ட மகப்பேறு பிரிவு கட்டடம் ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் புதுப்பாடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை (நிலை) எண் 338, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி-II) (2) துறை, நாள் 11-12-2012-ன்படி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அருங்குன்றம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**73—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 3661—திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூடங்குளம் அரசு மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண் 76, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-2-2014-ன்படி 148 படுக்கை வசதிகளைக் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு 4-3-2014 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேற்படி அரசாணையின்மூலம் 7 மருத்துவர்கள், 10 செவிலியர்கள் உட்பட 34 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் 6 மருத்துவர்கள், 10 செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பணியிடங்கள் மருத்துவப் பணியாளர்



2018 மார்ச் 21]

தேர்வாணையம்மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. அவ்வப்போது பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வினால் ஏற்படும் காலிப் பணியிடங்கள் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் பணி நிரப்பப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு 163 வெளிநோயாளிகளும், 8 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 1,321 ஆய்வகப் பரிசோதனை, 77 இ.சி.ஜி., 29 USG, 26 எக்ஸ்ரே எடுக்கப்படுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 2 பிரசவங்கள், 71 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதரப் பணியாளர்களைக் கொண்டும் பிற வசதிகளைக் கொண்டும் நோயாளிகளுக்கு 24 மணிநேரமும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**74—**

## தேன் ஆராய்ச்சி மையம்

**வினா எண் 1810—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக ஒரு தேன் ஆராய்ச்சி நிலையம் தொடங்க குறைந்தது 50 ஏக்கர் விவசாய நிலம் தேவைப்படுகிறது.

மேலும், விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்திற்கு அருகில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மாவட்டம்,

[2018 மார்ச் 21

கிள்ளிக்குளத்திலும், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி மாவட்டம், பெரியகுளத்திலும் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டம், சிந்தாமணி பேரிபுதூரில் எஸ். தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியும், கன்னியாகுமரி மாவட்டம், இராதாபுரத்தில் மற்றொரு இணைப்புக் கல்லூரியான இந்திய வேளாண்மைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், விவசாயிகளின் வேளாண்மை பற்றிய சந்தேகங்களை தீர்க்க மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரத்தில் செயல்பட்டு வருகின்றன.

மேற்கூறிய கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பூச்சியியல் துறை வல்லுநர்கள் உள்ளனர். அவர்களிடம் தேனீ வளர்ப்பு சார்ந்த ஆலோசனைகளைப் பெறலாம். ஆகவே, விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் தேன் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**75—**

## கொப்பரைக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

**வினா எண் 1944—திரு.** C.V. **சேகர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி தொகுதிகளில் விவசாயிகளுக்கு கொப்பரைக்கு ஊக்கத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரவை கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.



2018 மார்ச் 21]

**76—**

## வேளாண்மைக் கல்லூரியை மீண்டும் செயல்படுத்துதல்

**வினா எண் 1965—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரியை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 உறுப்புக் கல்லூரிகளும், 22 இணைப்புப் பெற்ற கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில், மூவாயிரத்திற்கு மேல் மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர் அரசாணை (நிலை) எண் 50, வேளாண்மை, நாள் 24-5-2011 இன்படி நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் புதிய வேளாண்மைக் கல்லூரி தொடங்க நிருவாக ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டது. ஆனால், கல்லூரி தொடங்கத் தேவையான 110 ஏக்கர் நிலம் கண்டறியப்படவில்லை. இதற்கிடையில், தமிழக அரசு அரசாணை (நிலை) எண் 173, வேளாண்மை, நாள் 20-11-2014 இன்படி, 2014-2015 ஆம் கல்வியாண்டில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி ஒன்று துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும், அரசாணை எண் 218, வேளாண்மை, நாள் 1-11-2013 இன்படி, 2014-2015 கல்வியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார் வேளாண்மைக் கல்லூரி துவங்குவதற்கு சென்னையைச் சேர்ந்த பக்தவச்சலம் மெமோரியல் டிரஸ்டுக்கு அனுமதியளிக்கப்பட்டு கல்லூரி துவங்கப்பட்டு 60 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு அருகிலுள்ள சிக்கல் என்ற ஊரில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையம், விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது. ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையமும், தஞ்சாவூரில் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள்

மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் ஆகியன நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதாலும், நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் வேளாண்மைக் கல்லூரியை மீண்டும் செயல்படுத்த தற்போது தேவை எழவில்லை.

**77—**

## விவசாயிகளுக்கு கருத்தரங்கு நடத்துதல்

**வினா எண் 2766—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாழை விவசாயிகளை ஊக்குவிக்க மாவட்டந்தோறும் வாழை விவசாயிகள் கருத்தரங்கு நடத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் வாழை உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி குறித்து உயர் தொழில்நுட்ப விளக்கக் கருத்தரங்குகள், தமிழகத்தில் 19 மாவட்டங்களில் நடத்தப்பட்டு, 19,087 விவசாயிகள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர். அதன் விவரம் கீழ்வருமாறு:

| வ.எண் | மாவட்டம் | விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரியலூர் | 100 |
| 2. | கடலூர் | 550 |
| 3. | திண்டுக்கல் | 426 |
| 4. | ஈரோடு | 1453 |
| 5. | கன்னியாகுமரி | 600 |
| 6. | கிருஷ்ணகிரி | 77 |
| 7. | மதுரை | 635 |
| 8. | பெரம்பலூர் | 200 |
| 9. | புதுக்கோட்டை | 400 |
| 10. | இராமநாதபுரம் | 7260 |
| 11. | சேலம் | 600 |
| 12. | சிவகங்கை | 1004 |
| 13. | தேனி | 2382 |
| 14. | நீலகிரி | 400 |
| 15. | திருப்பூர் | 200 |
| 16. | திருச்சி | 1000 |
| 17. | திருநெல்வேலி | 500 |
| 18. | வேலூர் | 600 |
| 19. | விழுப்புரம் | 700 |
| | மொத்தம் | 19087 |





**78—**

## வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்

**வினா எண் 3647—திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நாகர்கோவிலில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 21

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நூறு ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு உலகளவில் பிரசித்தி பெற்றமையால் சரித்திரப் புகழ் வாய்ந்த இக்கல்லூரியை இடமாற்றம் செய்ய இயலாது. மேலும், இது மேற்கு தமிழக மாவட்டங்களுக்கு மையமாக விளங்குகிறது.

மேலும், தமிழகத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் நாகர்கோவிலுக்கு சமீபமாக வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்திலும், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி மாவட்டம், பெரியகுளத்திலும் செயல்பட்டு வருகின்றன. இவற்றுடன் திருநெல்வேலி மாவட்டம், சிந்தாமணி பேரிபுதூரில் எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியும், இராதாபுரத்தில் மற்றொரு இணைப்புக் கல்லூரியான இந்திய வேளாண்மைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்ட மாணவர்கள் இக்கல்லூரிகளைத் தேர்வு செய்து பயன்பெறலாம்.

புதிதாக ஒரு வேளாண் கல்லூரி தொடங்க குறைந்தது ரூ.50 கோடி நிதியும், குறைந்தது 110 ஏக்கர் விவசாய நிலமும் ஒரு பட்டப் படிப்பிற்குத் தேவைப்படுகிறது. அதிகப்படியான ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் 50 ஏக்கர் அதிகப்படியான நிலம் தேவை.

மேலும், விவசாயிகளின் வேளாண்மை பற்றிய சந்தேகங்களை தீர்க்க மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரத்தில் செயல்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகள் சாகுபடி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இவ்வாராய்ச்சி நிலையங்களில் உள்ள ஆராய்ச்சியாளர்களை அணுகி தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே, கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நாகர்கோவிலில் நிறுவும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.



2018 மார்ச் 21]

**79—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 2311—திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் நீண்ட காலமாக குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் நீண்ட காலமாக குடியிருப்பவர்கள், தாங்கள் குடியிருக்கும் புல எண்ணை குறிப்பிட்டு மனு அளிக்கும் பட்சத்தில் விசாரணை மேற்கொண்டு தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**80—**

## பயிர்களுக்கு இழப்பீடு வழங்குதல்

**வினா எண் 2365—திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருங்காற்றினால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 11-5-2016, 20-5-2016 மற்றும் 17-6-2016 ஆகிய தேதிகளில் வீசிய சூறைக் காற்றினால் 2.570 ஹெக்டேர் நிலத்தில் 10 விவசாயிகளால் பயிரிடப்பட்ட வாழைப்

பயிர்கள் சேதமடைந்தமைக்கு சேத மதிப்பு ரூ.34,697/- என மதிப்பிட்டு, இத்தொகைக்கான நிதி ஒதுக்கீடு வழங்கிடக்கோரி மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெற்ற முன்மொழிவு பரிசீலனையில் உள்ளது.

**81—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 4898—திரு. அ. சண்முகம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, எட்டிமடை பேரூராட்சி, புல எண் 617/1A, 1B, 1E, 1F அரசு நிலங்களை ஏழை மக்களுக்கு ஒதுக்கி, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், எட்டிமடை பேரூராட்சி, புல எண் 617/1A, 1B, 1E, 1F ஆகியவை பாறைகள் நிறைந்து பள்ளமும், மேடாகவும் உள்ளதால் வீடு கட்டுவதற்கும், வசிப்பதற்கும் இயலாத நிலையில் உள்ளது. ஆனால், 617/1E இல் ஒரு பகுதி மட்டும் வசிப்பதற்கு உகந்த இடமாக உள்ளது. எனவே, இங்கு தகுதியான நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க மதுக்கரை வட்டாட்சியரின் முன்மொழிவுகள் பெறப்பட வேண்டியுள்ளது.

**82—**

## கிராம நிருவாக அலுவலகம்

**வினா எண் 5188—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, பழங்களாங்குடி ஊராட்சி, பூலாங்குடி கலப்பு காலனியில் கிராம நிருவாக அலுவலகத்தினை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவெறும்பூர் வட்டம், பழங்களாங்குடி ஊராட்சியில் உள்ள வருவாய்க் கிராம எண் 29, தேனேரிப்பட்டி மற்றும் வருவாய் கிராம எண் 38, பூலாங்குடி கிராமங்கள் குரூப் கிராமங்கள் ஆகும். தற்பொழுது 29 தேனேரிப்பட்டி கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் பூலாங்குடி கிராம பொது மக்களும் பயனடைந்து வருகின்றனர். மேலும், தேனேரிப்பட்டி மற்றும் பூலாங்குடி ஆகிய கிராமங்கள் குரூப் கிராமங்களாக உள்ளதால், பூலாங்குடி கலப்பு காலனியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்ட தேவை எழவில்லை.

**83—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 5422—திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, 74-வது வட்டம், பழையசுங்கம் ஏரிமேடு மற்றும் மதுரை வீரன் திட்டு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்திற்குட்பட்ட புலியகுளம் மதுரைவீரன் திட்டு க.ச.எண் 80/1 இல் உள்ள 0.90.5 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ள இடத்தில் 50 நபர்களும், ட.ச. எண் 3905 இல் உள்ள 6480.0 ச.மீ. (1.60 ஏக்கர்) இடம் மற்றும் ட.ச.எ 3905/4 இல் உள்ள 243.0 ச.மீ. (0.06 ஏக்கர்) பூமியில் 124 நபர்களும் ஆக்கிரமிப்பு செய்து ஓட்டுவில்லை வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். மேற்படி இடங்கள் கிராம ஆவணங்களில் அரசு வாய்க்கால் புறம்போக்கு (நீர்வழிப் புறம்போக்கு) என உள்ளதால், வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

[2018 மார்ச் 21

**84—**

### பள்ளிவாசலுக்கு பட்டா வழங்குதல்

**வினா எண் 5465—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், ஏம்பல் பள்ளிவாசலுக்கு சொந்தமான கபர்ஸ்தான் மையவாடி இடத்திற்குப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், ஏம்பல் பள்ளிவாசலுக்குச் சொந்தமான கபர்ஸ்தான் மையவாடி புலம் தொடர்பான கிராமக் கணக்குகளை பரிசீலனை செய்ததில் ஆவுடையார்கோவில் தாலுகா, ஏம்பல் வருவாய் கிராம புல எண் 165, புலம் “அண்டக்குடி கண்மாய்” என்ற நீர்நிலை வகைப்பாட்டில் உள்ளதாலும், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்க உச்ச நீதிமன்றத்தில் தடை உத்தரவு இருப்பதாலும், ஏம்பல் கிராமத்தில் உள்ள பள்ளிவாசலுக்கு சொந்தமான கபர்தார் மயான மைதானத்திற்கு பட்டா வழங்க வழிவகை இல்லை.

**85—**

### இயற்கை மீன் காட்சியகம் அமைத்தல்

**வினா எண் 2931—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் கடல் உட்பகுதியில் கண்ணாடியால் உருவாக்கப்பட்ட இயற்கை மீன் காட்சியகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 மார்ச் 21]

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி கடற்பகுதியானது பாறைகள் மிகுந்த கடற்பகுதியாகும். இப்பகுதியில் கடல் மீனினங்கள் அதிகமாக காணப்படுகின்றன. பவளப் பாறைகள் மிகுந்து காணப்படும் இப்பகுதியில் மீன்கள் இனப்பெருக்கம் செய்வதற்கான சூழல் உள்ளது. மேலும், இப்பகுதியில் அரிய வகை மீனினங்கள் அதிகம் காணப்படுகின்றன. கன்னியாகுமரியை சுற்றியுள்ள கடற்பகுதியின் மீன்வளத்தை நம்பி 10 மீனவ கிராமங்கள் உள்ளன. இந்நிலையில் இயற்கை மீன் காட்சியகம் அமைக்க அகழ்வுப் பணிகள் மேற்கொண்டால் இயற்கையான மீன் வளம் பாதிக்கப்படும். மேலும், கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (Coastal Regulation Zone) வழிகாட்டிதலின்படி, இக்கடற்கரைப் பகுதியில் புதிய திட்டத்திற்கான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ள இயலாது. எனவே, கன்னியாகுமரி கடல் உட்பகுதியில் கண்ணாடியால் உருவாக்கப்பட்ட இயற்கை மீன் காட்சியகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**86—**

### தங்கும் விடுதி அமைத்தல்

**வினா எண் 4674—திரு. மு. சக்ரபாணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, திருவக்கரை, பஞ்சவடி, பிரித்தியங்கா ஆகிய கோயில்களைப் புனரமைத்து அங்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருவக்கரையில் 2006-2007 ஆம் ஆண்டு மாநில அரசு நிதித் திட்டத்தின்கீழ் ரூ.47.15

[2018 மார்ச் 21

இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. வானூர் தொகுதி, திருவக்கரை, பஞ்சவடி, பிரித்தியங்கா ஆகிய கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில், கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின், மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, சுற்றுலாத் துறையின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும். தற்சமயம் சுற்றுலாத் துறையின்மூலம் தங்கும் விடுதி கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**87—**

## நவீனப் பூங்கா அமைத்தல்

**வினா எண் 12405—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், பாலாறு-பொருந்தலாறு அணைப் பகுதியில் நவீனப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியம், பாலாறு-பொருந்தலாறு அணை பழனியிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும், திண்டுக்கல்லிலிருந்து 67 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தி நவீனப் பூங்கா அமைக்க போதிய இடவசதி இல்லை. எனவே, பாலாறு பொருந்தலாறு அணைப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்திட, நவீனப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2018 மார்ச் 21]

**88—**

## பால் கொள்முதல் செய்தல்

**வினா எண் 12083—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் தண்டராம்பட்டு பகுதியில் உற்பத்தியாகும் பால் முழுவதும் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கம் மற்றும் தண்டராம்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உற்பத்தியாகும் பாலை 6 தொகுப்பு குளிர்விப்பு மையங்கள்மூலம் (ஆண்டிப்பட்டி, மேல்வணக்கம்பாடி, மண்மலை, பாச்சல், வாணாபுரம் மற்றும் இளையாங்கன்னி) வேங்கிக்கால் பால் குளிரூட்டும் நிலையத்தில் நாளொன்றுக்கு 25,500 லிட்டர் பாலும், பால் சேகர வழித்தடங்களின்மூலம் 12,450 லிட்டர் பாலும் கொள்முதல் செய்யப்படுகிறது. இதைத் தவிர, இனிவரும் காலத்தில் உற்பத்தியாகும் பால் முழுவதையும் கொள்முதல் செய்ய ஆவின் நிறுவனம் தயாராக உள்ளது.

**89—**

## பால் கறவை இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 12731—திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானிய விலையில் பால் கறவை இயந்திரம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் மானிய விலையில் பால் கறவை இயந்திரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 5258—திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரம், அஸ்தம்பட்டி பகுதி கோரிமேட்டில் அமைந்துள்ள சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். தொழிற்பயிற்சி நிலையங்களின் பராமரிப்புப் பணிகளுக்கென ஒவ்வொரு வருடமும் வருடாந்திர பராமரிப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதி ஒதுக்கீட்டின்கீழ் சேலம், அஸ்தம்பட்டி பகுதி கோரிமேட்டில் செயல்பட்டுவரும் சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தண்ணீர், கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்துவது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**91—**

## ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 11814—திரு. சு. ரவி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், அரக்கோணம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அக்கட்டடத்திற்கு தொழிலாளர் மாநில ஈட்டுறுதி கழகத்தினால் மாத வாடகையாக ரூ.23,000/- வழங்கப்பட்டு வருகிறது. இம்மருந்தகத்தில் 10,062 காப்பீட்டாளர்கள் இணைக்கப்பட்டு, இரண்டு மருத்துவர் வகை கொண்ட மருந்தகமாக செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 131 காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் அரக்கோணம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு வரும் நோயாளிகளுக்கு மேல் சிகிச்சை அளிக்கும் அவசியம் ஏற்படின், வேலூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டு, உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் மருந்தகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது என்பது தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் (ESI Corporation) கொள்கை முடிவினைச் சார்ந்தது ஆகும்.

**92—**

## விபத்து உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்

**வினா எண் 22478—திரு. செ. ராஜேஷ்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்தில் இறக்கும் அமைப்புசாரா தொழிலாளர் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப்

பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு எந்த இடத்திலும், எந்தவித விபத்தினாலும் மரணம் ஏற்படின், விபத்து மரண உதவித் தொகையாக ரூ.1,00,000/- வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும் பணியிடத்தில் விபத்தில் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு விபத்து மரண உதவித் தொகையாக ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

**93—**

## இலவசப் பேருந்து பயண அட்டை

**வினா எண் 328—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் எப்போது துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

முதியோர்களுக்கான இலவச பஸ் பாஸ் திட்டம் தற்போது சென்னை மாநகரில் வசிக்கும் 60 வயது பூர்த்தியடைந்த மூத்த குடிமக்கள் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (குளிர்சாதனப் பேருந்துகள் நீங்கலாக) கட்டணமில்லாமல் பயணிக்கும் வகையில் மாதம் 10 டோக்கன்கள் வீதம் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி திட்டம் குறித்து பொது மக்களின் வரவேற்பைக் கண்டறிந்து தமிழகம் முழுவதும் மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**94—**

## மேல்மட்டக் குழு அமைத்தல்

**வினா எண் 1047—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





போக்குவரத்தில் ஆபத்துக்களைத் தவிர்க்க வாகனங்கள் இயக்க தகுதியுடையதா என்பதை நிர்ணயிக்க அனைத்துப் பேருந்து பணிமனைகளிலும் மேல்மட்டக் குழு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 6 மாதத்திற்கு ஒரு முறை மற்றும் வருடத்திற்கு ஒருமுறை (6 Month FC / Yearly FC) போக்குவரத்துத் துறை மோட்டார் வாகன ஆய்வாளர்களால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய தகுதிச் சான்று பெற்ற பின்னரே பேருந்துகள் தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், பணிமனை தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களால் தினசரி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தினசரி, வாராந்திர, மாதாந்திர அடிப்படையிலான காலமுறை பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தடங்களில் அனுப்பப்படுகின்றன. வழித்தடங்களில் இயக்க தகுதி வாய்ந்த பேருந்துகள் மட்டுமே தடங்களில் இயக்கப்படுகின்றன.

**95—**

## போக்குவரத்துப் பணிமனை

**வினா எண் 1414—திரு. பா. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டையில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டையைச் சுற்றி 50 கி.மீ. பரப்பளவில் தஞ்சாவூர், திருச்சி மற்றும் காரைக்குடி ஆகிய மூன்று அரசு

[2018 மார்ச் 21

விரைவுப் போக்குவத்துக் கழகப் பணிமனைகள் அமைந்துள்ளன. இப்பணிமனைகளிலிருந்து புதுக்கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு, பயணிகள் பயனடைந்து வருகிறார்கள். எனவே, புதுக்கோட்டையில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**96—**

## இலவச சந்தாதாரர்களாக இணைத்தல்

**வினா எண் 14678—திரு. சு. ரவி:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, திருவள்ளுவர் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்பு கல்லூரியில் பயிலும் மாணவர்களை தமிழ்நாடு ஐ.சி.டி. நிறுவனத்தில் இலவச சந்தாதாரர்களாக இணைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (டி) எண் 29, தகொது (நிருவாகம்.1), நாள் 15-12-2016 இல் 130 அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஐ.சி.டி. நிறுவனத்தில் 2016-2017 ஆம் ஆண்டிற்கான இலவச சந்தாதாரர் சேவை அளிக்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, அரக்கோணம் தொகுதி, திருவள்ளுவர் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்பு கல்லூரிக்கு ஐ.சி.டி. நிறுவனத்தின் இலவச சந்தாதாரர் சேவை 19 மே 2018 அன்று வரை செல்லத்தக்கதாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.



2018 மார்ச் 21]

**97—**

## ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகள் குறித்த விவரம்

**வினா எண் 16169—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் எத்தனை என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,134 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் 312 அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட பள்ளிகள், 4 ஏகலைவா மாதிரி உண்டி, உறைவிடப் பள்ளிகள், 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகள், 42 பழங்குடியினர் நல விடுதிகள் ஆக மொத்தம் 1,450 பள்ளிகளும், 1,366 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன.

**98—**

## திருப்பணி செய்தல்

**வினா எண் 4468—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில், சாலை பகுதியில் உள்ளதால், இக்கோயிலுக்கு பின்புறம் உள்ள இடத்தைக் கையகப்படுத்தி, திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

ஈரோட்டில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில், ஈரோடு நகரின் மையப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிக்க பிரதான நெடுஞ்சாலையின் ஒரு புறம் நகராளவை

எண் 214-ல் 0.326.9 ச.மீ. (3,517 ச். அடி) குறுகிய பரப்பில் அமைந்துள்ளது. திருக்கோயில் அமைந்துள்ள பரப்பில் 2,500 சதுர அடி பரப்பு நெடுஞ்சாலையினை ஆக்கிரமித்தே அமைந்துள்ளது. வருவாய்த் துறை ஆவணங்களின்படி, இத்திருக்கோயிலின் நான்கு எல்லைகள் மேற்குபுறம் சர்வே எண் 1-ல் 3.9455.4 ச.மீ., தெற்குபுறம் சர்வே எண் 2-ல் 0.8651.9 ச.மீ., கிழக்குபுறம் சர்வே எண் 3-ல் 1.0350.0 ச.மீ. ஆகிய அரசு புறம்போக்கு நிலங்களும், வடக்குபுறம் பிரதான நெடுஞ்சாலையும் அமைந்துள்ளது. மேற்காணும் நிலங்கள் அனைத்தும் சி.எஸ்.ஐ. (Church of South India) நிறுவனத்தாரின் அனுபவத்தில் இருந்து வருவதால், திருக்கோயிலை விரிவுபடுத்தி திருப்பணி எதுவும் செய்திட இயலாத நிலை உள்ளது.

**99—**

## வாகன நிறுத்தம் அமைத்தல்

**வினா எண் 4490—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவிலிலுள்ள பழமுதிர்சோலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வாகன நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோவில், சோலைமலை மண்டபம், அருள்மிகு முருகன் திருக்கோயில் அழகர்கோவிலின் அடிவாரத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அழகர்மலையின்மீது அமைந்துள்ளது. திருக்கோயில் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்ட கட்டடங்கள் போக எஞ் சிய 1 ஏக்கர் 44 சென்ட் பரப்பளவில் கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களின் வாகனங்கள் கோயிலின் உள்பகுதி மற்றும் கோயிலுக்கு





முன்பாக சாலையின் இருமருங்கிலும் கோயிலின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் நிறுத்தப்படுகின்றன. இப்பகுதி வனப் பகுதி என்பதால் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

**100—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 4491—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவிலிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

மேலூர் தொகுதி, அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் அத்தியாவசியமான பணியிடங்களான மின் பணியாளர், உதவி மின் பணியாளர், பிளம்பர் ஆகிய பணியிடங்களை நிரப்ப நேர்காணல் நடத்தப்பட்டு, உதவி மின் பணியாளர் மற்றும் பிளம்பர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மின் பணியாளர் பணியிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2018 மார்ச் 21

முற்பகல் 11-10

## 2. தகவல் கோரல்

### தந்தை பெரியார் சிலை உடைக்கப்பட்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் தந்தை பெரியார் சிலை உடைப்பு குறித்து, அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு நான் அனுமதி கேட்டிருந்தேன். அதுகுறித்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்து பேசுவதற்கு நான் உங்களை அனுமதித்துவிட்டேன். தகவல் கோரல் என்ற முறையில் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் கேள்வி கேளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரிபுராவிலே புரட்சியாளர் லெனின் அவர்களுடைய சிலை இடித்துத் தள்ளப்பட்ட நேரத்தில், தமிழகத்திலே பெரியார் சிலை உடைக்கப்படும் என்று பா.ஜ.க.-வினுடைய தேசிய செயலாளர் ஒருவரே கூறி, அவை குறித்தெல்லாம் பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் பரவலாக செய்திகள் வந்தன. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்கள் எல்லாம் இந்த நாட்டிற்கே நன்றாகத் தெரியும். அவர் தேசிய செயலாளர்களில் ஒருவராக இருப்பவர் மட்டுமல்ல; இரயில் பயணிகள் வசதி மேம்பாட்டுக் கமிட்டியினுடைய தலைவராகவும் இருக்கக்கூடியவர்; திரு. எச். ராஜா அவர்கள். ஆக, அதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கக்கூடிய போராட்டங்களினால் தமிழகமே தந்தை பெரியார் அவர்களுக்காக கொந்தளித்ததை நாடு கண்டது.

அதேபோல, கடந்த 6 ஆம் தேதி திருப்பத்தூரில் உள்ள பெரியார் சிலையும் உடைக்கப்பட்டிருக்கிறது. நேற்று முன்தினம் இரவிலே, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அறந்தாங்கி தொகுதியில், விடுதி என்ற இடத்திலே இருக்கக்கூடிய பெரியார் சிலை உடைக்கப்பட்டிருக்கிறது. ஆக, பெரியார் சிலை உடைக்கப்படும் என்று கூறியவரை உடனடியாக இந்த அரசு கைது



2018 மார்ச் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

செய்திருக்க வேண்டும். அவர்மீது குண்டர் சட்டம் பாய வேண்டும்; அவரை குண்டர் சட்டத்திலே கைது செய்து, சிறையிலே அடைக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு ஒரு வேண்டுகோளாக, ஒரு கோரிக்கையைக்கூட நான் ஏற்கெனவே எடுத்து வைத்திருக்கிறேன். ஆக, அவரைக் கைது செய்யாத காரணத்தினால்தான், இன்றைக்குத் தமிழகத்திலே பெரியார் சிலையின்மீது கை வைக்கக்கூடிய தைரியம் பலருக்கு வந்திருக்கிறது. ஆகவே, உடனடியாக புதுக்கோட்டையில் இருந்த பெரியார் சிலையை உடைத்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும். இப்படிப்பட்ட இழிவான செயலை செய்வதற்கு தூண்டிவிட்டவர்களையும் கைது செய்ய வேண்டும்.

அதேபோல, ரத யாத்திரையை எதிர்த்து போராடியவர்களைக் கைது செய்திருக்கக்கூடிய இந்த அரசு, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலே நடந்து கொண்டிருக்கக்கூடியவர்கள்மீது கை வைக்க தயங்குவது ஏன் என்ற இந்தக் கேள்வியை மாத்திரம் இந்த அவையிலே எடுத்து வைத்து, இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் தரப் போகிறார் என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி, திரு. பெரியண்ணன் அரசு, திரு. மெய்யநாதன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இப்போதுதான் திரு. பிரின்ஸ் அவர்கள் என்னிடத்திலே இதுசம்பந்தமான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள்; உட்காருங்கள். திரு. பிரின்ஸ், திரு. காளிமுத்து மற்றும் திரு. கணேஷ் ஆகிய உறுப்பினர்களும் இணைந்து இந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டிருக்கின்றார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேசுவதற்கு அனுமதித்துவிட்டேன். ஆகவே, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதானே கொடுத்தார். அதில் என்ன? நான்தான் ஏற்றுக்கொண்டு அவர் பெயரைப் படித்துவிட்டேனே? (குறுக்கீடு) இருக்கட்டும்; விடுங்கள். நான் முதலமைச்சர் அவர்களை பதில் சொல்வதற்கு அழைத்துவிட்டேன்;

உட்காருங்கள். (குறுக்கீடு) பின்னர் பேசிக்கொள்ளலாம்; உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி காவல் நிலைய சரகம், புதுக்கோட்டை விடுதி என்ற கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி அருகில், சிமென்டினால் ஆன முழு உருவ பெரியார் சிலை ஒன்று திராவிடர் கழகத்தினரால் 25-4-2013 அன்று நிறுவப்பட்டது. கடந்த 19-3-2018 அன்று இரவு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சிலையின் தலைப் பகுதியை சேதப்படுத்தியுள்ளார். இதுபற்றி தகவலறிந்த காவல் துறையினர், உடனடியாக கிராமத்திற்கு சென்று, கிராம மக்கள் உதவியுடன் சேதமடைந்த சிலையின் தலைப் பகுதியைச் சீரமைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக திராவிடர் கழக மண்டலத் தலைவர் திரு. ராவணன் என்பவர் அளித்த புகாரின்பேரில், ஆலங்குடி காவல் நிலையத்தில் பிரிவுகள் 295, 153(b) இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் உடன் இணைந்த பிரிவு 3, தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்துதல் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிரியை அடையாளம் கண்டுபிடித்து, உடனடியாக கைது செய்ய தனிப் படைகள் அமைத்து, தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம்பற்றி அறிந்த திருச்சி சரக காவல் துறைத் துணைத் தலைவர், புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாக சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று, கிராமத்தில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொண்டனர்.

முற்பகல் 11-15

விசாரணையின்போது, சத்தீஸ்கர் மாநிலத்தில், மத்திய ரிசர்வ் காவல் படையில் ஹவில்தாராகப் பணிபுரியும் புதுக்கோட்டை விடுதி கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் 15-3-2018 முதல் விடுப்பில் கிராமத்திற்கு வந்துள்ளார். மேற்படி செந்தில்குமார் சம்பவத்தன்று இரவு குடிபோதையில் அப்பகுதியில் நடமாடியுள்ளது அவ்விடத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. பதிவுகள் மூலமும், சாட்சிகளிடம் மேற்கொண்ட விசாரணையின் மூலமும் தெரியவந்துள்ளது. செந்தில்குமாரைப் பிடித்து



விசாரணை மேற்கொண்டபோது, அவர் பெரியார் சிலையை சேதப்படுத்தியதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், கடந்த 2013 ஆம் ஆண்டு பெரியார் சிலையை அவ்விடத்தில் நிறுவுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டபோது, தனது வீட்டின் அருகில் பெரியார் சிலையை நிறுவுவதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்து, மீறி நிறுவினால் அச்சிலையை உடைத்துவிடுவேன் என்று மிரட்டியுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து செந்தில்குமார் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரியை சம்பவம் நடந்த 12 மணி நேரத்திற்குள் கைது செய்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், 6-3-2018 அன்று இரவு, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இருக்கும் தந்தை பெரியார் சிலையை விஷமிகள் சேதப்படுத்தினர். இதுபற்றி தகவல் அறிந்த காவல் துறையினர், அப்பகுதியில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக்கொண்டனர். மேலும், இது தொடர்பாக திராவிடர் கழக நகரச் செயலாளர் திரு. இளங்கோவன் அளித்த புகாரின்பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், பா.ஜ.க. நகரச் செயலாளர் முத்துக்குமரன் மற்றும் பிரான்சிஸ் ஆகியோர் இச்சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்ததையடுத்து, அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இரு சக்கர வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு நிகழ்வுகளும் கண்டிக்கத்தக்கது; தலைவர்களுடைய சிலைகளைச் சேதப்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும், குற்றம் கண்டறியப்பட்டால், அவர்கள்மீது அரசு பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

[*2018 மார்ச் 21*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருச்சி, போக்குவரத்துக் காவல் ஆய்வாளர் தாக்கியதால் திருமதி உஷா என்கிற பெண்மணி உயிரிழந்தது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திருச்சி, போக்குவரத்து ஆய்வாளர் தாக்கியதால் திருமதி உஷா இறந்தது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். மேலும், மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே பேசலாம்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பேசுங்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பேச அறிவிப்பு கொடுத்திருந்தாலும், "ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட கொடுமை; அதுவும் மாற்றுத் திறனாளிகளுக்குப் பாடம் நடத்துகின்ற அந்தப் பணியைச் செய்கின்ற ஒரு பெண்ணுக்கு நடந்த கொடுமை; அதுவும் நமக்கெல்லாம் பாதுகாப்பு தரவேண்டிய ஒரு காவல் துறை அதிகாரியினாலே ஏற்பட்ட அந்தக் கொடுமையைப் பற்றி நீ பேசவேண்டும்" என்று என்னைப் பணித்திருக்கின்ற எங்களுடைய இயக்கத்தின் செயல் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இதுகுறித்துப் பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச் 8 என்பதை மகளிர் தினமாக நாம் பெருமையாகக் கொண்டாடிக் கொண்டிருந்தாலும், அதற்கு முந்தைய நாள் 7 ஆம் தேதியன்று இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. திரு. ராஜா, திருமதி உஷா தம்பதியினர் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாகனத்தில் வரும்பொழுது, என்னுடைய தொகுதியில் உள்ள துவாக்குடி tollgate-லே அவர்கள் நுழையும்பொழுது, அங்கே இருக்கின்ற Traffic Police Officer அவர்கள் வந்த வாகனத்தை



*2018 மார்ச் 21*] [திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி]

வழிமறிக்கிறார். வழிமறித்த பிறகு, அவர் நிறுத்திச் சென்றாரா; நிற்காமல் சென்றாரா என்பது கேள்வி அல்ல. அவர் எப்படிச் சென்றிருந்தாலும், ஒரு கொலைக் குற்றவாளியைத் துரத்திப் பிடிப்பதுபோல அந்த போலீஸ் அதிகாரி அவர்களைத் துரத்திச் சென்று, அந்த வண்டியை எட்டி உதைத்ததன் காரணமாக சம்பவ இடத்திலேயே உஷா என்ற அந்தப் பெண் மரணிக்கிறார். அதேபோன்று அவருடைய கணவர் ராஜா அவர்களுக்கு காயம் ஏற்படுகின்ற சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது, அவர் நின்று சென்றாலும், நிற்காமல் சென்றாலும், அந்த வண்டி நம்பரைக் குறித்துக்கொண்டு, பிறகு அவருடைய வீட்டிற்கு, அவருடைய address கொண்டு நீங்கள் summon அனுப்புங்கள் அல்லது fine sheet அனுப்பி வையுங்கள். "நிற்காமல் சென்றீர்கள்; உங்கள்மீது எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது" என்று சொல்லி நீங்கள் summon அனுப்புங்கள். ஆனால், ஒரு கொலைக் குற்றவாளியைத் துரத்திப் பிடிப்பதைப்போல விரட்டிச் சென்றிருக்கிறார்.

*முற்பகல் 11-20*

அதுமட்டுமல்ல; சில நேரங்களில் எங்கேயோ ஓரிடத்தில் ஒளிந்துகொண்டு, திடீரென்று வந்து வாகனங்களை வழிமறித்து சோதனையிடுவதுபோன்ற அதிர்ச்சியான செயல்களையெல்லாம் செய்கிறார்கள். அதுபோன்ற செயல்களை அவர்கள் செய்யக் கூடாது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, எங்களுடைய செயல் தலைவர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, நானும், எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர், அண்ணன் திரு. நேரு அவர்களெல்லாம் சென்று, அந்தக் குடும்பத்துக்கு நேரில் ஆறுதல் சொன்னாலும், அந்த ஆறுதல் என்பது ஏதோ அந்த ஒரு நாளோடு முடிந்துவிடுகிறது. அந்த ஏழையெளிய குடும்பத்திற்கு அரசாங்கத்தின் சார்பாக ரூ.7 இலட்சம் நிதி வழங்க உத்தரவிட்டிருந்தாலும், ரூ.7 இலட்சம் என்பது போதாது. எனவே, அதனை ரூ.25 இலட்சமாக இந்த அரசு உயர்த்தித் தரவேண்டுமென்கின்ற அந்தக் கோரிக்கையை முன் வைக்கின்றேன்.

அதுபோல, இதைப்பற்றி நான் இன்று அவையில் பேசப் போகின்றேன் என்று சொன்னபோது, இறந்த திருமதி உஷா என்ற பெண்ணின் கணவர் என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். காலையில் பேசும்போது, "உங்களுக்கு வேறு என்னென்ன கோரிக்கைகள் இருக்கின்றன?"

என்று நாங்கள் கேட்டபோது, 'உங்களுடைய செயல் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்; இதுபோன்ற ஒரு நிகழ்வு வேறு யாருக்கும் நடைபெறாதவண்ணம் இந்த அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டும்' என்று அவர் சொன்னார். என்னதான் அரசின் சார்பாக, துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், அந்தக் காவல் அதிகாரியை பணி நீக்கம் செய்கின்ற நிலையை இந்த அரசு உருவாக்கவேண்டும். Sections *304* (*2*) and 336 of IPC-ன்கீழ் இந்த அரசு அந்தக் காவல் துறை அதிகாரிமீது நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருந்தாலும், அது கொலை முயற்சிதான். எனவே, இந்த அரசு அந்த வழக்கை, கொலை வழக்காக மாற்றி, அவருக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும் என்று அவர் சொன்னார். ஆகவே, துரதிருஷ்டவசமான அந்தச் சம்பவம் என்னுடைய தொகுதியிலே நடந்திருக்கிறது என்கிற முறையிலே, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, நானும் அதனை வலியுறுத்துகிறேன்.

அதுமட்டுமல்ல; இந்தச் சம்பவத்திலே பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு ஆறுதலாக இருந்த என்னுடைய தொகுதியைச் சார்ந்த சுமார் *23* நபர்கள்மீது ஐந்து பிரிவுகளின்கீழ் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. அதனையும் பரிசீலித்து, இந்த அரசு எந்தவொரு நிபந்தனையும் இல்லாமல், அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்கிற அந்தக் கோரிக்கையையும் முன்வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, இதுபோன்ற ஒரு நிகழ்வு இனியும் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையான ரூ.*7* இலட்சத்தை ரூ.*25* இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம். ஆக, அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கை காப்பாற்றவேண்டிய காவல் துறை அதிகாரியால் இந்த நிகழ்வு ஏற்பட்டிருககிறது. திருச்சிக்கு அருகில் இருக்கக்கூடிய துவாக்குடி என்ற இடத்தில் கணவன், மனைவி இருவரும் வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது, என்ன காரணத்தாலோ, காவல் துறை அதிகாரி அவர்களைத் தடுத்திருக்கிறார். அவர்கள் நிற்கவில்லை என்று



வைத்துக்கொண்டாலும், அவர்களைத் திருடர்கள்போல துரத்தி அந்தக் காவல் துறை அதிகாரி, அவர்கள் சென்ற வாகனத்தை எட்டி உதைத்திருக்கிறார். அப்போது கணவனும், மனைவியும் கீழே விழுந்திருக்கிறார்கள். மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருக்கிறார்; கணவனுக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. இதிலே என்ன பிரச்சினை என்றால், ஒரு காவல் துறை அதிகாரியே இவ்வாறு செய்திருக்கிறார். அவர் அவ்வாறு செய்யலாமா? எத்தனையோ பிரச்சினைகள் தமிழகத்தில் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஒரு பெண்ணுக்கு இதுபோன்ற ஒரு துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணும்போதுதான், எல்லோருக்கும் வருத்தமாக இருக்கிறது.

அதே சமயத்தில், அந்தப் பெண்ணை இழந்த குடும்பத்துக்கு அரசு இழப்பீடு வழங்கியிருக்கிறது. அது போதாது என்று அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள். இன்னொன்று, அந்தப் பகுதியிலே இந்த நிகழ்வு ஏற்பட்டவுடன், அங்கேயிருந்த மக்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள்மீது இப்போது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளை இந்த அரசு வாபஸ் பெற வேண்டும். பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு உரிய நஷ்டஈடாக குறைந்தபட்சம் ரூ.*25* இலட்சமாவது நீங்கள் வழங்க வேண்டும். தமிழகத்தில் எந்த இடத்திலும் இதுபோன்ற பிரச்சினைகள் நடக்காமல் நம்முடைய அரசு காவல் துறையினருக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று கூறி, இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், துவாக்குடி சுங்கச் சாவடி அருகில் *7-3-2018* அன்று இரவு, திருவெறும்பூர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் காமராஜ் குழுவினருடன் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்துள்ளார். அப்போது, தஞ்சாவூர் சாலையில் திருச்சி நோக்கி தலைக்கவசம் அணியாமல் வேகமாக வந்த இரு சக்கர வாகனம் ஒன்றை ஆய்வாளர் நிறுத்தி அவ்வாகனத்தின் சாவியை எடுத்துள்ளார். அவ்வாகனத்தை ஓட்டிவந்த தஞ்சாவூர் மாவட்டம், சூலமங்கலத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவர் தான் வாகன சோதனைக்கு ஒத்துழைப்பதாகவும், சாவியைத் தருமாறும் கேட்டதால் ஆய்வாளர் சாவியைக் கொடுத்துள்ளார். காவலர்கள்

எதிர்பாராத சமயத்தில், திரு. ராஜா தனது வாகனத்தை எடுத்துக்கொண்டு, தனது மனைவியுடன் வேகமாக அவ்விடத்தை விட்டு ஓட்டிச் சென்றுள்ளார். உடனே காவல் ஆய்வாளர் மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின்னால் விரட்டிச்சென்று, பாரத மிகு மின் நிலையம், கணேசா ரவுண்டானா அருகில் வாகனத்தில் வேகமாகச் சென்று கொண்டிருந்த திரு. ராஜாவை நிறுத்தியபோது, திரு. ராஜா கட்டுப்பாட்டை இழந்ததால், அவரும், பின்னால் அமர்ந்திருந்த அவரது மனைவி திருமதி உஷாவும் நிலை தடுமாறி கீழே விழுந்து காயமடைந்துள்ளனர். உடனடியாக ஆம்புலன்ஸ்மூலம் காயமடைந்த இருவரையும் துவாக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றபோது, அங்கு மருத்துவர்கள், திருமதி உஷா உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். திரு. ராஜா வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றார்.

இதற்கிடையே இச்சம்பவம் குறித்து அறிந்த அப்பகுதி பொது மக்கள் சுமார் 2,000 பேர், போக்குவரத்து காவல் ஆய்வாளர்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, திருச்சி-தஞ்சாவூர் தேசிய நெடுஞ் சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டும், அவர்கள் கலைந்துசெல்ல மறுத்து கல்வீச்சில் ஈடுபட்டனர். இக்கல்வீச்சு சம்பவத்தில் 44 அரசுப் பேருந்துகள், 6 காவல் வாகனங்கள், ஒரு வருவாய்த் துறை வாகனம் ஆகியவற்றின் கண்ணாடிகள் சேதமடைந்தன. ஒரு பெண் காவலர் உட்பட 11 காவலர்களுக்கு காயங்கள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து காவல் துறையினர் வேறு வழியின்றி தகுந்த எச்சரிக்கைக்குப்பின், குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து அவர்களை கலைந்து போகச் செய்து, போக்குவரத்தை சரி செய்தனர்.

திருமதி உஷா இறந்துபோனது தொடர்பாக BHEL காவல் நிலையத்தில் திருமதி உஷாவின் கணவர் திரு. ராஜா அளித்த புகாரின்பேரில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 304(2), 336-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டு, கல்வீச்சு பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியது தொடர்பாக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 21 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். உயிரிழந்த திருமதி உஷாவின் உடல் திருச்சி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடிக்கப்பட்டு, 8-3-2018 அன்று அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.





இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி உஷா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, உயிரிழந்த திருமதி உஷா குடும்பத்தினரின் நிலையைக் கருத்தில்கொண்டு, அவரது குடும்பத்திற்கு 7 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டேன்.

இதுசம்பந்தமாக திருவெறும்பூர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் காமராஜ் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்; பணி இடைநீக்கமும் செய்யப்பட்டுள்ளார். மேலும், இச்சம்பவம் தொடர்பாக குற்றவியல் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குற்றவியல் விசாரணையின் முடிவின் அடிப்படையில், காவல் ஆய்வாளர்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) சென்னை, மூலக்கொத்தளம் (காட்பாடா) பகுதியில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டுவதற்காக மொழிப்போர் தியாகிகள் நினைவு மண்டபம் இடிக்கப்போவதாக வெளியான செய்தி குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக்கொத்தளம் பகுதியில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவதற்காக மொழிப்போர் தியாகிகள் நினைவு மண்டபம் இடிக்கப்போவதாக வந்துள்ள செய்தி குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், அரசினுடைய கவனத்தை ஈர்க்கலாம்.

***திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கொத்தளம் இடுகாட்டில் உள்ள மொழிப்போர் தியாகிகள் திரு. நடராசன், திரு. தாளமுத்து மற்றும் டாக்டர் தர்மாம்பாள் ஆகியோர் கல்லறைகளை ** 11½ ஏக்கர் நிலப்பரப்பிலே அந்த இடத்திலே குடிசை மாற்று வாரியம் மூலமாக ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தர இந்த அரசு முடிவு செய்து, அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 மார்ச் 21

அரசின் இந்தத் திட்டத்திற்கு அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. 1967 முதல் திராவிட முன்னேற்றக் கழகமும், அ.இ.அ.தி.மு.க.-வும் இந்த மாநிலத்தை ஆட்சிபுரிந்து வருகின்றன. அதற்கு அடித்தளம் அமைத்தது இந்த மொழிப்போர்தான் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். வரலாற்றுப் புகழ்பெற்ற மொழிப்போரில் கலந்துகொண்டு, சிறை சென்ற திரு. நடராசன் மற்றும் திரு. தாளமுத்து ஆகிய இருவரும் சிறைக் கொடுமைகளால் இறந்து போனார்கள். தமிழகத்தில், முன்பு பேரறிஞர் அண்ணா அவர்களும், பிறகு தலைவர் கலைஞர் அவர்களும், எங்களுடைய செயல் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களும் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 25 ஆம் நாளன்று அந்த நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

முற்பகல் 11-30

அன்றையதினமே திராவிட முன்னேற்றக் கழகம், அ.இ.அ.தி.மு.க. மற்றும் அனைத்துக் கட்சிகள் சார்பாக மாநிலம் முழுவதும் வீர வணக்க நாள் கூட்டங்கள், மொழிப்போர் வரலாற்றில் இடம் பெற்றுள்ள மொழிப்போர் தியாகிகளின் நினைவைப் போற்றுகின்ற வகையிலே நடத்தப்பட்டு வருகின்றன. மூலக்கொத்தளத்தில் உள்ள அந்த ** நம் தாய்மொழியைக் காக்கவும், இந்தித் திணிப்பை எதிர்த்தும் போராடிய தமிழ் மறவர்களை ** இந்த நினைவிடத்தை உருவாக்கியவர் தந்தை பெரியார் அவர்கள். அதேபோன்று, இந்த நினைவிடத்தை மேம்படுத்தியவர் எங்களுடைய செயல் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மேலும், இடுகாட்டில் கட்டடப்பட இருக்கும் வீடுகள் ஏழையெளிய மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஏழையெளிய மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை ** என்ற அந்தத் திட்டத்தைத் திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோல, தமிழகம் எங்கும் இருக்கின்ற நினைவிடங்களை இந்த அரசு பாதுகாத்து மேம்படுத்த வேண்டுமென்று கேட்டு, இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, மூலக்கொத்தளம் (காட்பாடா) பகுதியில், குடிசைப் பகுதிவாழ் மக்கள், அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய வீட்டு வசதியைப் பெறும்வகையில், பிரதம மந்திரி அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்கீழ், 138.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,044 வீடுகள்/குடியிருப்புகள் கட்டும் திட்டம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பகுதியில் மயானத்திற்கென 35.43 ஏக்கர் நிலம், பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இருந்தது. அதில், அப்பகுதி மக்களின் மயானப் பயன்பாட்டிற்கு 23.92 ஏக்கர் நிலம் போக, மீதம் வேறு பயன்பாடு ஏதுமின்றி காலியாக இருந்த 11.51 ஏக்கர் நிலம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டது. அரசின் சட்ட, திட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த நிலமாற்றம் செய்யப்பட்டது. இந்நிலத்தை, வீட்டு வசதி பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும்வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால், மேற்படி நிலத்தினைக் குடியிருப்பு வகைப்பாட்டிற்கு மாற்றி, 31-10-2016 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்நிலத்தை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு உரிமையாக்கிட ஏதுவாக, பெருநகர சென்னை மாநகராட்சி, தனது வசமிருந்து நில உரிமையைத் துறப்பு செய்தது. இதன்பிறகு, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, இந்நிலத்தை முறையாக உரிமையாக்கும் வகையில், இதற்கான நில உரிமை மாற்ற அரசாணை 4-8-2017 அன்று வருவாய்த் துறையால் வெளியிடப்பட்டது.

எனவே, மாநகராட்சி வசம் இருந்த நிலம் 35.43 ஏக்கரில், வாரியப் பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்ட 11.51 ஏக்கர் நிலம் போக, மீதம் உள்ள நிலம், அப்பகுதி மக்களின் மயானம் மற்றும் கல்லறைப் பயன்பாட்டிற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அங்கு மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள, பொதுக் கழிப்பிடம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை இடிக்கப்படாமல் பொது மக்கள் பயன்பாட்டிலேயே தொடர்ந்து உள்ளது. இத்திட்டத்திற்கான வரைபடம் தயாரிக்கும்போது, கட்டடத்திற்கும் மயானத்திற்கும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 21

இடையிலான இடைவெளி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிமுறைகளின்படி இருக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கூறிய 11.51 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியான, 0.58 ஏக்கர் நிலமானது, மயானத்தின் உட்புறத்தில் புதைக்கும் இடமாகவும், முட்செடிகள் மற்றும் புதர்கள் சூழப்பட்டுள்ளதாலும், அரசாணை எண் 249, நாள் 4-8-2017-ல் தெரிவித்துள்ளபடி, அதற்கு மாற்று பகுதியாக, மயானத்தின் அருகில் குடிசைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தினை வழங்க ஆவன செய்யுமாறு வாரியம் கேட்டுக்கொண்டது. இதற்குப் பதிலாக, மயானப் பயன்பாட்டில் இல்லாத, அருகில் உள்ள 0.58 ஏக்கர் நிலத்தை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு, அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்கு நில உரிமை மாற்றம் செய்ய ஆட்சேபணை இல்லை என பெருநகர சென்னை மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-35

இந்நிலையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் திரு. வைகோ அவர்களால், மூலக்கொத்தளம் மயானத்தை அகற்றக் கூடாது என்று கோரி, 13-3-2018 அன்று காலை 10-00 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டத்தில், மொழிப்போர் தியாகிகளான தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரது கல்லறைகளும், ஈழத் தமிழர்களுக்காக உயிர் தியாகம் செய்த முத்துக்குமார் மற்றும் அமரேசன் ஆகியோரது கல்லறைகளும் இடிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்தக் கூற்றில் உண்மை இல்லை என்று தெரிய வந்துள்ளது. தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரது கல்லறைகளுக்கும், தற்போது நிலமாற்றம் செய்யப்பட்ட நிலத்திற்கும் 300 மீட்டர் தூரம் இடைவெளி உள்ளது. மேலும், தர்மாம்பாள் அம்மையார் அவர்களின் கல்லறை, நிலம் மாற்றம் செய்யப்பட்ட புலத்திலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, அந்தக் கல்லறைகளுக்கும் எவ்வித இடையூறும் இல்லை என்பது தெரியவருகிறது. மேலும், ஈழத் தமிழர்களுக்காக உயிர் நீத்த முத்துக்குமார் மற்றும் அமரேசன் ஆகியோருக்கு அங்கு கல்லறை ஏதும் இல்லை. அவர்களின் சடலங்கள் எரியூட்டப்பட்டன என விசாரணையில் தெரியவருகிறது.



2018 மார்ச் 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இந்நிலையில், மூலக்கொத்தளம் மயானப் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த திரு. பி. புருஷோத்தமன் என்பவரால் தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தில் (National Commission for Scheduled Castes) அளிக்கப்பட்ட புகார் மனுவில் இப்பகுதியில் குடியிருப்புகள் எதுவும் கட்டக் கூடாது என்றும், இப்பகுதி தொடர்ந்து மயானமாகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, மேற்படி ஆணையத்தின் துணைத் தலைவர் அவர்களால் கடந்த 17-3-2018 அன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையின்போதும், இப்பகுதியில் குடியிருப்புகள் கட்டக் கூடாது என்றும், இந்தப் பகுதி தொடர்ந்து மயானமாகவே பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் திரு. பி. புருஷோத்தமன் சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இவ்விசாரணையின்போது இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ராம்தாஸ் நகர் மற்றும் அருகில் உள்ள மற்ற குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள், தாங்கள் அதே பகுதியில் சுமார் 40 ஆண்டுகளாக வசித்து வருவதாகவும், அனைவரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அதே இடத்தில் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும் என்றும் வலியுறுத்தி இருக்கின்றார்கள்.

இந்த விசாரணையில் சென்னை மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அதிகாரிகள், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தின் துணைத் தலைவர், இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், சென்னை காவல் துறை இணை ஆணையர் ஆகியோர் தங்களது அறிக்கையினை ஆணையத்திற்கு அளிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தில் அளிக்கப்படும் புகார்களின்மீது விசாரணை நடத்தி, அதன் பரிந்துரைகளை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குச் சமர்ப்பிக்கும் அதிகாரம் தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்திற்கு

உள்ளது. இவ்விசாரணையின் இறுதியில் விசாரணை முடியும் வரை கட்டுமானப் பணிகளை நிறுத்திவைக்குமாறு ஆணையத் துணைத் தலைவர் அவர்களால் வாய்மொழியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட பரிந்துரை தொடர்பாக உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், இப்பொருள் தொடர்பாக தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தால் மீண்டும் 23-3-2018 அன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மூலக்கொத்தளம்-காட்பாடா பகுதியில், எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி குடிசைகளில் வசித்துவரும் ஏழை, எளிய மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவர்கள் வாழும் இடத்திலேயே குடியிருப்புகள் கட்ட அரசு பெருமுயற்சி மேற்கொண்டுள்ளது.

பொது மக்கள் மயானமாகப் பயன்படுத்திவரும் பகுதியிலிருந்து தொலைவான தூரத்தில், வரலாற்று புகழ்கொண்ட பெருமக்களின் கல்லறைகள் இல்லாத, மயானப் பயன்பாட்டில் இல்லாத பகுதியில்தான் நிலத்தின் வகைப்பாடு மாற்றப்பட்டு, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இந்த வீட்டு வசதித் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் சொன்னதுபோன்று, எந்தக் கல்லறையையும் இடிக்கவில்லை. அவர் சொன்னமாதிரி மொழிப்போர் தியாகிகள் விஷயத்தில் நாம் அனைவரும் ஒன்றாகத்தான் இருந்தோம். எங்களுக்கும் அதில் நேரடியாகத் தொடர்பு உண்டு என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாதிரியான நிகழ்வு எதுவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்வது எங்களது கடமையாகவும் இருக்கின்றது என்பதனையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

பொது மயானத்திற்கும், கல்லறைகளுக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில்,— அருமை அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் தங்களது செய்கையின்மூலம்





குறிப்பிடுவதுபோன்று, காம்பவுண்டு சுவரைக் கட்டிவிட்டு, அதற்குப் பின்னாலும்கூட, பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு, அங்கே குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கமாக இதுபோன்று யாருக்கும் அனுமதி அளிப்பது இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்பதனால் அனுமதி அளிக்கிறேன். சரி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் தீர்மானத்திற்கான பதிலை மிக விளக்கமாகத் தெரிவித்திருக்கிறார். இதில் பிரச்சினை என்னவென்று கேட்டீர்களானால், actual நிலைமை ஒன்று இருக்கும். ஆனால், அதிகாரிகள் எழுதிக் கொடுப்பது வேறு மாதிரியாக இருக்கும். (குறுக்கீடு) இல்லை, உண்மை நிலையினைச் சொல்கிறேன். ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், யாராவது நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லட்டும்; என்னைச் சொன்னாலும் சரி அல்லது எங்களில் இரண்டு பேர், உங்களில் இரண்டு பேர் கொண்ட ஒரு குழு அந்த இடத்தைச் சென்று பார்த்துவிட்டு வருவோம். அதுவரையில், இப்பணியினை நிறுத்திவைக்கச் சொல்லுங்கள். அதன்பிறகு அந்தப் பணியைத் தொடங்கட்டும். ஏனென்றால், இது மிகவும் உணர்ச்சிபூர்வமான ஒரு பிரச்சினை. அதற்காகத்தான் சொல்கிறேன். அதுவரையில், இப்பணியினை நிறுத்திவைக்கச் சொல்லுங்கள். இதுகுறித்து Call Attention கொடுத்தவர்களில் யாரேனும் நான்கு உறுப்பினர்களை, உங்கள் கட்சி சார்பில் இரண்டு பேர், எங்கள் கட்சி சார்பில் இரண்டு பேர் சேர்ந்து அந்த இடத்தைச் சென்று பார்த்துவிட்டு, இறுதியில் திருப்திகரமான முடிவினை மேற்கொள்ளலாம். அதுவரையில், இப்பணியினை நிறுத்திவைக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் போகட்டும் அல்லது நான் போகிறேன்; யாராவது அங்கு செல்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மயானப் பகுதியிலிருந்து கட்டப்பட

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 21

இருக்கின்ற அந்தப் பகுதி வெகு தொலைவில் இருக்கிறது. ஒன்று 100 மீட்டர் தூரமும்; மற்றொன்று 300 மீட்டர் தூரமும் இருக்கின்றது. ஏற்கெனவே, அந்தப் பகுதி குடிசைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்டோருக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்குத்தான் திட்டம் இருக்கின்றது. இதில் எந்தவிதமான மாறுபாட்டிற்கும் இடம் இல்லை. தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணைய துணைத் தலைவரும் அவ்விடத்தை நேரடியாகச் சென்று பார்த்து, விசாரணை மேற்கொள்ள இருக்கின்றார். அடுத்த விசாரணை 23-3-2018 அன்று வைத்திருக்கிறார். அனைத்துத் துறைகளின் வாக்குமூலத்தையும் கேட்டிருக்கிறார். அவரும் ஒரு நல்ல முடிவை எடுப்பார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அனைத்து அம்சங்களையும் நாம் தீவிரமாக அலசி, ஆராய்ந்து, யாரையும் பாதிக்காத வகையில், ஒரு நல்ல முடிவை மேற்கொள்வோம். நாம் அனைவரும் இங்கு அமர்ந்திருப்பதற்குக் காரணகர்த்தாக்களாக விளங்கும் பழைய வரலாற்று வீரர்களான அந்த மொழிப்போர்த் தியாகிகளின் நினைவுச் சின்னங்களுக்கு எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணன் அவர்களுடைய. . . (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** பரிசீலிக்கப்படும் என்கிற வார்த்தையே ஆபத்தான வார்த்தையாக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதைத்தான் சொல்லிவிட்டேனே; அந்த இடத்திற்கும், இந்த இடத்திற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நாம் இங்கு அமர்ந்திருப்பதற்குக் காரணமே அவர்கள்தான் என்று சொல்கிறீர்கள். அந்த மொழிப்போர் களத்தில் ஈடுபட்ட அத்தியாகிகளின் நினைவுகளைப் போற்றக்கூடிய வகையில், அவர்களது நினைவிடங்கள் அங்கு அமைந்துள்ளன. எனவே, எந்தக் காரணத்தைக்கொண்டும், அவை எடுக்கப்பட மாட்டாது என்கின்ற உறுதியை இந்த அரசு தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், எந்தக் காலத்திலும், இனி வருகின்ற எத்தனை நூற்றாண்டு காலமானாலும், அவர்களுடைய



2018 மார்ச் 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கல்லறைகள் அதே இடத்தில் பராமரிக்கப்பட்டு, நல்லமுறையில் பாதுகாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றிற்குரிய மரியாதை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தாழ்த்தப்பட்டோர் வசித்துக்கொண்டிருக்கின்ற அந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றி, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்ற ஒரு நல்ல சூழல் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், நீங்களும் நாங்களும் சேர்ந்து சென்று அவ்விடத்தை நேரடியாகப் பார்த்து, ஒரு நல்ல முடிவை எடுப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே விவாதிக்கப்படுகின்ற பிரச்சினை என்னுடைய இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டது. மூலக்கொத்தளம், காட்பாடா; அந்த மூலக்கொத்தளம் சுடுகாட்டில் பயன்பாட்டில் இல்லாமல் சுமார் 11 ஏக்கர் இடம் இருக்கிறது. அதிலும் காட்பாடா சுடுகாட்டுக்கு இரண்டு approach; ஒன்று, ராம்தாஸ் நகர் வழியாகப் போகலாம்; மற்றொன்று; காட்பாடா வழியாகச் செல்லலாம். ராம்தாஸ் நகர் வழியாகப் போகிற அந்த கேட் முழுமையான அளவுக்கு encroach செய்யப்பட்டிருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 400 குடும்பங்கள் இருக்கின்றன. தேர்தலின்போது அங்கு சென்று ஓட்டு கேட்கும்போது அவர்கள் இதுகுறித்து வேண்டுகோள் வைத்தார்கள். "உங்களுக்கு பெரும்பாக்கம் பகுதியில் நாங்கள் இடம் மாற்றிக் கொடுக்கிறோம்" என்று சொன்னபொழுது, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "எங்களுடைய வாழ்வாதாரம் இந்த இடத்தில்தான் இருக்க வேண்டும். அதனால் எங்களை எடுக்கவேண்டுமென்றால், எங்களுக்கு இங்கேயே குடியிருப்புகள் கட்டிக் கொடுங்கள்" என்று தெரிவித்ததன் அடிப்படையில்தான்,

[திரு. டி. ஜெயக்குமார்] [2018 மார்ச் 21

அங்கிருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையில்தான், இந்தப் பயன்பாடு இல்லாத 11 ஏக்கர் நிலத்தினை, நிலவுடைமை மாற்றம் செய்து, தற்போது Slum Clearance Board மூலமாகக் கட்டிக்கொடுக்கிறோம். அங்கே இருக்கின்ற பிரிவில் தோட்டம், பால் டிப்போ என்று சொல்லக்கூடிய பகுதிகளில் கிட்டத்தட்ட ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அந்த 11 ஏக்கர் இடத்தில் எந்தவொரு நினைவுச் சின்னமும் கிடையாது. அந்த இடங்களில் இதுநாள் வரையில், ஒரு பிணம்கூட புதைக்கப்படவில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது, ** அப்படிங்கிற தகவல். . . (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும், நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். இப்போது கட்டுகிற இடத்திலிருந்து 300 மீட்டர் தொலைவில்தான் இந்த நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. எனவே, அதற்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. அது அப்படியே இருக்கிறது. அது அப்படியே பாதுகாக்கப்படும்; போற்றப்படும். இதுதான் நிதர்சனமான ஒன்று. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், நீங்கள் அறிவிப்பு கொடுக்கவில்லை. (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பில் பேசலாம். (குறுக்கீடு) நான் அடுத்த அலுவலுக்குச் சென்றுவிட்டேன்.

## (இ) துறைமுகம் மற்றும் எழும்பூர் தொகுதிகளில் புதியதாக குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டித் தருதல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துறைமுகம் மற்றும் எழும்பூர் தொகுதிகளில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் புதிதாகக் கட்டித்தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் ஆகியோர் விதி 55-ன்கீழ், அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இருவரில் யாராவது ஒருவர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கலாம். (குறுக்கீடு) இல்லை, இரண்டும் ஒரேவிதமான சப்ஜெக்ட்தான்; (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் பத்து நிமிடங்களாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள் ஒதுக்க முடியாது. ஒவ்வொருவரும் ஒரு நிமிடத்தில் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள். இப்போது மணி என்ன ஆகிறது என்று பாருங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை. இது முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, மணி என்னவென்று பாருங்கள். இன்னும் 7 உறுப்பினர்கள் இன்றைக்கு உரையாற்ற வேண்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாற்றத்தைக் காண தமிழகத்திலே விதை விதைத்து, ஏற்றமிகு தலைவராக ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற எங்களது இயக்கத்தின் செயல் தலைவர் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகர் சென்னையில், சாலையோரங்களில் பெரும்பாலான குடும்பத்தினர் வசிக்கின்ற ஒரு நிலை இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவர்களுடைய தலையெழுத்தை மாற்றமுடியாமல் ஆட்சிகளும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. சாக்குப் பையிலே தங்களது வாழ்க்கையைப் போக்கிக் கொண்டிருக்கின்ற அவர்களுக்கு, ஆண்டாண்டுக் காலமாக சாக்குப் போக்கு சொல்லிக்கொண்டு, வீடுகள் கட்டித் தருவதை மறுக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன். குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்பற்றி மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இப்போது பேசும்போது, வீட்டு வசதி வாரிய திட்டங்களின்மூலம் அனைவருக்கும் புதிதாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதாக இங்கே குறிப்பிட்டார். இப்படிக் கட்டப்படுகின்ற

வீடுகளில், ஏற்கெனவே குடியிருப்போர்களிடம் தற்போது இந்தத் திட்டத்தின்படி 25% கூடுதலாக அவர்கள் தொகையைக் கட்ட வேண்டுமென்று நிர்ணயித்து இருக்கிறார்கள். புதிதாகக் குடிவருபவர்களாக இருந்தால், அவர்களிடம் இந்தத் தொகையைக் கேட்கலாம். ஏற்கெனவே அவர்கள் அந்த இல்லங்களில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பழைய வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது, கூடுதலாக 3 இலட்சம் ரூபாயைச் செலுத்த வேண்டுமென்று குடிசை மாற்று வாரியத்திலிருந்து அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சாலையோரங்களில் வசித்து வந்தவர்கள்தான் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையை அரசே ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு எந்தவிதமான செலவினமும் ஏற்படாமல் அந்த வீடுகளைக் கட்டித்தர மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, கொளத்தூர் தொகுதியின் ரமணா நகர் பகுதியிலுள்ள 480 வீடுகள், துறைமுகம் தொகுதியில் எல்லீஸ் நகர் மற்றும் யானைக் கவுனி பகுதியிலுள்ள 286 வீடுகள் புதிதாக மறுகட்டுமானம் செய்யப்பட இருக்கின்றன. இங்கு வாழ்கின்ற மக்களுக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதால், ஒரு பதற்றமான சூழ்நிலை அவர்களிடம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை சட்டமன்றத்தில் பேசி, அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதாக உறுதி அளித்திருக்கிறோம். அந்த உறுதியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அதற்குண்டான உறுதிமொழியை, இந்த அவையிலே, இப்போதே அறிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், அரசின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத்தின் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 61-வது வார்டில் டாக்டர் சந்தோஷ் நகர் குடியிருப்பு, 77-வது வார்டில் பி.கே. காலனி





குடியிருப்பு, 104-வது வார்டில் கரும்புத் தோட்டக் குடியிருப்பு, ஆர்.கே. புரம் குடியிருப்பு, ஓசான்குளம் குடியிருப்பு மற்றும் 107-வது வார்டில் எம்.எஸ். நகர் குடியிருப்பு ஆகிய குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகள் ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, அவை சரியான முறையில் பராமரிக்கப்பட முடியாத நிலையில், அங்கே வாழக்கூடிய மக்கள் ஓர் அவலமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

சமீபத்தில்கூட அந்தத் துறையின் குடிசை மாற்று வாரியத்தின் அதிகாரிகளை நேரடியாக அந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று, ஆய்வு செய்தபொழுது, "இந்த மக்கள் எப்படி இங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்?" என்று அந்தத் துறையின் அதிகாரிகளே மனம் நொந்தபடிதான் சென்றார்கள். ஆகவே, இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், நான் தெரிவித்திருக்கிற அந்தப் பகுதிகளையெல்லாம் உடனடியாக ஆய்வு செய்து, அந்த இடங்களிலுள்ள பழைய குடியிருப்புகளை உடனடியாக இடித்துவிட்டு புதிய குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும். அதேபோல் 104-வது வார்டில் திடீர் நகர் என்ற குடியிருப்பு உள்ளது. ஏறக்குறைய 500 வீடுகள் உள்ள அந்தக் குடியிருப்பில், கடந்த காலத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது துணை முதலமைச்சராக இருந்த எங்கள் கழகத்தின் செயல் தலைவர் அவர்கள் அந்தக் குடிசை வீடுகளுக்குப் பதிலாக கல்நார் வேய்ந்த வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்கள். ஆனால், தற்போது அந்தக் கல்நார் வேய்ந்த வீடுகள் எல்லாம் இடிந்து, அங்கு வாழக்கூடிய மக்கள் பேனர்களையும், தார்ப்பாலின்களையும் வீட்டின் கூரைகளாக அமைத்து எந்த அடிப்படை சுகாதார வசதியுமின்றி வாழக்கூடிய ஓர் அவல நிலை இருக்கிறது. அந்தத் திடீர் நகரின் பின் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமாக ஏறக்குறைய 25 ground இடம் காலியாக எந்தப் பயன்பாடுமின்றி இருக்கின்றது. அந்தத் துறையின் அமைச்சர் அவர்களைத் தொடர்புகொண்டு, அதை உடனடியாக வகை மாற்றம் செய்து, திடீர் நகரில் குடிசைகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கு அந்த இடத்தில் உடனடியாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தர இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்] [2018 மார்ச் 21

அதேபோல் பி.கே. காலனி என்ற இடத்தில் ஏறக்குறைய 9-வது, 10-வது blocks இரண்டும் பைசா நகரத்து சாய்கோபுரங்களைப் போல சாய்ந்துகொண்டே வந்து, எந்த நேரத்தில் அந்த இரண்டு blocks-ம் இடிந்து, உயிர்ச் சேதம் ஏற்படக்கூடும் என்ற சூழ்நிலையில் அங்கு வசிக்கக்கூடிய மக்கள் உயிருக்கு பயந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த 2 blocks மட்டுமல்லாமல், அங்கிருக்கக்கூடிய அனைத்து blocks-ஐயும் இடித்துவிட்டு, புதிய வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தற்பொழுது பி.கே. காலனியில் கே.பி. பார்க் என்ற இடத்தில் 1,500-க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டத் துவங்கியிருக்கிறார்கள். அந்த வேலை நடைபெறும் இடங்களில், அங்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களின் தரங்களைக் கண்காணிக்கக்கூடிய வகையில் அரசின் சார்பாக, அந்தத் துறையின் சார்பாக 2 அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிச்சந்திரன், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** ஏனென்றால் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கே.பி. பார்க் குடியிருப்பில் 14 blocks கட்டப்பட்டன. அங்கு இருக்கக்கூடிய குடியிருப்புகளின் கழிவு நீர் செல்லக்கூடிய pipes எல்லாம் உடைந்து, சுகாதாரமற்ற சூழ்நிலையில் அந்த மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல, நேரு பார்க் குடியிருப்பு 2 ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டது. அங்கே வாழக்கூடிய மக்களின் குடியிருப்புகளில் கழிவு நீர் செல்லக்கூடிய pipes மற்றும் குடிநீர் ஏற்றம் செய்யக்கூடிய motors எல்லாம் எரிந்து, அந்த இடங்களும் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து குடிசை மாற்று வாரிய வீடுகளையும், 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அனைத்து வீடுகளையும் இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளை இந்த அரசு போர்க்கால அடிப்படையில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, மாண்புமிகு எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்பான டாக்டர் சந்தோஷ் நகர் திட்டப் பகுதி குறித்து பதிலளிக்க விரும்புகிறேன். டாக்டர் சந்தோஷ் நகர் திட்டப் பகுதியில் 272 குடியிருப்புகள் 1972-1975 ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. இத்திட்டப் பகுதியில் 2012-2017 ஆம் ஆண்டு வரை சுமார் 27.77 இலட்சம் ரூபாய் செலவில் பழுதுபார்க்கும் பணிகளும், 2016-2017 ஆம் ஆண்டில் 7.23 இலட்சம் ரூபாய் செலவில் சுவருக்கு வர்ணம் பூசும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பராமரிப்புப் பணிகள் முறையாகச் செய்யப்பட்டும் வந்திருக்கின்றன.

இத்திட்டப் பகுதியை 13-3-2018 அன்று தலைமைப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர் (சென்னை சரகம்-3), தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில், இக்கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட அறிவுறுத்தப்பட்டது. தொழில்நுட்பக் குழு ஆய்வு மேற்கொண்டு ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மறுகட்டுமானம் செய்ய உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓசான்குளம் திட்டப் பகுதியில் 288 குடியிருப்புகள் 1976-1977 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இத்திட்டப் பகுதியில் 2012-2017 ஆம் ஆண்டு வரையிலும் சுமார் ரூ.26.37 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பணிகளும், 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.6.28 இலட்சம் செலவில் சுவருக்கு வர்ணம் பூசும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பராமரிப்புப் பணிகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பகுதியின் குடியிருப்புகள் தாழ்வான இடத்தில் அமைந்துள்ளதால், மழைக் காலங்களில் இக்குடியிருப்புகளைச் சுற்றிலும் தண்ணீர் தேங்குவதால் அடிக்கடி பழுதும் ஏற்படுகிறது. தொழில்நுட்பக் குழு விரைவில் ஆய்வு செய்ய உள்ளது. அதன் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும் என்பதனையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 21

முற்பகல் 11-55

**கரும்பு தோட்ட திட்டப் பகுதி (பங்கஜம் தெரு):** தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பங்கஜம் தெரு திட்டப் பகுதியில் (கரும்பு தோட்ட திட்டப் பகுதி) 56 குடியிருப்புகள் 1974 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு 2012-2017 வரையிலும் சுமார் ரூ.2.75 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பணிகளும், 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.1.50 இலட்சம் செலவில் சுவருக்கு வர்ணம் பூசும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பராமரிப்புப் பணிகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்பின் கட்டமைப்புகள் உறுதியாக இருப்பதால், தற்சமயம் புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்று அறிக்கை சொல்கிறது. இருந்தாலும், அதனை மீண்டும் மறு ஆய்வு செய்து, அங்கு புதிய குடியிருப்புகள் கட்டத் தேவையென்றால், அவையும் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் M.S. நகர் திட்டப் பகுதியில் 224 குடியிருப்புகள் 1971-1973 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் 2012-2017 வரையிலும் சுமார் 22.86 இலட்சம் ரூபாய் செலவில் பழுதுபார்க்கும் பணிகளும், 2016-2017 ஆம் ஆண்டில் 6.57 இலட்சம் ரூபாய் செலவில் சுவருக்கு வர்ணம் பூசும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பராமரிப்புப் பணிகளும் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பகுதியையும் நம்முடைய மாண்புமிகு எழும்பூர் சட்டப் பேரவைத் தொகுதியின் உறுப்பினர் அவர்களும், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களும் மேற்பார்வையிட்டிருக்கிறார்கள். இக்கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்ட அறிவுறுத்தப்பட்டது. தொழில்நுட்பக் குழு ஆய்வு மேற்கொண்டு அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், மறு கட்டுமானம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சிக் கோட்டம் எண் 77-ல் அமைந்துள்ள 594 குடியிருப்புகள் பி.கே. காலனி பகுதியில் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் கட்டடத் தொகுதி 3 மற்றும் 4-ல் உள்ள 64 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், அவற்றை இடித்துவிட்டு புதிதாகக் கட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழு



2018 மார்ச் 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பரிந்துரையும் செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட இரண்டு கட்டடத் தொகுதிகளையும் இடித்துவிட்டு, குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 17 கட்டடத் தொகுதிகளுக்கு தொழில்நுட்ப வல்லுநர் குழு ஆய்வு செய்தபின், குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இராதாகிருஷ்ணபுரம்:** பெருநகர சென்னை மாநகராட்சிக் கோட்டம் எண் 104-ல் அமைந்துள்ள இராதாகிருஷ்ணபுரம் திட்டப் பகுதியில் உள்ள 168 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், அவற்றை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்ய தொழில்நுட்ப வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன்படி திட்டப் பகுதியில் மண் தர பரிசோதனை செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் அதற்குரிய மறுகட்டுமானப் பணிகளும் நடைபெறும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில் இருக்கின்ற வீடுகளில் ஏதாவது பழுது ஏற்பட்டிருந்தால், அதனை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உரிய முறையில் அவை சரி செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், நேற்று எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரோடு சேர்ந்து இதுகுறித்து கடிதம் தந்திருக்கின்றார். இன்றைக்குத் தனியாக இரண்டு கடிதங்களைத் தந்திருக்கின்றார். துறைமுகம் பகுதியில் கிளைவ் பேக்ட்ரி, கல்யாணபுரம், எல்லீஸ் நகர் போன்ற பகுதிகளில் அமைந்திருக்கின்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் புதிதாகக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தையும், என்னுடைய கவனத்தையும் ஈர்ப்பதாக அறிவிப்பு கொடுத்திருக்கின்றார். ஏற்கெனவே, அந்தப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. நான் அந்த விவரங்களை இன்னும் சேகரிக்கவில்லை; ஏற்கெனவே குடியிருப்புகள் கட்டப்பட்டு, அங்கு குடியிருந்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அதன் நிலையையும், அந்தக் கட்டடத்தின் உறுதித் தன்மையையும் ஆய்வு செய்து, மறு கட்டுமானம் தேவையென்றால், உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 21

துறைமுகம் பகுதியில் சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். மாற்று இடம் அரசிடமிருந்து பெறப்பெற்று, வாரியத்தின் மூலமாக அந்தப் பகுதி வாழ், சாலையோர இடங்களில் வசிக்கும் மக்களுக்கு அவர்கள் குடியிருக்க ஏற்ற வகையில் வீடுகள் கட்டித் தரப்படும் என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு அவர் பேசுகின்றபொழுது, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 3.50 இலட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டுதான் வீடுகள் ஒதுக்கப்படுவதாக ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ரோடு ஓரங்களிலும், குடிசைப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு அந்த இடம் சொந்தம் இல்லை. அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துதான் வாழ்ந்து வருகிறார்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். அதற்குப் பிறகு பேசுங்கள். அவர்கள் இருக்கின்ற இடத்திலேயே அவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுதான் குடிசை மாற்று வாரியம் நிறுவப்பட்டு, அதன் பணிகளை அது செவ்வனே செய்து வருகிறது.

நண்பகல் 12-00

இப்போது அனைவருக்கும் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றோம். அதில் மைய, மாநில அரசுத் திட்டங்களின்கீழ் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில் மைய அரசின் மானியம் ரூ. 1.50 இலட்சம்; ஒன்றரை இலட்சம் ரூபாய்தான். ஆனால், மாநில அரசின் மானியம் ரூ.7 இலட்சம்; பயனாளிகளின் பங்களிப்பு 2½ இலட்சம் ரூபாய். ஆக, ரூ. 11 இலட்சத்தில் 400 சதுர அடியில் அவர்களுக்குச் சொந்த வீடு கிடைக்கிறது. அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. யாரிடமிருந்தும் ரூபாய் 3 இலட்சமோ அல்லது ரூபாய் 3½ இலட்சமோ வாங்கப்படவில்லை என்பதையும் நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று, அவர்கள் அந்த இடத்தின் உரிமையாளராக இருந்தால், சொந்த இடம் வைத்திருந்தால், ரூ. 2 இலட்சத்து 10 ஆயிரத்தில் முழுமையாகவே அவர்களுக்கு மானியம் தந்து, அவர்கள் தனி வீடுகள் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதெல்லாம் முடிவில்லாமல் நீண்டுகொண்டே போகும். விவாதம் இல்லை. (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, நீங்கள் சத்தமாகப் பேசினாலும் என்னுடைய அனுமதி இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மிகவும் சத்தமாகப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. உட்காருங்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. விருகை V.N. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, அதெல்லாம் பதிவாகாது. நீங்கள் பேசுவது ரெக்கார்டு ஆகாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. விருகை V.N. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் மறந்து, தமிழகத்தின் நலம் ஒன்றையே தன் வாழ்வெல்லாம் நினைத்து, "எனக்காக எதுவும் இல்லை, எல்லாம் என் மக்களுக்கே" எனப் பணியாற்றி, 10 கோடி தமிழர்களின் இதயமெல்லாம் நிறைந்து, மண்ணை விட்டு மறைந்தாலும், எங்கள் கண்களை விட்டு அகலா காவியமே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசியலை தென்னாட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த திராவிடத்து ஒளிவிளக்கே! "தமிழக மக்கள் யாரிடத்திலும் எதற்காகவும் கையேந்திடாத காலத்தை உருவாக்குவேன்" என்று தமது ஆயுட்கால இலட்சியத்தை நமக்கெல்லாம் கட்டளையாக இட்டுவிட்டு, வங்கக் கடலோரம் நீங்கா துயில்கொள்ளும் எங்களின் தங்கத் தாரகையே! சாதாரண தொண்டர்களையும் இந்தச் சட்டமன்றத்தில் அமர வைத்து அழகு பார்த்த அன்னபூரணி இதய தெய்வம் அம்மாவை வணங்குகிறேன். பொன்மனச் செம்மல், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்

[திரு. விருகை V.N. ரவி] [2018 மார்ச் 21

நூற்றாண்டு விழா நடத்தி, தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்த்து, அம்மாவின் நல்லாட்சி நடத்திவரும் தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பணிவின் உறைவிடமாய் இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நீதி தவறாத நடுநிலையோடு நடந்துவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 35 முதல் 62 வரையிலான 28 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். மேற்படி அறிக்கைகளை அச்சிட போதிய அவகாசம் இன்மையால், அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை, பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. சி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை சிறப்பாக நடத்திவரும் உழவராய் பிறந்து முதல்வராய் உயர்ந்த குடிமராமத்து மன்னன், எங்களது அண்ணன், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது முதல் பத்தாவது வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி.



2018 மார்ச் 21]

## (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-05

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரந்தாமன் படியளந்த பாக்கியமாய், பன்மொழி வித்தகமாய், பல்கலைப் புத்தகமாய் பாரினில் அவதரித்து; திரையுலகில் கொடிகட்டிப் பறந்து; அரசியலில் புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாய் உருவெடுத்து; புரட்சித் தலைவரின் மறைவிற்குப் பிறகு இரண்டுபட்ட இயக்கத்தை ஒன்றாக்கி, தளர்ந்துவிட்ட மனங்களையெல்லாம் தட்டி எழுப்பி; முடங்கிய இலையை மீட்டெடுத்து; ஒன்றுபட்ட இயக்கத்தை நான்கு முறை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியதோடு, தேசிய அளவில் மூன்றாவது பேரியக்கமாக உருவெடுக்கச் செய்து; ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளி விளக்காய், அடித்தட்டு மக்களின் ஆனந்தக் காற்றாய், நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கியதோடு, குடிசையில் அகல் விளக்காக இருந்த என்னை இமயத்தில் ஏற்றி வைத்த தீபமாக மாற்றிய மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதையில் பயணிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*[2018 மார்ச் 21*

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதம்— தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். தொடர்ச்சி



*2018 மார்ச் 21]*

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய வழியில் திராவிடக் கொள்கைகளை காக்கப் போராடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவரும், (குறுக்கீடு) சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, பொது விவாதமாக இருந்தாலும், கேள்வி நேரமாக இருந்தாலும், கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும், இந்த அவையில் பேசுகிறபோது, 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,' என அழைத்து, தொடக்கத்திலேயே, தங்களுடைய தொகுதிப் பிரச்சினைகளை அல்லது என்ன சொல்லவிருக்கிறீர்களோ அந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேவையில்லாமல், இங்கு எங்களுக்கெல்லாம் ஏதோ மரியாதை கொடுக்க வேண்டும்; எங்களுக்கு ஏதோ பெருமை சேர்க்க வேண்டும் என்ற நிலையிலே நீங்கள் நேரத்தை வீணடிக்க வேண்டாம். இதுபோன்று பேசுவதால் நேரம் வீணாகிறது. அதுமட்டுமல்ல; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அடிக்கடி மணியடித்து, "உரையை நிறுத்துங்கள்; போதும்; நேரமாகி விட்டது" என்று சொல்லக்கூடிய சூழ்நிலை அவருக்கு ஏற்படாது. அவ்வாறான சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டாம் என்று உரிமையோடு திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்து வைத்துக் காத்தலும், காத்த பொருட்களைத் திட்டமிட்டு வகுத்துச் செலவு செய்தலும்தான் ஒரு நல்ல அரசுக்கு வலிமையைச் சேர்க்கும். தமிழக முதல்வர் அவர்கள், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதாக ஒவ்வொரு நாளும் கூறுகிறார். ஆனால், மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை, தமிழகத்தை திவாலாக்கும் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக உள்ளது.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவிகிதம் என்று சொல்லப்பட்டது. ஆனால், அந்த வளர்ச்சியைத் தமிழகம் எட்டியிருந்தால், அதற்கான பலன்கள் தெரிந்திருக்கும். எந்தத் துறையிலும் அதற்கான பலன்கள் எதிரொலிக்கவில்லை. தொடர்ந்து 6-வது முறையாக பற்றாக்குறை பட்ஜெட்டையே இந்த அரசு தாக்கல் செய்துள்ளது. 2018-2019 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை 17,490 கோடி ரூபாய். பற்றாக்குறை பட்ஜெட்டை தாக்கல் செய்வது என்பது பெரிய குற்றம் ஒன்றும் இல்லை. ஆனால், அந்தப் பற்றாக்குறையைச் சரி செய்ய எந்தவிதமான திட்டமிடுதலும் மேற்கொள்ளப்படாமல், மேலும் மேலும் கடன் சுமையை அதிகரிக்கும் வகையில் கடன் பெறுவதும் இந்த அரசு மக்கள் நலனில் அக்கறை கொள்ளாமல் செயல்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*பிற்பகல் 12-10*

2014-2015 ஆம் ஆண்டில் ரூ.6 ஆயிரத்து 407 கோடியாக இருந்த பற்றாக்குறை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.9 ஆயிரத்து 482 கோடியாக உயர்ந்து, 2016 இடைக்கால பட்ஜெட்டில் ரூ.9 ஆயிரத்து 154 கோடியாகவும், அதன்பிறகு அது ரூ.15 ஆயிரத்து 850 கோடியாகவும் வளர்ந்து, 2017 ஆம் ஆண்டில் ரூ.15 ஆயிரத்து 930 கோடியாக பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டில் பற்றாக்குறை ரூ.17 ஆயிரத்து 490 கோடியாக கரைக்க





முடியாத மலையாக உயர்ந்துள்ளதுதான் இந்த அரசின் சாதனை. 2006-ல் ரூ.57 ஆயிரத்து 457 கோடியாக இருந்த அரசுக் கடன், தற்போது ரூ. 3.5 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது உண்மையிலே வேதனை அளிக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் தலையில் தலா ரூ.45 ஆயிரம் கடன் சுமை ஏற்றப்பட்டுள்ளது. இந்த அரசு இதைப்பற்றி சற்றும் கவலைக்கொள்ளாமல் இருக்கிறது. ரூ.1 இலட்சத்து 76 ஆயிரத்து 250 கோடி மதிப்பீட்டில் 2018-2019 ஆம் ஆண்டிற்கான தமிழக வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரூ.1 இலட்சத்து 93 ஆயிரத்து 742 செலவினம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஒரு பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தை அவைமுன் வைத்துள்ளார்.

பொதுவாக வரவு-செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தின்போது எதிர்க்கட்சிகள் பாராட்டிப் பேசமாட்டார்கள்; குறைசொல்லிதான் பேசுவார்கள் என்ற எண்ணமும் எழும். ஆனால், "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற, பிறர் மாண்பினையும், சிறப்புகளையும் மதிக்கவும், பாராட்டவும் கற்றுத் தந்த, பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் செயல்படும் திராவிட முன்னேற்றக் கழகம், பாராட்டவேண்டிய அம்சங்களைப் பாராட்டவும், குறைகளைச் சுட்டிக்காட்டவும் ஒருபோதும் தயங்காது. அரசின் குற்றங்குறைகளைத் தேடிக் கண்டுபிடித்து, புழுதிவாரித் தூற்றுவது என் நோக்கம் அல்ல. ஆனால், அரசு மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை ஆற்றாமல் தவறிடும்போதும், அப்பணிகளைச் செவ்வனே செய்யாதபோதும், அதனைச் சுட்டிக்காட்டி அரசை இயங்கச் செய்வது, குறைகளைக் களைந்திட தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாகும். 96 பக்கங்களைக் கொண்ட தமிழக நிதிநிலை அறிக்கையில் பாராட்டும்படியான அம்சங்களை பூதக்கண்ணாடி வைத்துதான் தேடவேண்டியுள்ளது.

வரவு-செலவு கணக்கிற்கும், வரவு-செலவுத் திட்டத்திற்கும் வேறுபாடு உண்டு. வரவு-செலவு கணக்கு என்பது ஒரு கணக்கரால் எழுதப்படுவது. ஒரு நாட்டின் வரவு-செலவுத் திட்டம் என்பது ஒரு தலைவரால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை ஒரு வரவு-செலவு கணக்கே தவிர, வரவு-செலவுத் திட்டம் அல்ல என்பதனை இதைப் படித்துப் பார்த்த அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

[திரு. கு. பிச்சாண்டி] [2018 மார்ச் 21

படித்த இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம், விவசாயிகள் பிரச்சினை, தொழில் வளர்ச்சியின்மை, காவேரி பிரச்சினை, நீட் தேர்வு பிரச்சினை, நியூட்ரினோ பிரச்சினை, ஹைட்ரோ கார்பன் பிரச்சினை, ஸ்டெர்லைட் பிரச்சினை, மீத்தேன் பிரச்சினை, பெட்ரோ கெமிக்கல் பிரச்சினை, ஒகி புயலால் பாதிக்கப்பட்ட குமரி மாவட்ட மீனவர்கள் பிரச்சினை, போக்குவரத்துத் தொழிலாளர்கள் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் தமிழகத்தில் தலைவிரித்தாடுவதை நாடும், ஏடும் நன்கு அறியும். ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் எந்தவிதமான திட்டமிடுதலும் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும் முன் மேற்கொள்ளப்படவில்லை.

வருவாயைப் பெருக்குவதற்கு என்ன வழி? செலவினத்தை எப்படிக் குறைக்கலாம்? என்னென்ன வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளலாம்? இந்த இடர்பாடுகளிலிருந்து மீள்வது எப்படி? எதிர்பாராத இடர்பாடுகளை எதிர்கொள்வது எப்படி என்று திட்டமிட்டு, மக்கள் நலன் பேணுவதுதான் ஓர் அரசின் கடமை. இந்த அரசு அந்தக் கடமையிலிருந்து தவறி இருக்கிறது. கடந்த காலங்களில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்குமுன் மக்கள் மத்தியில், குறிப்பாக, வணிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும். சில பொருட்கள் வேகமாக விற்கப்படும். பட்ஜெட்டில் சில பொருட்களின் விலை ஏறும் என்ற எதிர்பார்ப்பில் பல வணிக நடவடிக்கைகள் நடந்தேறும். வரி இல்லாத பட்ஜெட் என்றால், மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். இந்த பட்ஜெட்டும் வரி இல்லாத பட்ஜெட்தான். ஆனால், மக்கள் நலனை மையமாகக் கொண்டு எந்தவிதமான புதுத் திட்டங்களும் இடம்பெறாதது மட்டுமின்றி, தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் மேலும் கடன்காரனாக்கும் நிலையில் உள்ளதால், இதனை 'வரி இல்லாத பட்ஜெட்' என்று கூறுவதைவிட, 'கடன்கார பட்ஜெட்' என்றுதான் கூறவேண்டும். கடனும் பற்றாக்குறையும் தொடர்ந்து ஏறிக்கொண்டே இருக்கிறது. பற்றாக்குறை பட்ஜெட் தாக்கல் செய்வது அண்ணா தி.மு.க. அரசுக்குப் புதிதல்ல.

இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்முன் உரிய திட்டமிடுதல் நடைபெறவில்லை. அதனால், புதிய திட்டங்கள் ஏதும் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை. வருவாய் பெறுவதற்கான வழிமுறைகள் ஏதும் கண்டறியப்படவில்லை. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த திட்டங்களைத்தான்



2018 மார்ச் 21] [திரு. கு. பிச்சாண்டி]

புதிதாகச் செயல்படுத்துவதுபோன்று காட்டப்பட்டுள்ளது. இந்தப் பழைய திட்டங்களும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியும் உலக வங்கி, நபார்டு வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து வட்டிக்குப் பெற்ற தொகையிலிருந்துதான் நடைபெற்று வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வட்டி செலுத்துவதற்கான செலவினம் மட்டுமே ரூ.29,424 கோடி ஆகும். இது மொத்த வருவாயில் கிட்டத்தட்ட 17 சதவிகிதம் ஆகும். இந்த நிதியாண்டின் பற்றாக்குறை 17,490 கோடி ரூபாய் ஆகும். இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் எந்தவிதமான திட்டங்களும் இல்லாத நிலையில், தமிழகம் ஓர் ஓட்டை கப்பல் போன்று கடன் சுமையில் மூழ்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-15

'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' என்று அன்றைக்குச் சொன்னார் பேரறிஞர் அண்ணா. இந்த நிலை இன்றைக்கு நிலவுகிறது. தென் மாநில முதல்வர்கள் எல்லோரும் இதனைப் பேசத் தொடங்கியுள்ளனர். தென் மாநிலங்களிலிருந்து பெறும் வரி வருவாய்ப் பங்கினை வட மாநிலங்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவது இன்றைக்கு மத்திய அரசின் வாடிக்கையாகி விட்டது. இந்த நிதிநிலை அறிக்கையிலும் இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நிலையினை மாற்றி, தமிழகத்திற்குரிய பங்கினை மத்திய அரசிடம் கேட்டுப் பெறுவதற்கு இந்த அரசு உரிமைக் குரல்கள் எழுப்ப ஏன் தயக்கம் காட்டி வருகிறது என்பது மக்களுக்குப் புரியாத புதிர். மத்திய வரிகளில் 2018-2019 ஆம் ஆண்டிற்கான தமிழகத்தின் பங்கான 31,707 கோடி ரூபாயினை மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெற்றாலே தமிழகத்தின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முடியும். ஆனால், நிலைமை தலைகீழாக உள்ளது. ஏற்கெனவே வழங்க வேண்டிய கடந்த ஆண்டிற்கான மானியத் தொகையைக்கூட இந்த அரசு கேட்டுப் பெறவில்லை.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், முந்தைய ஆண்டிற்கான மானியத்தில் நிலுவைத் தொகை ரூ.1,312 கோடி மற்றும் 934 கோடி ரூபாயை மத்திய அரசு இன்னும் விடுவிக்கவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு

[திரு. கு. பிச்சாண்டி] [2018 மார்ச் 21

முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் பாரதப் பிரதமர் அவர்களிடம் கொண்டிருக்கும் நட்பு நாடறிந்ததே; அந்த நட்பினைத் தமிழர்களின் நலன் காக்கும் வகையில், மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய மானிய நிலுவைத் தொகை, 2018-2019 ஆம் ஆண்டிற்கான 20,627 கோடி ரூபாயையும் மற்றும் மத்திய வரிகளில் நமது மாநிலத்திற்கான பங்கு 31,707 கோடி ரூபாயையும் முறையாக விடுவிக்க, நடவடிக்கை எடுத்து அதைப் பயன்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அம்மா இரு சக்கர வாகன திட்டத்தின்கீழ் பயனாளிக்கு ரூ.25,000/- வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் பயனாளிகள் என அறிவித்துவிட்டு, 5,306 பயனாளிகளுக்கு மட்டும் மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைப் பிரதமர் துவக்கி வைத்தார். 2018-2019 ஆம் ஆண்டிற்கு எஞ்சியுள்ள பயனாளிகளுடன் மேலும் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒதுக்கப்பட்ட தொகையோ ரூ.250 கோடி மட்டுமே. இந்த ரூ.250 கோடியில் ஒரு இலட்சம் பேருக்கு மட்டுமே மானியம் வழங்க முடியும். 2017-2018 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள 94,694 பயனாளிகளுக்கு உரிய நிதி ஒதுக்காமல் விளம்பரத்திற்காக எண்ணிக்கையை மட்டும் அதிகரித்துக் காட்டி, மக்களை ஏமாற்ற முயல்கிறது இந்த அரசு.

மத்திய அரசின் புதிய G.S.T. வரி விதிப்பால் பெரும் பணக்காரர்கள் மட்டுமே பயனடைந்துள்ளார்கள். இந்தியாவில் மட்டும்தான் இந்த G.S.T. வரி 5 விழுக்காடு, 12 விழுக்காடு, 18 விழுக்காடு மற்றும் 28 விழுக்காடு என நான்கு வகையாக உள்ளது. இதனால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். G.S.T. வரியினால் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பாதிக்கும். மாநில வரி வருவாயைப் பெருக்குவதற்கு அரசு புதிய திட்டங்களைக் கண்டறிய வேண்டும். உலகளவில் 49 நாடுகளில் G.S.T. வரி விதிப்பில் ஒரே வரி விகிதம் உள்ளது. இந்த G.S.T. வரி விதிப்பு முறை சிக்கலான வரி விதிப்பு முறை என்று உலக வங்கியே தெரிவித்திருக்கிறது. இந்தியாவில்தான் G.S.T. வரி சிக்கலான வரி என்று உலக வங்கியே தெரியப்படுத்தியிருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2018 மார்ச் 21] [திரு. கு. பிச்சாண்டி]

மலருக்குத் தொந்தரவு தராமல் வண்டுகள் மலரிலிருந்து தேனை மட்டுமே உறிஞ்சிக் குடிப்பதுபோல, மக்களுக்குத் துன்பமின்றி வரிகள் வசூலிக்கப்பட வேண்டுமென்பது நல்ல அரசின் இலக்கணம். ஆனால், தற்போது G.S.T. வரி விதிப்பு முறையினால் சாமானிய மக்கள் ஓட்டலில் சாப்பிடக் கூட வரி அதிகம் கட்ட வேண்டி உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, G.S.T. வரியைப் பொறுத்தவரை, சில திருத்தங்களுடன் மத்திய அரசு ஏற்றுக்கொண்டால் மட்டுமே நம்முடைய ஆதரவு என்கின்ற நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் முன்மொழிந்த அந்தத் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக G.S.T. நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டது. எனவே, நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்ட நிலையில், பொதுவாகவே இந்த compensation--V.A.T. வரி விதிப்பு முறையினை முதலில் மாநிலத்திலே அமல்படுத்தும்போது, அப்போது மத்தியில் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது. அப்போது நாம் கடுமையாக எதிர்த்தோம். எதிர்த்த பிறகும்கூட அன்றைக்கு இருந்த அரசாங்கம் V.A.T. வரி விதிப்பு முறையினை அமல்படுத்தியபோது, அதனால் ஏறக்குறைய 5 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் நமக்கு இழப்பு ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசாங்கம் அதைக் கொடுக்கவில்லை. அதை மனதிற்கொண்டுதான் G.S.T.-யை அமல்படுத்தினால், அதனால் ஏற்படுகின்ற நஷ்டம் ஒவ்வோராண்டுக்கும் 14% அளவில் 5 ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்த வேண்டும்; அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்தியாவிற்கே முன்னோடியாகக் குரல் கொடுத்த மாபெரும் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகுதான் இன்றைக்கு எல்லா மாநிலங்களிலும் G.S.T.-யை அமல்படுத்துவதால் ஏற்படுகிற நஷ்டங்களை ஈடு செய்கின்ற வகையில் G.S.T. மூலமாக இன்றைக்கு வரி வருவாய் கொடுக்கப்படுகின்றது.

[திரு. டி. ஜெயக்குமார்] [2018 மார்ச் 21

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டன. 28%, 18%, 12%, 5% என்ற அளவில் G.S.T. இருந்தது. 5% என்றிருந்த G.S.T.-ஐ சில பொருட்களுக்கு 0% ஆக்கினோம். 12% G.S.T. என்றிருந்ததை 5% ஆக்கினோம். 18% என்றிருந்த G.S.T.-ஐ 12% ஆக்கினோம். 28% G.S.T. என்றிருந்ததை 18% ஆக்கினோம். இந்தமாதிரி பல்வேறு வகைகளில் பாதிப்புகள் ஏற்பட்டபோதெல்லாம், ஒட்டுமொத்தமாக அதை consolidate செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, கிட்டத்தட்ட 394 பொருட்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கிட்டத்தட்ட 46 பொருட்களுக்கு வரிக் குறைப்பு செய்வதற்கு வேண்டிய அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, வரி வசூலைப் பொறுத்தவரை, V.A.T. வரி அமலில் இருந்தபோது, 2016-2017 ஆம் ஆண்டில் 43,438 கோடி ரூபாய்தான் வருமானமே. ஆனால், 2017-2018 ஆம் ஆண்டில் G.S.T. அமல்படுத்தியதால் 50,148 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் வந்துள்ளது. எனவே, G.S.T. அமல்படுத்தியதால் மாநிலத்தினுடைய வரி வருவாய் எதுவும் பாதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் G.S.T. பற்றி விளக்கம் சொன்னார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், "திராவிட ஆட்சியிலே பல வளர்ச்சிகளை நாம் பெற்றிருக்கிறோம்" என்று நிதி ஆயோக் கூட்டத்திலே தெரிவித்ததாக இங்கே சொன்னார்கள். 2006-2011, 2011-2016 இப்படிப் பல்வேறு ஆண்டுகளைக் கணக்கிட்டு அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள், நாங்கள் G.S.T. வரியை எதிர்த்தோம்; சிலவற்றைக் குறைக்கச் சொன்னோம், அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, வரி வருவாய்மூலம் பலன்களைத் தருவதாக விளக்கம் சொன்னார்கள். தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறது; அதற்குக் காரணம், நாமே வரி போட்டு, நாமே வசூலித்து, நாமே திட்டங்களைத் தந்ததன் காரணமாகத்தான் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக மாறியிருக்கிறது. ஆனால், தற்போது G.S.T.-யின்மூலம் வரும் வரி வருவாயை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.



2018 மார்ச் 21] [திரு. கு. பிச்சாண்டி]

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் எத்தனையோ வரிச் சலுகைகளை ஏழையெளிய மக்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு அப்படியல்ல; ஒரு ஹோட்டலில் சென்று சாப்பிட்டால்கூட G.S.T. என்று 600 ரூபாய், 700 ரூபாய் செலுத்த வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, இந்த வரி விகிதத்தை இன்னும் நீங்கள் குறைக்க வேண்டும். 'உலகத்தில் எந்த நாட்டிலுமே இப்படிப்பட்ட சிக்கலான வரி விதிப்பு முறை இல்லை; இந்தியாவில்தான் உள்ளது' என்று உலக வங்கியே சொல்லியிருக்கிறது. இத்தகைய வரி விதிப்பு குறித்து உலக வங்கியே சொல்லியிருப்பதால், அந்த வரி திட்டத்தில் நாம் எந்த அளவிற்குச் சலுகை பெற முடியுமோ, அந்த அளவிற்குச் சலுகையைப் பெற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹோட்டல் உரிமையாளர்கள் பலமுறை அரசை அணுகி, G.S.T.-ஐ 18%-லிருந்து 12% ஆகக் குறைக்க வேண்டும்; AC, Non-AC என்று வித்தியாசம் காட்டக் கூடாது; அனைத்தும் even-ஆக இருக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களின் கருத்துகள் கேட்கப்பட்டு, அதனடிப்படையில்தான் G.S.T. Council-ல் அது வலியுறுத்தப்பட்டு, 12% ஆகக் குறைக்கப்பட்டது. அதற்காக அரசுக்கு நன்றி சொல்கின்ற அளவிற்கு அவர்களிடம் திருப்தி ஏற்பட்டிருக்கின்றது என்ற நிலையைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் எங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்கவில்லை என்று நம்முடைய நிதித் துறைச் செயலாளர் அவர்களே சொல்லியிருக்கிறார். நமது மாநிலம் வளர்ந்து வருகிற மாநிலம்; நமக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டுமே தவிர, இருப்பதைக் குறைக்கக் கூடாது. கர்நாடக முதல்வர்

[திரு. கு. பிச்சாண்டி] [2018 மார்ச் 21

திரு. சித்தராமையா, ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு ஆகியோர், இங்கே வாங்கும் வரி வருவாயைக் கொண்டுபோய், வட இந்தியாவில், உத்தரப்பிரதேசத்திலே வசூலிக்கப்படும் வரியைவிட அதிகமான நிதியைக் கொடுக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இங்கு நமக்குத் தரவில்லை என்று நமது நிதித் துறைச் செயலாளரே பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளில் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழப்பிக்கொள்ள வேண்டாம். நிதிப் பங்கீடு என்பது வேறு, G.S.T. என்பது வேறு. அது devolution-ல் எப்படிக் குறைந்தது என்பது குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பதிலிலே தெரிவிப்பார்கள். இதற்கும். அதற்கும் சம்பந்தம் போட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மூன்று நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதித் துறைச் செயலாளர் அவர்கள் அன்றைக்கே பத்திரிகையாளர்களைச் சந்தித்துச் சொன்னார். அதை நீங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் பார்த்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இதையே பேசிக்கொண்டிருந்தால், அடுத்த விஷயங்களைப் பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போகும்.

**திரு. கு. பிச்சாண்டி:** அதேபோன்று, இப்போது பார்த்தீர்களென்றால் விவசாயிகளுக்கான பிரச்சினை. (குறுக்கீடு) நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மகளிருக்கான ஸ்கூட்டி வழங்குகின்ற திட்டத்திலே இருக்கின்ற சில பிரச்சினைகளை இங்கே குறிப்பிட்டுப் பேசினார். 2017-2018 ஆம் ஆண்டில் 1 இலட்சம் பயனாளிகளில் 5,306 மகளிருக்கு மானியத் தொகை வழங்கப்பட்டிருக்கின்றது. 2018-2019 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள பயனாளிகளுடன் கூடுதலாக ஒரு இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பயனடைவார்கள் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக 250 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் மகளிருக்கான ஸ்கூட்டி வழங்கும் திட்டத்திற்காக ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனம் வழங்குவதற்கு 20 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மிகாமல், 50 சதவிகிதம் மானியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 2017-2018-ல் இத்திட்டத்திற்காக 200 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கின்ற காரணத்தினால், அது 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது; 50 சதவிகித மானியம். சென்ற வருடத்தில் 5,306 ஸ்கூட்டி போக பாக்கி இருப்பது spill over ஆகி, இந்த வருடம் வரும். இந்த வருடம் முழுமையாக, சென்ற வருடத்தினுடைய பாக்கி; இந்த வருடம் ஒரு இலட்சம் கூடுதலாக வழங்கப்படும். இதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இன்றைக்கு விவசாயிகளுடைய பிரச்சினை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள், உறுப்பினரை 3 நிமிடங்களில் பேசி முடிக்கச் சொல்கிறீர்கள்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** நீங்கள், அவரை 3 நிமிடங்களில் பேசி முடியுங்கள் என்று சொல்கிறீர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிரச்சினை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, பேசுகிறார். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கட்சி உறுப்பினர் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் நேற்று ஒரு மணி நேரம் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுங்கட்சியினுடைய உறுப்பினர் சரியாக ஒரு மணி நேரம் பேசினார். நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம்; பேசாமல் இருந்தோம். இதில் இரண்டு விஷயங்களை நாங்கள் கேட்டோம். உங்கள் பக்கம் மூன்று உறுப்பினர்கள் பேசினால், எங்கள் பக்கம் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று கேட்டோம். அதற்கு நீங்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள். சரி, வேண்டாம். எங்களுக்கு இவ்வளவு நேரம் என்று கொடுத்துவிடுங்கள்; நாங்கள் அவ்வளவு நேரத்திற்குள் பேசிவிடுகிறோம் என்று சொன்னோம், அதற்கும் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள். ஆனால், ஏதோ பெயரளவிற்கு நாங்கள் எழுந்து பேசுவதற்கு நிற்கிறோம்; உடனே குறுக்கிட்டு அவர்கள் பேசுகிறார்கள். நான் இப்பொழுதே எங்களுடைய தலைவருடைய அனுமதியோடு சொல்கிறேன்; நாங்கள் யாரும் பேசவில்லை. நாளைக்கு எங்களுடைய



2018 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசமாட்டார். நீங்களே பட்ஜெட் மீதான விவாதத்தை முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். நீங்கள் கொஞ்ச நேரம் உட்காருங்கள். கோபப்படாதீர்கள், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, வேண்டாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேறு வேலைக்கு அவசரமாகக் கிளம்புகிறார்; உட்காருங்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ கோபத்தில் வந்திருக்கின்றார். அன்றையதினம் பேசுகின்றபோதுகூட நீங்கள் 2006-2011 ஆம் ஆண்டை ஒப்பிட்டுப் பேசினீர்கள். அன்றைக்குக் குறுக்கிட வேண்டாம் என்றுதான் இருந்தேன். "அமைச்சர்களைத் தவிர்த்து, நீங்கள் 87 பேர்கள்தான் இருக்கின்றீர்கள்; அதைவிட நாங்கள் அதிகமாக இருக்கின்றோம்; எங்களுக்கு வாய்ப்பு வேண்டும்" என்று கேட்டீர்கள். அதேபோன்று, 2006 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 30 அமைச்சர்களைக் கழித்துப் பார்த்திருந்தால், அப்போது நாங்கள்தான் அதிக அளவில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தோம். ஆனால், அன்றைக்கு எங்கள் பக்கம் இரண்டு உறுப்பினர்கள்தான் பேசினோம்; உங்கள் கட்சியின் சார்பில் மூன்று உறுப்பினர்கள் பேசினீர்கள். இதற்கு நாம் ஒப்புக்கொண்டுதான் இந்தச் சபையை நடத்த வேண்டுமேயொழிய, இதில் வாதம் செய்து கொண்டிருக்கக் கூடாது. அப்படிச் செய்தால் வாதம் நீண்டுகொண்டே இருக்குமேயொழிய, இந்தச் சபையை நடத்துவதற்கு இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அந்த சப்ஜெக்ட் முடிந்தது; நீங்கள் உட்காருங்கள்.

இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். உறுப்பினர், நீங்கள் பேசி முடியுங்கள். நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) எதற்காக இப்போது பிரச்சினை செய்கிறீர்கள்? (குறுக்கீடு) அவரைப் பேசச் சொல்லிவிட்டேன். அவர் பேசுகிறார். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, 19 நிமிடங்கள் பேசிவிட்டார். (குறுக்கீடு) குறுக்கீடே இல்லை. (குறுக்கீடு) சரி, பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களோ, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களோ, 'ஒரு நிமிடம் பேசுங்கள்; இரண்டு நிமிடங்கள் பேசுங்கள்; மூன்று நிமிடங்கள் பேசுங்கள்' என்று சொல்வது வாடிக்கை. அதைவிடக் கூடுதல் நேரம்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பேசுகிறீர்கள்; ஆளுங்கட்சியினரும் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உறுப்பினரைத் தொடர்ந்து பேசச் சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த விவாதத்திலேயே 3 நிமிடங்கள் கடந்துவிட்டன; பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடனிலே பிறந்து, கடனிலே மூழ்கி, கடனிலே இறக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. தமிழக விவசாயிகள் டில்லியில் சென்று போராடினார்கள். தமிழ்நாட்டிலே விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ரூ.8,916.25 கோடிதான் வேளாண்மைத் துறைக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடன் தள்ளுபடியே கொடுக்கவில்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் விவசாயிகள் பேரணியாகச் சென்று கேட்டார்கள்; அவர்களின் கடன்களைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். தமிழ்நாட்டிலும் அதேபோன்று விவசாயிகள் பேரணியாக வந்து கேட்டால்தான் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வீர்களா? இதுகுறித்து





இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கான எந்தத் திட்டமும் இந்த பட்ஜெட்டில் சொல்லப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்கிறார்கள். ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் ஓடுவார்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் திரு. கருப்பசாமி என்பவர் 1 ஏக்கருக்கு ரூ.102/- இன்சூரன்ஸ் தொகையாகச் செலுத்தியிருக்கிறார். ஆனால், அவர் insurance claim செய்தபோது அவருக்கு 10 ரூபாய்க்கான காசோலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, திரு. திருமலைசாமி என்பவருக்கு 49 சென்ட் நிலத்திற்கான இன்சூரன்ஸ் தொகையாக ரூ.3,400/-ஐ காப்பீட்டு நிறுவனம் கொடுக்க வேண்டும். அவர் காப்பீட்டு நிறுவனத்தில் கட்டிய தொகை 50 ரூபாய். ஆனால், அவருக்கு 5 ரூபாய்க்கு காசோலை கொடுக்கப்பட்டுள்ளது.

(உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் தன் கையில் வைத்திருந்த காசோலைகளைக் காண்பித்தார்.)

அதேபோல், திரு. குமரவேல் என்பவருக்கு 1.11 சென்ட் நிலத்திற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.7,000/-. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும். மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் புதிய வழிமுறைகளையெல்லாம் உருவாக்க வேண்டாம். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் தமிழ்நாட்டில் வேளாண்மை பாதிப்புக்குள்ளாகிவரும் நிலையில், பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டு விவசாயிகளிடையே பரவலாக்கப்பட்டு, அதனை சிறப்பாகச் செயல்படுத்திட தமிழ்நாடு அரசு சீரிய முயற்சிகளை எடுத்துவருகிறது. அம்முயற்சியின் தொடர்ச்சியாக, 'பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டம் 2014 ஆம்

[திரு. இரா. துரைக்கண்ணு] [2018 மார்ச் 21

ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது. தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக, 2016-2017 ஆம் ஆண்டில் 15 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் சாகுபடி செய்த 31 இலட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயிர்க் காப்பீடு செய்யப்பட்டன. அகில இந்திய அளவில் அதிக விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்துள்ள மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது என்பதை இதன்மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தீவிர நடவடிக்கையால் 2016-2017 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 10,16,515 விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையாக, ரூ.3,113 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இதுவரை எந்த மாநில அரசும் என்றைக்குமே இதுபோன்று கொடுத்ததில்லை. ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ளுங்கள். தமிழக முதல்வர் அவர்களின் நடவடிக்கையாலும், தீவிர முயற்சியாலும், அவர் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவும், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இன்னும் பயிர்க் காப்பீட்டுத் தொகையே வாங்காத நிலையில், ரூ.3,113 கோடியை பயிர்க் காப்பீட்டுத் தொகையாகப் பெற்று, விவசாயிகளுக்கு வழங்கியதன்மூலம் இன்றைக்கு விவசாயிகள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமான திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 30,513 விவசாயிகளுக்கு ரூ.27.66 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ரூ.27.66 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள், காப்பீட்டு நிறுவனத்திற்கு விவசாயிகள் கட்டிய பணம்; காப்பீட்டு நிறுவனத்தால் ஒரு ஏக்கருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இழப்பீட்டுத் தொகை; அதேபோல, விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை என்ற அளவிலே அந்தப்



2018 மார்ச் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

பிரச்சினையை எழுப்பியுள்ளார். திரு. குப்புசாமி என்பவருக்கு 10 ரூபாய்க்கு காசோலை கொடுக்கப்பட்டிருக்கிறது; திரு. கனகராஜ் என்பவருக்கு 7 ரூபாய்க்கு காசோலை கொடுக்கப்பட்டிருக்கிறது; திரு. குமரவேல் என்பவருக்கு 10 ரூபாய்க்கு காசோலையும், திரு. திருமலைசாமி என்பவருக்கு 5 ரூபாய்க்கு காசோலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அதற்குத்தான் விளக்கம் கேட்கிறார். இதற்கு இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் சொல்கிறார்? இந்தப் பொருளை விட்டுவிட்டு, அமைச்சர் அவர்கள் வேறு எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துல்லியமாகக் கணக்கிட்டு, எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறதோ, அந்த இழப்பிற்கான நஷ்டஈடு பற்றிக் குறிப்பிடுகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-35

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்களும் எழுப்பியிருக்கும் கேள்விக்கு மட்டும் பதிலை நான் சொல்கிறேன்.

வேளாண் பயிர் காப்பீடு செய்யும் நிறுவனங்கள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டு, இந்த ராபி பருவத்தில் தமிழ்நாட்டில் 10.15 இலட்சம் விவசாயிகளுக்கு 3,113 கோடி ரூபாய் பெற்றுக் கொடுத்த ஒரே மாநிலம் தமிழகம் மட்டும்தான். (குறுக்கீடுகள்) அடுத்து சொல்கிறேன்; பதிலுக்கு வருகிறேன். பதிலுக்கு வரவிடமாட்டேன் என்கிறீர்களே!

திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை, 197 சங்கங்கள் இருக்கின்றன. அதில் 13-3-2018 வரை 3,586 விவசாயிகளுக்கு ரூ.3.29 கோடி அனுமதிக்கப்பட்டு, 3,172 விவசாயிகளுக்கு ரூ.2.82 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொன்னது; போடுவார்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம். இந்தக் கடன் சங்கத்தில் 5 உறுப்பினர்களுக்கு ராபி

[திரு. செல்லூர் கா. ராஜு] [2018 மார்ச் 21

பருவத்திற்கான இழப்பீடு தொகை குறைத்து தரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற குறைகள் 5 சங்கங்களில் ஏற்பட்டிருக்கின்றன. இதுமட்டுமல்ல; நாகப்பட்டினத்திலும் இதுபோன்று ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) திண்டுக்கல், நாகப்பட்டினம் மாவட்டங்களில் இதுபோன்ற தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, முழுவதுமாக வரவு வைப்பதும், பெறுவதும்தான் வேலை; அதை வாங்கிக் கொடுப்பது வேளாண்மைத் துறை. இப்பொழுது நாங்கள் வேளாண்மைத் துறைக்கு எடுத்துச் சொல்லி, ஏற்பட்டிருக்கும் இழப்பீடுகளை. . . (குறுக்கீடு) நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** ஏற்பட்டிருக்கும் இந்தத் தவறுகள் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கண்டறியப்பட்டு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உரிய Insurance Corporation, அதாவது தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டு நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, விவசாயிகளின் நலன் காக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிர் அறுவடை பரிசோதனை மூலமாக நான்கு துறைகளும் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, பயிர்க் காப்பீட்டு இன்சூரன்ஸ் நிறுவனம், புள்ளியியல் துறை ஆகியவை சேர்ந்து கணக்கிட்டு, 33%-க்குமேல் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில்தான் இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் காப்பீட்டு நிறுவனங்களால் அளிக்கப்பட்ட நிதியில் ஏதாவது குறைபாடு இருந்தால், அதன் விவரம் அறிந்து, சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு இங்கே கொண்டு வந்து Insurance நிறுவனத்திடமிருந்து இந்தத் தொகை கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார். பொதுவாக இரண்டுவிதமான நிவாரணங்களைக் கொடுக்கிறோம். ஒன்று இழப்பீடு; இன்னொன்று காப்பீடு. காப்பீட்டைப் பொறுத்தவரை. நாங்கள் கொடுத்திருக்கும் Insurance premium-க்குக் குறைவாக இழப்பீடு கிடைத்திருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் கொடுத்த ஆதாரத்தின் அடிப்படையில் நாம் பார்க்கிறபொழுது, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, பொதுவாக இழப்பீடு என்பது 33%-க்கு மேலே என்னென்ன பரப்பு இருக்கிறதோ, அவர்கள் மொத்தமாகத்தான் premium கொடுத்திருப்பார்கள். Total extent-க்குத்தான் அவர்கள் கொடுத்திருப்பார்கள். அதில் பாதிப்படைந்த பரப்பு 33%-க்குமேல் என்ன பரப்பு இருக்கிறதோ, அந்தப் பரப்பை கணக்கீடு எடுத்துக்கொண்டு, insurance-ல் பணம் கொடுத்திருப்பார்கள். ஒருவேளை 10 ரூபாய், 7 ரூபாய் என்பது அந்தக் கணக்கீட்டை பார்த்தீர்கள் என்றால், கூட்டுப் பட்டாவிலே ஒருவருக்கு இந்த extent இருக்கும். சில சமயங்களில் 10 பேருக்கு சேர்ந்துதான் total extent இருக்கும். அந்த மாதிரிகூட இருந்திருக்கலாம் அல்லது அந்தக் கணக்கீட்டின்போதுகூட, சரியாகக் கணக்கு எடுக்காமல் இருந்திருக்கலாம்.

பிற்பகல் 12-40

ஆனால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, உரிய காப்பீட்டுத் தொகையை வழங்குவதற்காக, மாநில அரசினுடைய பங்கீடாக அதிகமாக 510 கோடி ரூபாயை காப்பீட்டிற்கு வழங்கிய அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒன்று அந்தப் பரப்பளவிலே, அவருடைய பெயர், A- Register, சிட்டா அடங்கலிலே நான்கு பேர் owners ஆக இருக்கின்றபோது, அதைப் பிரித்துக் கொடுத்திருக்கலாம் அல்லது அந்தக் கணக்கீட்டிலே ஏதேனும் தவறு இருந்தால் அது சரி செய்யப்படும். நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள். அதை நாங்கள் ஆய்வு செய்து, சரியான நடவடிக்கை எடுப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2018 மார்ச் 21

துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இது முடிந்த சப்ஜெக்ட். (குறுக்கீடு) உறுப்பினர் பேசட்டும். நீங்கள் கேட்டதற்கெல்லாம் முழு விளக்கத்தை 3 அமைச்சர்கள் கொடுத்திருக்கிறார்கள். 3 அமைச்சர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இதை ஏன் நீங்கள் மேற்கொண்டும் வளர்க்கிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** இந்த ஒரு விஷயத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் ஒரு சிறு தவறு நடந்திருக்கிறது. அதை என்னவென்று பார்ப்போம்.

**திரு. துரைமுருகன்:** இது எவ்வளவு பெரிய விஷயமாக இருந்தால், 3 அமைச்சர்கள் விளக்கம் சொல்வார்கள்? எல்லோரும் சொன்னார்கள்; சரி. ஆனால், சுருக்கமாக எப்படிச் சொல்ல வேண்டும்? மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், “நீங்கள் விவரத்தைக் கொடுங்கள், நாங்கள் பார்த்து நடவடிக்கை எடுக்கின்றோம், என்னவென்று விசாரிக்கிறோம்” என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வதை விட்டு விட்டு, மாண்புமிகு திரு. செல்லூர் ராஜு அவர்கள் சொன்னது ஒன்றுமே புரியவில்லை; school மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டேன். ஏற்கெனவே இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், மாவட்ட இணைப் பதிவாளர் மூலமாகவும் குறிப்பிட்ட காப்பீட்டு நிறுவனத்தைத் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள்.



2018 மார்ச் 21]

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அமைச்சர்கள் சொன்னதுபோல, இந்தியாவிலேயே அதிகமாகக் காப்பீடு கொடுத்த மாநிலமும் இதுதான்; அதேபோன்று குறைவாக 5 ரூபாய், 10 ரூபாய் என்று காப்பீட்டுத் தொகை கொடுத்ததும் இந்தியாவிலேயே நீங்கள்தான் என்பதை இந்தக் காசோலைமூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

(உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் தன் கையில் வைத்திருந்த காசோலையைக் காண்பித்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த அளவிற்கு துல்லியமாகக் கணக்கிட்டு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த அளவிற்குத் துல்லியமாக அரசாங்கம் செயல்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. கு. பிச்சாண்டி:** அதேநேரத்தில் premium கட்டி, இந்த 10 ரூபாயைக்கூட வாங்க வேண்டுமென்றால், 500 ரூபாய் செலுத்தி வங்கியில் கணக்கு தொடங்கினால்தான் வாங்க முடியும். இந்தநிலையில் இவ்வளவு குறைவாக 10 ரூபாயைக் கொடுப்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை இந்த நேரத்திலே கேட்டு, இதற்கு இந்தத் துறை சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பேருந்துக் கட்டண உயர்வு. போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம் செய்தார்கள், அவர்களுக்கு சம்பளம் அதிகம் கொடுக்கிறோம்; அதனால் பேருந்துக் கட்டணத்தை உயர்த்திவிட்டோம் என்று சொன்னார்கள். டெல்லியில் gas-ல்தான் பேருந்துகள் ஓடுகின்றன. செலவைக் குறைப்பதற்கு என்ன வழியோ அவற்றை நாம் செய்ய வேண்டும். Gas-ல் வண்டிகளை ஓட்ட வேண்டும். அதேபோல, ஆந்திராவில் மின்சாரத்தில் ஓடும் பேருந்துகளை விட்டிருக்கின்றார்கள். அதுமாதிரியான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். தொழிலாளர்கள் நலனும் முக்கியம். இருப்பினும், தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதால்தான் பேருந்துக் கட்டணத்தை உயர்த்திவிட்டோம் என்று காரணத்தைச் சொல்லாமல், T.V.S. போன்ற நிறுவனங்களினுடைய ஆலோசனைகளைக் கேட்டு, நீங்கள் நிருவாகத்தைச் செம்மையாக நடத்துவதற்கு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** இல்லை; அவர் சொல்வதற்காக நான் சொல்ல வருகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Gas-ல் ஓடினாலும் செலவு ஆகத்தான் செய்யும். (குறுக்கீடு) இல்லை, பெரிய வித்தியாசம் இல்லை. அதை நாங்கள் calculate செய்துவிட்டோம். பெரிய வித்தியாசம் இல்லை. டெல்லியில் Compressed Natural GAS (CNG)-ல் ஓட்டுகிறார்கள். நம்முடைய சென்னையில், CNG-ல் ஓட்டுகின்ற அளவிற்கு இன்னும் வசதிகள் இல்லை. Diesel-க்கும், CNG-க்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை. அதைக் கணக்கீடு செய்து விவரங்களை எடுத்து வைத்திருக்கிறோம்.

அதேபோல, battery bus பற்றிச் சொன்னார்கள். அதற்குண்டான முயற்சிகளை எடுத்திருக்கிறோம். ஆந்திராவில் இப்போதுதான் 50 பேருந்துகளுக்கு உண்டான proposal போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, 200 மின்சாரப் பேருந்துகள் வாங்குவதற்கு மத்திய அரசிடம் மானியம் கேட்டு, file அனுப்பியிருக்கிறோம். நிறைய பேட்டிகளிலும் சொல்லியிருக்கிறோம்; அதற்குண்டான முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

அதேபோல, பேருந்துக் கட்டண உயர்வைப் பற்றி இங்கே அடிக்கடி பேசியிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்ததால் மட்டுமல்ல; diesel விலை உயர்வு என்பது மிகப்பெரிய burden. கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளாகப் போக்குவரத்துத் துறையில் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. அதுவும் ஒரு காரணமாகத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைச் சொன்னால் உலகத்திலேயே இங்குதான் பேருந்துக் கட்டணம் குறைவு என்று சொல்வார்கள். இன்றைக்கும் சொல்கிறேன்; தமிழ்நாட்டில்தான் பேருந்துகளுக்குக் குறைவான கட்டணம் என்பதை இந்த நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.



2018 மார்ச் 21]

பிற்பகல் 12-45

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. Strike நடந்தபோது அந்தத் தொழிலாளர்களையெல்லாம் நீங்கள் suspend செய்திருக்கிறீர்கள். அவர்களுக்கெல்லாம் மீண்டும் வேலை கொடுக்க வேண்டும். அதேபோல் பார்த்தீர்களென்றால், போக்குவரத்துத் துறை என்பது மிக முக்கியமான ஒரு துறை. எனவே, அதனுடைய நிருவாகத்தைச் செம்மைப்படுத்திட வேண்டும். ஒரு பேருந்தினை குறிப்பிட்ட வழித்தடத்தில் இயக்கும்போது, இத்தனை மணிக்கு இவ்வளவு போக்குவரத்து அடர்வு இருக்கும் என்று கணித்து, அடுத்த பேருந்தினை இயக்க வேண்டும். ஒரே நேரத்தில் 10 பேருந்துகள் ஒன்றன்பின் ஒன்றாகப் போகும். அந்தமாதிரி இருந்தால் loss தான் வரும். ஆகவே, பேருந்துகளை இயக்கும்போது timings, பயணிகளின் அடர்வு போன்றவற்றைக் கருத்தில்கொண்டு இயக்கினால், நல்ல இலாபகரமாக ஓட்ட முடியும். கட்டணத்தை ஏற்றியிருக்கிறீர்கள். ஆனால், இலாபகரமாக ஓடாததற்குக் காரணம் நிருவாகம் சரியில்லை. எனவே, தனியார் நிறுவனங்கள் வைத்துள்ளதுபோல், M.B.A., படித்தவர்களை C.E.O. ஆகப் போட்டு, அந்த நிருவாகத்தைச் சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், முதியோர் உதவித் தொகை. இதுகுறித்து அமைச்சரிடம் சென்றமுறை நான் பேசினேன். அப்போது அந்த order-ஐ நான் காண்பித்தேன். அவர்களுக்குப் பணத்தை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார். ஆனால், இப்போது கிராமங்களுக்குச் சென்று மனுக்களை வாங்கும்போது மொத்த ஜனங்களும், “முதியோர் உதவித் தொகை வரவில்லை; வரவில்லை” என்று சொல்கிறார்கள். அந்த 18 order-ஐ நான் எடுத்து வந்திருக்கிறேன்.

(சில தாள்கள் அடங்கிய folder-ஐ உறுப்பினர் காண்பித்தார்.)

இரண்டு வருடங்களாகப் பணம் வரவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற “அம்மா” முகாமின்போது, கொடுத்த மனுவிற்கு order கொடுத்திருக்கிறார்கள். ஆனால், ஒருவருக்கும் பணம் வரவில்லை. ஜனங்கள் எல்லோரும் முதியோர் உதவித் தொகை வரவில்லையென்று மிகவும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் ஓய்வூதியத்தைப் பொறுத்தளவிலே, நாம் ஏற்கெனவே பலமுறை இங்கே விவாதம் செய்திருக்கிறோம். ஏறக்குறைய 9 பிரிவுகளின்கீழே அது வழங்கப்படுகிறது. மானியக் கோரிக்கையிலே உறுப்பினர் பேசுகிறபோதுகூட, கடந்த ஆண்டிலே அதைச் சுட்டிக்காட்டினார்கள். பொதுவாக, order என்பது provisional order என்று முன்னாலே கொடுப்பார்கள். 'அம்மா' திட்டத்தில் என்னவென்றால், அதை verification செய்துதான் நாம் confirmation பண்ண முடியும். இந்த ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் விதிமுறைகள் இருக்கின்றன. யார் யார் 'அம்மா' திட்டத்தில் மனு கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு உடனடியாக provisional order கொடுத்துவிடுவார்கள். அதற்குப் பிறகு அதை confirmation செய்வார்கள். என்ன confirmation செய்வார்கள் என்றால், இது விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்று. ஏனென்றால் 'அம்மா' திட்டத்திலே காலையிலே கொடுத்த மனுவுக்கு மாலையிலே தீர்வு காணப்படுகிறது. அந்தத் திட்டத்தை இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதேபோல, 60 இலட்சம் மனுக்களுக்கு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் சொன்னால், உங்களுக்கு என்னவென்றால் (குறுக்கீடுகள்) இந்தியாவிலேயே 60 இலட்சம் மனுக்களுக்கு உடனடியாகத் தீர்வு கண்ட ஒரே முகாம் "அம்மா" திட்ட முகாம்தான். ஏனென்றால் இதெல்லாம் பழங்காலமாக சிந்தித்து (குறுக்கீடுகள்) யாரையும் ஏமாற்றவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** 40 இலட்சம் பேர்கள் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே முதியோர் ஓய்வூதியத்திலே தகுதியுள்ளவர்களாக--30 இலட்சம் பேர்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களுடைய இருப்பிடத்திற்கே சென்று ஆயுள் முழுவதும் 1,000 ரூபாய் வழங்குகிற ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய





அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வெறும் 15 இலட்சம் பேருக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதற்கே ** (குறுக்கீடுகள்) யாரை ஏமாற்றுகிறோம்? யாரையும் ஏமாற்றுவதெல்லாம் கிடையாது. 15 இலட்சம் பேருக்குக் கொடுத்தது உங்கள் அரசு. 30 இலட்சம் பேர்களுக்குக் கொடுப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரம் இருக்கிறது. யாரையும் ஏமாற்ற வேண்டிய அவசியம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குக் கிடையாது. (குறுக்கீடுகள்) தகுதி உள்ளவர்கள் இன்னும் நிலுவையிலே இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் கிடையாது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அம்மா" திட்டத்திலே காலையிலே கொடுத்த மனுவுக்கு மாலையிலே தீர்வு காண வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் தலைவரே சொல்லிவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தலைவர் சொன்னால் உட்காரமாட்டீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** காலையிலே கொடுத்த மனுக்களுக்கு மாலையிலே தீர்வு காண வேண்டுமென்ற அடிப்படையிலேதான், இந்த நிதியாண்டிலேகூட, இன்றைக்கு முதியோர் ஓய்வூதியத்தினுடைய எண்ணிக்கையை உயர்த்துவோம் என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தகுதியுள்ள, நிலுவையிலே இருக்கக்கூடியவர்களுக்கு அதை வழங்குவதற்கு பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மிக உயர்ந்த நிதியொதுக்கீடு; 4,200 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட 4,000 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவையிருக்கிறபட்சத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். தகுதியுள்ளவர்களை அடையாளம் கண்டு கொடுங்கள்; அவர்களுக்கும் தேவையான நிதியை புரட்சித்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [*2018 மார்ச் 21*

தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கித் தரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற உத்தரவாதத்தையும் ஆய்வுக் கூட்டத்திலே கொடுத்திருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். உறுப்பினர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடு) ஏதாவது விடுபட்டுப் போயிருந்தால் சொல்லுங்கள். சேர்த்துக்கொள்வோம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஏதாவது விடுபட்டுப் போயிருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்தை நன்றாகச் சொன்னார். நாங்கள் அதையெல்லாம் கேட்டுக்கொண்டோம்.

*பிற்பகல் 12-50*

நீங்கள் எவ்வளவு பேர்களுக்குக் கொடுத்தீர்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அதைப்பற்றிக் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. எங்கள் ஆட்சிக் காலத்தில் கொடுத்ததைவிட நீங்கள் அதிகமாகக்கூட கொடுத்திருக்கலாம். நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், 'நாங்கள் *30* இலட்சம் பேருக்குக் கொடுத்தோம். நீங்கள் *15* இலட்சம் பேருக்குத்தான் கொடுத்தீர்கள், கேட்பதற்குத் ** என்று சொல்கிற வார்த்தை இருக்கிறதே, (குறுக்கீடு) No, no, I am sorry; I am sorry, no. (குறுக்கீடு) அதற்கு அனுமதியில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அந்த வார்த்தையை எதிர்பாக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*2018 மார்ச் 21*]

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் ** என்கிற ஒரு கடுமையான குற்றச்சாட்டைச் சொன்னார். (குறுக்கீடுகள்) அதற்கு, ** என்று நானும் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஆஸ்டின் அவர்கள் சொல்லியிருக்கலாம்; நான் மறுக்கவில்லை. ஆனால் அது சட்டமன்ற அவைக் குறிப்பிலே பதிவாகவில்லை. ஆக, பதிவாகாத ஒரு சொல்லுக்கு பதிலளிக்கும்விதமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வார்த்தையைச் சொல்வது மரபு அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே, ** என்கிற அந்த வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்கினால்தான் சரியாக இருக்கும். இல்லையென்று சொன்னால், நாங்களும் அதற்கு ஒரு மாற்று வார்த்தையைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்றால்,--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகின்றார்கள்; நேற்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அதுபோன்ற நிகழ்வுகளில் என்ன சொல்கின்றார்கள் என்று கேட்காமல் சத்தம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான், இதுபோன்ற வாக்குவாதங்கள் வளர்கின்றன. அமைச்சர் பேசுகின்றவரை, பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தால் இதுபோன்ற பிரச்சினைகள் வராது. அமைச்சர் பேசியதற்குப் பிறகு உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசுகின்றார். அதிலே

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. பி. தங்கமணி] [2018 மார்ச் 21

மாற்றுக் கருத்து இருந்தால், உடனடியாக அவர் அதற்குப் பதில் சொல்லலாம். அமைச்சர்கள் எழுந்து விளக்கமளித்துக் கொண்டிருக்கின்றபோதே, ஒவ்வொருவரும் எழுந்து ஏதாவது ஒரு கருத்தைச் சொல்கின்றபோதுதான், இப்படிப்பட்ட வார்த்தைகள் வந்துவிடுகின்றன. எனவே, அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, திரு. பிச்சாண்டி அவர்களைப் பேச விடுங்களேன். (குறுக்கீடு) அவரைப் பேச விடுங்களேன். (குறுக்கீடு) கோபப்படாதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர். வயதிலே மூத்தவர். அமைச்சராக இருந்திருக்கின்றார். அவையினுடைய அனைத்து மரபுகளையும் கடைப்பிடிக்கக்கூடியவர். எழுந்தவுடனே இவ்வாறு பேசுவது சரியா என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எழுந்தவுடனேயே நீங்கள் என்ன பேசினீர்கள் என்று நான் சொல்லக் கூடாது. ** என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பார்த்துக் கேட்டால் என்ன அர்த்தம்? இப்பொழுது நீங்கள் பேசினீர்கள். (குறுக்கீடுகள்) அத்தனைபேரும், (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் தவறான வார்த்தை. (குறுக்கீடு) இதுவெல்லாம் தவறான வார்த்தை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) அப்படித்தானே நீங்கள் பேசினீர்கள்? எழுந்தவுடனேயே நீங்கள் என்ன பேசினீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டியை நீங்கள் பேசவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 21]

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'No' என்று சொன்ன வார்த்தைதான் ** என்று விழுந்திருக்கிறது. (குறுக்கீடு) அது தவறாக, (குறுக்கீடு) உங்களுடைய செவிகளில் அப்படி விழுந்திருக்கலாம். நான் அதை மறுக்கவில்லை. எனவே, அந்த எண்ணத்தோடு அவர் பேசவில்லை. அந்த வார்த்தையை அவர் நிச்சயமாகச் சொல்லவில்லை என்பதை நான் உறுதியாக, அறுதியிட்டுச் சொல்லமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வார்த்தையை எடுத்துவிடலாம். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் ** என்று அவர் சொன்னாரா என்பது தெரியவில்லை என்று சொன்னார். அவர் சொன்னதன் அடிப்படையிலே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வாறு அவைக் குறிப்பில் பதிவாகவில்லை.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** ** என்று சொல்வதற்கு அவருக்குத் ** என்று சொன்னால், அந்த வார்த்தையை அவர் வாபஸ் வாங்கிக்கொள்கிறார் என்று சொன்னால், நான் இந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவர்தான் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக் குறிப்பில் பதிவாகவில்லை. அந்த வார்த்தை அவைக்குறிப்பில் ஏறவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார். அதனால் அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள். நீங்கள் எப்பொழுதும் நன்றாகப் பேசுவீர்கள். இன்றைக்கும் அதுபோன்று தயவுசெய்து பேசி முடியுங்கள். தொகுதிப் பிரச்சினை ஏதாவது இருந்தால் சொல்லி, உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2018 மார்ச் 21

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதியில் கிராமம், கிராமமாகப் போனேன். அந்தக் கிராமங்களில் கொடுத்த மனுவை, மனுநீதி நாளில், "அம்மா" முகாமில் நானே சென்று அந்த உத்தரவைக் கொடுத்தேன். அங்கு மறுபடியும் சென்றபோது, இந்தப் பணம் வரவில்லை என்று தெரிவித்து, நிறைய மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் நான் சொன்னேன். இதுகுறித்து அரசு அதிகாரிகளிடம் கேட்டால், 'ஒருவர் இறந்தால்தான், இன்னொருவருக்குக் கொடுப்போம்' என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். எல்லோருக்கும் கொடுங்கள். ஏழையெளிய முதியோர்கள், விதவைகள் அனைவருக்கும் கொடுங்கள் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்ததாக, மக்கள் நல்வாழ்வுத் துறையில், M.D., M.S. படித்தவர்களெல்லாம் அரசாங்க வேலைகளில் இருக்கின்றபோது, கிராமங்களில், மலைப் பகுதிகளுக்கெல்லாம் சென்று வேலை செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் M.D., M.S.-- ஒதுக்கீடு இருந்தது. இப்போது அந்த ஒதுக்கீடு இல்லை என்கிறார்கள். ஆகவே, அந்த நிலை தொடர்ந்தால், மலைப் பகுதிகளில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைதான் ஏற்படும். ஆகவே, நம்முடைய மலைப் பகுதிகளில் அதுபோன்ற நிலை இல்லாமல் இருக்க வேண்டுமென்றால், கண்டிப்பாக அவர்களுக்கான அந்த ஒதுக்கீடுகளை மக்கள் நல்வாழ்வுத் துறை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

இரண்டாவது, காப்பீட்டுத் திட்டம். இதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களைச் சொன்னார்கள். ஆனாலும் காப்பீட்டுத் திட்டத்தில் என்னவென்று சொன்னால், அரசாங்க மருத்துவமனையில் மட்டும்தான் அந்தக் காப்பீட்டுத் திட்டம் உள்ளது. எந்தத் தனியார் மருத்துவமனையும் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நோயாளிகளைச் சேர்ப்பதில்லை. ஏனென்றால், தனியார் மருத்துவமனை தவறு செய்துவிட்டார்கள் அதனால்தான் கொடுக்கவில்லை என்று அவர்கள் சொல்வார்கள். (குறுக்கீடு) என்னவென்றால், காப்பீட்டுத் திட்டத்தில். . .



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. கு. பிச்சாண்டி:** நான் முடித்து விடுகிறேன். அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் அரசாங்கம் பணத்தைப் போட்டு இலவசமாகச் செய்வதுதான் அரசு மருத்துவமனை. ஆனால், இன்றைக்கு operation அனைத்தும் காப்பீட்டுத் திட்டத்தில்தான் நடைபெறுகிறது. இலவச operation எதுவுமே நடைபெறுவதில்லை. தனியார் மருத்துவமனைக்கு எந்த மக்களும் போய் சிகிச்சை பெற முடிவதில்லை. அதனால் அரசு மருத்துவமனைகளில் இட நெருக்கடி. எந்த மருத்துவமனையில் பார்த்தாலும் மக்கள் குவிந்து கிடக்கின்றார்கள். அதற்கு முன்பெல்லாம் தனியார் மருத்துவமனைக்குச் சென்று அனைவரும் treatment எடுத்தார்கள். அந்த அட்டையை வைத்திருந்தவர்களுக்கு அவர்கள் treatment கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. ஆகவே, மக்கள் நல்வாழ்வுத் துறை, அனைத்து மருத்துவமனைகளிலும் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்யக்கூடிய நிலையை உருவாக்கினால்தான், மக்களுக்கு ஒழுங்கான மருத்துவ வசதி கிடைக்கும். அரசாங்க மருத்துவமனையில் அந்த அளவுக்கு இடமில்லை. ஆகவே, இதை மக்கள் நல்வாழ்வுத் துறை கவனிக்க வேண்டுமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே இரண்டு கருத்துகளைக் குறிப்பிட்டிருக்கிறார். முதலில், காப்பீட்டுத் திட்டத்தில் தனியார் மருத்துவமனைகள் இல்லையென்று சொல்கிறீர்கள்; அது மிகவும் தவறு. மொத்தம் 858 மருத்துவமனைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்றில் ஒரு பங்கு தான் அரசு மருத்துவமனைகள். ஏனென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும், குறிப்பாக, நாகப்பட்டினம், நீலகிரி போன்ற மாவட்டங்களில், எங்கெல்லாம் மருத்துவ சேவைகள் அதிகமாகத் தேவைப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அதிகமான மருத்துவமனைகளை அங்கீகரித்திருக்கிறோம். பெருநகரங்களில்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2018 மார்ச் 21*

அரசு மருத்துவமனைகள். ஆக, மூன்றில் ஒரு பங்கு அரசு மருத்துவமனைகளையும், மூன்றில் இரண்டு பங்கு தனியார் மருத்துமனைகளையும் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்திலே அங்கீகாரம் செய்திருக்கின்றோம். அதேபோல, இதுவரை செலவிடப்பட்ட, முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட தொகைகளையும் மூன்றில் ஒரு பங்கு அரசு மருத்துவமனைகளுக்கும், மூன்றில் இரண்டு பங்கு தனியார் மருத்துவமனைகளுக்கும் தான் கொடுத்திருக்கின்றோம். நீங்கள் தனியார் மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்படவில்லை என்று சொல்வது மிக, மிக தவறான கருத்தாகும். மாண்புமிகு அம்மா அவர்கள் இதே அவையில் சொன்னார்கள். எந்த மருத்துவமனையில் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவெடுப்பது ஒரு நோயாளியினுடைய விருப்பம். It is a patient's option. ஒரு நோயாளி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற விரும்பினால், அரசு மருத்துவமனையில் அவருக்கு உயர்தர சிகிச்சை அளிக்கப்படும். இல்லை; அவர் தான் விரும்புகிற ஒரு தனியார் மருத்துவரிடத்தில் சிகிச்சை பெற வேண்டுமென்று விரும்பினாலும், அதற்கு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் எந்தக் கட்டணமும் இல்லாமல் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஒரு வாய்ப்பு இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்று. (குறுக்கீடு)

இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் difficult area-வைப் பற்றிச் சொன்னார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அதாவது, மலைப் பகுதிகள்; நாகப்பட்டினம் மாவட்டம், ஊட்டி, நீலகிரி மாவட்டங்களில் இருக்கக்கூடிய கடைக்கோடி பகுதிகள்; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய உள்காடி போன்ற இடங்கள்; அதேபோன்று, Casualty, 24 hours night duty செய்யக்கூடிய இடங்கள்; அதாவது, CEmONC centres, *24* மணிநேரமும் விழித்து, மருத்துவர்கள் குழந்தைகளைக் காப்பாற்றக்கூடிய NICU centre, இதுபோன்று, கடினமான இடங்களில், பணியாற்றக்கூடிய மருத்துவர்களுக்கு இந்த *10* மதிப்பெண் கொடுக்கக்கூடிய வகையில், ஒரு குழுவினை அமைத்து, அந்தக் கடினமான இடங்களைக் கண்டறிந்து, பல்வேறு மருத்துவச் சங்கங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பெற்று, இப்போது அதை நாங்கள் மத்திய அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம்.



*2018 மார்ச் 21*] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அதை எல்லா மருத்துவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, சீக்கிரம் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து ஒரு மணி நேரம் ஆகப் போகின்றது. உங்களுடைய விருப்பம்போல் ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களெல்லாம் போராட்டம் செய்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறீர்கள். தற்போது எந்தளவுக்கு வேலைவாய்ப்பைக் குறைக்கலாம்; எந்தப் பணிகளை outsourcing முறையில் கொடுக்கலாம் என்பதையெல்லாம் ஆராய்கின்ற அளவுக்கு இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பல படித்த இளைஞர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கக்கூடிய அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிற்சாலைகள் என்று பார்த்தீர்களென்றால்,இன்றைக்கு குஜராத்தில் ரிலையன்ஸ் Air bus-விமானம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறார்கள். அதேபோல, இராணுவத்திற்கு வேண்டிய தளவாடங்கள் தயாரிப்பதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில், இன்றைக்கும் மத்திய அரசாங்கத்தின் சார்பாக ஒரு தொழிற்சாலைகூட வரவில்லை; இராணுவத் தொழிற்சாலை ஒன்றாவது வந்திருக்கிறதா? இரயில்வே தொழிற்சாலை வந்திருக்கிறதா? மத்திய அரசாங்கத்தின் சார்பில் எந்தவொரு தொழிற்சாலையும் வராமல் இருக்கிறது. அதை நீங்கள் பெற்றுத் தர வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் துணையாக இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைக் கொண்டுவர வேண்டும். தலைவர் கலைஞர் ஆட்சியில், TIDEL PARK போன்ற தொழில் மையங்கள் வந்தன. (குறுக்கீடு) தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. சுந்தர் பிச்சை அவர்கள்கூட பெங்களூருவில் Google நிறுவனத்தை ஆரம்பிக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 மார்ச் 21

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**திரு. கு. பிச்சாண்டி:** ஆனால், தமிழ்நாட்டில் ஆரம்பிக்கவில்லை. ஆகவே, நீங்கள் உரிய அக்கறை எடுத்து, மத்திய அரசாங்கத்தின்மூலம் வெளிநாட்டிலிருந்து தொழிற்சாலைகளைக் கொண்டுவர வேண்டும். Google நிறுவனத்தைச் சேர்ந்த திரு. சுந்தர் பிச்சை போன்றவர்களையெல்லாம் சந்தித்து, அவர்களுடைய நிறுவனங்களையெல்லாம் இங்கு கொண்டுவர வேண்டும். அப்போதுதான் இங்கு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** அது மிக முக்கியமானது. "வேலையற்றவர்களின் நெஞ்சங்களிலே விபரீத எண்ணங்கள் கிளம்புகின்றன" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதற்கான காரணம் இதுதான். ஆகவே, படித்த இளைஞர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும். அதற்காக உரிய அக்கறை எடுத்து, அந்த தொழிற்சாலைகளையெல்லாம் மத்திய அரசாங்கத்தின்மூலம் பெற்று, இங்கு அவை செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள், Defence Park, Defence Corridor; திருச்சி, சேலம், ஓசூர், கோயம்புத்தூர் வழியாக பெங்களூரு வரை செல்வதற்கு சாலை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை ready செய்திருக்கிறார்கள். அதுகுறித்து விவாதிப்பதற்காக சமீபத்தில் திருச்சியில் ஒரு meeting நடைபெற்றது. இத்தகைய வசதிகள் உத்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படும் என்று மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில்



2018 மார்ச் 21] [திரு. எம்.சி. சம்பத்]

தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிச்சயமாக அந்த Defence Park வரும்போது, பெரும்பான்மையான நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கடைசி பக்கத்தில் உள்ள நன்றியை மட்டும் சொல்லி, ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக நான் ஒரு கதையைச் சொல்லி என் உரையை முடிக்கிறேன். புலியும் மான் குட்டியும்; காட்டில் புலி ஒன்று பசியோடு வந்து கொண்டிருந்தது. அப்போது அதன் எதிரில் மான் குட்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. புலியைப் பார்த்து மான் குட்டி பயப்படாமல் அதன் அருகிலேயே வந்து நின்றது. மான் குட்டியைப் பார்த்து 'நான் யார் தெரியுமா?' என்று புலி கேட்டது. 'நீங்கள் யார் என்று எனக்குத் தெரியாது' என மான் குட்டி சொன்னது. 'நான்தான் புலி; நான் மிகவும் வலிமையானவன். என்னைப் பார்த்தால் அனைவரும் நடுங்கி ஓடுங்குவார்கள். ஆனால், நீ என்னைப் பார்த்து பயப்படாமல் என் அருகில் வந்து நிற்கிறாய்; உனக்கு என்னைப் பார்த்து பயமில்லையா' என்று புலி கேட்டது. அதற்கு மான் குட்டியோ 'நீங்கள் மிகவும் அன்பானவர், உங்களால் எனக்கு ஆபத்து வராது என்று நினைக்கிறேன்' என்று சொன்னது. இதைக் கேட்ட புலி, மான் குட்டியோடு நட்பு கொண்டது. புலியும், மான் குட்டியும் அன்போடும், நட்போடும் இருந்தன. ஒரு நாள் புலிகள் கூட்டமாக வந்து கொண்டிருந்தன. அப்போது மான் குட்டியின் நண்பனாக இருந்த புலியைப் பார்த்த புலிகள் 'ஏன் சோர்வாக இருக்கின்றாய்' எனக் கேட்டன. அதற்குப் புலி 'எங்கும் இரை கிடைக்கவில்லை பசி அதிகமாக உள்ளது' என்றது. அப்போது அந்த மான் குட்டி அங்கு வந்தது. கூட்டமாக இருந்த புலிகள் பசியாக இருந்த புலியைப் பார்த்து, 'ஒரு மான் குட்டி வருகிறது; எங்களுக்குப் பசியில்லை, நீ மட்டும் அந்த மான் குட்டியை அடித்து உணவாக்கிக்கொள்' என்றன. ஆனால், புலி மான் குட்டியை வேட்டையாடாமல், மான் குட்டியோடு பேசிக்கொண்டிருந்தது. இதைக் கண்ட மற்ற புலிகள் 'உணவு உன்னைத் தேடி வந்தும் ஏன் வேட்டையாடவில்லை' என்று

கேட்டன. ‘என்னை நண்பனாக மான் குட்டி ஏற்றுக்கொண்டது. என்னால் தனக்கு ஆபத்து ஏதும் வராது என்று மான் குட்டி நம்புகிறது. நான் பசியால் இறக்க நேரிட்டாலும், அந்த மான் குட்டியை வேட்டையாடி உணவாக உண்ண மாட்டேன்’ என்று புலி சொன்னது. எனக்கு நட்புதான் மிக முக்கியம் என்றது.

அதைப்போல தமிழர்களின் உயிர் பிரச்சினையாக காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க எதிர்த்துப் போராடாமல், “எங்களுக்கு மத்திய அரசின் நட்புதான் முக்கியம்” என்று இருப்பது வேதனையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு காகிதப் பூ; இது கானல் நீர்; ஒரு மின்மினிப் பூச்சி; இந்த ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது; கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்; இன்று கடன் பட்டதால் தமிழகம் கலங்கி நிற்கின்றது. இந்த அளவில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கதை எங்களுக்குப் பொருந்துமா அல்லது அவர்களுக்குப் பொருந்துமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், ஐந்து ஆண்டுக் காலம் மத்தியிலே பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி இருந்தபோது, ஆட்சி அதிகாரத்தை அவர்கள் அனுபவித்தார்கள். அந்தக் காரணத்தால்தான் இந்தக் கதையை நன்றாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களைப் பொறுத்தவரைக்கும், நாங்கள் கூட்டணியும் அமைக்கவில்லை, அவர்களுக்கு ஆதரவும் தரவில்லை. தமிழகத்தினுடைய நிலைப்பாட்டை உரிய முறையிலே நாங்கள் எடுத்து வைத்துக்கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுக்காக வாதாடிக் கொண்டிருக்கின்றோம். வரலாற்றிலே இல்லாத அளவிற்கு, நாடாளுமன்றக் கூட்டத்



தொடர் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை முடக்கப்பட்டு இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவினை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி தொடர்ந்து நாடாளுமன்றத்திலே அழுத்தம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்தை முடக்கிக் கொண்டிருக்கின்றோம். எந்த அளவிற்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழக மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற அரசாக அம்மா அவர்களுடைய அரசு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கதைக்கு விளக்கம் சொன்னார். என்ன கதை? எப்படி இருக்கு என்று பிறகு பார்க்கலாம்; அப்போது மக்களுக்குத் தெரியப் போகிறது என்ன கதை என்று. எனவே, நான் அந்தப் பிரச்சினைக்குள் போக விரும்பவில்லை.

நான் கேட்க விரும்புவது, காவேரிப் பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியபோது, ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மாண்புமிகு பாரதப் பிரதமரை சந்தித்து, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்த வேண்டும். அது காலதாமதமான காரணத்தால்தான், சட்டமன்றத்தைக் கூட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது தொடர்பான தீர்மானத்தை இங்கே முன்மொழிந்து, இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சிகளும் அதை வழிமொழிந்து, ஏகமானதாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதத்தோடு மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு அனுப்பி வைத்திருப்பதாக நாங்கள் செய்திகளில் பார்த்தோம்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 மார்ச் 21

*பிற்பகல் 1-05*

நான்கூட இந்தப் பிரச்சினையை இரண்டு நாட்களுக்கு முன்பு எழுப்பிய நேரத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கின்றபோது இன்னும் 9 நாட்கள் இருக்கின்றன; 29 ஆம் தேதி வரை பொறுத்திருப்போம், அது நிச்சயமாக முடியும் என்ற வகையில் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் இப்போதும் கேட்கின்றேன்; இன்னும் 6 நாட்கள்தான் மிச்சம் இருக்கின்றன. ஆக, இந்த 6 நாட்களுக்குள் மாண்புமிகு பிரதமர் அவர்கள் நம்மைச் சந்திக்க ஏதேனும் முடிவு செய்திருக்கிறாரா? அது குறித்து ஏதேனும் தகவல் வந்திருக்கின்றதா அல்லது காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான உறுதிமொழி ஏதேனும் மத்திய அரசின் மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றதா என்பதை நான் முதலில் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Restaurant-ல் G.S.T. வரி சம்பந்தமாக (குறுக்கீடு) இல்லை; ஒரு திருத்தத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகின்றேன். (குறுக்கீடு) ஒரு திருத்தத்தை இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன். Restaurant-ல் 12 சதவிகித வரி என்று சொல்லிவிட்டேன். முன்பு AC, Non-AC என்று 18 மற்றும் 12 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது அது 5 சதவிகிதம்தான். ஆகவே அதனை 5 சதவிகிதம் என்று தயவுசெய்து திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

நட்பைப் பற்றி நம்முடைய உறுப்பினர் அவர்கள் பேசினார். நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால், திருமதி சோனியா காந்தி அவர்களுடைய தலைமையிலான காங்கிரஸ் கட்சி உங்களுடன் தோழமையாக இருக்கின்றது. கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கின்றது. உங்களுடைய செயல் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நட்பின் அடிப்படையில் திருமதி சோனியா காந்தி அவர்களைச் சந்தித்து, திரு. ராகுல் காந்தி அவர்களைச் சந்தித்து, 'கர்நாடகாவை இந்த



2018 மார்ச் 21] [திரு. டி. ஜெயக்குமார்]

விஷயத்திலே நிர்பந்தப்படுத்துங்கள்' என்று தமிழ்நாட்டின் நலன் கருதி, ஏதாவது சொல்லியிருக்கிறாரா? அதற்கான விளக்கத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அருமையான கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். நான் பதில் சொல்வதற்கு அது ஏதுவாக அமையும் என்று நம்புகின்றேன். 'எங்களால், இந்த ஆட்சியால் எதுவும் முடியவில்லை; நீங்கள் செய்யுங்கள்' என்று எங்களிடத்தில் சொல்லுங்கள், நாங்கள் செய்து காட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதில் சொன்னால் மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** "உங்களால் முடியவில்லை என்று சொன்னால் எங்களிடத்தில் சொல்லுங்கள்" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றார். உங்களால் காவேரிப் பிரச்சினையில் எதுவுமே செய்ய முடியவில்லை. 2007-ல் காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு வந்தபோது, மத்தியிலும் மாநிலத்திலும் நீங்கள்தான் ஆண்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது அதற்கான அரசாணையை உங்களால் பெற்றுத் தர முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் நீங்கள் எந்த முடிவை, எந்தக் காலத்தில் பெற்றுத் தந்தீர்கள் என்பதனை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விளக்கமாகக் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு விவரம் தெரியும். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது Supreme Court-ல் வழக்கு இருந்தது. அந்த வழக்கு இருந்ததால் Tribunal-ல் எடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்; வழக்கும் நடக்கவில்லை. அப்போது போய் நாங்கள் எதுவும் கேட்க முடியாது. Tribunal-ல் வழக்கு முடிந்த பின்புதான் கேட்க முடியும். அது அவருக்குத் தெரியும். அது போகட்டும். ஒரு விஷயம்; எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "நாங்கள் ஆதரிக்கவில்லை, எதிர்க்கின்றோம்" என்று சொன்னார்கள். ஆகையினால், திரு. மோடி அவர்களது அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால், அதை எதிர்த்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போட வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அனுபவம் வாய்ந்தவர், வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதைப்போல், அவர் பேசுவார் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆந்திர மாநிலப் பிரச்சினைக்காகக் கொடுத்திருக்கின்றார்கள். நேற்றையதினமே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றார். நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியோடு தெலுங்கு தேசம் கட்சி கூட்டணி அமைத்துப்போட்டியிட்டது. அவர்கள் வெற்றி பெற்று, அமைச்சரவையிலும் இடம் பெற்றிருந்தார்கள். தற்போது அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக, அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கின்றார்கள். நம்முடைய பிரச்சினை அப்படியல்ல. காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். அதற்கு ஆதரவாக அங்கு அவர்கள் யாருமே குரல் கொடுக்கவில்லையே; யாருமே support செய்யவில்லையே? நமக்காக யாருமே குரல் கொடுக்கவில்லையே?



2018 மார்ச் 21] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அவர்களுடைய பிரச்சினைக்காகத்தான் அவர்கள் குரல் கொடுக்கின்றார்களே தவிர, நம்முடைய பிரச்சினையை அவர்கள் ஒன்றும் சுட்டிக்காட்டவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நம்முடைய பிரச்சினைக்கு நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து, அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். நாடாளுமன்றம் தொடர்ந்து முடங்கக்கூடிய அளவிற்கு நாம் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

பிற்பகல் 1-10

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் எங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிற எங்களை வாழவைத்த இதய தெய்வம், உலக அரசியலின் ஒப்பற்றத் தலைவி, எவராயினும் எதிர்க்கும் துணிச்சல் மிக்க தனிப்பெருந்தலைவி, தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடம் நோக்கி வணங்குகிறேன்.

அம்மாவின் அரசை அற்புதமாகவும், எளிமையாகவும் ஆடம்பரம் இல்லாமலும், வழி நடத்தி, அம்மாவின் கனவை நிறைவேற்றிவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆசியோடும், அம்மாவின் சிறப்பான திட்டங்களை அம்மா அரசின் மூலமாக நிறைவேற்ற துணை நிற்கும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் OPS அவர்களின் வாழ்த்தோடும், எனது தொகுதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அண்ணன் K.A.S. அவர்களின் ஆதரவோடும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் K.C.K. அவர்களின் அன்போடும், இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரான தங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள் உரையாற்றும்போது, ** எனக் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் நான் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்திற்கு என்னைத் தேர்வு செய்து அனுப்பிய அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு என்றும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு முன் எனது தொகுதி மக்களின் முக்கியமான கோரிக்கைகளை வலியுறுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியின் அந்தியூர் பகுதியில் ஒருபுறம் காவேரி ஆறும், மறுபுறம் பவானி ஆறும் சென்றுகொண்டிருந்தாலும், மையப் பகுதி வானம் பார்த்த பூமியாக இருந்ததால், இம்மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பர்கூர் மலை மணியாச்சியில் வெள்ளப் பெருக்கில் செல்கின்ற நீரை, வரட்டுப்பள்ளம் மற்றும் வழுக்குப்பாறை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றித்தர 2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எனது கன்னிப்பேச்சின் முதல் கோரிக்கையாக மாண்புமிகு அம்மாவின் பாதம் வணங்கி கேட்டுக்கொண்டதால், அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு அந்தக் கூட்டத் தொடரிலேயே, இந்தத் திட்டத்தின் விரிவான ஆய்வுப் பணிக்காக நிதி ஒதுக்க உத்தரவிட்டதை அம்மாவின் ஆட்சியை வழிநடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவார்கள்.

அதன்பிறகு, கடந்த 2017 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசும்போது, மீண்டும் இத்திட்டப் பணியை விரைந்து முடிக்கக் கேட்டுக்கொண்டேன். இத்திட்டம் பற்றியும், இந்தத் திட்டத்தால் பயன்பெறும் அந்தியூர் பகுதியும், பவானி பகுதியும் மாண்புமிகு தமிழக முதல்வரான அண்ணன் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்ததால், இப்பகுதி மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும் என்ற நற்செய்தியை அறிவித்தார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 21] [திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு அறிவித்த இத்திட்டம், இரண்டு ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், விரைந்து ஆய்வுப் பணியை முடித்து, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, முதல் கட்ட நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி, விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்கள், அதனால் பயனடையும் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மிகவும் வேண்டியும், வற்புறுத்தியும் நான் கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்தால் பயனடையும் பகுதியில், பவானி தொகுதியும் வருவதால், பவானி தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் K.C.K. அவர்களையும், ஈரோடு மாவட்டத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், இளைஞர்களையே மிஞ்சும் சுறுசுறுப்போடு பணியாற்றிவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அண்ணன் K.A.S. அவர்களையும் எனது மிக முக்கிய இந்தக் கோரிக்கையினை நிறைவேற்ற உறுதுணை புரியுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, TN பாளையம் ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையம் வேதபாறை நீர்த்தேக்கத்தில் புதிய ஏரி அமைக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்ற எனது வேண்டுகோளை ஏற்று, புதிய ஏரியைக் கட்டும் பணிக்குக் கடந்த 2017 சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது இப்பணிக்கு சரியான மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. எனவே, விரைவில் இப்பணியைத் தொடங்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு-கர்நாடகாவை இணைக்கும் சாலையான செல்லம்பாளையம்-கொள்ளேகால் சாலையை அகலப்படுத்தும் எனது கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்முக்கிய சாலை செல்லும்

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்] [*2018 மார்ச் 21*

வழியான கெட்டிச் சமுத்திரம் ஏரிக்கரைச் சாலையானது குறுகலாகவும், வளைந்தும், அங்கிருந்து வெளியேறும் நீர், சாலையைக் கடந்தும் செல்வதால் கனரக வாகனங்கள், பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் செல்லும்போது விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதால், மேற்கண்ட இரு மாநில இணைப்புச் சாலைப் பணி முடிவடைவதற்குள், அதே சாலையில் உள்ள கெட்டிச் சமுத்திரம் கரைச் சாலையை அகலப்படுத்தியும், நேர்ப்படுத்தியும் பாலம் அமைக்கவும் நடப்பு ஆண்டில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக பணி எடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட அப்பகுதியினுடைய நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிதி ஒதுக்கீடு பெற சென்னையிலுள்ள நெடுஞ் சாலைத் துறை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களைக் காப்பாற்ற புதிய புரட்சியை ஏற்படுத்திய பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சி ஏற்பட பெரிதும் காரணமாக இருந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் ஆவார்கள். புரட்சித் தலைவர் விட்டுச்சென்ற பணியை அவரின் வாரிசாக வந்த, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து ஆட்சி செய்வதற்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்குப் பெரும் பங்குண்டு. அடுத்து வரும் தேர்தல்களிலும், அ.தி.மு.க.-வின் பெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கப் போகிறவர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் ஆவார்கள். எனவே, இம்மக்களுக்காகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள், கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், மேற்கூரை பழுதடைந்து, மழைக் காலங்களில் மழைநீர் கசிந்து கொண்டும், காரைகள் உதிர்ந்தும், கம்பிகள் தெரிந்தும் மோசமான நிலையில் உள்ளன. இந்தத் தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை செலவாக வாய்ப்புள்ளது. இச்செலவுகளை சொந்தமாக செய்ய இயலாத சூழ்நிலையில் அம்மக்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு



*2018 மார்ச் 21*] [திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்று அம்மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பழுதடைந்த வீட்டிற்கு ஏற்றாற்போல் நிதி ஒதுக்கவும் அல்லது அந்த வீட்டை இடித்துவிட்டு, அதே இடத்தில் அரசாங்கமே நேரடியாக புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இப்பிரச்சினை பெரும்பாலான சட்டமன்றத் தொகுதியில் இருப்பதால், பெரும்பாலான சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களின் கோரிக்கையாகவும் இது இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில், மலையாளி மக்கள் என்று சொல்லக்கூடியவர்கள் வசித்து வருகிறார்கள். இவர்களின் இரத்த சொந்தமான மக்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சொந்த மாவட்டமான சேலம் மாவட்டத்திலும் வசித்து வருகிறார்கள். சேலம் மாவட்டத்திலுள்ள மலையாளி இன மக்கள் ST என்று சொல்லக்கூடிய, பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் பெறுகிறார்கள். ஆனால், அதே வகுப்பைச் சேர்ந்த அவர்களின் இரத்த உறவினர்களான, ஈரோடு மாவட்ட மலையாளி இன மக்கள் பழங்குடியினர் சாதிச் சான்றிதழுக்காகப் போராடி வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால் மத்திய அரசின் பழங்குடியினர் வகுப்புப் பட்டியலில் மலையாளி இன மக்களும் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இன்னும் இவர்களுக்கு முழுமையான சாதிச் சான்றிதழ் முடிவு கிடைக்கவில்லை. எனவே, இதற்கென ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்து, விரைவாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்க தங்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, அம்மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் பல இடங்களில் நீர்வழிப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு, பொதுப் பணி புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு ஆகியவற்றில் எந்தப் புறம்போக்கு என்றுகூட தெரியாமல், அரசாங்கத்தின் மூலமாக அடிப்படை வசதிகள் அங்கு செய்யப்பட்டும், வீட்டு வரி ரசீது மற்றும் மின்

இணைப்பு பெற்றும் சுமார் *30* ஆண்டுகளுக்கு மேலாக அங்கே மக்கள் குடியிருந்து வருகிறார்கள். இதில் குறிப்பிட்ட பல இடங்கள் நீர் வழிப் பாதையே இல்லாமல் இருக்கின்றன. இருந்தும் நீதிமன்ற உத்தரவால் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறையின் மூலமாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இப்பிரச்சினையிலிருந்து, பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம், நீர்வரத்து ஓடையே இல்லாத பகுதி, மேடான பகுதி, இடையூறு இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து நில வகைப்பாட்டை மாற்றம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அப்புறப்படுத்தும் சூழ்நிலை உள்ள வேறு இடம் இல்லாத மக்களுக்கு, அரசாங்கத்தின் மூலமாக தக்க இடம் ஏற்பாடு செய்து பட்டா, வீடு, மின் வசதி, குடிநீர் வசதி மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தந்தபிறகு, வீட்டைக் காலி செய்யவும், அதுவரை நீதிமன்ற உத்தரவால் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் நீர்வழிப் புறம்போக்கில் இருக்கும் வேறு இடம் இல்லாத மக்களுக்கு வருவாய்த் துறைமூலம் இடம் கண்டறியப்பட்டு, பட்டா நிலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் பர்கூர் ஊராட்சியானது, அதிக நிலப்பரப்பைக் கொண்ட மலைப் பகுதியாகும். இம்மலைப் பகுதியானது கடல் மட்டத்திலிருந்து *1,000* மீட்டருக்குமேல் உயரம் கொண்ட பகுதியாகும். இப்பகுதியில் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், காவல் நிலையம், வனச் சரகம், கால்நடை நிலையம் மற்றும் இரண்டு கிராம நிருவாக அலுவலகங்கள் உள்பட அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் பணிபுரியும் ஆசிரியர் உட்பட அரசு ஊழியர்கள் கூடுதல் செலவினங்களோடு பணிக்கு வந்து செல்கிறார்கள். இவர்களுக்கு நிலப்பரப்பிலுள்ள அரசுப் பணியாளர்களைவிடக் கூடுதல் செலவாகிறது. கடல் மட்டத்திலிருந்து *1,000* மீட்டருக்கு மேல் உள்ளதால், மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசுப்





பணியாளர்களுக்கும் வழங்கப்படும் மலைப் படி மற்றும் குளிர்காலப் படி ஆகியவை, இங்கு பணிபுரியும் பணியாளர்களின் நலன்கருதி, கூடுதல் செலவினங்களை ஈடுகட்டும் வகையில் வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-20*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசில், தமிழ்நாடு சுகாதாரத் துறை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களின் செயல்பாட்டின் காரணமாக, தற்போது இந்திய அளவில் முன்னோடியாக உள்ளது. இவ்வளர்ச்சிக்கு தமிழக அரசு முதுநிலை மருத்துவப் பட்ட மேற்படிப்பிற்கான மாநில ஒதுக்கீட்டில் *50* சதவிகித இடங்களை அரசு மருத்துவர்களுக்கான சேவை ஒதுக்கீடாக வழங்கியதும் ஒரு காரணமாகும். மேலும், கிராமப்புற, மலைப்புற மருத்துவர்களுக்கு ஊக்க மதிப்பெண்களும் வழங்கப்பட்டு வந்தன. இந்த வருடம் *50* சதவிகிதம் இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டு, *16* மாவட்டங்களுக்கு மட்டும் முழுமையான ஊக்க மதிப்பெண்கள் வழங்கப்படுவதாக டாக்டர் உமாநாத் I.A.S. அவர்களின் கமிட்டி பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இதில் ஈரோடு மாவட்டம் விடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இம்மாவட்டத்தில் மலைப் பகுதி ஊர்களையும், மலை அடிவாரக் கிராமங்களையும், வனப் பகுதியை ஒட்டிய கிராமங்களையும் இணைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, ஏற்கெனவே நடைமுறையில் இருந்த *50* சதவிகித சேவை ஒதுக்கீடு மற்றும் ஈரோடு மாவட்டத்திற்கான முழுமையான ஊக்க மதிப்பெண் ஆகியவற்றை பெற்றுத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கருத்தை நேற்றே, மாண்புமிகு

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2018 மார்ச் 21*

ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. கே.எஸ். தென்னரசு, அண்ணன் திரு. கே.வி. இராமலிங்கம் மற்றும் மாண்புமிகு அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் ஆகியோரும் குறிப்பிட்டார்கள். அந்தத் தகவல் தவறான தகவல். ஏதோ மருத்துவர்கள் வாயிலாக செவி வழியாக அந்தச் செய்தி வந்திருக்கின்றது. 16 மாவட்டங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களுக்கு அந்த மதிப்பெண்கள் வழங்கப் பரிந்துரைக்கப்படவில்லை என்பது ஒரு தவறான தகவல். ஈரோடு மாவட்டம் மற்றும் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலுமே ஏற்கெனவே முன்னாள் அமைச்சர் அவர்கள் கருத்து சொன்னதுபோல, எங்கெல்லாம் மருத்துவர்களுக்குப் பணிச் சுமை அதிகமாக இருக்கிறதோ--ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய NICU Center, அதாவது பச்சிளங் குழந்தைகளைப் பராமரிக்கக்கூடிய மையங்கள்; ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய CEmONC Center; 24 x 7 செயல்படக்கூடிய OGcian இருக்கக்கூடிய CEmONC Center; மகப்பேறு வைத்தியம் பார்க்கக்கூடிய அந்த Centers, அதேபோல ஈரோடு, சத்தியமங்கலம் உள் காட்டுப் பகுதியில் இருக்கக்கூடிய அந்த இடங்கள் எல்லாம் 10 மதிப்பெண்களைப் பெறக்கூடிய இடங்களாகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது ஒரு சில மாவட்டங்களைத் தவிர்த்து—ஒரு சில மாவட்டங்களுக்கு என்ற அளவு இல்லாமல் மாநில அளவு முழுவதும் ஒரு Casualty, Emergency Care, NICU Center, CEmONC Center, 24 x 7 இரவு நேரங்களில் பணிபுரியக்கூடியவர்கள், அதேபோல மலைப் பகுதி, யாருமே தொடர்ந்து ஓர் இடத்தில்--counselling நடத்தினால்கூட சில இடங்களுக்கு மருத்துவர்கள் செல்லமாட்டார்கள். அதுபோன்ற இடங்களுக்கு அரசு ஊக்க மதிப்பெண்களை வழங்குகின்றபொழுது, அந்த இடத்திலும் நம் மருத்துவருடைய சேவையை உறுதிப்படுத்தலாம் என்ற அடிப்படையில்தான் டாக்டர் உமாநாத், I.A.S. அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தங்கள் மாவட்டத்திலும் பணிபுரியக்கூடிய மருத்துவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.



*2018 மார்ச் 21*]

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு பெரும்பாலான சாதிச் சான்றிதழ்கள், இதர சான்றிதழ்கள், விவரங்கள் ஆகியவை வருவாய்த் துறை மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. சிறிய கிராமங்களுக்குக்கூட வருவாய்க் கிராமம் செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்காகச் செயலாற்றிக்கொண்டிருக்கின்ற அரசு; அந்தியூர் பேரூராட்சி, சின்னதம்பிபாளையம் ஊராட்சி இரண்டுக்கும் சேர்த்து ஒரே வருவாய்க் கிராமமாக பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேரூராட்சியும், ஊராட்சியும் அதிக மக்கள்தொகை கொண்டவையாகும். எனவே, பொது மக்களின் சிரமத்தைக் கருத்தில்கொண்டு இரண்டுக்கும் தனித்தனி வருவாய்க் கிராமம் அமைத்துத் தர வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக ஏற்கெனவே மாமன்றத்திலும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் நேரிலும் வலியுறுத்தியுள்ளேன் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயிகளின் நலனைக் காக்க, நெல் கொள்முதல் செய்வதுபோன்று, குறைந்தபட்ச ஆதரவு விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக விவசாயிகளிடமிருந்து துவரை, உளுந்து மற்றும் பச்சைப்பயறு போன்ற பயறு வகைகளை 2018-2019 ஆம் ஆண்டு முதல் அரசே நேரடியாகக் கொள்முதல் செய்யும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். அதேபோல, ஒருங்கிணைந்த உணவுப் பதப்படுத்தும் பூங்காங்கள் உருவாக்கப்பட்டு, பழங்கள், காய்கறிகள், மீன்கள், பால் பொருட்கள், கோழி மற்றும் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தனியார் தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்பட்டு, கிராமப்புறங்களில் கணிசமாக வேலைவாய்ப்பு உருவாக்கும் அறிவிப்பு பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இந்தப் பருவம் முதல் வருவாய்ப் பகிர்வு விலை நிர்ணய முறைக்கு மாற அரசு

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்] [*2018 மார்ச் 21*

முடிவு செய்தது, விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலை பெறுவதை உறுதி செய்து சர்க்கரை ஆலைகளின் இலாபத்தில் ஒரு பகிர்வு விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெற வழிவகை செய்வதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேலோங்கும். கூட்டுறவுத் துறை மூலமாக விவசாயிகள் பயிர்கள் செய்வதற்கு பயிர்க் கடனாக *8,000* கோடி ரூபாய் அளவிற்கு புதிய பயிர்க் கடன் வழங்கும் இந்த அறிவிப்பு விவசாயிகளின் மேல் அம்மா அவர்களின் அரசு வைத்திருக்கும் அன்பை பிரதிபலிக்கின்றது.

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, இலாப நோக்கில் செயல்படாமல், மக்கள் வசதிக்காகவே செயல்பட்டு வரும் போக்குவரத்துத் துறை, *2018-2019* ஆம் ஆண்டில் மாநிலப் போக்குவரத்துக் கழகத்திற்கு *3,000* புதிய பேருந்துகளையும், *2017-2018* ஆம் ஆண்டில் வாங்க அனுமதிக்கப்பட்ட *2,000* புதிய பேருந்துகளையும் சேர்த்து, பத்து ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள *4,593* பழைய பேருந்துகள் புதிய பேருந்துகளாக மாற்றப்படும் என்ற முடிவால் மக்களின் பயணம் சிறப்பாக அமைய வழிவகுக்கப்படுவதோடு, நமது போக்குவரத்து அமைச்சரைப்போல புதிய பேருந்துகள் பளபளப்பாக உலா வரும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுத் துறையில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக எல்லாத் தரப்பு மக்களும் அரசு மருத்துவமனையைத் தேடி வரும் சூழ்நிலை உருவாக்கப்பட்டு, சுத்தம், சுகாதாரத்துடன் தேவையான சிகிச்சை அளித்து, குறிப்பாக மக்களை எந்த வேகத்தில், எந்த நோய் தாக்கினாலும், அதைவிட வேகமாக நமது சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செயல்பட்டு, அதை ஒழித்துக்கட்டி நாட்டில் முன்னோடி மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து கொண்டிருப்பது அம்மாவின் அரசிற்கு பெருமை சேர்ப்பதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் அனைத்துத் தொழில் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பெரும் பங்கு அளிப்பது சாலை வசதிகள். எனவே,



*2018 மார்ச் 21*] [திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தும் குறைந்தபட்சம் இரு வழித்தடச் சாலைகளாகவும், மாவட்ட முக்கிய சாலைகள் அனைத்தும் இடைவழித் தடச் சாலைகளாகவும் அகலப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்து, *2017* ஆம் ஆண்டில் இருவழித்தடச் சாலைகள் *11,412* கிலோ மீட்டராக அதிகரிக்கப்பட்டு, மாவட்ட முக்கியச் சாலைகள் *2017* ஆம் ஆண்டில் *11,219* கிலோ மீட்டர் நீளமாக அதிகரிக்கப்பட்டது தமிழக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

மேலும், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் *2018-2019* ஆம் ஆண்டில் *1,000* கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை அகலப்படுத்தியும், *4,000* கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை மேம்படுத்தியும், ஊரகச் சாலைகளைத் தரமுயர்த்தும் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சி சாலைகள் தரம் உயர்த்தும் பணிகளை ஏற்கெனவே மேற்கொண்டு, *2018-2019* ஆம் ஆண்டில் கூடுதலாக *2,500* கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் *1,000* கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்ற செய்தியின்மூலம் கிராமப்புறங்களிலும் சாலை வசதிகள் மேம்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மற்றும் நகராட்சி நிருவாகத் துறையின் மூலமாக நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், கிராம ஊராட்சியில் மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, சாக்கடை வசதி மற்றும் குடிநீர் வசதிகளுக்கு பல்வேறு வகையில் பல ஆயிரம் கோடி ரூபாய்களை நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதன்மூலம் அம்மாவின் அரசுதான் என்பதைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. மக்களின் அடிப்படைத் தேவைகள், உள்ளாட்சி நிருவாகத்தால் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற அம்மாவின் எண்ணத்தை நிறைவேற்றும்விதமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பான செயல்பாடுகள் அமைத்து நிறைவேறி வருகின்றன என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்யவும், பள்ளியில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், துவக்கப்

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்] [2018 மார்ச் 21

பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஒவ்வோர் ஆண்டும் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது, பள்ளிகளுக்குச் செல்லாத குழந்தைகளைக் கண்டறிந்து, 2018-2019 ஆம் ஆண்டில் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மாவின் உன்னத நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களான நான்கு சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள், மிதி வண்டிகள் மற்றும் பேருந்து கட்டணச் சலுகைகளைத் தொடர்ந்து வழங்கிட ஏதுவாக 2018-2019 ஆம் ஆண்டிற்கான மேற்கூறிய நலத் திட்டங்களுக்காக 1,653.89 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஏராளமான பல்வேறு திட்டங்களின்மூலம், மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சிக்காக, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மாவின் எண்ணங்களான வருங்கால சந்ததிகளின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைப்பதற்கு ஒரே வழி கல்வி வளர்ச்சிதான் என்பதை அறிந்து, தொலைநோக்குப் பார்வையோடு கொண்டு வந்த அம்மாவின் திட்டங்களையும், அம்மாவின் அரசையும் வழிநடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உறுதுணையோடு, மின்னல் வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிற, இளைஞர்களுக்கு எல்லாம் இளைஞராக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய வேகமான செயல்பாட்டின் காரணமாக, மாணவச் செல்வங்கள்மீது அம்மா அவர்கள் காட்டிய அக்கறையைப் பூர்த்தி செய்து வருகிறார்கள். வருங்காலங்களில் எல்லா வகைகளிலும் தமிழ்நாடும், இந்திய தேசமும் சிறந்து விளங்குவதற்கு ஒரே முக்கியப் பங்கு கல்வி வளர்ச்சிதான் என்றுணர்ந்து, தொலைநோக்குப் பார்வையோடு கல்விக்காக அனைத்துத் திட்டங்களையும் கொண்டுவந்து செயல்படுத்த நினைத்து, அம்மாவின் பார்வையையும், ஆசையையும் நன்கு அறிந்து செயல்படக்கூடிய, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உறுதுணையோடு,



2018 மார்ச் 21] [திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

கல்வித் துறையில் பல சாதனைகளைச் செய்து, வருகிறார்கள். தனக்குப் பிறகும் 100 ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சி நடக்கும் என்ற அம்மாவின் சூளுரையை உறுதிப்படுத்தும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் அரசின் பல்வேறு செயல்பாடுகளில் கல்வித் துறையின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்பதற்கேற்ப கல்வித் துறையை உயர்த்தி வருகிறார்கள்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் நமது முதல்வருக்கு உறுதுணையாக நமது தமிழக துணை முதல்வர் அவர்களும், நமது அமைச்சர் பெருமக்களும் இருந்து அம்மாவின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களிடமும், அனைத்தும் ஒருங்கே பெற்ற நாடு போற்றும் தலைவியாக விளங்கிய இதய தெய்வம் அம்மா அவர்களின் பல்கலைக்கழகத்தில் பயின்ற அனைவரிடமும் திறமை இருக்கின்றது. எதிர் அணியினர் போடுகின்ற பந்தை சிக்சர் அடிக்கும் அமைச்சர்களும் இருக்கின்றார்கள். சந்தர்ப்பத்திற்கேற்ப fours-ஆக அடிக்கிற அமைச்சர்களும் இருக்கிறார்கள். சில நேரங்களில் கண்டபடி வருகின்ற fast மற்றும் spin பந்துகளை கட்டை போட்டுத் தடுத்து, அந்தப் பந்தை எடுத்துப் போட்டவர் கையிலேயே கொடுக்கும் வல்லமை படைத்தவர்களும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசை நடத்துவது என்பது 2½ மணி நேரம் ஓடும் பொழுதுபோக்கு சினிமா படம் அல்ல. மாண்புமிகு அம்மாவின் பல்கலைக்கழகத்தில் பயின்ற நமது முதல்வர், கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து கிராமப்புற மக்களின் கஷ்ட நஷ்டங்களை அனுபவமாக நேரில் உணர்ந்தவர். அப்பன், பாட்டன், முப்பாட்டன் ஆகியோர் அமைச்சராகவோ M.L.A., M.P. ஆகவோ இருந்து, திடீரென்று வந்தவர் அல்ல. ஒரு சாமானியராக இருந்து படிப்படியாக கழகத்தில் ஒன்றிய, மாவட்ட, மாநில அளவில் கழகப் பொறுப்பு பெற்று பணியாற்றிய அனுபவம் பெற்றவர். வாரியம், M.L.A., M.P., அமைச்சர், என படிப்படியாக, அரசுப் பதவியிலும் அனுபவம் பெற்று, அம்மாவின் நம்பிக்கை நட்சத்திரமாகத் தொடர்ந்து பணியாற்றி, இன்று அம்மாவின் ஆசியோடு, ஆடம்பரம் இல்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல்,

[2018 மார்ச் 21

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற
கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

பந்தா இல்லாமல், சீன் போடாமல், கலர் கலராக dress போட்டுச் சென்று ஊர் ஊராக டாட்டா காண்பிக்காமல், எளிமையாக, விவேகமாக ஆக்கப்பூர்வமாக தமிழக மக்களுக்கு அல்லும் பகலும் பணியாற்றி வருகிறார். இப்படிப்பட்ட முதல்வரைப் பார்த்து குறை கூறுவது என்பது, குறை கூற வேண்டும் என்பதற்காகவே கூறுவதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்பதால் அனுபவம் வாய்ந்தவர்கள் பேசுவதையும், எதிர் அணியின்ர் பேசுவதையும் நான் ஆர்வமாகக் கவனித்து வருவதுண்டு. பொதுவாக நீதிமன்றத்தில் இருக்கும் பிரச்சினையைப் பேசக் கூடாது என்ற மரபு இருப்பதாக அறிகிறேன். நீதிமன்றத்திற்கென்று மரியாதை இருக்கும்போது, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** உச்ச நீதிமன்றம் காவேரிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட உத்தரவிட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். காவேரிப் பிரச்சினையை எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். முதலில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். உரையை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** உச்ச நீதிமன்றம் காவேரிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட உத்தரவிட்டு, குறிப்பிட்ட நாளுக்குள் ஆணையம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. இன்னும் குறிப்பிட்ட நாட்கள் இருக்கும்போது மத்திய அரசை எதிர்க்க வேண்டுமென்றும், அ.தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்றும் எதிர் அணி கூறுவதைப் பார்த்து, கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இடம் பெற்றும் தமிழகத்தில் ஆட்சி செய்தபோதும், இலங்கையில் தமிழர் இனம் அழிவதைக் கண்டித்து மத்திய அரசில் அங்கம் வகித்த பதவியையும், தமிழகத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த பதவியையும், அப்போது



2018 மார்ச் 21] [திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற
கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

ஏன் ராஜினாமா செய்யவில்லை என்று மக்கள் கேட்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் நலனுக்காகப் பல்வேறு திட்டங்கள் பெறுவதற்கும், கொண்டு வருவதற்கும், தமிழக வளர்ச்சிக்காகவும் மத்திய அரசை அனுசரித்துச் செல்வது ஒன்றும் தவறில்லை. அனுசரிப்பதை தவறு என்று கூறுபவர்கள், தமிழகம் வளர்ச்சி அடைவதைப் பிடிக்காதவர்கள் என்றுதான் கருத முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்க முக்கிய பங்காற்றிய காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அப்படிப்பட்ட பாரம்பரியமுள்ள காங்கிரஸ் கட்சி, **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை இத்துடன் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு அம்மாவின் அரசை வழி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களின்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்] [*2018 மார்ச் 21*

நிதிநிலை அறிக்கையானது அம்மாவின் கனவை நனவாக்குவதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள், "தனக்குப் பிறகும் நூறாண்டுகள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கும்" என்று முழக்கமிட்டதற்கு அச்சாரமாக, இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கின்றது என்று கூறி, எதிரணியினர் எவ்வளவு பிரச்சினைகள் செய்தாலும், அதைத் தவிடுபொடியாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான அரசை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் தொடர்ந்து வழிநடத்தி, தமிழகத்தை முன்னோடி மாநிலமாக. . .

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் உரையை முடிக்கமாட்டீர்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** உரையை முடித்துவிடுகிறேன். இதற்கு அம்மா அவர்களின் ஆசியோடும், அம்மா அவர்களின் விசுவாசிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் என்றும் ஆதரவாக இருப்பார்கள் என்பதைக் கூறி, வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தற்போது பட்ஜெட்மீதான உரையை ஆரம்பிக்கவில்லை. அவர், காங்கிரஸ்காரர்களை, ** என்று சொல்கிறார். இது நியாயமா? இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? இதை அவைக் குறிப்பில் பதிய வைப்பீர்களா?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*2018 மார்ச் 21*]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *2018-2019* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலைஅறிக்கையைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசின் பட்ஜெட், பற்றாக்குறையாகவே தொடர்ந்துகொண்டிருக்கிறது. பட்ஜெட்டிலே, ஏறத்தாழ *3* இலட்சத்து *56* ஆயிரம் கோடி ரூபாய் தற்போது துண்டு விழுந்திருக்கிறது; நாம் அதிகமாகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இந்தத் தொகைக்கு வட்டியாக நாம் செலுத்துகின்ற தொகை ஏறத்தாழ *30* கோடி ரூபாயாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இவ்வளவு பெரிய வித்தியாசம் தமிழக பட்ஜெட்டிலே வந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நம்முடைய அரசு ஆராய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தொடர்ந்து துண்டு விழக்கூடிய நிதியின் அளவு ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதனுடைய கடைசி நிலை என்ன ஆகும் என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு என்ன காரணம் என்பதையும் நீங்கள் சிந்திக்க வேண்டும். என்னால் சிந்திக்க முடிந்ததை நான் சொல்கிறேன். இதை இரண்டு பிரிவாகப் பிரிக்கிறேன்; ஒன்று, மத்திய அரசிடமிருந்து நிதிகள் சரியாக நமக்கு வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்; இன்னொன்று, நிதியைக் கையாளுவதில், எங்கேயோ ஓரிடத்தில் தவறு இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் அளவு வரன்முறை இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. அதற்குரிய வட்டியை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தீர்களா என்றும், அசலைக் கட்டுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்; வட்டி எவ்வளவு கட்டப்படுகிறது என்றும் விளாவாரியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கடன் அளவைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான், மத்திய அரசு, *25* சதவிகிதத்திற்குள் கடன் அளவு இருக்க

வேண்டும்; அதாவது, ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பில், 25 சதவிகிதத்திற்குள் கடன் அளவு இருக்க வேண்டுமென்று வரையறை செய்துள்ளது. 25 சதவிகிதத்திற்குள் கடன் அளவு இருந்தால்தான், பெறுகின்ற கடனையும், அதற்குரிய வட்டியையும் செலுத்துகின்ற நிலை அந்த மாநிலத்திற்கு ஏற்படும். இதுதான் இதற்குள் பொதிந்திருக்கக்கூடிய அர்த்தம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாநிலம், பெறுகின்ற கடனுக்குரிய அசலையும், வட்டியையும் கட்டுகின்ற நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் அளவு 25 சதவிகிதத்திற்குள்ளாகத்தான் இருக்கிறது என்பது உண்மைதான். இல்லை என்று சொல்லவில்லை. ஏன் நம் மாநிலம் இன்னும் முன்மாதிரியாக நடந்து கொள்ளக்கூடாது? ஏன் 25 சதவிகித அளவிற்குக் கடன் அளவு செல்ல வேண்டும்? என்பதுதான் என்னுடைய கேள்வி. நான் இரண்டு வழிகளில் சொல்கிறேன்; ஒன்று, மத்திய அரசு நமக்கு கொடுக்க வேண்டிய நிதியை ஒழுங்காகத் தரவில்லை என்று மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-40

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், கர்நாடக அரசுக்கு 155.4 சதவீதமும், மகாராஷ்டிராவிற்கு 148.93 சதவீதமும், குஜராத்திற்கு 137.70 சதவீதமும், கேரளாவிற்கு 143.92 சதவீதமும், அதேபோல, ஒருங்கிணைந்த ஆந்திராவிற்கு 127.59 சதவீதம் அளவிற்கும் கொடுத்திருக்கிறார்கள் என்றும், ஆனால், தமிழகத்திற்கு 89.35 சதவீதம்தான் கொடுத்திருக்கிறார்கள் என்றும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே எந்த இடத்திலே, ஏன் மத்திய அரசு நமக்குத் தரவில்லை. மத்திய அரசிடமிருந்து நிதி பெறுவதற்கு நாம் என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்வளவு பெரிய வித்தியாசம் ஏன் வருகிறது என்பதை ஆராயும்போது, இதெல்லாம் ஒரு காரணமாக அமைகிறது.





தமிழ்நாட்டின் நிதி வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு நீங்கள் ஏதாவது ஒரு வழியைத் தேட வேண்டும். அந்த வழி என்ன என்று எனக்குப் புரியவில்லை. அதற்குரியவர்களை வைத்து, நிதி ஆதாரங்களை அதிகப்படுத்த வேண்டும். இல்லையென்றால், தமிழகத்தினுடைய நிலை வேறுவிதமாக மாறுவதற்கு வழி இருக்கிறது. நான் ஒருமுறை பேசும்போதுகூட, நீங்கள் குறுக்கிட்டீர்கள். நான் சற்று அதிகமாகச் சொல்லிவிட்டேன் என்று எண்ணினேன். அந்த வார்த்தையை நான் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நிதிநிலை மோசமாக இருக்கிறது. இதை சரிசெய்ய வேண்டும். எந்த அரசானாலும் கடன் இல்லாமல் அரசை நடத்த முடியாது. அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், இவ்வளவு மோசமாகப் போகக் கூடாது என்பது என்னுடைய விருப்பம். அதேசமயத்திலே, மிகப் பெரிய அளவில் வருமானம் வந்துகொண்டிருந்த மணல் விற்பனையை நீங்கள் முறையாக இன்னும் கையாளவில்லை; இன்னும் குவாரிகளைத் திறக்கவில்லை. அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அதிலேயிருந்து நம்முடைய அரசினுடைய கணக்கிற்கு வரவேண்டிய பல கோடி ரூபாய் வருமானம் இன்றைக்குக் கிடைக்கப்பெறாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, மணல் குவாரி இன்னும் திறக்கப்படவில்லை என்ற செய்தியைச் சொல்கின்றார். நீதிமன்றத்திலே சில பொது நல வழக்குகளைத் தொடர்ந்த காரணத்தினாலே, பல மாதங்களாக அந்த வழக்குகள் நடைபெற்று, இப்பொழுதுதான் நமக்குத் தீர்ப்பு கிடைக்கப்பெற்றிருக்கிறது. நீதிமன்றத்திற்கு சென்று, பொது நல வழக்கு சிலரால் தொடுக்கப்பட்டு, அதற்கு தடை விதிக்கப்பட்டது. இப்பொழுது தீர்ப்பு கிடைக்கப்பெற்றபிறகு, அரசாங்கமே மணலை விற்பனை செய்யவேண்டுமென்று முடிவெடுத்து, இப்பொழுது குவாரிகளைத் துவங்குவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது; விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அதாவது முழுக்க முழுக்க எவ்வித தவறும் நடக்கக் கூடாது என்பதற்காக அரசு சில வழிமுறைகளைப் பின்பற்றி, ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளது; கடந்த 15 நாட்களுக்குமுன் ஒப்பந்தப்புள்ளி

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 21

கோரப்பட்டது. ஒருசில குவாரிகளை எடுத்திருக்கின்றார்கள். மற்ற குவாரிகளை எடுக்க யாரும் முன்வரவில்லை. மீண்டும் நாளையதினம் ஒப்பந்தப்புள்ளி கோர இருக்கின்றார்கள். ஆகவே, விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. இதிலே எந்தத் தவறும் ஏற்படக் கூடாது என்பதற்காக, கடுமையாக அந்த விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டு, இப்போது ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டு, விரைவிலே ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு, குவாரிகள் துவங்கப்பட்டு, அரசாங்கமே அந்தக் குவாரிகளை நடத்தும். அதாவது ஆற்றிலோ அல்லது ஓடையிலோ இருந்து அள்ளுகின்ற மணல் yard-க்கு கொண்டுவரப்படும். அள்ளுகின்ற இடத்திலே சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்படும். அதேபோல, அந்த ஆற்றுப் பகுதியிலோ அல்லது ஓடைப் பகுதியிலோ இருந்து அள்ளிக்கொண்டு வருகின்ற அந்த மணலை yard இருக்கும் இடத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கின்ற அளவிற்கு ஓர் ஒப்பந்தம். அதனை பொக்ளைன் இயந்திரங்கள், லாரிகள் மற்றும் tipper போன்ற வாகனங்கள் மூலமாக எடுத்துவர வேண்டும். அதற்கு என்னென்ன வழிமுறைகளெல்லாம் வகுக்கப்பட வேண்டுமென்று அந்த ஒப்பந்தத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாகனத்திற்கு G.P.S. கருவிகள் பொருத்தப்பட இருக்கின்றன. ஏனென்றால், அந்த வாகனம் yard-க்குத்தான் வந்து செல்கின்றது என்ற தகவலை அரசு பெறுவதற்காக இந்த வழிமுறை வகுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல், yard-க்கு வந்தபிறகு கண்காணிப்பதற்காக அங்கேயும் சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்படுகிறது. கேமரா பொருத்தப்பட்டு, யார் யாரெல்லாம் மணல் வேண்டி online மூலமாக விண்ணப்பிக்கின்றார்களோ, அந்த விவரங்கள் பதிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு மணல் விநியோகம் செய்யப்படுகிறது. பணத்தினை ஆன்லைன்மூலமாகக் கட்டுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. இப்படி சட்டத் திட்டங்கள் எல்லாம் கடுமையாக்கப்பட்டு, எந்த இடத்திலும் தவறு ஏற்படாதவண்ணம் நீதிமன்றத்தினுடைய வழிமுறைகளைப் பின்பற்றி மணல் குவாரிகளைத் துவக்குவதற்கு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. விரைவில் அரசால் பல்வேறு மணல் குவாரிகள் துவக்கப்பட்டு, பொது மக்களுக்குத் தேவையான மணல் தட்டுப்பாடின்றி வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2018 மார்ச் 21]

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள், பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** அதேபோல், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கும் இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுவிட்டது. அந்த ஒப்பந்தத்திலே அதற்கும், சில விதிமுறைகளை வகுத்து, ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆன்லைன் மூலமாகவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்யப்பட்டு, அரசாங்கமே அதையும் விற்பனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெளிநாட்டிலிருந்து மணலை இறக்குமதி செய்வது வரைக்கும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மணல் சென்னைக்கு வந்தவுடன் அல்லது தூத்துக்குடிக்கு வந்தவுடன், அரசு அதை எடுத்து விற்பனை செய்யும். அங்கேயும் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு, யார் யாரெல்லாம் மணல் வேண்டி விண்ணப்பிக்கின்றார்களோ, அவர்களுக்குத் தங்குதடையில்லாமல் மணலை விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்தும் மணலை இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) சட்டத்திற்குப் புறம்பாக அதைக் கொண்டு வந்த காரணத்தினாலும், அதிலே, சிலிக்கான் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இறக்குமதி செய்யப்படுகின்ற மணலைக்கூட ஒவ்வொரு முறையும் சோதனை செய்த பிறகுதான், விநியோகம் செய்கிறோம். ஏனென்றால், வெளிநாட்டிலிருந்து மணலைக் கொண்டுவரும்போது அது கலப்பட மணலா, கட்டுமானத்திற்கு உகந்ததா என்பதையெல்லாம் ஆய்வு செய்து, இறுதியில் ஆய்வறிக்கையிலே அது தரமான மணல் என்று முடிவு வந்த பிறகுதான், அந்த மணலை விற்பதற்கு அரசு அனுமதிக்கின்றது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று, தமிழகத்திலே நிதி நிலைமையை அதிகப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது மணலைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய மணல் தரமற்ற மணல் என்று அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். அதற்குரிய பரிசோதனைகள் செய்து, அதற்குரிய சான்றிதழ்கள் எல்லாம் வந்திருக்கின்றன என்று நான் நம்புகிறேன். நான் வேண்டுமென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், தனியார் யாருக்கும் இனிமேல் மணலை விற்பனை செய்வதற்கு அனுமதி கிடையாது; திட்டவட்டமாக அரசால் அறிவிக்கப்பட்டுவிட்டது. அதற்குத் தேவையான சட்டமும் இயற்றப்பட்டு விட்டது. ஆகவே, யார் கொண்டு வந்தாலும் அரசின் மூலமாகத்தான் அந்த மணலை விற்பனை செய்ய வேண்டும். அவர்கள் இஷ்டம் போல விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டால், யாரும் கட்டுப்படுத்தவே முடியாது. நம்முடைய தமிழகத்தில் ஆற்றுப் பகுதிகள் இருக்கின்றன; ஓடைப் பகுதிகள் இருக்கின்றன; பிறகு எங்கு வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் மணலை அள்ளிக் கொண்டு சென்றுவிடுவார்கள்; ஆகவேதான், அரசாங்கமே மணலை விற்பனை செய்ய வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் மாநிலத்திற்குள்ளேயும் சரி, வெளிநாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் மணலைக் கொண்டுவருகின்றபோதும், அரசின் மூலமாகத்தான் மணலை விற்பனை செய்ய வேண்டுமென்று அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.



2018 மார்ச் 21]

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேளாண் துறையைப் பற்றி ஒரு நீண்ட விவாதம் நடந்தது. நான் மீண்டும் கேட்கின்ற கேள்விகளுக்கு அரசிடமிருந்து சரியான பதிலை எதிர்பார்க்கிறேன். வேளாண் துறையைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு விவசாயிகள் மிக மோசமான நிலைமையிலே இருக்கின்றார்கள். கடன் தொல்லையால் விவசாயிகளுக்கு என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் தங்கள் உயிரையே மாய்த்துக்கொள்ளக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு இந்த அரசு உதவியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

அடுத்து, பயிர்க் காப்பீட்டுத் திட்டம். பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், முதலிலே இருந்த திட்டத்தை மாற்றி, இப்போது பிரதம மந்திரியினுடைய பெயரால் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதிலே பல வழிமுறைகள் தவறுதலாக இருப்பதாக நான் கருதுகிறேன். தமிழகத்திலே எத்தனை நபர்கள் இந்தக் காப்பீட்டுத் திட்டத்திலே பிரிமியம் கட்டியிருக்கிறார்கள். எத்தனை நபர்களுக்கு நீங்கள் நிவாரணம் கொடுத்திருக்கிறீர்கள்? நிவாரணம் கிடைக்காதவர்கள் எத்தனை பேர்? கிடைக்காததற்குக் காரணம் என்ன? தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால் தமிழகத்திலே பிரிமியம் செலுத்தியிருக்கக்கூடிய விவசாயிகள் பலருக்கு இன்று வரை நிவாரணம் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, காசோலையைக் காண்பித்து ரூ.5/-, ரூ.10/-, ரூ.15/-க்கு வழங்கியிருப்பதாகச் சொன்னார். ஆனால், நான் சொல்கிறேன்; முழுமையாகக் கிடைக்காதவர்கள் இருக்கிறார்கள். ஓராண்டு, இரண்டாண்டுகள் தாண்டிவிட்டன. வரும் ஆண்டிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு குளறுபடிகள் குறித்து இந்த அவையில் விவாதம் நடைபெற்று வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டுக்கான பயிர்க்

காப்பீட்டுத் திட்டத்திற்கு மாநில அரசு வழங்க வேண்டிய பிரிமியத் தொகையை எவரும் எதிர்பார்க்காதவகையில், காலத்தோடு, நேரத்தோடு 410 கோடி ரூபாயை ஒரே தவணையில் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கிய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எங்களுடைய பங்கு 100 சதவிகிதமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால், புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிற மத்திய அரசு, இப்போது புதிதாக பல்வேறு காப்பீடு நிறுவனங்களை இதிலே அறிமுகப்படுத்தி, மாவட்ட வாரியாக நிறுவனங்களைப் பிரித்துப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். திருவாரூர் மாவட்டத்தில் நிவாரணம் 100 சதவிகிதம் சரியாக வழங்கப்பட்டுவிட்டது; விவசாயிகளும், விவசாய சங்கங்களும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஆனால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் நடந்திருக்கின்றன. அதற்குக் காரணம், இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கெனவே இருந்த முறை முற்றிலுமாக மாற்றப்பட்டு, தற்போது பல்வேறு stages, பல்வேறு நிலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, விதைக்கப்பட்டு அந்த விதை முளைக்கவில்லை என்றாலோ அல்லது விதை முளைத்து 30 நாட்களில் அது கருகிவிட்டது என்றாலோ, அதற்கு primary damage என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அது முதற்கட்ட சேதாரம். அதற்குப்பிறகு இரண்டாம்கட்ட சேதாரம் மற்றும் முழு சேதாரம் என்று பிரித்திருக்கிறார்கள். 142 ஆண்டுகளில் இல்லாத வறட்சியால் தமிழகமெங்கும் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி, விவசாய நிலங்கள் வறட்சிக்கு இலக்காகி பாதிப்புக்குள்ளாகிவிட்டன. தற்போது, இந்தத் திட்டத்தில் புதிதாக மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற காப்பீட்டு நிறுவனங்களுக்குப் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லை; போதிய அலுவலர்களும் இல்லை. இத்தகைய குறைபாடுகள் காரணமாகப் பல்வேறு தவறுகள் நடந்திருப்பது உண்மை. அதனால், Statistical Officers, Agricultural Officers, Insurance நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோரையெல்லாம் அழைத்துப் பேசி, தவறுகள் எப்படியெல்லாம் நடந்திருக்கின்றன என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. சில கூட்டுறவுச் சங்கங்களின் pincode number-ஐ மாற்றி பதிவு செய்திருக்கிற காரணத்தால், pincode number மாறியிருப்பதால், காப்பீட்டு நிறுவனத்தால் பணம் போட





முடியவில்லை. இப்படிப்பட்ட தவறுகளும் கண்டறியப்பட்டுள்ளன. சில நேரங்களில் ‘zero’ என்பதற்குப் பதிலாக, ‘O’ என்று நினைத்துத் தவறாகவும் பதிவு செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட clerical mistakes காரணமாகவும், வங்கிகளுக்குப் பணம் அனுப்பப்படுவதில் தவறுகள், குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

உதாரணமாக நான் ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்படி primary damage என்று சொல்லப்படுகிற 25% இழப்பீடுதான் மிகக் குறைந்தபட்ச இழப்பீடு. அந்த இழப்பீட்டைக் கண்டிப்பாகக் கொடுத்தாக வேண்டும். ஆனால், இங்கே காசோலைகளைக் காண்பித்து குறிப்பிட்டதைப்போல, குறைவாக மதிப்பீடு செய்து கொடுத்திருப்பது தவறு என்பதால், நம்முடைய வேளாண்மைத் துறைச் செயலாளர் அவர்கள், Lead Bank Manager மற்றும் அதிகாரிகளை காப்பீட்டு நிறுவன அதிகாரிகளை அழைத்து கலந்துபேசியிருக்கிறார். இந்த மாதம் 15 ஆம் தேதிக்குள்ளாக இதுபோன்று ஏற்பட்டிருக்கக்கூடிய தவறுகளை முற்றிலுமாகக் களைந்துவிடுவோம் என்று அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். நானே அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். அதுமட்டுமல்ல; நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போன்றே, நான் சொல்லியிருப்பதைப் போன்ற தவறுகள், குளறுபடிகள் எல்லாம் 2 சதவிகிதம் அல்லது 3 சதவிகிதம் பேருக்கு மட்டும்தான் ஏற்பட்டிருக்கிறதே தவிர, 97 சதவிகித விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முற்றிலுமாக, முழு நிவாரணம் வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

அதுமட்டுமல்ல; இந்த இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் அதிக அளவில் பிரிமியம் தொகையை வசூலித்ததோடு, அதிகமாக விவசாயிகளை இக்காப்பீட்டுத் திட்டத்தின்பால் ஈர்த்ததன் காரணமாகவும், அந்தக் காப்பீட்டுத் தொகையை அவர்களுக்குச் சரியாக வழங்கியதற்காகவும், இந்தியாவில் 4 மாவட்டங்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே இருக்கிற 4 மாவட்டங்களுக்குத்தான் அந்தப் பரிசுகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டில் காப்பீடு செய்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இதுவரை மொத்தத்தில் 10 இலட்சத்து 18 ஆயிரத்து 728 விவசாயிகளுக்கு, 3,113 கோடியே 26 இலட்சம் ரூபாய் இழப்பீடுத் தொகையாக ஒப்பளிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருடைய சிவகங்கை மாவட்டத்தில் 70,410 விவசாயிகளுக்கு 247 கோடியே 53 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. இதில் முறையாக வேளாண்மைத் துறை, புள்ளியியல் துறை, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள காப்பீட்டு நிறுவனம், வருவாய்த் துறை இவையெல்லாம் சேர்ந்துதான் 33 சதவிகிதத்திற்கு மேல் 50 சதவிகிதம் வரை பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு கணக்கீடு செய்திருக்கிறது. இதில் எந்தவிதமான தவறும் நடக்கவில்லை. ஏதோ ஒன்று, இரண்டு நிகழ்வுகளில் அந்தக் கணக்கீட்டின்படி, அதாவது பயிர் அறுவடை பரிசோதனை செய்வதன்மூலம் சில தவறுகள் நடந்திருக்கின்றன. அதுவும் தற்போது நிவர்த்தி செய்யப்படும். இன்னும் ஒரு சதவிகிதம் அல்லது இரண்டு சதவிகிதம்தான் பாக்கி இருக்கிறது. மீதமுள்ள அனைவருக்கும் கொடுத்தாகிவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நம்முடைய வேளாண்மைத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் பொதுவாகப் பதில் சொல்கிறார்களேயொழிய, நாங்கள் குறிப்பாகக் கேட்பது என்ன என்பதைத் தெரிந்து பதில் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். நான் இந்தப் பிரச்சினையிலே தொடர்ந்து ஓராண்டாக இதைக் கவனித்து வருகிறேன். நம்முடைய வேளாண்மைத் துறையினுடைய செயலாளரை பல முறை சந்தித்து நான் அவர்களுடன் விவாதித்திருக்கிறேன். இதிலே ஒரு சிறிய தவறு; பெரிய அளவில் யாரும் தவறு செய்யவில்லை.





சிறிய தவறு இருக்கிறது. அந்தத் தவறை ஏற்றுக்கொண்டு அதைச் சரி செய்துவிடுங்கள். அவ்வளவுதானேயொழிய, இதிலே பெரிய பிரச்சினை கிடையாது. ஏன், இன்றைக்கு எத்தனை பேர் அந்த இன்ஸூரன்ஸ் தொகையைப் பெறமுடியாமல் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நீங்கள் கொடுத்தவர்களையே சொல்கிறீர்கள். 75 சதவிகிதம் கொடுத்தோம், 90 சதவிகிதம் கொடுத்தோம் என்று சொல்கிறீர்களேயொழிய, பாக்கி நபர்களுக்குக் கிடைக்க வேண்டும்; ஒன்று.

இரண்டாவது, ஓராண்டு முடிந்துவிட்டது. மறு ஆண்டு ஆரம்பித்திருக்கிறது. இந்த ஆண்டிலே இன்னும் நம்முடைய அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் எவை என்று அறிவிக்கவில்லை. அதேபோல, மாவட்டத்திலே எந்தெந்த தாலுகாக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும் நீங்கள் அறிவிக்கவில்லை. இதிலேதான் குழப்பம் வருகிறது. எந்த மாவட்டம் சேர்ந்திருக்கிறது; எது சேரவில்லை என்பதை தயவு செய்து நீங்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் எவை? தமிழகம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதா; இல்லை, சில மாவட்டங்களிலே மழை நன்றாகப் பெய்திருக்கிறதா என்பதை அரசு அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கரி. இராமசாமி:** அதேபோல, விவசாயிகளுடைய நெல்லுக்கு விலையை அதிகப்படுத்த வேண்டும். நான் இப்படிச் சொன்னால் அதற்கு உடனடியாக நீங்கள் இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை என்று சொல்லிவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். நெல்லுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகப்படுத்துங்கள். நம்முடைய அரசு கொடுக்கக்கூடிய ஊக்கத் தொகையை அதிகப்படுத்துங்கள். அது ஒரு குவிண்டாலுக்கு ரூ.2,500/- என இருக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சி சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள் சென்ற முறை பேசும்போதும் நெல்லுக்கான விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று சொன்னார்கள். தற்பொழுதும் அதே கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். இதே கோரிக்கையை காங்கிரஸ் கட்சி அதிகமான ஆண்டுகள் மத்தியிலே ஆட்சி செய்த காலங்களிலிருந்து தொடர்ந்து நாங்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். நெல்லுக்கான ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம்தான். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்து இறங்கிய கடைசி நாளில் ஒரு குவிண்டால் நெல் ரூ.1,100/- என்றுதான் விற்கப்பட்டது. இன்றைக்கு ஒரு குவிண்டால் நெல் ரூ.1,660/- ஆக விற்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஊக்கத் தொகையாக சன்ன ரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 70 ரூபாயும், சாதாரண ரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதிகமான தண்ணீர் கிடைக்கப்பெறாததால், பாதிக்கப்பட்ட நிலையிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு ரூ.40 கோடியை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கியிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கிய தொகை மட்டும் ரூ.530 கோடி என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இன்னும் ஓர் அறிவிப்பை மத்திய அரசு செய்திருக்கிறது. விவசாய உற்பத்தியை இரண்டு மடங்கு ஆக்கப்போவதாக மத்திய அரசு அறிவித்தது. ஆனால், எந்த வகையிலே இரண்டு மடங்காக்கப்போகிறார்கள் என்பதைச் சொல்லவில்லை. விவசாயிகள் தங்கள் போராட்டங்களைத் தொடர்ந்து செய்கிறார்கள். மத்திய அரசைப் பொறுத்தமட்டில்,





இரண்டு மடங்காக்குகிறோம் என்று சொல்லிவிட்டு, பிறகு அவர்கள் அதைப்பற்றி எதுவும் கண்டுகொள்வதாக இல்லை. நிதி பெறுவதிலே நாம் பின்னுக்குத் தள்ளப்படுகிறோம்; விவசாயிகளுடைய பிரச்சினைகளைக் கவனிப்பதிலே நாம் பின்னுக்குத் தள்ளப்படுகிறோம். இதுபோன்று பல பிரச்சினைகளில் நாம் பின்னுக்குத் தள்ளப்படுகிறோம். காவேரிப் பிரச்சினையில் நாம் என்ன நினைக்கிறோமோ அது இன்னும் நடக்கவில்லை. அதற்கு அரசுத் தரப்பில் உச்ச நீதிமன்றம் விதித்துள்ள கடைசி காலக்கெடுவைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அந்த தினத்திலாவது அல்லது அதற்குப் பிறகாவது ஒரு கடுமையான நடவடிக்கையை எடுங்கள். அப்பொழுதுதான் விவசாயிகளைக் காப்பாற்ற முடியும். மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரவில்லை என்றால், இங்கே இருக்கக்கூடிய தஞ்சாவூர் மாவட்டம் என்ன ஆகும் என்பதைப் பற்றி நீங்கள் யோசியுங்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நிச்சயமாக மத்திய அரசாங்கத்திடம் நாம் கடுமையாக அழுத்தம் கொடுக்க வேண்டும். தற்பொழுது கொடுத்திருக்கின்ற அழுத்தம் போதாது என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்; இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. கரி. இராமசாமி:** முடித்துவிடுகிறேன். அடுத்தபடியாக, சென்னையில் இருக்கக்கூடிய பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய நினைவிடத்தில் பராமரிப்பு மிகவும் குறைந்து, இன்றைக்குச் செடிகள் அங்கே மண்டிக் கிடக்கின்றன. நினைவிடங்களைப் புதியதாக அமைக்கிறீர்கள்; அழகாக அமைக்கிறீர்கள்; என்னென்னவோ செய்கிறீர்கள்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், பெருந்தலைவர் காமராசருடைய நினைவிடத்தை நீங்கள் ஏன் இப்படி வைத்திருக்கிறீர்கள்? அதன் பராமரிப்பிற்காக நீங்கள் நிதி ஒதுக்கினால் என்ன? ஏன் நிதி ஒதுக்க மறுக்கிறீர்கள்? உங்களுக்கு என்னென்ன ஆதாரம் வேண்டுமோ என்னிடம் இருக்கிறது. அங்கே புதர் மண்டிக் கிடக்கிறது. நிறைய புகைப்படங்கள் வைத்திருக்கிறேன்.

(உறுப்பினர் தன் கையில் வைத்திருந்த புகைப்படங்களை எடுத்துக் காண்பித்தார்.)

எனவே, தயவு செய்து நீங்கள் காமராசர் நினைவிடத்தை சுத்தம் செய்து, இன்றைக்கு முறையாகப் பராமரித்திட வேண்டும். அந்த நினைவிடம் அழகாக அமைய வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம். அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வேண்டுகோளோடு முடித்துவிடுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** சட்டம்-ஒழுங்கு பிரச்சினை. குறிப்பாக, பெண்கள் பாதுகாப்பிலே சில ஐயப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதை நாம் முதலில் கவன ஈர்ப்பில் பேசினோம். அதேமாதிரி, I.T. area-ல் மோசமான நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்களே தற்கொலை செய்துகொள்கிறார்கள். அதைப்பற்றியும் நீங்கள் சிந்திக்க வேண்டும். ஏற்கெனவே 3 காவலர்கள் தற்கொலை செய்து கொண்டதாக தகவல். ஏன் தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டும். இதையெல்லாம்விட்டு இன்னொன்று செய்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் விளக்கமாக ஏற்கெனவே அவையிலே தெரிவித்திருக்கின்றேன். இப்பொழுது அண்மையிலே நடைபெற்ற தற்கொலை சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம். குறிப்பாகக் குடும்பப் பிரச்சினை, அவர்களுக்குள்ள நோய்ப் பிரச்சினை அல்லது காதல் பிரச்சினை போன்ற ஏதாவது ஒரு சொந்தப் பிரச்சினையின் காரணமாகத்தான் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன என்று வழக்கு விசாரணைகளின் முடிவில் தெரியவருகிறது. ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்கான பதிலை நான் தெரிவித்திருக்கின்றேன்.





ஆகவே, அரசினால் யாரும் தற்கொலை செய்துகொள்ளவில்லை. அவர்களுக்குள்ள பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக, மன அழுத்தத்தின் காரணமாகத்தான் அவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு, அவர்களது மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு பல்வேறு கட்டங்களில் நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இப்பொழுது சிறிய, சிறிய பிரச்சினைகளுக்குக்கூட, கட்சிகளின் தலைவர்களை இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கைது செய்திருக்கிறீர்கள். அதற்கெல்லாம் என்ன காரணம் என்று தெரியவில்லை. சமீபத்தில் ரத யாத்திரை என்றார்கள். உடனடியாக எதிர்க்கட்சித் தலைவர்கள் திரு. திருமாவளவன் மற்றும் திரு. ஜவாஹிருல்லா போன்றவர்களை எல்லாம் கைது செய்திருக்கிறீர்கள். இவர்கள் எல்லாம் தீவிரவாதிகளா? இவர்கள் என்ன தவறு செய்தார்கள்? இவர்களை ஏன் கைது செய்ய வேண்டும்? இதையெல்லாம் இந்த அரசு தவிர்க்க வேண்டும். நீங்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள்மீது எடுக்க வேண்டும். அதிலே நாங்கள் தலையிடவில்லை. குற்றவாளிகள்மேல் நடவடிக்கை எடுங்கள். தீவிரவாதிகள்மேல் குண்டாஸ் போடுங்கள். இன்றைக்கு என்ன நடக்கிறது? ஏன் சிலைகளை உடைக்கிறார்கள்? நான் யார் சிலையை என்று சொல்லவில்லை. ஏன் சிலைகளை உடைக்கிறார்கள்? உடைக்கத் தூண்டுபவர்கள்மேல் ஏன் நடவடிக்கை எடுக்க மறுக்கிறீர்கள்? அந்த மாதிரி நிலைமை வரும்பொழுதுதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை காலையிலேயே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதற்கு முழு விளக்கம் கொடுத்திருக்கின்றோம். யார் உடைத்தார்கள் என்ற விவரத்தைக் கொடுத்திருக்கின்றோம். இதுபோன்ற

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 21

நிகழ்வுகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. அரசியல் கட்சித் தலைவர்களுடைய சிலைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன; நம்முடைய தேசியத் தலைவர்களுடைய சிலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குண்டான பாதுகாப்பினை அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எங்கேயாவது இதுபோன்ற அசம்பாவிதம் ஏற்பட்டால், உடனடியாக அரசு தலையிட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன்.

பிற்பகல் 2-10

புதுக்கோட்டையில்கூட ஆலங்குடியிலே தந்தை பெரியார் அவர்களுடைய சிலை உடைக்கப்பட்டவுடன், உடனடியாகக் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு, 12 மணி நேரத்திற்குள் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, இன்றைக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறக் கூடாது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. இருந்தாலும், அனைத்துத் தலைவர்களுடைய சிலைகளுக்கும் தக்க பாதுகாப்பு அளிப்பதற்கு அரசால் உத்தரவிடப்பட்டிருக்கின்றது. ஆங்காங்கே இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நடைபெறாதவண்ணம் பார்த்துக் கொள்வதற்கும், அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கரி. இராமசாமி அவர்களே, உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதோ முடித்துவிடுகிறேன், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குற்றவாளிகளை நாங்கள் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்கின்றோம் என்று சொல்கிறார்கள். அவர்களை open ஆக தூண்டிவிடுபவர்களை, open stage-ல் தூண்டிவிடுகிறார்களே,



2018 மார்ச் 21] [திரு. கரி. இராமசாமி]

அவர்களை ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்? ** வேறு ஒன்றும் கிடையாது. உங்கள் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது வேண்டாம். நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** நான் உரையை முடித்துவிடுகிறேன். உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் இழுத்தடிக்கிறீர்கள். நான் பார்த்தேன்; இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்கான காரணத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், நீங்கள் எப்பொழுது வார்டையெல்லாம் பிரிப்பது? எப்போது தேர்தலை நடத்துவது? உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை என்றால், அடிப்படை ஜனநாயகம் கெட்டுவிடும்; அடிப்படை அமைப்பே சீர்குலைந்துவிடும். உள்ளாட்சித் தேர்தல்தான் நமக்கு முக்கியம். நீங்கள் ஏன் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உள்ளாட்சித் தேர்தலை நடத்துகிறோம், நடத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டு, தனி அதிகாரிகளினுடைய பதவிக் காலத்தைத்தான் நீட்டித்துக் கொண்டு போகிறீர்களேயொழிய, உள்ளாட்சித் தேர்தலை நீங்கள் நடத்த முன்வரவில்லை. இது மிகப் பெரிய தவறு. நீங்கள் உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள். நீங்கள் என்ன காரணம் சொன்னாலும், அது சரியான காரணமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உரையை நிறைவு செய்யுங்கள். நேரமாகிவிட்டது, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** முடித்துவிட்டேன். உங்களுடைய வேண்டுகோளை ஏற்று, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள், “உள்ளாட்சித் தேர்தலை ஏன் நடத்தவில்லை?”

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [*2018 மார்ச் 21*

என்று கேட்டதோடு, "தேர்தலை நடத்துவதற்கு ஏன் அஞ்சுகிறீர்கள்" என்றும் கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே, தேர்தல் நடத்துவதற்கு தேதி அறிவிக்கப்பட்டு, nomination தாக்கல் செய்து, தேர்தல் நடக்கவிருந்த நேரத்தில், நீதிமன்றத்திற்கு சென்றது யார் என்று உங்களுக்குத் தெரியும். உங்கள் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மட்டுமல்ல; அதற்குப் பின்னால், Supreme Court-க்கு சென்றது யார்? உயர் நீதிமன்றத்திற்கு மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது யார்? அந்த விவரங்கள் எல்லாம் தெரியும். தற்போது எல்லை வரையறை செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போதுகூட அதற்காக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியிருக்கிறோம். நாங்கள் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருப்பதால்தான், நிதியை ஒதுக்கியிருக்கிறோம். நாங்கள் தயாராக இருக்கிறோம். இன்றைக்கு வார்டு வரையறை செய்து கொண்டிருக்கிறோம். அது குறித்தெல்லாம் முழுமையாக விளக்கம் சொல்வதற்கு, ஆரம்பத்திலிருந்து complete ஆக சொல்வதற்கு நேரம் ஆகும்; என்னிடம் *3*, *4* பக்கங்களுக்கு விவரங்கள் இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தினால்தான் சொல்ல முடியவில்லை. ஆகவே, முழுமையாக அதற்குத்தான் நிதி ஒதுக்கியிருக்கிறோம். தேர்தல் நடத்துவதற்கு நாங்கள் தயாராகயிருக்கிறோம். அவர்கள் நீதிமன்றத்திற்கு அப்பொழுது செல்லாமல் இருந்திருந்தால், இந்நேரம் தேர்தல் நடந்து முடிந்து, அனைவரும் பதவிக்கு வந்திருப்பார்கள். அதன் காரணமாகத்தான் தற்பொழுது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், தயாராக இருக்கிறோம். வார்டு வரையறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது நிறைய petitions வந்திருக்கின்றன. மாநில தேர்தல் ஆணையத்தின் சார்பாக மண்டல வாரியாகச் சென்று கூட்டம் நடத்தினார்கள். இன்றைக்கு மாவட்ட வாரியாகக் கூட்டம் போடுவதற்கு நிறைய petitions வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேகூட ஏற்கெனவே தெரிவித்ததைப்போல், அம்மா அவர்களுடைய அரசு தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.



*2018 மார்ச் 21*]

***மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில் உள்ள பெருந்தலைவர் காமராசர் மணிமண்டப நினைவகம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று, பத்திரிகை செய்தியை ஆதாரமாக வைத்துச் சொன்னார்கள். சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகத்திலே பெருந்தலைவர் காமராசர் நினைவகம், காந்தி அருங்காட்சியகம், திறந்தவெளி அரங்கம், தியாகிகள் மணிமண்டபம், மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், பெரியவர் திரு. எம். பக்தவச்சலம் நினைவிடம், இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் மற்றும் வெள்ளையனே வெளியேறு நினைவுத் தூண் உள்ளிட்ட மண்டபங்கள் உள்ளன. இம்மண்டபங்கள் அனைத்தும் இராஜாஜி மண்டபம் மற்றும் காந்தி மண்டபத்தின் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலரின் கட்டுப்பாட்டின்மூலம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. பெருந்தலைவர் காமராசர் நினைவிடத்திலே புதர்கள் மண்டிக் கிடப்பதாக வெளிவந்துள்ள பத்திரிகை செய்தி முற்றிலும் தவறானது. மண்டபத்தினைச் சுற்றி புல்வெளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை பொதுப் பணித் துறைமூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் *2-15*

காந்தி மண்டப வளாகத்திலே தோட்டப் பணிகள் முழுவதும் பொதுப் பணித் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு, நல்ல நிலைமையிலே சீரமைக்கப்பட்டு வருகின்றன. காந்தி மண்டப வளாக தூய்மைப் பணிகளுக்கு *5* தோட்டப் பணியாளர்கள், *2* காவலர் உடன் கலந்த துப்புரவுப் பணியாளர்கள், *6* நூலகர் மற்றும் காப்பாளர்கள் மற்றும் ஒரு வழிகாட்டிப் பணியிடம் உள்ளது. இதில் *2* தோட்டப் பணியாளர் மற்றும் ஒரு காவலர் மட்டும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்திற்குப் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தனியார் வெளி முகமை மூலமாக *9* தொகுப்பூதியப் பணியாளர்கள் பணியிலே உள்ளனர். பெருந்தலைவர் காமராசர் நினைவிடத்தில் சமூக விரோதச் செயல்கள் நடப்பதாகத் தவறாகச் சித்தரிக்கப்பட்டு, பத்திரிகைச் செய்தியாக வந்துள்ளது. அந்தச் செய்தி முற்றிலும் தவறானது. காந்தி மண்டப வளாகம் முழுவதும் டெக்ஸ்கோ நிறுவனத்தின்மூலம்,

[திரு. கடம்பூர் ராஜு] [2018 மார்ச் 21

9 முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு இரவு-பகல் என 24 மணி நேரமும் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இங்கு வரும் பார்வையாளர்கள் எவ்வித அச்சமும் இன்றி வந்து செல்கின்றனர். மேலும், காந்தி மண்டபம் மாண்புமிகு ஆளுநர் மாளிகைக்கு மிக அருகில் இருப்பதாலும், சர்தார் பட்டேல் சாலை சில முக்கிய பிரமுகர்கள் விமான நிலையத்திற்குச் செல்லும் முக்கிய வழித்தடச் சாலையாக இருப்பதாலும், காந்தி மண்டப வளாகம் 24 மணி நேரமும் காவல் துறையின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளது. அதுமட்டுமன்றி, காந்தி மண்டபம் அந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் கேமராமூலம் கண்காணிக்கப்பட்டும் வருகின்றது. காந்தி மண்டப வளாகப் பகுதியில் காவல் துறையினரால் ரோந்துப் பணிகள் தினந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகம், காந்தி மண்டபப் பணியாளர்கள் மற்றும் ராஜாஜி மண்டபப் பணியாளர்களைக் கொண்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையிலே, அங்கு புல்வெளிகள் சற்று அதிகமாக வளர்ந்திருப்பதால், அவற்றைச் சீர்செய்ய பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மோகனப் புன்னகை பூக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையின் மாயம் பரம்பு சோலை பிறந்து, மகேந்திரகிரியின் மடியில் தவழ்ந்து, தாமரையாறு, கொம்பையாறுகளின் நீரோடு கலந்து நடந்து, வருடமெல்லாம் வானம் பார்த்துக் கிடக்கின்ற எங்கள் ராதாபுரத்துப் பிரதேசத்தின் மண்ணின் மேனியை நனைத்து கடலோடு கலக்கும் நம்பியாற்றுத் தீரத்து மைந்தன் நான்; மக்கள் திலகவதி, மனிதப் புனிதவதி அன்னைத் தமிழகத்தினுடைய அட்சயப் பாத்திரம், குணத்தால் தங்கம், பகைத்தாலோ சிங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) பூக்களுக்கே கூட புன்னகையைக் கற்றுத் தந்து, மறைந்து, வங்கக் கடலோரம் துயில்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவகத்தை வணங்கி உரையைத் துவங்குகிறேன்.



2018 மார்ச் 21] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையின்மீது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையிலே நான் உரையாற்றுவது, எனது மனசுக்குள் மழையடிக்க வைத்திருக்கிறது. இது புது வரிகள் இல்லாத பட்ஜெட்; வரிகளே இல்லாத பட்ஜெட். நான் இந்த பட்ஜெட்டை, நிதிநிலை அறிக்கையை வரிக்கு வரி வாசித்துப் பார்த்தேன். வரியே இல்லை. எனவேதான், வாரி வாரித் தந்த வள்ளலின் வாரிசாக இருக்கிற இந்த அரசாங்கம் வரியே இல்லாத பட்ஜெட்டைத் தந்திருக்கிறது. எனவேதான், ஊடகங்கள் எல்லாம் அதை வரிந்து கட்டிக்கொண்டு வாழ்த்தி எழுதுகின்றன. அப்படியானால் இனி தமிழ்நாட்டில் வரி எங்கே இருக்கும் என்று என்னுடைய சக வழக்கறிஞர் ஒருவர் கேட்டார். நான்கூட வேடிக்கையாகச் சொன்னேன்; வண்டலூரிலே இருக்கிற உயிரியல் பூங்காவிற்குச் சென்று பாருங்கள். அங்கு வரிக் குதிரைகளில் மட்டும்தான் இனி வரி இருக்கும் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ஒரு சிறப்புமிக்க நாள். 30 ஆண்டுக்காலம் எங்கள் பகுதியிலே இருக்கிற, ராதாபுரம் தொகுதியிலே இருக்கிற, திசையன்விளையை தனித் தாலூகாவாக ஆக்க வேண்டுமென்று எங்கள் மக்கள் கேட்டார்கள். 30 ஆண்டுக்கால போராட்டம்; 30 ஆண்டுக்கால கோரிக்கை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலிக்கு வந்தார்கள். ஒரே ஓர் அறிவிப்பு. இன்றைக்கு திசையன்விளை தனி தாலுகா. அதற்காக தமிழக அரசின் முதலமைச்சருடைய தாள்பணிந்து நான் வணங்குகிறேன்.

இன்றைக்கு ஒரு சிறப்புமிக்க நாள் என்று சொன்னேன். நான்காவது தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரை தேவருடைய பிறந்த நாள் இன்று. இந்த நாளிலே பேசுவதிலே ஒரு சிறப்பு இருக்கிறது. 11 ஆவது பக்கத்திலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே, தமிழுக்காக இந்த அரசு வாரி வழங்கியிருக்கிறது. தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே 2 கோடி ரூபாயை தமிழ் விரிவாக்க மையம் அமைப்பதற்காகவும், 1 கோடி ரூபாயை தமிழ்ப் பண்பாட்டு மையம் அமைப்பதற்காகவும் இந்த அரசு ஒதுக்கியிருக்கிறதென்பதால், என்னுடைய வசந்த வார்த்தைகளால் நான் வாழ்த்தி மகிழ விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, சிகரம் வைத்தாற்போல, 11 ஆவது பக்கத்திலே இன்னோர் அறிவிப்பு இருக்கிறது. என்னவென்றால், ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு

இந்த அரசு 10 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது. இந்த ஒரு செயலுக்காகவே, என் பிச்சிப்பூ வார்த்தைகளைக் கொண்டு, உச்சி முகர்ந்து தமிழக அரசை வாழ்த்தி மகிழ விரும்புகிறேன். என்னுடைய சார்பிலும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், என்னுடைய ஒரு மாத சம்பளத்தை ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலே தமிழ் இருக்கை அமைவதற்காக நான் வழங்குகிறேன். எனக்கு கர்ணன் போல கையைக் கொடுத்த இறைவன், குசேலன்போல ஒரு பையைக் கொடுத்துவிட்டான். எனவே, ஒரு மாத சம்பளத்தை வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-20*

இந்த நிதிநிலை அறிக்கையிலே குடிமராமத்துப் பணிகளுக்காக ரூ.300 கோடி நிதியை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. அதுபோல, கடந்த ஆண்டு ரூ.200 கோடி நிதியைத் தடுப்பணைகளுக்காக ஒதுக்கியிருக்கிறது. இந்த ஆண்டு ரூ.250 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறது. நாமெல்லாம் தமிழை நம்புகிறவர்கள். தமிழ் மூதாட்டி, ஔவைப் பாட்டி என்ன சொன்னாள்? 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர்ந்தால், அரசன் உயர்வான்'. நீர்மட்டம், உயர, உயர, நெல் உயர்ந்து, குடிமக்கள் உயர்ந்து, அரசன் உயர்வான் என்று சொல்லியிருக்கிறார். நாம் தமிழை நம்புகிறவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஔவைப் பாட்டியின் சொல் உண்மையானால், இன்றைக்கு வரப்பு உயர்வதற்கு பாடுபட்டுக்கொண்டிருக்கிற குடிமராமத்து நாயகன், நமது தமிழக முதலமைச்சருடைய அரசு வாழும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால்தான் தமிழ் வாழும். இதைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். ஔவைப் பாட்டி அன்றைக்குச் சொன்னார்கள். அம்மா அவர்கள், இந்த அரசு வாழும் என்பதற்கு சொன்னார்கள். 'எனக்குப் பின்னாலும், நூறு ஆண்டுகள் இந்த அரசு வாழும், இந்த இயக்கம் ஆளும்' என்று சொன்னார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு கட்டியம் கூறுகிற விதமாக குடிமராமத்துப் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ஒரு சத்துணவுத் திட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொட்டில் குழந்தைத் திட்டம். அதுபோல சேலத்து சிங்கமாக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தக் குடிமராமத்துத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் வார்த்தைகளால்





சொன்னால் நான் அம்மா அந்தாதி பாடுவதாக நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் சத்தியத்திற்கு சாட்சி சொல்கிறேன். பழையாறு, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம் வழியாகச் சென்று கடலிலே கலக்கிறது. நாம் பக்கத்து மாநிலங்களிலே போய்க் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தண்ணீர் வீணாகப் போகிறது. வீணாகப் போகின்ற அந்த ஆற்று நீரை அப்படியே கிழக்குப் பக்கம் திருப்பிவிட்டால் வறண்டு கிடக்கிற ராதாபுரம் தொகுதியிலுள்ள நெல் மணிகள் எல்லாம் சிரிக்கும். ஏனென்றால், விவசாயம் என்றாலே, ஒட்டன்சத்திரம் தொகுதியைச் சார்ந்தவர்கள்தான் என்று இந்தச் சபையிலே நிரூபிக்கப் பார்க்கிறவர்களுக்கு மத்தியிலே, எங்களுடைய ராதாபுரத்து மக்களுடைய ஏக்கக் குரலை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை இந்த முறை இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் மேம்பாடு; மகோன்னதத் திட்டங்களெல்லாம் நிதிநிலை அறிக்கையின் 77-வது பக்கத்தில் இறைந்து கிடக்கின்றன. ஒரு பெண் பிள்ளையைப் பெற்றுவிட்டால், அப்பிள்ளையைப் பெற்ற பெற்றோர்களுக்கு கண்ணுக்குத் தெரியாத ஒரு கவலைத் தீ வயிற்றுக்குள்ளே வளர்ந்துகொண்டேயிருக்கும். அந்தப் பிள்ளைக்கு எப்படி திருமணம் செய்து கொடுக்கப்போகிறோமோ என்றிருந்த நிலை தமிழகத்திலே மாறிவிட்டது. எங்களுடைய தங்கம், தங்கத்தின் தங்கம், எங்கள் புரட்சித் தலைவர் எங்களுக்குத் தந்த தங்கம், புரட்சித் தலைவி அம்மா, தங்கத் தாரகை அவர்கள் பெண் பிள்ளைகளுக்கு 8 கிராம் தாலிக்குத் தங்கம் தந்தார்கள். அதுமட்டுமல்ல; +2 படித்திருந்தால் ரூ.25,000/- ரொக்கப் பணத்தைத் தருகிறார்கள்; பட்டப் படிப்பு படித்திருந்தால் ரூ.50,000/- தருகிறார்கள். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.724 கோடி நிதியை ஒதுக்கியிருப்பதை நான் படிக்கிறபோது, என் காதுகள் இரண்டிலும், மங்கல மேளச் சத்தம் முழங்குவதைக் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் மாவட்டத்திலே ரூ.220 கோடி நிதியிலே இரண்டு மீன்பிடித் துறைமுகங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொள்ளவிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே நான் சார்ந்திருக்கிற ராதாபுரம் தொகுதியிலேதான் மீனவ கிராமங்கள் நிறைந்து இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்திலே

[திரு. ஐ.எஸ். இன்பதுரை] [2018 மார்ச் 21

மீன்பிடித் துறைமுகங்கள் இல்லை. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொன்னேன். 'எங்கு அமைக்கலாம்' என்று கேட்டார். நான் இடிந்தகரையைச் சொன்னேன். இடிந்தகரை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர். 16 ஆம் நூற்றாண்டிலிருந்த இயேசு சபை பாதிரிமார்களுடைய கடிதங்களைப் படிக்கிறபோது, அதை இடிந்தகல்லு என்று குறிப்பிடுகிறார்கள். புராணத்திலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். குமரியிலிருந்து செந்தூருக்கு வள்ளியம்மையை முருகப் பெருமான் தூக்கிச் செல்கிறபோது, இந்தப் பகுதிக்கு வந்தபோது விடிந்ததாம். எனவே, அதற்குப் பெயர் விடிந்தகரை என்றிருந்து, இன்றைக்கு இடிந்தகரையாக மாறிவிட்டது. இடிந்தகரையை ஒட்டி கிழக்காக ஓர் ஆறு பாய்கிறது. அதன் பெயர் அருவியாறு. அந்த ஆற்றில் இயற்கையாகத் துறைமுகம் அமைந்திருக்கிறது. அதிலே ஒரு துறைமுகத்தை இந்த அரசு அமைத்துத் தருமானால் எங்களுடைய தொகுதி மக்களுடைய மீனவர்கள் மத்தியிலே சந்தோஷ அலை மோதும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே முதல்முறையாக வள்ளியூரிலே இலவச wi-fi வசதியை தமிழக அரசு அமைத்துத் தந்திருக்கிறது. இந்த wi-fi மூலமாக இலவசமாக பஸ் நிலையத்திற்கு வருகிற மாணவர்களெல்லாம் தங்களுடைய பாடத் திட்டங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அதுபோல விவசாயப் பெருமக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம். பயணிகள் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்தை ராதாபுரம் தொகுதிக்குத் தந்ததற்காக தமிழக அரசுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்களெல்லாம் likes போட்டுக் குவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் மேலாண்மைத் திட்டம் என்பது முக்கியம். Inter-linking of rivers என்று கூறுகிறோம். அதைத் தமிழகத்திலேதான் முதன்முதலாக நிறைவேற்றுகிறோம். இதை புதுடில்லியிலே நடந்த மாநாட்டிலேகூட நாங்கள் எடுத்துரைத்தோம். தமிழகத்திலே தாமிரபரணி ஆற்றிலிருந்து வெள்ளக் காலங்களில் உபரி நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்க கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைப் போட்டோம். அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே, எங்கள் தொகுதி மக்கள் சார்பாக அம்மா



2018 மார்ச் 21] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

அவர்களை நினைத்து வணங்குகிறோம். கடந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலிக்கு வந்தபோது, இதுகுறித்து எடுத்துச் சொன்னதன்பேரில், அந்தத் திட்டத்திற்கு ரூ.300 கோடி நிதியை ஒதுக்கினார்கள். இப்போது இந்த நிதிநிலை அறிக்கையின் 32-வது பக்கத்தில் படித்தேன், பரவசமடைந்தேன். ரூ.100.88 கோடி நிதியைத் தந்திருக்கிறார்கள். இதன் காரணமாக இப்பொழுது ராதாபுரம் தொகுதியில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் மனதிலே சந்தோஷ வெள்ளம் வழிந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 2-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே பணகுடி என்ற ஒரு பகுதி உள்ளது. அங்கு இரண்டு மேம்பாலங்கள் அமைத்திருக்க வேண்டும். நான் யாரையும் குற்றம்சாட்ட விரும்பவில்லை. கடந்த காலங்களில், மத்தியிலே இருந்தவர்கள் அதைப் பெற்றுத் தரவில்லை. அந்த இரண்டு மேம்பாலங்கள் இல்லாததால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அந்த இரண்டு மேம்பாலங்களையும், வள்ளியூரிலே புதிதாக ஒரு மேம்பாலத்தையும் மத்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி, வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர் கல்வியைப் பொறுத்தவரையில், மாணவர் சேர்க்கையிலே, தமிழகம் முதலிடத்திலே இருக்கிறது என்று நிதி ஆயோக் கூறுகிறது. தேசிய அளவிலே முதலிடத்திலே இருக்கிறது. இரண்டு கண்களைக் கொண்டு பார்க்க வேண்டுமென்று நான் எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன். உயர் கல்வி மாணவர் சேர்க்கையில், தேசிய அளவிலே தமிழகம் முதலிடத்திலே இருக்கிறது. திசையன்விளையிலும், பணகுடியிலும் மனோ கல்லூரிக்கு 2 கோடி ரூபாயை இந்த அரசு தந்தது. வருகிற ஆண்டிலும், நிதியாண்டிலும் மேலும் நிதிகளை நீங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற காவல்கிணற்றிலே கல் குவாரிகளை ஏலம் விடுவதாக இருக்கிறார்கள். அதனால் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதை நாசூக்காக சொல்லி, அவற்றைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தப் பகுதியிலே பொது மக்கள் குடியிருக்க முடியாத நிலை உருவாகிவிடக் கூடாது என்பதற்காக நான் கூறுகிறேன்.

அதேபோல, நான் இருக்கின்ற பகுதியிலேதான் கூடங்குளம் அணு உலை இருக்கின்றது. அந்த அணு உலைத் திட்டத்தை எதிர்த்து போராடியவர்கள்மீது இருக்கின்ற வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற வேண்டும்; தாயுள்ளத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கூடங்குளம் அணு உலைக்காக நிலங்களைக் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்ட அரசு, இந்த அரசு. இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய இட ஒதுக்கீடுகள் இருக்கின்றன. ஆனால், மாற்றுத் திறனாளிகளுடைய பிள்ளைகளுக்கு ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்கிறேன். அதை எவ்வாறு தரலாம் என்றால், Right to Education Act என்று ஒரு Act இருக்கிறது. அதிலே உயர் கல்வி பெறுவதற்காக, சமுதாயத்தில் உள்ள அடித்தட்டு மக்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு அந்த இடத்தைப் பெற்றுத் தருவதற்காக இந்தச் சட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதன் மூலமாக, மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளாகப் பிறந்ததைத் தவிர, எந்தப் பாவமும் செய்யாத அந்தப் பிள்ளைகளுக்கு அதை நீங்கள் பெற்றுத் தர வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே மணல் குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை சட்டப்பூர்வமாக இல்லையென்று கூறி அவற்றை இப்போது முடக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சட்டத்திற்குட்பட்டு, அவற்றை மீண்டும் திறந்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் 81-ஆம் பக்கத்திலே நிதி ஆயோக் வெளியிட்டுள்ள இரண்டு விஷயங்கள் கூறப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான சுகாதாரக் குறியீட்டிலே தமிழகம் மூன்றாவது இடத்திலே இருக்கிறது. உயர் கல்விக்கான மாணவர் சேர்க்கையிலே முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. இதைப் படிக்கின்றபோது, தமிழக அரசு முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதிலே எனக்கு எந்த ஐயமும் இல்லை. நிதிநிலை அறிக்கையின் 82-ஆம் பக்கத்திலே





ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். என்னவென்றால், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்கள் தேசிய அளவிலே இதன் குறியீடு 21.92 சதவிகிதம்; ஆனால், தமிழ்நாட்டிலே இதன் குறியீடு 11.28 சதவீகிதம் தான். நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது, ஊடகங்களெல்லாம் பாலும், தேனும் ஓடுகிறது என்று சொல்கின்ற குஜராத் மாநிலத்தினுடைய குறியீடு 16.63 சதவிகிதம். ஆனால், நம் அன்னைத் தமிழகத்திலே அந்தக் குறியீடு 11.28 சதவிகிதம் ஆகும். Per Capita Income என்று சொல்கின்றார்களே, தனி நபர் வருமானம். அந்தத் தனி நபர் வருமானத்தைப் பொறுத்தவரையில், தேசியஅளவில் உள்ளதைவிட தமிழகத்தில் ரூ.50 ஆயிரம் அதிகமாக இருக்கிறது. தேசிய அளவில் தனி நபர் வருமானம் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 219 ரூபாய் என்றிருக்கும் நிலையில், தமிழகத்தில் தனி நபர் வருமானம் 1 இலட்சத்து 53 ஆயிரத்து 263 ரூபாய் ஆகும். தமிழகம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டுமென்று நான் உங்களைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு முறை இரயிலிலே சென்றேன். Yale University-யிலே தெற்காசிய அரசியலைப் பாடமாக எடுத்து படிக்கின்ற ஒருவர் என்னோடு இரயிலிலே வந்தார். அவர் தமிழக அரசியலைப் பற்றிய, இந்திய அரசியலைப் பற்றிய விஷயங்களை விரல் நுனியிலே வைத்திருக்கிறார். அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு விஷயத்தைச் சொன்னார். "இலங்கைத் தமிழர் பிரச்சினையாகட்டும்; முல்லைப் பெரியாறு பிரச்சினையாகட்டும்; காவேரிப் பிரச்சினையாகட்டும்; மறைந்த முன்னாள் முதல்வர் எடுத்த நடவடிக்கைகள், உரிமைப் போர்களின் காரணமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எவராலும் மக்கள் மனதிலே இருந்து பிரிக்க முடியாது" என்று அந்த அயல்நாட்டு மாணவர் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இந்த அவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டு கருத்துகளைச் சொன்னார்கள். "எனக்குப் பின்னாலும் இந்த இயக்கம் நூறு ஆண்டுக் காலம் வாழும் என்று சொல்கிறார்களே; எவ்வாறு?" என்று நான் சிந்தித்து பார்த்தேன். இப்போது அரசியல் ஞானிகள் சொல்கிறார்கள். ஔவையார்கூட, 'வரப்பு உயர்ந்தால் அந்த அரசன் உயர்வான் என்றும், இந்த ஆட்சி உயருமென்றும்' சொல்லியிருக்கிறார்கள். ஆக, தமிழை நம்புவதாக இருந்தால், என்னுடைய வாதத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டுதான்

ஆக வேண்டும். வரலாற்றைப் படிக்காத எவரும் ஒருபோதும் வரலாறைப் படைக்க முடியாது. வரலாற்றைப் படிக்காத எவரும், ஒருபோதும் வரலாறு படைக்க முடியாது. நான் வரலாற்றிலே இருந்து ஒன்றைச் சொல்கிறேன். இதே தமிழகத்திலே மருத்துவப் படிப்பிலே சேர வேண்டுமென்றால், சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டுமென்ற ஒரு நிலை இருந்தது. அதை மாற்றித் தந்தது திராவிட இயக்கங்களின் முன்னோடியாக இருக்கின்ற நீதிக் கட்சி. இது வரலாறு.

*பிற்பகல் 2-30*

அதுபோல, வேலை கேட்டுச்சென்ற ஒரு ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்த பல்க் என்பவர் ஒரு மருத்துவர். அவரிடம் திருவாங்கூர் சமஸ்தானத்தினுடைய அன்றைய திவான் ராகவய்யா ஒரு தென்னங்கீற்றை கொடுத்து, “நீ குலத் தொழில் செய்து பிழைத்துக்கொள்” என்று சொன்னார். இது வரலாறு. வரலாற்றை நீங்கள் படிக்க வேண்டும். வரலாறு படிக்காத எவரும் வரலாற்றைப் படைக்க முடியாது. நான் எதற்காக இதை மீண்டும், மீண்டும் சொல்கிறேன் என்றால், நான் இந்தப் பேரவையில் நின்று பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த அவையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாரும் இருக்கிறீர்கள். நாமெல்லாம் இங்கு வந்து அமர்ந்திருக்கின்றோம் என்றால், இதற்கான அடித்தளத்தை, சமூக நீதியை நமக்குப் பெற்றுத் தந்தவர் தந்தை பெரியார். தந்தை பெரியாருக்கு நாம் அனைவரும் கடன்பட்டிருக்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாகத்தான் ஆண்டான் அடிமை, குலக் கல்வி என்பதையெல்லாம் தாண்டி நாம் இங்கே வந்திருக்கிறோம். அந்த தந்தை பெரியார் நமக்குத் தந்த அந்த சமநீதி தீபத்தை அணையாமல் பார்த்துக்கொண்டு, ஆட்சி நடத்தியவர்கள்தான் பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும். அந்த தீபத்தை சட்டமாக்கி, *69* சதவிகித இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த *69* சதவிகித இடஒதுக்கீட்டை சட்டமாக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், விரைவில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்துவிடுகிறேன். அந்த *69* சதவிகித இடஒதுக்கீட்டை சட்டமாக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே திருவுருவப்படமாக நின்று கொண்டிருக்கிறார். இந்தப் படத்தைத் திறக்கும்போது, “திறக்கக்கூடாது” என்று எதிர்குரல்கள் கேட்டன. நான் வேதனையோடு கேட்கிறேன். குலக் கல்வியைச் சொன்னவர்களின் படங்களெல்லாம் இங்கே இருக்கின்றன. அதையெல்லாம் மௌனமாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நமக்காக, திராவிடர்களுக்காக, தமிழர்களுக்காக நம்முடைய உரிமைக்காக *69* சதவிகித இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவுருவப் படத்தைத் (மேசையைத் தட்டும் ஒலி) திறக்க நாங்கள் வரமாட்டோம் என்று சொன்னீர்களே? அவ்வாறு சொன்ன நீங்கள் திராவிடர்களுக்கு எதிரானவர்கள் இல்லையா? சமநீதிக்கு எதிரானவர்கள் இல்லையா என்று கேட்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். அந்தணர் குலத்தில் பிறந்தவர்தான் திருஞானசம்பந்தர். அவரை ஆதிசங்கரர் ‘திராவிட சிசு’ என்று சொன்னார். இந்த நிறைந்த அவையிலே நின்று சொல்கிறேன்; இது வரலாறாகப் பதிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நானும் திராவிட இயக்கத்திலே பிறந்தவன் என்பதற்காகச் சொல்கிறேன். அடித்தட்டு மக்களிடமிருந்து வந்தவன் என்பதால் சொல்கிறேன். சாமான்ய மக்களின் குரலை ஒலிப்பவன் என்பதனால் சொல்கிறேன். எப்படி திருஞானசம்பந்தரை ‘திராவிட சிசு’ என்று சொன்னாரோ, அதுபோல நான் சொல்கிறேன். திராவிடர்களுக்காகக் குரல் கொடுத்து, தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து, *69* சதவிகித இடஒதுக்கீட்டைச் சட்டமாகப் பெற்றுத்தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் திராவிடத்தின் ‘இரண்டாவது சிசு’ என்று நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, திராவிடத்தின் இரண்டாவது சிசுவாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவப் படத்தை இந்த அரசு இங்கே திறந்து வைத்திருக்கிறது. இது வரலாறு தெரிந்த அரசு. கடந்தகால வரலாற்றையெல்லாம் தெரிந்த அரசு என்பதால், இன்றைக்கு வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

[திரு. ஐ.எஸ். இன்பதுரை] [*2018 மார்ச் 21*

திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த இரண்டு பேர்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பங்கு இதிலே மிகப் பெரியது. இந்த அரசுக்குத் தலைமை தாங்குகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது மனிதர். நான் சொல்கிறேன், ஔவை பாட்டி சொன்ன தமிழ் உண்மையானால், குலக் கல்வியை ஒழித்து தந்தை பெரியார் நம்மையெல்லாம் அழைத்து வந்தது உண்மையானால், சமுதாயத்தின் மேல்மட்டத்திற்கு நம்மை அழைத்து வந்தது உண்மையானால், திராவிட சமுதாயத்திற்காகப் போராடி, *69* சதவிகித இடஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறக்கச் செய்தீர்களே, சமூக நீதி ஆளுகின்ற இந்தத் தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் உங்கள் இருவருடைய திருநாமம் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஒரு கதையை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் ஓர் அருமையான கதையைச் சொன்னார்கள். எனக்கும் கதை தெரியும். ஒரே ஒரு கதை. ஒருவன் இறந்துபோய்விட்டான். சொர்க்கத்திற்கு அவன் சென்றான். அங்குள்ள ஒரு சுவற்றில் ஏராளமான கடிகாரங்கள் இருந்தன. அங்கிருக்கின்ற கடிகாரங்களைப் பார்த்ததும், அங்கிருக்கும் தேவதையை அழைத்து 'இவையெல்லாம் நேரம் காட்டுகின்ற கடிகாரமா?' என்று கேட்டான். அதற்கு அந்த தேவதை, 'இல்லை, இல்லை, அந்தக் கடிகாரங்கள் எல்லாம் உலகத்திலே உள்ள அனைத்து அரசாங்கங்களின் கடிகாரங்கள். ஓர் அரசு மக்களிடம் பொய் சொல்லுமானால், இந்த கடிகாரத்தினுடைய முள் நகரத் தொடங்கிவிடும்' என்று சொன்னார். ஒபாமாவினுடைய கடிகாரம் இருந்தது. எகிப்து அதிபர் நாசரின் கடிகாரம் இருந்தது; ஜிம்மி கார்ட்டர் அரசாங்கத்தின் கடிகாரம் இருந்தது. அங்கே போனவன் நம் ஊர்க்காரன். அவன் ஆசையோடு 'தமிழ்நாட்டு கடிகாரம் எங்கிருக்கிறது' என்று கேட்டான். அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தக் கடிகாரங்களைக் காட்டியபோது, ஒரு கடிகாரம் ஓடவே இல்லை. 'இது என்ன ரிப்பேராகிக் கிடக்கிறதா?' என்று கேட்டதும் தேவதை, 'இதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடிகாரம்; (மேசையைத் தட்டும் ஒலி) அது பொய்யே சொன்னது இல்லை' என்று சொன்னார். உடனே நம் ஊர்க்காரன் ரொம்ப



*2018 மார்ச் 21*] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

interest ஆகி 'கடந்தமுறை ஆண்டார்களே திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுடைய கடிகாரம் எங்கே இருக்கிறது' என்று கேட்டான். அவர் 'இரண்டு ஏக்கர் நிலம் தருகிறேன் என்று மெகா பொய் ஒன்றைச் சொன்னதனால், அந்தக் கடிகாரம் இப்போது வேகமாகச் சுழல ஆரம்பித்துவிட்டது. எனவே, நாங்கள் அதை table fan ஆக உபயோகித்துக் கொண்டிருக்கிறோம், என்று சொன்னாராம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த நல்ல வாய்ப்பைத் தந்த உங்கள் அனைவரின் பாதங்களிலும் என்னுடைய தலையை சாய்த்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடு)

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராமசாமி அவர்களுக்கு பதிலா? சரி, சொல்லுங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. இராமசாமி அவர்கள் மாவட்டத்திற்கான வறட்சி நிலையினை அறிவிக்க வேண்டும் என்று கேட்டார்கள். தமிழ்நாட்டினுடைய இயல்பு நிலையான ஆண்டு மொத்த மழையின் அளவு *920.90* மி.மீ. ஆகும். இந்த மழை *4* பருவ காலங்களில் பெய்கிறது. *2017* ஆம் ஆண்டில் பெய்த மழையினுடைய அளவு, குளிர்காலம், கோடை காலம், தென்மேற்கு மற்றும் வட கிழக்கு ஆகியவற்றை மொத்தமாகப் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை *2017* ஆம் ஆண்டு இயல்பிலிருந்து *29* சதவிகிதம் கூடுதலாகப் பெய்திருக்கின்றது. வட கிழக்குப் பருவமழை *2017* ஆம் ஆண்டு இயல்பிலிருந்து *9* சதவிகிதம் குறைவாகப் பெய்திருக்கின்றது. வட கிழக்குப் பருவமழை *2017* ஆம் ஆண்டு மாவட்ட வாரியான இயல்புநிலை மழையளவு, பெறப்பட்ட மழையளவு இயல்பு நிலையிலிருந்து விலகல் சதவிகிதம் ஆகியவற்றுக்கு இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தின் வகைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி *15*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [*2018 மார்ச் 21*

மாவட்டங்களில் பற்றாக்குறை மழை அளவும், 14 மாவட்டங்களில் இயல்பு நிலை மழை அளவும், 3 மாவட்டங்களில் கூடுதலான மழையும் பெறப்பட்டுள்ளன. எந்த ஒரு மாவட்டமும் பெரிய அளவிலான பற்றாக்குறை என்று வகைப்படுத்தப்படவில்லை. இதில் தூண்டுதல் 1, தூண்டுதல் 2 என்ற நிலையிலே மத்திய அரசு 2016-ல் வழங்கியுள்ள வறட்சி மேலாண்மை கையேட்டின்படி வறட்சி நிலை 3 நிலைகளிலே பகுத்து ஆய்வு செய்யப்படுகிறது. அந்த வகையில் மூன்று நிலைகளிலும் தாக்கம் உண்டாக்கும் குறியீடுகள், பயிரிடப்பட்ட பகுதிகளின் விவரம், தாவரங்களின் நிலை, பசுமை நிலை இயல்பிலிருந்து விலகல், போதுமான ஈரப்பதம் குறித்த குறியீடு, ஆறுகளின் நீரொழுக்கு, அணைகளில் உள்ள நீரின் அளவு, நிலத்தடி நீர் அளவின் அடிப்படையிலான வறண்ட நிலைக் குறியீடு இவற்றில் எந்த நிலையினையும் எந்த மாவட்டமும் எட்டவில்லை. எனவே, மத்திய அரசின் வறட்சி நிலை பராமரிப்புக் கையேடு 2016-ன்படி, வறட்சி நிலை அறிவிப்பு வெளியிட வாய்ப்பு இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சம் என்ற ஒரு சொல்லை அறியாத அருமருந்து! அச்சம் என்ற ஒரு சொல்லை அறியாத அருமருந்து! உச்சரிக்கும்போதே, உமிழ்நீர் இனிக்கின்ற அம்மா என்னும் தெய்வாம்சத் திருமருந்து! என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் வழியில் குண்டுமணி அளவும் குறைவின்றி, திட்டங்களில் தொய்வின்றி, பாங்கான திட்டங்களைப் பழுதின்றி நிறைவேற்றிட, அல்லும் பகலும் அயராது உழைக்கும் கடமை வீரர், எளிமையின் எடுத்துக்காட்டு, ஏற்றமிகு முதல்வர், எங்கள் அய்யா எடப்பாடியாரை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலை அறிக்கையினைப் பாங்குடன் படைத்திட்ட மாண்புமிகு துணை முதலமைச்சரையும் வணங்குகிறேன். 2018-2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்துகொண்டு எனது கருத்துகளை எடுத்துவைக்க வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும்,



*2018 மார்ச் 21*] [திரு. ரா. தமிழ்ச்செல்வன்]

அன்புசால் அரசு தலைமை கொறடா அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநெறி முதற்றே, அரசின் கொற்றம் என்று, அறம் சார்ந்த நிகழ்வுகளை மட்டுமே தந்து, மனித வாழ்வு ஏற்றம் பெற, மாற்றம் பெற, ஆக்கப்பூர்வமான சிந்தனையால், அறிவார்ந்த திட்டத்தால் மக்களின் வாழ்வில் முன்னேற்றம் பெற திட்டங்களைக் கொண்டதே 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை ஆகும். 'ஐந்து முறை தொழுவதைவிட அடுத்தவருக்கு உதவுவதே மேல்' என்கிறது குரான். 'பகைவரையும் நேசித்து உதவு' என்கிறது பைபிள். 'பகைவருக்கும் அருள்' என்கிறது பகவத் கீதை. "என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன; என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன" என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் வழியில், பைபிளில் கூறியதைப்போல, குரானில் கூறியதைப்போல, பகவத் கீதையில் கூறியதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்களுடைய வழிகாட்டுதலில் அமைந்திருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை. சமுதாயத்தில் மிகவும் நலிந்த நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன், முதியோர், மாணவர்கள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைகிற வகையில் திட்டங்களைத் தீட்டி, நிதியினை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இத்தனை திட்டங்களும் எளிய மக்களை விரைந்து சென்றடைய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், "நேரடியாகக் களத்திற்குச் சென்று பணியாற்றுங்கள்" என்று அறிவுறுத்தினார்கள். அரசைத் தேடி மக்கள் என்றிருந்த பழமையை நீக்கி, மக்களைத் தேடி அரசு என்ற நிலையை உருவாக்க அம்மாவின் வழியில் அல்லும் பகலும் அயராது மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இரும்பை உருக்கிடுவீர்! ஏற்ற தொழில்கள் செய்திடுவீர்!' என்ற பாரதியின் கூற்றிற்குப் பெருமை சேர்க்கும் வகையில், தொழில் வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழகம் முன்னிலை வகிக்கிறது. புதிய முதலீடுகளை

[திரு. ரா. தமிழ்ச்செல்வன்] [2018 மார்ச் 21

ஈர்ப்பதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சாதகமான சூழலை ஏற்படுத்துவதன்மூலம் முதலீடுகளை ஈர்த்துப் பெருக்குவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. 2019 ஆம் ஆண்டில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டத்தக்கதாகும். குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறைக்கு ரூ.540.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனவை நனவாக்க, மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்கள். நகரங்களில் Smart city, அம்மா பசுமை வீடுகள் திட்டத்தின்மூலம் கிராமங்களில் Green city என்ற மாற்றத்தை எய்திட, ஏழை எளிய மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் 1,30,000 பசுமை வீடுகள் வழங்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும். நகராட்சி நிருவாகம், குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடைத் திட்டம், திறன்மிகு நகராட்சி உருவாக்குதல், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் என ஏற்றமிகு திட்டங்களுக்கு ரூ.18,000 கோடி நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் தமிழகம் மின்மிகை மாநிலமாக உருவெடுத்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனாரின் வழிகாட்டுதலில், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால், 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை கூடுதலாக 10,777 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறனைச் சேர்த்துள்ளதன் விளைவாக, 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட அதிகபட்ச மின் தேவையான 15,343 மெகாவாட் மின்சாரத்தை நிறைவாக வழங்க முடிந்தது. எரிசக்தித் துறையில் மின்மிகை மாநிலமாகத் தமிழகம் தொடர்ந்து நீடிக்க, இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.11,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்யவும், பள்ளிகளில் கல்வித் தரத்தினை உயர்த்தவும், மாண்புமிகு அம்மா



2018 மார்ச் 21] [திரு. ரா. தமிழ்ச்செல்வன்]

அவர்களின் அரசு உறுதிபூண்டுள்ளது. 6 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதுடன், 100 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திடவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திடவும், கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு பள்ளிக் கல்வியை அளித்திடவும் இந்த நிதிநிலை அறிக்கை உறுதிபடுத்தியுள்ளது. 14 வகையான மாணவர் நலன் காக்கும் திட்டங்களின்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொய்வின்றி செயல்பட்டு வருவது வரவேற்கத்தக்கதாகும். இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் ரூ.27,205.88 கோடி நிதி ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

உயர் கல்வியில் நாட்டிலேயே மாணவர்கள் சேர்க்கையில் முதலிடம் வகிப்பது நமது மாநிலம் ஆகும். இதுவரை உயர் கல்வித் துறை வரலாற்றிலேயே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 271 புதிய பாடத் திட்டங்களும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் 89 புதிய பாடப் பிரிவுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும். உயர் கல்வித் துறையில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த 4,620.20 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது பாராட்டத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமை ஒழிப்பு இயக்கத்தினை ஒருமுகப்படுத்தி செயல்படுத்துவதற்கான முகமையாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கிராமப்புறப் புத்தாக்கத் திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் ரூ.920.63 கோடியில் செயல்படுத்தி வறுமையையும், ஏழ்மையையும் ஒழிக்க எடுத்திருக்கும் முயற்சி பாராட்டத்தக்கதாகும். ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ.519.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவது வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயரக் குடி உயரும்"

என்ற ஔவை பிராட்டியின் வாய்மொழிக்கேற்ப, விவசாயிகளின் பங்களிப்புடன் குடிமராமத்துப் பணி துவங்கப்பட்டு, கட்டணமில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி

[திரு. ரா. தமிழ்ச்செல்வன்] [2018 மார்ச் 21

வைத்து, வறண்ட நிலத்தை வளபடுத்தி, வெள்ளாமைக் காத்திட்ட வேளாண்மையாக இருக்கிறார், எங்களுடைய ஆற்றல்மிகு மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள் என்று விவசாயிகள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 2-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும் இந்த ஆண்டு 11,074 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2018-2019 ஆம் ஆண்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும் பணிகளுக்காகவும், 4,000 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான பணிகளுக்காகவும், கடைக்கோடி கிராமம் வரை அழகான சாலைகளை உருவாக்குவதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிதியினை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “எனக்குப் பின்னாலும் இந்த இயக்கம் 100 ஆண்டுகள் வாழும்; தமிழகத்தை ஆளும்” என்று சூளுரைத்த (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தலைமகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் வண்ணம், அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைப்பதற்கு 50.80 கோடி ரூபாய் ஒதுக்கி, ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களால் பாராட்டப்படுகின்ற முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள், காவல் துறைக்குக் கொடுத்திட்ட முழுமையான சுதந்திரத்தினால் தமிழகத்தில் பயங்கரவாதம், தீவிரவாதம், மதவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு, வேரறுக்கப்பட்டு, தமிழகத்தில் தொடர்ந்து அமைதி வழியில் அமைதிப் பூங்காவாக, சட்டத்தினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என மக்கள் பாராட்டுகிறார்கள்; மக்கள் அச்சமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உகந்த மாநிலங்கள் வரிசையில் நமது தமிழகம் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.



2018 மார்ச் 21] [திரு. ரா. தமிழ்ச்செல்வன்]

பெண்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான முதல் மெட்ரோ நகரமாக சென்னை மாநகரமும் முதல் பெரிய நகரமாக நம்முடைய உள்ளாட்சித் துறையின் அமைச்சருடைய மாவட்டமான கோவை மாவட்டமும் திகழ்ந்து வருகின்றன. இதை நான் சொல்லவில்லை. மாநில குற்ற ஆவணக் காப்பகம் தனது ஆய்வறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது. தொழில் செய்வதற்கு உகந்த மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. காவல் துறைக் கட்டடங்கள், தீயணைப்பு மீட்புப் பணிகளை மேம்படுத்தவும் மற்றும் சிறைச்சாலைகளை மேம்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், காவல் துறையை நவீனப்படுத்த இந்த ஆண்டு காவல் துறை மேம்பாட்டிற்காக மட்டும் 7,877 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாமையும், கல்லாமையும் நிறைந்திருந்த தமிழக மக்களின் தலைவிதியை, பேரவை விதி 110-ன்கீழ், மாற்றியமைத்த மாபெரும் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், ரவுடி ராஜ்ஜியம் இல்லாமல், கட்டப் பஞ்சாயத்து இல்லாமல், சாதி, மத மற்றும் இன மோதல்கள் அறவே இல்லாமல், தன் இரு கண்களை இமை காப்பதுபோல், மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள் தமிழக மக்களைக் காத்து வருகிறார் என்று தமிழ்நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை அரசு மருத்துவக் கல்லூரி அமைய வேண்டுமென்பதாகும். அரசு மருத்துவக் கல்லூரி அமைவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. கிடப்பிலுள்ள மருத்துவக் கல்லூரிக்கான டீனை நியமிப்பதற்கும், மருத்துவக் கல்லூரி அமைவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று அந்த மாவட்ட மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மலையாளபட்டி அருகே சின்னமுட்லு தடுப்பணைக்குப் பதிலாக, புதிய நீர்த்தேக்கம் அமைய புதிய அரசாணை வெளியிட்டு, ஆய்வுப் பணி மேற்கொண்டு, இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. தமிழ்ச்செல்வன்] [2018 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் நகரம் என்பது மாவட்டத்தினுடைய தலைநகரமாகும். சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்நகரம் வேகமாக வளர்ந்துவரும் நகரங்களில் ஒன்றாகும். இங்கே உள்ளூர் திட்டக் குழுமத்தை ஏற்படுத்திட (LPA) மாவட்ட நிருவாகத்தின் மூலமாக அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உள்ளூர் திட்டக் குழுமத்தை விரைந்து அமைத்துத் தந்திட வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-50*

பெரம்பலூர் மாவட்டம் துவங்கப்பட்டு 22 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதற்கென்று தனியாக மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகத்தை ஏற்படுத்தித் தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டத்தில் சுரங்கம் மற்றும் புவியியல் துறையில் புதியதாக உதவி இயக்குநர்-A.D. பணியிடம் உருவாக்கப்பட்டு, நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ளது. அந்தக் காலி பணியிடத்திற்கு A.D.-ஐ நியமனம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊரக மற்றும் உள்ளாட்சி சாலைகள் 200 கிலோ மீட்டர் தூரம் மிகவும் பழுதடைந்துள்ளன. இச்சாலைகளைப் புதுப்பிக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பு நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் நகரில் புதிய அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் உருவாக்கிட வேண்டுமென்றும், பெரம்பலூர் ஒன்றியம், சத்திரமனை உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகவும், ஆலத்தூர் ஒன்றியம், டி. களத்தூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்றும் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

ஆலத்தூர் வட்டம், தேனூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் நகரத்தினுடைய காவல் நிலையங்கள் பணிச் சுமை அடிப்படையில் நான்கு பிரிவுகளாகத் தரம் பிரிக்கப்பட்டு, அதற்கேற்ப காவல் ஆளிநர்கள்



2018 மார்ச் 21] [திரு. ரா. தமிழ்ச்செல்வன்]

நியமிக்கப்படுகின்றனர். பெரம்பலூர் மாவட்டத் தலைமை காவல் நிலையம் medium காவல் நிலையமாக உள்ளதை, heavy காவல் நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனாரைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பாராட்டப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பதை தெரிவித்து, அதனை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

***திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய கருத்துகளை இங்கே எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்திருக்கிற உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், 5 முறை முதலமைச்சராக இருந்து அரும் பணியாற்றிய எங்கள் இனத்தின் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், திருக்குவளை ஈன்றெடுத்த திருவாரூர் திருமகன், திருவெண்காட்டு மருமகன் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், எதிர்க்கட்சி கொறடா, துணைக் கொறடா ஆகிய அனைவருக்கும், வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே, ஏறத்தாழ 3,55,844.84 கோடி ரூபாய் நிகர நிலுவைக் கடன்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. 5 ஆண்டுக் காலம் ஓர் ஆட்சி முடிந்து வேறோர் ஆட்சி வந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறது என்று சொல்லிய இந்த ஆட்சியாளர்கள், 5 ஆண்டுக் காலம் ஆட்சி முடிந்து, 6 ஆண்டுக் காலம் தொடர்ந்து, இன்றைக்கு 7 ஆண்டுக் காலம் வருகின்றபோது, அதுபோன்ற கடன்களைக் குறைப்பதற்காக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று கேட்டால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஓர் ஆட்சி 5 ஆண்டுக் காலம் இருக்கிறபோது சில திட்டங்களைத் தீட்டுவோம். வருமானத்திற்கான சில வழிகளைச்

செய்கின்ற நேரத்தில், ஆட்சி மாறுவதால் அது முழுமை பெறாமல் சென்றுவிடும். ஆனால், இவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு நல்ல பட்ஜெட்டை சமர்ப்பிப்பதற்குகூட இவர்கள் தவறிவிட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து G.S.T. வரியின் மூலமாக ஜூலை மாதம் *2017*-லிருந்து பிப்ரவரி மாதம் *2018* வரை மத்திய அரசு மூலமாக *632* கோடி ரூபாய் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், இந்த வரிச் சலுகை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருப்பதாக பட்ஜெட்டில் தெரிவித்திருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம் *2017* ஜூலை மாதம் G.S.T. வரி அமலுக்கு வருவதற்கு முன்பாக, அதற்கு முன்புள்ள V.A.T. முறையிலே வரிகள் வந்தன. அதிகபட்சமாக வந்ததா அல்லது இதைவிட குறைவாக வந்ததா என்பதை தங்கள்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்திய நாட்டிலே G.S.T. வரி, ஐந்து முறையான வரிகள். . . (குறுக்கீடு)

பிற்பகல் *2-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு வினாவினை எழுப்பியிருக்கின்றார்கள். காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் எழுப்பிய வினாவிற்கு தகுந்த விடையை நான் அளித்திருக்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள் அவையில் இருந்தாரா, இல்லையா என்பது தெரியாது. ஆனால், மீண்டும் அவரது கவனத்திற்கு இந்தத் தகவலைச் சொல்கின்றேன். V.A.T. வரியை நாம் நடைமுறைப்படுத்தும்போது, *2016-2017* ஆம் ஆண்டில் *43,438* கோடி ரூபாய் வந்தது என்பதையும், அதன்பிறகு *2017-2018* ஆம் ஆண்டில் G.S.T. வரியை அமல்படுத்தும்போது, நமக்கு வந்த வரி வருவாய் *50,148* கோடி ரூபாயாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.



**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.S.T. வரியைத் திரும்ப, திரும்ப பல மாதங்களாகச் சரி செய்யும் நடவடிக்கைகள் தொடரப்படுமேயானால், பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்று இன்றைக்கு உலக வங்கி ஓர் எச்சரிக்கையை விடுத்திருக்கிறது என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நமது நாட்டிலே பருவ சூழல் காரணமாக, கன மழை தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. மழை வெள்ளத்தால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு, முறையே *2,055* கோடி ரூபாயும், *1,243* கோடி ரூபாயும் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கேட்டிருப்பதாக பட்ஜெட்டில் அறிவித்திருக்கின்றீர்கள். வரவேண்டிய நிதியை அளிப்பதற்கே மத்திய அரசு தயாராக இல்லை. அவற்றைப் பெற்றுத் தருவதற்கு நீங்களும் தயாராக இல்லை. அப்படி இருக்கும்போது தொடர்ந்து நடைபெறக்கூடிய, அடிக்கடி சென்னை மாநகரத்தைப் பாதிக்கக்கூடியவைகளுக்குத் தீர்வு காண இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு அரசு தன்னுடைய மாநில நிதியிலிருந்து தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கிறேன்.

ஒகி புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில், என்னுடைய கீழ்வேளூர் சட்டப் பேரவைத் தொகுதியில், செருதூர் கிராமத்தினைச் சேர்ந்த ஒரு மாணவன், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு, மரணம் அடைந்திருக்கிறான். அதற்காக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் நான் கொடுத்திருக்கிறேன். *17* வயதுடைய சுவாமிநாதன் என்ற அந்த மாணவன் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்திருக்கிறார். இதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அந்த மாணவனுக்கு நிதி உதவி வழங்கிட வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கூட்டுறவுக் கடன் வழங்குவதற்காக ஏறத்தாழ *8,000* கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஆண்டு ஓரிருமுறை மழை பெய்தாலும்கூட, கதிர் வரும் காலத்தில் மழை இல்லாமல் போய்விட்டது.

[2018 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தினைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுவாமிநாதன் என்பவர் 5-12-2017 அன்று வேளாங்கண்ணி அருகே வெள்ளாற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது விரிவான அறிக்கையை அரசிற்கு அளித்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், செல்வன் சுவாமிநாதன் என்பவர் 5-12-2017 அன்று ஒகி புயலால் வெள்ளாற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழக்கவில்லை என்றும், அவர் சிறிய கட்டுமரப் படகில் தன்னுடைய நண்பர் தாமோதரன் என்பவருடன் மீன் பிடிக்கச் சென்றபோது, ஆற்றின் குறுக்கேயிருந்த மதகு சுவரில் படகு மோதி, கவிழ்ந்ததில் பலத்த அடிபட்டு ஆற்றில் விழுந்துள்ளார் என்றும், தலையில் அடிபட்டதன் காரணமாக அவருக்கு நீச்சல் தெரிந்திருந்தும் அவரால் மீண்டு வர முடியாமல் வெள்ளாற்றில் மூழ்கி இறந்துள்ளார் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். இருப்பினும், உயிரிழந்த செல்வன் சுவாமிநாதன் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மதிவாணன், முதலமைச்சருக்கு நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) இன்று காலையில்தான் என்னிடம் சொன்னீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னேன்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நிதி வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 21] [திரு. உ. மதிவாணன்]

பிற்பகல் 3-00

அடுத்து தமிழ் மொழி; தமிழர்களுடைய ஆட்சி, திராவிடர்களுடைய ஆட்சி என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த ஆட்சி நடைபெறுகிற காலத்தில்தான் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடுகிறபோதுகூட சில காவிகள் எழுந்திருந்து மரியாதை கொடுப்பதற்குக்கூட மறுக்கிறார்கள். நம்முடைய மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலைப் பாடுகிறபோது இரண்டாம் பத்தியிலே சொல்கிறார்.

"கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே."

என்று தமிழ்த்தாய் பாடலைப் பாடுகிறார். அப்படிப்பட்ட தமிழுக்கு இந்த ஆட்சியிலே ** ஏற்படுகிறது. இதை இந்த அரசு பார்த்துக் கொண்டிருப்பதை எங்களால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1969-லே சென்னை மாகாணம் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். தமிழ்நாடு என்று பெயர் சூட்டி இந்த அவையிலே அறிவிக்கிற நேரத்தில் 'தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு' என்று 3 முறை முழங்கி, 'வாழ்க, வாழ்க' என்று சொல்ல வைத்தார்கள். இந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று அறிவித்து 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. மற்ற இரண்டு முன்னாள் முதலமைச்சர்களுக்கு மரியாதை செலுத்தக்கூடிய இந்த அரசு பேரறிஞர் அண்ணா அவர்களை மறந்து விட்டதே, ஏன் என்று நாங்கள் வருத்தப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம். ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்காக தமிழ்நாடு அரசு 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பதாக இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் தனி பெரும் இயக்கமாக இருக்கிற காரணத்தால்தான், தமிழுக்காக இன்றைக்கும் உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய தலைவர்களைப் பெற்றிருக்கிற இயக்கம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. உ. மதிவாணன்] [2018 மார்ச் 21

என்கின்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் ஒரு கோடி ரூபாயை அறிவித்து வழங்கி இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பல்வேறு பணிகள் நடைபெற்றாலுங்கூட, என்னுடைய தொகுதியிலே 115 மீட்டர் அகலமுள்ள வெட்டாற்றிலே பாலமே இல்லாத ஒரு குறையை நீக்க வேண்டுமென்று அந்த மக்கள் கோரிக்கை வைத்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மரப் பாலங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, மாவட்ட ஆட்சியருடைய ஒரு சிறப்பான அனுமதியைப் பெற்று என்னுடைய தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மரப் பாலப் பணிகளைச் செய்து முடித்திருக்கிறேன். எனினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு பொறுப்பு வகிக்கிற காரணத்தால், 115 மீட்டர் அகலமுள்ள அந்த வெட்டாற்றிலே ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். அடுத்து, எனது கீழ்வேளூர் சட்டப்பேரவை தொகுதியிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, தமிழுக்கு ** ஏற்படுத்திய ஓர் அரசாங்கம் என்கின்ற வகையிலே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். ஆனால், அவருடைய தொடர் பேச்சிலே அதுகுறித்த தகவல் ஏதும் சொல்லியிருந்தால், அதுகுறித்து நாங்களும் விளக்கம் அளித்திருப்போம். ஆனால், எந்தத் தகவலும் சொல்லாமல் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்காக ஒரு கோடி ரூபாயைக் கொடுத்து விட்டோம் என்று சொல்லிவிட்டு, திடீரென்று பொதுப் பணித் துறையைப்பற்றிப் பேசுகிறார். என்ன காரணம் என்று சொல்லுங்கள். தமிழுக்கு ** என்றால் எந்த வகையில்? (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தையை தயவு செய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அரசாங்கத்தைப் பற்றி சொல்லியிருக்கிற வார்த்தை அவைக் குறிப்பில் இருந்தால் அதை நீக்கி விடுகிறேன். அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவை மறந்துவிட்டதாகச் சொல்கின்றார்கள். இவர்கள் பேரறிஞர் அண்ணாவுக்கு நாங்கள்தான் பெருமை சேர்த்தோம் என்று சொல்கின்றார்கள். இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே புதுடெல்லியில் இருக்கின்ற பல்கலைக்கழகத்திலே பேரறிஞர் அண்ணாவின் பெயரிலே ஓர் இருக்கை ஆரம்பிப்பதற்காக தமிழக அரசின் சார்பாக 50 இலட்சம் ரூபாய் அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, அன்றைய முதலமைச்சராக இருந்தவர் அளித்த தொகை வெறும் 5 இலட்சம் ரூபாய். அந்த 5 இலட்சம் ரூபாய் எங்களுக்குத் தேவையில்லையென்று சொல்லி அதை அந்தப் பல்கலைக்கழகம் நிராகரித்து விட்டது. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபிறகு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்றவுடனே, உடனடியாக அந்த 50 இலட்சம் ரூபாயைக் கொடுத்தார்கள் பேரறிஞர் அண்ணாவின் பெயரிலே இருக்கை ஆரம்பித்தது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி.வி. சண்முகம்] [2018 மார்ச் 21

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அம்மாவின் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஆசியக் கண்டத்திலே மிகப் பெரிய ஒரு நூலகம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரிலே திறக்கப்பட்டது. அந்தப் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவினுடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அந்த ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டதோ, அவை அனைத்திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டது. ஆக, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயராலே அன்றைக்கு இருக்கை அமைப்பதற்கு முதற்கட்டமாக 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதே தவிர, இதற்குமேல் ஒதுக்க முடியாது என்று எந்த உத்தரவையும் அரசாங்கம் அன்றைக்கு பிறப்பிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், என்னுடைய கீழ்வேளூர் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியின்போது தீயணைப்பு நிலையம் தொடங்கப்பட்டது. இதுவரை அதற்கு நிரந்தரமான கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இதுகுறித்து நான் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேன். எனவே, கீழ்வேளூர் தொகுதியிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிருவாகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், "தாலுகா தலைநகரங்களில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். என்னுடைய கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி, கீழ்வேளூர் தாலுகாவை தலைநகரமாகக் கொண்டிருப்பதால், அங்கு District Munsif cum Judicial Magistrate Court அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2018 மார்ச் 21] [திரு. உ. மதிவாணன்]

அடுத்து, பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், நிறைய திட்டங்களின்கீழ் பட்டாக்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எங்கள் மாவட்டத்திலும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நான் இல்லையென்று மறுக்கவில்லை. புதிதாக நிலங்களை ஆர்ஜிதம் செய்து, பட்டாக்கள் வழங்கப்படுகின்றபோது நஞ்சை நிலங்கள்தான் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன. நஞ்சை நிலங்கள் பள்ளப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால், அங்கே மக்கள் குடியேறுவதற்கு மறுக்கிறார்கள். எனவே, அதுபோன்ற இடங்களைக் கையகப்படுத்துகிறபோது, தூர்த்து, மேடாக்கி, அவர்களுக்குப் பட்டா வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால், 1969 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 14 ஆம் நாள், 'சென்னை மாகாணம்' என்ற பெயர் மாற்றப்பட்டு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டு, 50 ஆண்டுகள் ஆனதையொட்டி, இந்த ஆண்டு பொன்விழா ஆண்டாக அறிவிக்கப்பட்டதையடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், அண்ணா அவர்களின் புகழைப் போற்றிப் பரப்புகின்ற வகையில், கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டி என பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் நிறைவடைந்தவுடன், அவர்களுக்கு உரிய பரிசினை அளிக்க, தமிழகமே கொண்டாடுகின்ற விழாவாக, சென்னை மாநகரத்தில் பெரும் விழாவாக, ஒரு விழா கொண்டாடப்படும் என்பதை இந்த அவைக்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** நேரடி நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட, "சென்ற ஆட்சியைவிட நாங்கள் அதிகமான தொகை

[திரு. உ. மதிவாணன்] [2018 மார்ச் 21

கொடுத்து கொள்முதல் செய்கிறோம்" என்று சொன்னார்கள். ஆனால், ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நெல்லுக்கான தொகையை எவ்வளவு உயர்த்திக் கொடுத்தாலும், அது போதுமானதாக இருப்பதற்கான சூழ்நிலை இல்லை. அதற்குக் காரணம், பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுகின்றன; காலத்தில் தண்ணீர் வருவதில்லை; கதிர் வரக்கூடிய நேரத்தில் தண்ணீர் வருவதில்லை. இந்த ஆண்டுகூட கடைசி நேரத்தில் ஒரு மழை பெய்த காரணத்தினால்தான், ஓரளவு கொள்முதல் வந்திருக்கிறது. எனவே, சாதாரண ரகத்திற்கு 1,600 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும், சன்ன ரகத்திற்கு 1,660 ரூபாயிலிருந்து 2,200 ரூபாயாகவும் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

அடுத்ததாக, திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், National Insurance Company என்ற நிறுவனம் காப்பீடு செய்து, காப்பீட்டுத் தொகை கொடுக்கிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், The New India Assurance Company என்ற நிறுவனம், சரியாகக் கணக்கெடுக்காமலும், சரியாக தொகை ஒதுக்காமலும் இருப்பதால், இதுநாள் வரை பலன் கிடைக்காமல் விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கம்பெனியின்மீது குறை இருக்கிறதோ, யார்மீது குறை இருக்கிறதோ, பொது மக்களைப் பொறுத்தவரையில் இந்தக் கடமையைச் செய்வது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. இந்த அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, காப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 2016-2017 ஆம் ஆண்டில் 1,31,929 விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியின் காரணமாக, சம்பா நெற்பயிருக்கு பெருத்த பாதிப்பு ஏற்பட்டது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், மகசூல் இழப்பு விவரம் உரிய நேரத்தில் கணக்கெடுப்பு



2018 மார்ச் 21] [திரு. இரா. துரைக்கண்ணு]

செய்யப்பட்டு, காப்பீட்டு நிறுவனத்தின்மூலம் 1 இலட்சத்து 25 ஆயிரம் விவசாயிகளுக்கு, இதுவரை 385 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் அன்புடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதமங்கலம் சொசைட்டியில் கொடுக்கவில்லை; செம்பியன்மகாதேவி சொசைட்டியில் கொடுக்கவில்லை; வேளாங்கண்ணி சொசைட்டியில் கொடுக்கவில்லை; இன்னும் நிறைய சொசைட்டிகளில் அந்தத் தொகை பாக்கி இருக்கிறது. எங்கள் ஊரைச் சார்ந்த மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இதுகுறித்து தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-10

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே தெளிவாகக் குறிப்பிட்டேன். இப்போது வழங்கப்படுகிற புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் சில இடங்களில் முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை நான் தெளிவாகச் சொன்னேன். அதிலே முக்கியமான முரண்பாடு என்னவென்று கேட்டீர்கள் என்றால், வேளாண் துறை satellite மூலமாக 12 நாட்களுக்கு ஒருமுறை, ஒவ்வொரு கிராமத்திலும் நாம் பயிரிடுகிற அந்தப் பயிரை photo எடுக்கிறார்கள்; satellite மூலமாக அந்தப் புகைப்படத்தைப் பெறுகிறார்கள். இந்தப் புகைப்படத்தை நம்முடைய கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகம் எடுத்துப் பார்த்து insurance company-க்கு சான்றிதழைக் கொடுத்து விடுகிறது. அந்தப் புகைப்படத்தில் அந்தப் பயிர் primary damage என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். ஆனால், களப் பணியாற்றுகிற Statistical Officers, Agricultural Officers, வருவாய்த் துறை அலுவலர்கள் இவர்கள் எல்லாம் அங்கே சென்று, சம்பந்தப்பட்ட டெஸ்ட் எடுக்கிற அந்த நிலத்தை தனிப்பட்ட முறையிலே புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். நிலத்தை மட்டும் புகைப்படம்

[திரு. ஓ.எஸ். மணியன்] [*2018 மார்ச் 21*

எடுக்கவில்லை. அங்கே பரிசோதனைக்குச் சென்றிருக்கிற அலுவலர்களோடு சேர்த்து போட்டோ எடுத்திருக்கிறார்கள். அந்தப் புகைப்படத்தில் பயிர் இருப்பது தெரியவருகிறது. ஆனால், வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து satellite photo எடுத்திருக்கிற அந்தப் புகைப்படத்தில் விவசாயம் primary damage-முளைத்து கருகிவிட்டது. பயிர் இல்லை என்று சான்று கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முரண்பாடு இருக்கிற காரணத்தினாலேதான், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, குளறுபடிகள் இருக்கின்றன என்பது யதார்த்தமான உண்மை. அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை மூத்த அதிகாரிகள் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையோடு, சரிபார்த்து, கொஞ்சம் கொஞ்சமாக சரிசெய்து வருகிறார்கள். விரைவிலே முழுமையாக முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் அமைச்சர் அவர்கள் நெல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை வைத்தார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, நான் அதற்கு விளக்கமாகப் பதிலைச் சொன்னேன். ஆனால், அதிலே நான் உங்களை விட்டுவிட்டேன். நீண்டகாலம் நீங்கள் காங்கிரஸ் கட்சியோடு மத்தியிலே கூட்டணி இருந்தபோது, கடைசியாக உங்கள் ஆட்சிக் காலத்திலே குவிண்டாலுக்கு கொடுத்த விலை ரூ.*1,100*/-தான்; இன்றைக்கு ரூ.*1,660*/- வழங்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) கடந்த காலங்களில் லெவிக் கொள்முதல், இணைக் கொள்முதல், ஏகபோகக் கொள்முதல் என்றிருந்த இந்தக் கொள்முதல் திட்டங்களையெல்லாம் மாற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *1-10-2002* முதல் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். அதன் அடிப்படையிலேதான், இன்றைக்கு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2018 மார்ச் 21*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு ஆற்றிலே தண்ணீர் பாசனம் இருந்தது. இப்போது oil engine-ஐப் போட்டு இறைக்கவேண்டியதாக இருக்கிறது. அதற்காகத்தான் விலையை அதிகமாகக் கேட்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிறார். ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தளவில், தங்களுடைய மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கோரிக்கையை வைத்து, அந்தக் கோரிக்கை ஏற்கப்படாத நிலையில், இன்றைக்கு நாடாளுமன்றத்திலே நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த ஆந்திர பிரச்சினைக்குக்கூட காலங்கள் மாறுகிறபோது அல்லது அவர்களுக்கு சாதகமான ஆட்சி வருகிறபோது, அதை நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுடைய பிரச்சினை இருக்கிறதே, அதில் இப்போது உச்ச நீதிமன்றம் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்திட வேண்டுமென்று தீர்ப்பு சொல்லியிருக்கிறது. அதனை நிறைவேற்ற வருகிற *29* ஆம் தேதி கடைசி நாள் என கெடு விதித்திருக்கிறது. இந்த அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு தனி அந்தஸ்து வேண்டும் என்பதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆந்திர அரசு கொண்டுவருகிற நேரத்தில், நம்முடைய ஜீவாதாரப் பிரச்சினையை மீட்டெடுப்பதற்காக, அப்படி மத்திய அரசாங்கம் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்கத் தவறுகிறபோது, இந்த அரசாங்கமும் மத்திய அரசுக்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் *3-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்திலே என்னுடைய தொகுதி *25* கிலோ மீட்டர் கடற்கரைப் பகுதியாக இருக்கிறது. எங்களுடைய வெள்ளப்பள்ளம் செருதூர் கிராமத்திலே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். என்ன காரணமோ தெரியவில்லை; நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் மாத்திரம் இரண்டு

மீன்பிடித் துறைமுகங்களை அமைத்திருக்கிறார்கள். வேதாரண்யம் பகுதியில் ஒன்றையும், பூம்புகார் பகுதியில் மற்றொன்றையும் அமைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் வேண்டுகிற செருதூர் கிராமத்திற்கும், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிற அக்கரைப்பேட்டை மீன்பிடித் துறைமுகத்திற்கும் இடையில் ஒரேயொரு ஆறுதான் பாக்கி; பக்கத்தில் இருக்கிற ஊர்; எப்படிக் கொடுப்பார்கள்? குறைந்தது 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தால்தான் அடுத்த மீன்பிடித் துறைமுகமே அமைக்கப்படும் என்கிற தகவலை உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வித்தியாசம் பார்க்காமல் எல்லோரும் சமம் என்ற அடிப்படையில்தான் பொதுவாகவே திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஓர் அரசு, அம்மா அவர்களுடைய அரசு. முதலில் Detailed Project Report-நம்மால் தயாரிக்கப்பட வேண்டும். எனவே, அந்த அடிப்படையிலே தயாரிக்கப்பட்டதுதான் வெள்ளப்பள்ளமும்; அதேபோன்று பூம்புகார் துறைமுகமும் ஆகும். அந்த Fish Landing Centre--இல்லையென்றால் ஒரு சிறிய மீன்பிடித் துறைமுகம், அதேபோன்று பெரிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டுமென்றால். சில norms இருக்கின்றன. எனவே, அந்த விதிகளுக்குட்பட்டுத்தான் அமைக்க முடியும். நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வது போல, ஒவ்வொரு கிராமத்திற்கும் மீன்பிடித் துறைமுகம் அமைக்க முடியாது. எனவே, அருகிலுள்ள அந்த மீன்பிடித்





துறைமுகத்தை அவர்கள் உபயோகித்துக்கொள்ளலாம். ஆனால், தேவையென்றபட்சத்தில், செருதூர் கிராமத்தில் அங்கே எவ்வளவு விசைப் படகுகள் இருக்கின்றன? எவ்வளவு கட்டுமரங்கள் இருக்கின்றன? எவ்வளவு நாட்டுப் படகுகள் இருக்கின்றன? எவ்வளவு மோட்டார் இயந்திரங்கள் உட்பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் இருக்கின்றன? எவ்வளவு மோட்டார் இயந்திரங்கள் வெளிபொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் இருக்கின்றன? இவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு தேவைப்படின், அரசு அந்த விதியைக்கூட தளர்த்தி, அதிகமான அளவிற்கு இந்த மீன்பிடிக் கலன்கள் இருந்தால், மீன் பிடித் துறைமுகத்தை அமைப்பதற்கு எதிர்காலத்தில் நிச்சயமாக யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீனவ சமுதாய மக்கள் சுமார் 60 nautical மைல் தொலைவிற்குச் சென்று மீன் பிடிக்கிறார்கள். இதுபோன்ற பேரிடர்கள் வருகின்ற நேரத்தில், தகவல் இங்கிருந்து கொடுப்பதற்கு நமக்கு சிரமமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், உயர் அதிர்வெண் தொடர்பு கருவிகளை வழங்குவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை மானிய விலையில் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும்; முன்பு மீன்பிடித் தடைக் காலம் என்று ஒரு குறிப்பிட்ட காலம்தான் இருந்தது. இப்போது எந்தக் காலத்தில் புயல் வரும்; எந்தக் காலத்தில் காற்றடிக்கும் என்று தெரியவில்லை. ஆகவே, அதிக நாட்கள் அவர்கள் வேலைக்குச் செல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு மானிய விலையில் கொடுப்பதைவிட, இலவசமாக அவற்றை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, மீன்பிடித் தடைக் காலம் என்பது இப்போது அதிகரித்து கொண்டிருக்கின்றது. அந்தக் காலங்களில் வேலைக்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை. அடிக்கடி தொலைக்காட்சிகளில் கடலுக்குச் செல்லாதீர்கள், செல்லாதீர்கள் என்று அறிவிப்பு செய்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்த நிவாரண உதவி என்பதை ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/- ஆக உயர்த்திக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. மதிவாணன்] [2018 மார்ச் 21

அடுத்தது, நெடுஞ்சாலைத் துறை. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தளவில் தஞ்சாவூரிலிருந்து நாகப்பட்டினம் செல்வதற்காக 7, 8 ஆண்டுகளாக அந்தச் சாலைப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திடீரென்று அந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு சென்றுவிட்டனர். அந்த வேலை இப்போது நடைபெறாத காரணத்தினால், அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன. ஒரு மாத காலத்திற்கு முன்பாக என்னுடைய தொகுதியில் அத்திப்புலியூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் மாமனார், மருமகன் இருவரும் ஒரே நாளில் இறந்து போனார்கள். தாயும், மகளும் விதவைகளாகக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அந்தச் சாலைப் பணியை உடனடியாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போல, தஞ்சாவூர் சாலை, மயிலாடுதுறை சாலை, நாகப்பட்டினம் சாலையை இணைக்கக்கூடிய அரைவட்ட புறவழிச் சாலை; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, 10 கோடி ரூபாய் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டது. அந்தப் பணிக்கான நிலங்களை இன்றைக்கு ஆர்ஜிதம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு இதுவரை பணப் பட்டுவாடா செய்யவில்லை; மற்ற பணிகளும் நடைபெறவில்லை. எனவே, அந்த அரைவட்டச் சாலைப் பணியைத் தொடர்வதற்கும் நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, திருத்துறைப்பூண்டி புறவழிச் சாலை. அதுவும் இன்னும் செய்யப்படாமல் இருக்கிறது. அந்தப் பணிகளையும் செய்திட வேண்டுமென்று நான் என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

அடுத்து, பாசனத்தைப் பொறுத்தளவில், இப்போது என்னுடைய தொகுதியில் மானாவாரிப் பாசனம் இருக்கிறது. மானாவாரிப் பாசனத்திற்கு காமேஸ்வரம் கிராமத்தில் 100 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கு ஏரித் திடல் இருக்கிறது. அதில் இந்த ஆண்டு மண் எடுத்த காரணத்தால், கொஞ்சம் பள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கொரு முக்கியத்துவம் கொடுத்து, அந்த ஏரியைத் தூர் வாரினால் அந்தப் பகுதியிலுள்ள மானாவாரி நிலங்களின் பாசனத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும். அதைச் செய்து கொடுக்க வேண்டும். அதைப்போல என்னுடைய தொகுதியிலே ஓடம்போக்கி, தேவநதி,



2018 மார்ச் 21] [திரு. உ. மதிவாணன்]

வெள்ளையாறு போன்றவையெல்லாம் பாசனத்திற்காக உள்ளன. அவற்றையும் தூர் வாரிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசுக்கு வைக்கிறேன்.

பிற்பகல் 3-20

அடுத்து, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், 3,000 பேருந்துகள் வாங்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம்-City-யில் small buses இயக்கப்படுகின்றன. கிராமங்களுக்கு சில பேருந்துகள் போகும்போது collection ஆவதில்லை; போய் திரும்ப முடிவதில்லை என்று சொல்கிறார்கள். கீழ்வேளூரிலிருந்து கடம்பன்குடி என்கிற ஊருக்கு கங்களாஞ் சேரி வழியாக ஒரு பேருந்தினை நான் இயக்கச் சொன்னேன். அதனை ஒரு நாள் இயக்கினார்கள்; திரும்ப முடியவில்லை; collection ஆகவில்லை என்று சொல்லிவிட்டார்கள். எனவே, புதிதாக பேருந்துகளை வாங்குகிறபோது, City-யில் இயக்கப்படுகின்ற small buses போன்று வாங்கி, அவற்றை கிராமப்புறங்களிலும் இயக்கி போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியதற்கெல்லாம் நீங்கள் பலமுறை காரணம் சொல்லிவிட்டீர்கள். அது 200 மடங்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது; பயணிகளுக்கான பேருந்துக் கட்டணத்தை 200 மடங்கு உயர்த்திய அரசு இந்த அரசுதான் என்ற ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். எந்த அரசும் இந்த அளவிற்கு உயர்த்தவில்லை என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) அடுத்தது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கட்டண உயர்வு குறித்து பலமுறை நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 200 மடங்கு கட்டண உயர்வு என்ற தவறான ஒரு கருத்தைப் பதிவு செய்கிறார்; கிடையாது; அதற்குரிய புள்ளிவிவரங்களை நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். ஒரு நாளைக்கு

[திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்] [2018 மார்ச் 21

12 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதன் காரணத்தினாலும், தவிர்க்க முடியாத காரணங்களாலும்தான் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது என்று பலமுறை தெரிவித்திருக்கிறோம்.

அதேபோல, Small bus பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னையில் மட்டும் small buses இயக்குவதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்கள். (குறுக்கீடு) பேருந்துக் கட்டணம் என்பது மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழகத்தில்தான் குறைவு என்று பலகட்டங்களில் நான் பதிவு செய்திருக்கிறேன். பக்கத்து மாநிலமான கேரளாவிலே இப்போது ஒரு கிலோ மீட்டருக்கு 70 பைசா என உயர்த்தியிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் கிலோ மீட்டருக்கு 58 பைசாதான்; (குறுக்கீடுகள்) 200 மடங்கெல்லாம் கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் விவரம் கொடுங்கள். அதற்கு விளக்கம் சொல்லத் தயாராக இருக்கிறோம். 200 மடங்கெல்லாம் கிடையாது. உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் 57 சதவிகிதம் அளவிற்குப் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான ஒரு கருத்தை சபையிலே பதிவு செய்ய முற்படுகிறார்கள். பேருந்துக் கட்டண உயர்வு என்பது குறிப்பிட்ட அளவுதான் என்பதை நாங்கள் புள்ளிவிவரத்தோடு குறிப்பிட்டிருக்கிறோம். அதேபோல, பக்கத்து மாநிலங்களிலெல்லாம் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னரே பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் கிலோ மீட்டருக்கு 58 பைசா என்ற அளவில் குறைவாகப் பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். CITU, கம்யூனிஸ்ட் கட்சி பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இப்போது நமது மாநிலத்தில் சாதாரணப் பேருந்துக் கட்டணம் கிலோ மீட்டருக்கு 58 பைசா; பக்கத்து மாநிலமான கேரளாவிலே அது 70 பைசா; ஆந்திராவிலே 64 பைசா என இருக்கிறது. இந்த நடைமுறைகளெல்லாம் பக்கத்து மாநிலங்களில் 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அமலில் இருக்கின்றன. டீசல் விலை, உதிரி பாகங்கள் விலை மற்றும் போக்குவரத்து ஊழியர்களின் ஊதிய உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதேபோல, Small bus பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறப்பித்த



2018 மார்ச் 21] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

உத்தரவின்பேரில், சென்னையில் மட்டும் small buses மிகச் சிறப்பாக இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் அத்திட்டத்தைச் செயல்படுத்துவது அரசின் கொள்கை முடிவாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் அதை முடிவு செய்ய வேண்டும். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட Mini buses இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் பாதி பேருந்துகள்கூட இயங்காத நிலை இன்றைக்கு இருக்கிறது. அவையும் முறையான வழித்தடங்களில் இயக்கப்படுவதில்லை. அதன்மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு small buses இயக்குவது என்பது அரசினுடைய கொள்கை முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அதை முடிவு செய்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பாதி இருக்கிறது. நான் இன்னும் பேசவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் முடியாது. எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? அரை மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. (குறுக்கீடு) எவ்வளவு நேரம் நீங்கள் பேசுவீர்கள்? அதெல்லாம் கிடையாது. இரண்டு நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடிக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் முடியுங்கள் அல்லது நான் அவையின் அலுவல்களை முடித்துவிடுவேன். (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலமாக ஊராட்சிகளில் மட்டும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அது மத்திய அரசின் திட்டம் என்ற காரணத்தால், அதில் பேரூராட்சிகளுக்கு வாய்ப்பு இல்லை.

அவற்றைச் சிறப்பு நிலை ஊராட்சிகளாக மாற்ற வேண்டும்; ஏனென்றால் பேரூராட்சிப் பகுதிகளிலும் ஏழை மக்கள் அதிகம் இருப்பதால், அவற்றை சிறப்பு நிலை ஊராட்சிகளாக மாற்றி வேலைவாய்ப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக என்னுடைய தொகுதிக்கு தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இன்றைக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எனவே, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மூலமாக என்னுடைய தொகுதிக்கு 50 MLD தண்ணீரை வழங்குவதற்கு. . .

பிற்பகல் 3-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2006-ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், (PMGSY) பிரதம மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் போன்ற பல திட்டங்கள் வர வேண்டும் என்பதற்காகத்தான், சிறப்பு ஊராட்சிகளாக அப்பொழுதே மாற்ற வேண்டுமென்பதற்காக அம்மா அவர்கள் திட்டம் கொண்டுவந்தார்கள். அப்போது அவ்வாறு செய்யக் கூடாது என்று எதிர்த்தவர்கள் நீங்கள்தான். இப்பொழுது ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அந்த நேரத்தில் எதிர்த்தீர்கள். அதற்குப்பிறகு, 2006-ல் நாங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தீர்கள். அப்போதுதான் அது மாற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீண்ட





நேரமாகிவிட்டது. இதற்குமேல் நீட்டிக்க நேரமில்லை. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் மருத்துவர்கள் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்தில் பணிபுரிவதற்கு வர மறுக்கின்ற மருத்துவர்களை அங்கு வந்து பணிபுரியும் வகையில் சிறப்பு சலுகை வழங்கி, அதிக அளவில் அங்கு மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் உதவித் தொகை; சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 62,000 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்போவதாக அறிவித்திருக்கிறீர்கள். யார், யார் மனு செய்திருக்கிறார்களோ, அவர்களில் தகுதியானவர்கள் அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்போது நடைபெறுகின்ற ஆட்சி திராவிட ஆட்சி என்ற உணர்வோடு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் சுய மரியாதைத் திருமணங்களைச் சட்டமாக்கினார்கள். சுய மரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்குகின்றபோது, அதற்கான வரைவை தந்தை பெரியார் அவர்களிடம் சென்று காண்பித்தார்கள். "மாலை மாற்றி, தாலி கட்டி" என்ற இடத்தில், 'and' என்று இருந்ததை 'or' என்று மாற்றினார்கள். 'மாலை மாற்றி' அல்லது 'தாலி கட்டி' என்று அதற்கு மரியாதை கொடுத்த தந்தை பெரியார் அவர்களுடைய வழியில், திராவிட முன்னேற்றக் கழகம் அரசை நடத்தியது. தொழுநோய் ஒழிப்புத் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், பெண்களுக்குக் குடும்பச் சொத்திலே சம உரிமை 1989-லே. ஜவஹர்லால் நேரு இந்த நாட்டின் பிரதமராக இருந்த நேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** சொல்லிவிடுகிறேன். ஜவஹர்லால் நேரு இந்த நாட்டின் பிரதமராக இருந்த நேரத்தில் மகளிருக்கான

[திரு. உ. மதிவாணன்] [2018 மார்ச் 21

இட ஒதுக்கீட்டினையும், பெண்களுக்கான சொத்துரிமையையும் கொண்டு வருவதற்கான வாய்ப்பில்லை. அதனால் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அப்போது பதவியை இராஜினாமா செய்துவிட்டு வந்தார்கள். ஆனால், 1989-ல் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்னும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இன்னொன்று; உயர் கல்வித் துறையில், பாலிடெக்னிக் விரிவுரையாளர்களைத் தேர்வு செய்வதற்கான exam நடந்த நேரத்தில், அந்தத் தேர்வில் முறைகேடுகள் நடந்த காரணத்தால், ஒட்டுமொத்தமாக அந்தத் தேர்வையே இரத்து செய்தார்கள். இதை எதிர்த்து, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில், 'தேர்வை இரத்து செய்தது தவறு' என்றும், "தேர்வில் நடைபெற்ற குளறுபடிகளைக் களைந்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டிருக்கிறது. அந்த உத்தரவிற்கேற்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நிறைவாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கீடு செய்யக் கூடாது; இறுதியாகப் பேசலாம் என்று காத்திருந்தேன். அவர் உரையை முடிக்கும் தருவாய்க்கு வந்துவிட்டார். அவர், தஞ்சாவூர்-நாகப்பட்டினம் சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்தச் சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை. இது N.H. 45A சாலை; இது தனியார் பங்களிப்புடன் பராமரிக்கப்படுகின்ற சாலை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து ஏற்கெனவே மத்திய அரசிடம் தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் தமிழகத்திற்கு வந்தபொழுது, இரு முறை இந்தச் சாலையை விரைவாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லிவிட்டார். அவ்வளவுதான்; உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. ஒத்துழைப்பு கொடுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** இரண்டே நிமிடங்களில் முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதிலும் அதிகமான கால்நடை நிலையங்களை, மருந்தகங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இந்த நிதிநிலை அறிக்கையில், 1973-1974-ல் வறுமைக் கோட்டிற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை கிளை நிலையங்களை அதிகமாக உருவாக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் உருவாக்கியுள்ளதைச் சொல்லிவிடுகிறேன்; அதையும் சொல்ல வேண்டும் அல்லவா! என்றுமே இல்லாத அளவில் கடந்த ஆறு ஆண்டுகளில், 2017-2018 ஆம் ஆண்டில் மட்டும் 125 கால்நடைக் கிளை நிலையங்களைத் தொடங்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; 100 கிளை நிலையங்களை முதலில் தொடங்கி, அதன்பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், இருவரும் மாநிலம் முழுவதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிற்குச் சென்றபோது, அங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் மனுக்களையெல்லாம் பெற்று, அதன் அடிப்படையில் கூடுதலாக 25 கால்நடைக் கிளை நிலையங்களைத் தொடங்கி, 2017-2018 ஆம் ஆண்டில் 125 கால்நடைக் கிளை நிலையங்களைத் தொடங்கி வைத்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைப் பெருமையோடு இந்த அவையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் அதிகமான கிளை நிலையங்களைத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

[திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்] [2018 மார்ச் 21

அதிகமான அளவில் கால்நடைக் கிளை நிலையங்களைத் தொடங்கியிருப்பதோடு, தற்போதைய நிதிநிலை அறிக்கையிலேயே 100 கால்நடை மருந்தகங்கள் மேம்படுத்தப்படும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதைச் செயல்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மதிவாணன், இப்பொழுது மணி என்ன ஆகிறது பாருங்கள்; 3.30 ஆகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் ஒத்துழைக்கமாட்டேன் என்கிறீர்கள். முடியுங்கள். இன்னொரு நாளைக்குப் பேசிக்கொள்ளலாம்; உட்காருங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** நான் செய்தியைச் சொல்லிவிடுகிறேன். ஒரு நாட்டில் தனி மனிதனின் வருமானம் உயர்கின்ற நேரத்தில்தான் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மக்களின் சதவிகிதம் குறையும். அந்த வகையிலே நம்முடைய பட்ஜெட்டில் 1973-1974 ஆம் ஆண்டை மட்டும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி, தேசிய அளவிலே அது 54.88% என்றும், தமிழ்நாடு அளவிலே 54.94% என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், 1977-78-ல் தேசிய அளவில் 51.32%; தமிழ்நாடு அளவில் 54.79%-உயர்ந்து காணப்பட்டது. அதேபோல, 1983-ல் தேசிய அளவில் 44.48%, தமிழ்நாடு அளவில் 51.66%; தேசிய அளவைவிட, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழக்கூடியவர்கள் அதிகமாக இருந்தார்கள். 1987-88-ல் தேசிய அளவில் 38.86%; அந்த ஆண்டு மட்டும்தான் தமிழ்நாடு அளவில் அப்பொழுதுகூட 43.39% ஆக இருந்தது. 1993-94-ல் உங்களுடைய ஆட்சியில் தேசிய அளவில் 35.97%, தமிழ்நாடு அளவில் 35.03%. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி 1999-2000-ல் தேசிய அளவில் 26.10%, தமிழ்நாடு அளவில் 21.12% குறைந்து காணப்பட்டது. 2006-2011-ல் 12% வரை வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் 21.92%. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உ. மதிவாணன், நீங்கள் உரையை முடிக்கமாட்டீர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** ஒரு நிமிடம். இது புள்ளிவிவரம்.



2018 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நாளும் பேரவைத் தலைவர் வேண்டுகோளை நீங்கள் ஏற்றுக்கொண்டதே இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பேசிக்கொண்டேதான் இருப்பீர்கள். (குறுக்கீடு) ஒருநாளும் நீங்கள் ஒத்துழைத்ததே இல்லை. Sorry. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒத்துழைக்கமாட்டேன் என்கிறீர்கள். முடியுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** 2006-2011-ல் தேசிய அளவில் 21.92%, அதற்கு பாதி அளவாக தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில்தான் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களின் அளவு 11.28% ஆக இருந்தது. ஆக, இன்று நடக்கக்கூடிய ஆட்சியைவிட சிறப்பான ஆட்சியைத் தந்தவர் தலைவர் கலைஞர். அந்த ஆட்சி மீண்டும் வரும். மக்கள் சிறப்பாக இருப்பார்கள் என்று கூறி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

## 7. அரசினர் தீர்மானம்

### பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 22-3-2018 (வியாழக்கிழமை) அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ (22-3-2018) வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2018 மார்ச் 21

நாளை, 22-3-2018 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-3-2018), வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1042-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

34. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1043-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1044-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



2018 மார்ச் 21]

36. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்பாக செயல்பட்டு வருகின்ற பொதுத் (மிக கமுக்கம்) துறைக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1045-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

37. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 20-9-2006 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1012-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

38. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ.3) துறையின் 20-3-2007 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 72-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

39. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ.3) துறையின் 18-1-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 12-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

40. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகளை இயற்றியது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ.3) துறையின் 3-9-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 137-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2018 மார்ச் 21

41. 2015-2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்-ஆங்கிலம்)

42. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நாற்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்-ஆங்கிலம்)

43. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்-ஆங்கிலம்)

44. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்-ஆங்கிலம்)

45. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

28. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2016-2018)

29. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை. (2016-2018)

30. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை. (2016-2018)

31. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை. (2016-2018)



2018 மார்ச் 21]

32. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை. (2016-2018)

33. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாவது அறிக்கை. (2016-2018)

34. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை. (2016-2018)

35. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரண்டாவது அறிக்கை. (2016-2018)

36. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்துமூன்றாவது அறிக்கை. (2016-2018)

37. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை. (2016-2018)

38. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை. (2016-2018)

39. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. (2016-2018)

40. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை. (2016-2018)

41. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை. (2016-2018)

42. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை. (2016-2018)

43. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2016-2018)

44. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2016-2018)

45. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை. (2016-2018)

46. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2016-2018)

*47.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்துநான்காவது அறிக்கை. (*2016-2018*)

*48.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை. (*2016-2018*)

*49.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை. (*2016-2018*)

*50.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தேழாவது அறிக்கை. (*2016-2018*)

*51.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை. (*2016-2018*)

*52.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்பதாவது அறிக்கை. (*2016-2018*)

*53.* பொது நிறுவனங்கள் குழுவின் அறுபதாவது அறிக்கை. (*2016-2018*)

*54.* பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (*2016-2018*)

*55.* பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்திரண்டாவது அறிக்கை. (*2016-2018*)

*56.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (*2016-2018*)

*57.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கை. (*2016-2018*)

*58.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கை. (*2016-2018*)

*59.* அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை. (*2016-2018*)

*60.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (*2016-2018*)

*61.* அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தாவது அறிக்கை. (*2016-2018*)

*62.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை. (*2016-2018*)

*63.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (*2018*). (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை)

- - -